தமிழ்நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க் கிழமை, 1969 மார்ச் 11

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 266 முதல் 274 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Government subsidy for municipal schools

***275 *Q.*—Thiru K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government has raised the subsidy for maintenance of municipal schools from 50 to $66\frac{2}{3}$ per cent of the total cost with effect from 1967–68 ; and

(*b*) if so, what are the considerations for such increase ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) பள்ளிக் கட்டணம் வாங்குவது நீக்கப்பட்டுவிட்டதன் விளைவாக, நகராட்சி மன்றங்களுக்குப் பள்ளிக் கட்டணம் மூலமான வருவாய் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் அத்தகைய உயர்நிலைப்பள்ளிகளைப் பேணி வருவது அம்மன்றங்களுக்குக் கடினமான செயலாயிற்று. எனவே, உதவித் தொகை வீதம் உயர்த்தப்பட்டது.

Thiru K. VINAYAKAM : Sir, in the matter of grant of maintenance allowance to these high schools, the percentage as fixed by the Government is very low when compared to the expenditure incurred by these managements, will the Government reconsider the possibility of increasing that rate, Sir ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனே 66 சத விகிதத்திற்கு மேலாக அதிகரித்திருக்கிறோம். அதற்காக நன்றி செலுத்துவார் என்று எதிர்பார்த்தேன். இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தலாமே என்று கேட்கிறார்கள். அப்படிக் கொடுப்பதிலே ஆட்சேபணை இல்லை. உள்ளாட்சி மன்றங்களிலே ஒரு பகுதியை அவர்கள் செலவழிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்களுடைய வருமானம் சரியாக இல்லாத காரணத்தினாலே அரசாங்கமே அவற்றை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கோருகிறார்கள். அதெல்லாம் நம்முடைய நிதி வசதியை ஒட்டி செய்யவேண்டியது.

Thiru K. VINAYAKAM : Sir, while being grateful to whatever help rendered by the Government to the private managements in this regard, is the Government aware of the fact that even for the maintenance of these higher elementary schools and elementary schools, the private managements are very much handicapped in the sense that they do not have sufficient money to run the institutions and in some cases are faced with the problem of closure and if so, at least in such cases, will the Government consider the possibility

[1969 மார்ச் 11

of raising the quota in a similar way, that is, from 50 to 66⅔ per cent, so that the higher elementary schools taken by the private managements may not feel the strain ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார் நடத்துகிற நிருவனங்களிலே இலவசக் கல்வி கொடுக்கப்படுகிற காரணத்தினாலே வருமானம் அவர்களுக்குக் குறைந்துவருகிறது. நிர்வாகத்திலே சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. இலவசக் கல்வியைப் பொறுத்த வரையில் எந்த எந்த வகையில் நாம் கொடுக்க வேண்டுமோ, அந்தந்த வகையிலே கொடுத்துவருகிறோம். தனியார் பள்ளிகள் தாங்களே ஒரு பகுதியைக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே கொடுத்தால்தான் நடத்த முடியும். எல்லாவற்றையுமே அரசாங்கம் தரும் நாம் உட்கார்ந்துக் கொண்டு நடத்தலாம் என்று நினைப்பது தவறு.

திரு. என்.எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பள்ளிகளைப் பேணுவதற்காகக் கொடுக்கப்படுகிற தொகையை உயர்த்தியிருக்கிறார்கள். அதுபோல் ஊர் ஆட்சிப் பள்ளிகளைப் பேணுவதற்காக ஆகின்ற செலவை முழுக்க முழுக்க அரசாங்கமே ஏற்றுக்கொள்ள முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நேற்று விவரமாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஊராட்சி பள்ளிகளுக்கு இது போன்ற குறிப்பிட்ட சதவிகிதம் பலவிதமான மான்யங்கள் கொடுத்து வருகிறோம். நீண்ட நாட்களுக்கு முன்னாலே இந்த சத விகிதம் ஏற்படுத்தப்பட்டது. அதை அதிகப்படுத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். உள் ஆட்சித்துறை அந்தக் கருத்தை வலியுறுத்தி இருக்கிற காரணத்தினாலே அதற்காக ஒரு குழு ஏற்படுத்தி பரிசீலிக்கலாம்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, அண்மையில் ஜில்லா போர்ட் பள்ளிகளை அரசாங்கமே எடுத்துக்கொண்டதைப்போல், நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளையும் எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு இல்லை.

திரு. ந. வீராசாமி : தலைவர் அவர்களே, நகராட்சி மன்ற உயர்நிலைப் பள்ளிகளானாலும் சரி, தனியார் உயர்நிலைப் பள்ளிகளானாலும் சரி நம்முடைய அரசாங்கம் சப்சிடி அதிகமாகக் கொடுத்துக்கொண்டுவருகிறது. அப்படிக்கொடுத்துங்கூட தனியார் பள்ளிகளிலும் முனிசிபல் பள்ளிகளிலும் இருந்து சில புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றைத் தவிர்ப்பதற்கு ஏற்றவகையில் அரசாங்கமே எல்லாப் பள்ளிகளையும் ஏற்று நடத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார் பள்ளிகளிலும் மிகச் சிறந்த முறையில் நடத்தப்படுகின்ற பள்ளிகளும் இருக்கத்தான் செய்கின்றன. சில பள்ளிகள் போதுமான வருமானம் இல்லாத காரணத்தினால் அப்படிப்பட்ட புகார்கள் வருகின்றன. எங்கெங்கே புகார்கள் வருகின்றனவோ அங்கங்கே அவற்றைப்பற்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. டி. மார்டின் : சில நகராட்சிப் பள்ளிகளில் மதிய உணவிற்காக ஒதுக்கப்படுகின்ற பணம் அந்த வகைக்குச் செலவழிக்கப்படாததால் சில பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்படாத நிலைமை இருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்த வகைகளுக்கு செலவழிக்கவேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறோமோ அந்தந்த வகைகளுக்கு அவர்கள் பங்குத்தொகை கொடுத்தால்தான் நடைபெறும், எங்கே தவறு நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் அதுபற்றி கவனிக்கலாம்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas the finances of the Municipalitis have very much depleted and they are not able to pay the salaries to the teachers—as a matter of fact, in one of the schools, viz., the Municipal High School, Walajapet, North Arcot district, the teachers have not been paid their salaries continuously for 3 or 4 months—will the Government consider the possibility of nationalising the entire municipal schools and bringing them under our Education Department ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே பள்ளிகள் அவர்களுடைய கன்ட்ரோலில்தான் இருக்கின்றன. பள்ளிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதல்ல, நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளலாமா என்பது தான் இப்போதுள்ள பிரச்சினை. உள்ஆட்சிப் பள்ளிகளில் நிதிவசதி இல்லாத காரணத்தினால் அப்படி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. நம்முடைய நிதிவசதிக்கு ஏற்றவாறு எப்படி எடுக்கலாம் என்பது பற்றி பரிசீலனை செய்யலாம்.

* 276 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி தொழில், அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்ற நிர்வாகத்தில் உள்ள உயர்நிலை பள்ளிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என அந்த நகராட்சி மன்றத்திடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நகராட்சி மன்றங்களால் நிர்வகிக்கப்படும் உயர்நிலைப் பள்ளிகளை மேற்கொள்வதில்லையென அரசாங்கம்முடிவெடுத்துள்ளது. எனினும் உயர்நிலைப் பள்ளிகளை நிர்வகிப்பதற்காக நகராட்சி மன்றங்களுக்கு அளிக்கும் தற்போதைய உதவித் தொகை வீதத்தை 50 சதவீதத்திலிருந்து 66-2/3 சதவீதமாக 1967-68 முதற்கொண்டு உயர்த்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் நகராட்சியின் எல்லைக்குள் உள்ள எல்லா உயர்நிலைப்பள்ளிகளும்—ஏறத்தாழ ஆறு உயர்நிலைப்பள்ளிகளும்—திருப்பூர் நகராட்சி மன்ற நிர்வாகத்தின் கீழ்தான் இருக்கின்றன. நகராட்சி மன்றத்திற்குள் வருமானத்தின் பெரும்பகுதி இந்த உயர்நிலைப்பள்ளிகளுக்காகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. மற்ற நகராட்சி மன்ற நிர்வாகத்தில் இரண்டொரு பள்ளிகளையாவது அரசாங்கத் தரப்பில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், திருப்பூர் நகராட்சியைப் பொறுத்த வரையில் எல்லா உயர்நிலைப் பள்ளிகளும் நகராட்சி மன்ற நிர்வாகத்தில் இருப்பதால், அப்படிப்பட்ட நகராட்சி மன்றங்களுக்கு இப்பொழுது கொடுப்பதாகச் சொல்லுகிற 66 சதவீதத்தை 75 சதவீதமாக உயர்த்திக் கொடுக்க இந்த அரசு விசேஷ சலுகை அளிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதிகப்படுத்துவதாக இப்பொழுது உத்தேசம் இல்லை. எதை எதை எடுக்க முடியுமோ அதை எடுப்பதற்கு பரிசீலிக்கலாம்.

THIRU K. VINAYAKAM : Whereas this question seems to be a vicious circle, where want of finance is the trouble for the municipalities and want of finance is also a problem for the State Government, may I suggest, as suggested by our late Chief Minister Arignar Annadurai, why you should not revert to the old system of collecting fees from such of those as could afford to pay taking into consideration their social status ? Will the Government think of the possibility of reverting to the old system as suggested by our late Chief Minister Arignar Annadurai ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய சொந்தக் கருத்தாகச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். தம்முடைய சொந்தக் கருத்தாகச் சொன்னால் தமக்கு ஆபத்து வந்து விடும் என்று கருதித்தான் அவர்கள் மாற்றிச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய கட்சி இதைப்பற்றி என்ன சொல்லப் போகிறது என்று தெரியவில்லை. அவர்கள் தம்முடைய கட்சியின் சார்பில், " இலவசக் கல்வி வேண்டாம் " என்று தீர்மானம் கொண்டு வந்தால் அரசாங்கம் அதைப் பரிசீலிக்கலாம். எங்களைப் பொறுத்த வரையில், நாங்கள் " இலவசக் கல்வி தேவை " என்று கருதுகிறோம்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, அதிக மான தொகை கொடுக்க இயலாது, வேண்டுமானால் அரசாங்கமே உயர்நிலைப்பள்ளிகளை எடுத்துக்கொள்ளும் என்ற முடிவைத் தெரிவித் தார்கள். திருப்பூர் நகரத்தில் எல்லா உயர்நிலைப்பள்ளிகளுமே நகராட்சி மன்ற நிர்வாகத்தில் இருக்கின்ற காரணத்தால், அவற்றுக்கு முதல் சலுகையாக, வருகிற ஆண்டில் ஓரிரு பள்ளிகளை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் எப்படியாவது ஒரு உறுதியை வாங்கி விடலாம் என்று கருதுகிறார்கள். அதை இப்பொழுது கொடுப்பதாக இல்லை.

பள்ளி மாணவர்களுக்கு சீருடை

* 277 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

தொடக்கப்பள்ளிகளிலும், உயர் நிலைப் பள்ளிகளிலும் மாணவிகளுக்கு சீர் உடை வழங்குவதுபோல், மாணவர்களுக்கு உடை வழங்கும் உத்தேச முண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பள்ளி சிறுவர்களுக்கு தாமே முன்வந்து நிகராடை (uniform) வழங்கும் தற்போதைய திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கும் மாணவிகளுக்குமிடையே வேறுபாடு எதுவும் செய்யப்படவில்லையாதலால், இவ்வினா எழவில்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : இந்த மாணவர்களுக்குச் சீருடை வழங்குவதைப் போல் ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கவேண்டும் என்று முன்னாள் கல்வியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கல்வி அமைச் சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல், கல்லூரி ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கக்கூடிய முறையை மேற்கொள்ள அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது கூட அரசு சீருடைகள் வழங்குவதில்லை. ஆங்காங்கே உள்ளவர்கள் முன்வந்து இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். எல்லா ஆசிரியர்களைப் பொறுத்தும், அவர்களாகவே முன்வந்து அப்படிச் செய்து கொண்டால் அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தனியார் நடத்துகிற சில பள்ளிகளில் ஆசிரியைகள் கட்டாயமாகச் சீருடை அணிந்திருக்கவேண்டும் என்ற முறை அமல் நடத்தப்படுகிறது. இதை விரிவுபடுத்தி எல்லா ஆசிரியைகளும் சீருடை அணியவேண்டும் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கட்டாயப்படுத்தினால் ஆபத்து.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நீலகிரியில் குளிர்காலத்தில் அணிந்து கொள்ளுவதற்கென என்.ஜி.ஓ.வினருக்குக் கம்பள உடைகள் வழங்கு வதைப்போல், அங்குள்ள ஆசிரியர்களுக்கும் வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

1969 மார்ச் 11]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி, மாணவர்களுக்குச் சீருடை வழங்குவது பற்றியது. அதை விட்டு, ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்குவது பற்றி எல்லோருமே கேட்க ஆரம்பிக்கிருர்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to uniform for students, many poor parents are not able to supply uniform to their children. On this score will the Hon. Minister be pleased to state whether the Government will come to their aid ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தப் பெற்ருேரும் ஆட்சேபிக்காத அளவுக்குக் குறைந்த விலையில் உள்ள துணிகளைக் கொண்டே சீருடை திட்டம் இருந்து வருகிறது. இப்படிப்பட்ட ஒரு முறை இருந்தால், கல்விக் கூடங்களில் ஒரு நல்ல ஒழுங்கான முறை வளரும் என்ற நம்பிக்கையில் அந்தத் திட்டம் ஆதரிக்கப்படுகிறது.

திரு. பு. மார்டின் : ஸ்பீக்கர் சார், அறிவாலயங்களில் கல்வி பெறுகின்ற மாணவ-மாணவிகளுக்கிடையே பணக்காரர்-ஏழை என்ற வித்தியாசம் இல்லாமல் இருப்பதற்குச் சீருடை முறையை மேல் நாடுகளிலும், இந்த நாட்டில் பல கான்வெண்டுகளிலும், மற்ற இடங்களிலும் நடைமுறையில் வைத்திருக்கிருர்கள். இதை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயமாக்கி, மாணவ-மாணவிகளுக்கு உடைச் சீர்திருத்தத்தைச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட ஒரு முறை தேவை, அது நல்லது என்பதை அரசு ஒப்புக்கொள்ளுகிறது. ஆனால், கட்டாயப் படுத்தினுல் அதிலே பல சங்கடங்கள் எழலாம். ஏழைக் குடும்பங்களில் உள்ளவர்களுக்கு நாம் கஷ்டம் ஏற்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்படலாம். இப்பொழுதுகூட, குறிப்பிட்ட நாட்களில் கட்டாயமாகச் சீருடை அணிந்து வரவேண்டும் என்று சொல்லுகிருர்கள். நிரந்தரமாக எல்லா நாட்களிலும் அணிய வேண்டும் என்று இப்போதுகூட வற்புறுத்தப்படுவதில்லை. நாம் திட்டத்தை மக்களுடைய ஒத்துழைப்போடு நிறைவேற்றுவதுதான் நல்லது.

THIRU K. VINAYAKAM : As far as the City of Madras is concerned, is the Government aware of the fact that in almost all the private institutions run by private managements as well as educational trusts this system of uniform dress is being enforced and uniform is being worn voluntarily by the children in these schools and will the Government instruct the Corporation authorities to institute this kind of uniform dress for all school children ? Here and there there are children wearing uniform. But the entire student community should be made to wear uniforms. Will the Government issue instructions to this effect to the Corporation authorities ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மற்ற பள்ளிகளில் பின்பற்றப் படுவதுபோல், மாநகராட்சிப் பள்ளிகளிலும் இத்திட்டம் அமலில் இருக்கிறது. கனம் அங்கத்தினர் விரும்புவது போல், முழுக்க முழுக்க ஏற்படுத்தவேண்டுமென்ருல், கட்டாயமாகத்தான் வந்து முடியும் ; அதற்கு மக்களிடத்திலே ஆட்சேபணை இருக்கும்.

தமிழ்நாட்டில் கனிப்பொருள்கள்

*278 வினு.—**திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு புவியியல் துறையினர் 1960 முதல் 1968 மார்ச் வரை என்னென்ன கனிவளப் பொருட்கள் கண்டறிந்துள்ளனர் ?

(இ) தற்போது எந்தெந்த மாவட்டங்களில் ஆய்வு செய்து வருகின்றனர்?

(உ) இத்துறைக்குப் பன்னாட்டு நிறுவனம் ஏதேனும் உதவி செய்கின்றதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவர அறிக்கை[a] ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தொழில் மானியம் குறித்துப் பேசும்போது, மாமண்டூருக்குப் பக்கத்தில் ஈயம் போன்ற உலோகங்கள் கிடைக்கத்தக்க அளவுக்குக் கனி வளங்கள் இருக்கின்றன என்ற குறிப்பைப் படித்தேன். ஆனால், இப்பொழுது கொடுக்கப்பட்ட பதிலிலிருந்து, அவ்வாறு மாமண்டூருக்குப் பக்கத்தில் இருக்கும் கனி வளத்தைப்பற்றி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கு ஏதாவது ஆராய்ச்சி நடைபெறுகிறதா ? அல்லது, கைவிடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. கே. போஜன் : இங்கு வைக்கப்பட்டிருக்கும் குறிப்பில், நீலகிரி மாவட்டத்தில் பாக்ஸைட் (அலுமினிய மூலப்பொருள்) கிடைப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது எந்த அளவில் கிடைக்கிறது ? அதிக அளவில் கிடைத்தால், அங்கே ஒரு தொழிற்சாலையை நிறுவ அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பாக்ஸைட் கிடைக்கின்ற இடத்தில் எல்லாம் நாம் தொழிற்சாலையை வைத்துவிட முடியாது. எந்த அளவுக்குக் கிடைக்கின்றது, அது " இக்கனமிக் " காக இருக்குமா , கட்டுப்படியாகக்கூடியதாக இருக்குமா ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு, என்பதைப் பார்க்க வேண்டும். அதற்குப் பின்னர்தான் ஒரு முடிவு எடுக்கவேண்டும். மொத்தம் எவ்வளவு கிடைக்கிறது என்ற விவரம் இருக்கிறது. ஆனால், அந்த இடத்தில் எவ்வளவு கிடைக்கிறது என்பதற்கு என்னிடம் விவரம் இல்லை.

திரு. பி. வேலுசாமி : ஐயா, கோவையில் சமீபத்தில் கனடிய தேசத்திலிருந்து வந்த புவியியல் நிபுணர்கள் ஆராய்ச்சி செய்ததில், 300 அடிக்குக் கீழ்தான் பூமியில் தண்ணீர் இருக்கிறது என்று ஏதாகிலும் கருத்துத் தெரிவித்தார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றிய விவரம் இல்லை. கனிப்பொருள்பற்றித்தான் விவரம் இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள மாமண்டூரில் கிடைப்பது ஈயம் அல்ல ; செப்பு உலோகம் கிடைப்பதாகச் செய்தி வந்தது என்று அரசினுடைய அறிக்கையில் இருக்கிறது. இன்றைக்கு மின்சாரத்திற்கு செப்புக் கம்பி போதுமான அளவுக்குக் கிடைக்காததால் மின்சாரக் கனெக்ஷன் கொடுக்க பல்வேறுவிதமான தடைகள் ஏற்படுவதால், அந்த இடத்திலே சீக்கிரமாக ஆராய்ச்சி செய்து, அங்கு கண்டுபிடிக்கப்பட்ட செப்பு உலோகத்தை நல்ல முறையில் பயன்படுத்த அரசு முன்வருமா

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

திரு. வ. ஜார்ஜ் : இந்தக் கனி வளங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அவற்றைப் பயன்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கான திட்டம் எதையேனும் இந்த அரசு தயாரித்துள்ளதா ? குறிப்பாக குமரி மாவட்டத்தில் " ப்ராஸ் மெட்டல் " கிடைப்பதாகச் சொல்லுகிறார்கள். அதைக் கொண்டு அங்கு தொழிற்சாலை ஏதாவது நிறுவுவதற்குத் திட்டம் உண்டா ?

a 209-212ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1969 மார்ச் 11]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமக்கு இப்படிப்பட்ட கனி வளங்கள் எங்கெங்கு கிடைக்கின்றன, எந்த அளவுக்குக் கிடைக்கின்றன, அவற்றை எந்த எந்தத் தொழில்களுக்குப் பயன்படுத்தலாம் என்பது குறித்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. எந்த எந்த இடத்தில் கிடைக்கின்றனவோ அங்கே எந்தத் தொழில்களைத் தொடங்கி நடத்த முடியும் என்பதையெல்லாம் கண்டுபிடித்து அங்கேதான் தொடங்கப்படும்.

திரு. டி. தங்கப்பன் : தலைவர் அவர்களே, கால்ஷியம் காஸ், க்ளோரைட் போன்ற பொருள்கள் சென்னையிலே தயாரிக்கப் படுகின்றன. ஆனால், அதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் இராமநாதபுரத்தில் மண்டபம் பகுதியில் எடுக்கப்படுகிறது. அந்த மூலப் பொருள்கள் கிடைக்கும் இடத்திலேயே தொழிற்சாலையை அமைக்கக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மூலப் பொருள் கிடைக்கும இடத்தில் வைக்கவேண்டும் என்பது நல்ல கருத்துத்தான். ஆனால், சில சமயங்களில், எற்றுமதி செய்வது போன்ற நிலைகள் இருக்கின்றன. சங்கடங்கள் வருகின்றன. அதற்காகவும் இடம் மாற்ற வேண்டியிருக்கிறது. அதோடு, வேறு பொருள்கள் தேவைப்பட்டால், அந்தப் பொருள் கிடைக்கும் இடத்திலும் செய்ய வேண்டியிருக்கிறது. கனம் உறுப்பினர் கேட்ட பொருள் பற்றி விவரம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கன்யாகுமரி மாவட்டம், தோவளைப் பகுதியில், மங்கமலை, ஒதுக்குக்காடுகளில் செம்பு கிடைப்பதாக அறிக்கையில் இருக்கிறது. எவ்வளவு அளவு இருக்கும், அது அங்கே தொழில் நடத்த வேண்டிய அளவில் இருக்கிறதா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரம் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கோவை மாவட்டத்தில், பல்லடம், பொள்ளாச்சி, உடுமல்பெட் போன்ற இடங்களில் " கனிக்கல் " கிடைப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. பல்லடம் பகுதி வேளாண்மை செய்யமுடியாத வறட்சிப் பிரதேசமாக இருக்கிறது. அந்த மக்களுடைய வசதிக்காக கனிக்கற்களை பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை எற்படுத்த முடியுமா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் முயற்சித்து, அங்கே யாராவது முன் வந்தால், அரசாங்கத்தை உதவி கேட்டால், கொடுக்கத்தயாராக இருக்கிறது. ஆனால், நாமே சென்று ஆரம்பிக்க லாபகரமாக நடக்குமா என்பதைப் பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டும்.

Buckingham Canal.

* 279 *Q.*—THIRU K. VINAYAKAM :

THIRU K. CHEEMAICHAMY :

THIRU V. K. KOTHANDARAMAN :

THIRU KOLATHUR KOTHANDAM :

THIRU S. RAMACHANDRAN :

THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR :

Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to widen and deepen the Buckingham Canal flowing in our State so as to make it more navigable for the transport of goods and passengers ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். தமிழகத்தில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயை மேம்பாடு செய்வதற்கான அடங்கல் செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு, மேம்பாட்டு வேலை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் பொருட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. இக்கால்வாயை மேம்பாடு செய்யும் வேலைகளுக்காக நான்காம் திட்டக்காலத்திற்கு ரூ. 40 லட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. குறைந்த அளவு நிதி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதால் பக்கிங்ஹாம் கால்வாயை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும் இந்த அரசினால் எண்ணப்பட்ட பெரிய வேலை இப்போது எடுத்துக்கொள்ள இயலாது.

THIRU K. VINAYAKAM : Sir, what is the total cost that would be incurred for widening and deepening this Canal which runs from Masulipatam in Andhra Pradesh down to Vedaranyam in our State ? Also, will this scheme not serve as a very good communication and cheap transport like boats to sail through the waters and if so, in spite of the large expenditure that we would be incurring on this scheme, will this Government give priority and take it up in the first year of the Fourth Five-Year Plan ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The question was pursued and during the formulation of the original Fourth Plan Scheme, the State Working Group considered various proposals for development of the water ways in the State and recommended the implementation of a comprehensive major scheme for development of the Buckingham Canal at a cost of Rs. 470 lakhs based on the recommendation of the High Power Committee of 1958. Based on the above recommendations, comprehensive proposals were submitted to the Government of India in 1964 for inclusion in the Fourth Plan. As the Government of India considered the outlay on the scheme as huge, this Government subsequently requested the Government of India to make at least a reduced provision of Rs. 250 lakhs for the development of the Buckingham Canal in the Fourth Plan. In spite of this, we have received only Rs. 40 lakhs.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து, தென்னாற்காடு மாவட்டம் மரக்காணம் பகுதிவரை உள்ள இந்த வாய்க்கால் தூர்ந்துபோய், நடைபெற்ற படகுப் போக்குவரத்து புயலுக்குப் பின்னால் பாதிக்கப் பட்டிருக்கிறது. இனிமேல் அங்கே தூர் எடுக்க முயற்சிகள் எடுக்கப்படுமா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் குறிப்பிட்ட வகையில் அந்த கனால் வேலைக்கு ரூ. 20 லட்சம் வேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கிறோம். அனுமதியை எதிர்பார்க்கிறோம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, "சென்னையிலே ஒரு வாய்க்கால் புதுச்சேரி வரை அது நீளும்" என்று பாரதிதாசன் பாடினார்கள். ஆகவே, சென்னையையும் பாண்டிச்சேரியும் இணைக்க, அந்தக் கால்வாயை அகலப்படுத்த, இந்திய சர்க்காரிடம் நம் அரசு எடுத்துரைத்து, ரூ. 4 கோடி செலவாகும் என்றிருப்பதால், அதை வற்புறுத்தி, போக்குவரத்துத்துறையிலிருந்து பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னைக்கும் பாண்டிச்சேரிக்கும் இணைப்பு ஏற்படுத்தவேண்டும் என்று கனம் உறுப்பினர் சொல்லும் கருத்தை இந்த அரசாங்கம் வலியுறுத்தி, மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்கிறோம்.

[1969 மார்ச் 11]

திரு. க. கோமதிசங்கர திட்சிதர் : தலைவர் அவர்களே, பக்கிங்காம் கால்வாயின் துர்நாற்றத்தைப் போக்கவும், கொசுக்களினால் ஏற்படும் கெடுதல்களைத் தடுக்கவும் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : துர்நாற்றத்தை அகற்றுவதும், கொசுக்களைப் போக்குவதும், நீண்ட காலத் திட்டம். அதைப் பற்றி முயற்சி எடுத்துத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அரியலூர் வட்டம் மருதையாறு திட்டம்

*280 வினா.—**திரு ஆர். கருப்பையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் செயல்பட இருக்கும் மருதையாறு திட்டம் எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மருதையாற்று நீரில் சோடியம் உப்பும் குளோரைட் உப்பும் அதிக அளவில் இருப்பதால் அந்த ஆற்றின் நீர் நஞ்சைப் பயிருக்கு ஏற்றதல்ல என உணரப்பட்டு இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்த ஆற்றில் வரும் தண்ணீர் நஞ்சைப் பாசனத்திற்கு ஏற்றதல்ல என்றாலும், இந்த ஆற்றுக்குக் கரைகளே இல்லை. ஆகவே, கரைகளை விரிவுபடுத்தி, பலப்படுத்த வேண்டியது அவசியம். வெள்ளம் வரும் காலங்களில் பக்கத்துக் கிராமங்களை பாழ்படுத்துகிறது. அந்த மக்களைப் பாதுகாக்கும் பொருட்டாவது, இதன் கரைகளை மராமத்துச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி மருதையாறு திட்டம் பற்றியது. கனம் அங்கத்தினர் கரைகளைப் பற்றிக் கேட்கிறார்கள். தேவையானால், அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நா. காசிராமன் : நான் கேட்டது மருதையாற்றைப் பற்றித் தான்.

பதநீரிலிருந்து சர்க்கரை உற்பத்தி

*281 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் பதநீரிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிற சர்க்கரை ஆலைகள் எத்தனை உள்ளன ?

(இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் இயங்கி வருபவை எத்தனை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) மூன்று.

(இ) இரண்டு.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, பதநீரிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரை உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால், அந்த ஆலைகளுக்கும் நூதனமான இயந்திரங்கள் இயங்கும் அளவிற்கு ஒரு நிபுணர் குழுவை நியமித்து நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மத்திய சர்க்காரிலிருந்து இதன தொடர்பாக, இரண்டு அதிகாரிகள் பரிசீலனை செய்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். முடிவுகள் வந்த பிறகு அதைப் பற்றி ஆராயலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, பதநீரிலிருந்து சர்க்கரை எடுக்க என்று இந்த தொழிற்சாலைக்கு பணம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த சர்க்கரைக்கு அஸ்காவோடு போட்டியிடும் தகுதி இருக்கிறதா ? தகுதியில்லை என்றால், அதை அந்த அளவிற்கு வைக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்க்கரை இரண்டிலும் ருசி இருக்கிறது. பதநீர்ச் சர்க்கரை சாப்பிடுவதால் "டையபிடீஸ்" போன்ற வியாதிகள் வருவதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, கனம் உறுப்பினர் இதைப் பரீட்சித்துப் பார்க்குமாறு சிபாரிசு செய்கிறேன்.

திரு. ஆலடி அருணா : அவைத்தலைவர் அவர்களே, பதநீர் சர்க்கரையில் சுண்ணாம்பு வாடை அதிகமாக இருப்பதால், அவை வாங்குகிறவர்களுக்கு அது கவர்ச்சியாக இருக்கவில்லை. ஆகவே, சுண்ணாம்பு வாடை இல்லாத அளவிற்குச் செய்ய அரசாங்கம் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதிலே, நிபுணர்களைக் கொண்டு தான் இது செய்யப்படுகிறது. சுண்ணாம்பு வாடை அதிகமாக இருப்பதாகப் புகார்கள் வரவில்லை. அப்படி ஏதாவது இருக்குமானால், அதைக் குறைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் நாங்குநேரி பகுதிகளில் ஏராளமாக பனை மரங்கள் இருப்பதால், பனஞ்சாறு உற்பத்தி செய்கிறார்கள். ஏற்கனவே குலசேகரப்பட்டணத்தில் பாரி அண்ட் கம்பெனியார் வைத்து இருந்ததைப் போல, ஒரு சர்க்கரை ஆலை நிறுவ முன்வருமா இந்த அரசாங்கம் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்க்கரை ஆலையை அரசு சார்பாக நிறுவ உத்தேசம் இல்லை. அதற்காகத்தான், பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், பல இடங்களில் அப்படி அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான், மத்திய சர்க்காரிலிருந்து, இரண்டு அதிகாரிகள் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் மத்திய சர்க்காருக்கு கருத்துக்களை அனுப்புவார்கள். முடிவு வந்த பிறகு, அவசியமான பகுதிகளில் ஏற்படுத்தத் தயங்க மாட்டோம்.

***282 *Q* —Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have proposed to issue licences for starting palm sugar factories in this State ?**

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

முற் பகல் 9-30 **திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இனியாவது அரசாங்கம் கூட்டுறவுத் துறையிலாவது இந்தத் தொழிற்சாலைகளை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள கேள்வியோடு தொடர்புள்ள கேள்வி இது. திரு. சித்தன் அவர்கள் ஏற்கெனவே கேட்டு நான் அதற்கு ஏற்கெனவே விளக்கங்களைக் கொடுத்திருக்கிறேன்.

Vigilance and Anti-corruption.

***266 *Q.*—Thiru K. M. RAMASWAMI GOUNDER and Thiru P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state :**

(*a*) whether there is any proposal to reorganise the Directorate of Vigilance and Anti-corruption ; and

(*b*) if so, the details thereof ?

1969 மார்ச் 11]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) தலைவர் அவர்களே, இத் துறையில் சில அபிவிருத்திகளைச் செய்யும் யோசனை பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையிலே அபிவிருத்திகளைச் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல் கிறார்களே, இந்தத் துறை ஏற்கெனவே வேலை செய்கிற நேரத்தில் என்ன குறைபாட்டை அரசு கண்டது? அந்தக் குறைபாட்டை நிவர்த்திக்க அரசு என்ன யோசனையை வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த யோசனையை இப்போது விளக்குவதற்கு இல்லை. இதை விரிவாக்க வேண்டு மென்பதில் அரசு நாட்டம் செலுத்தியிருக்கிறது. குறைகள் என்ன என்ன என்பது பற்றி கேட்டார்கள். என்ன என்ன குறைகள் என்பதை இப் போது விளக்க முடியாது. பரந்த அளவில் குற்றச்சாட்டுகள் இருக்கும் போது, சமுதாயத்தை அந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்க வேண்டு மென்று அரசு விரும்புகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள்பற்றிய அடுத்த கேள்வியையும் இப்போது எடுத்துக்கொள்ளலாம்.

* 267 வினா.—**திரு. பெ. மலைச்சாமி, திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல் அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967–68 மார்ச் வரை எத்தனை அதிகாரிகள் மீது லஞ்ச ஊழல் வழக்குகள் தொடுக்கப்பெற்றன ?

(இ) இவர்களில் அரசிதழ் பதிவு பெற்றவர்கள், பதிவு பெறாதவர் களின் எண்ணிக்கை என்ன ?

(உ) எத்தனை வழக்குகள் வெற்றிபெற்றன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 30 அதிகாரிகள் மீது வழக்குகள் தொடுக்கப்பெற்றன.

(இ) 8 அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் 22 அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள் (13 தனிப்பட்ட நபர்களும் தொடர்பு கொண்டுள்ள னர்).

(உ) 4 வழக்குகள் வெற்றி பெற்றன.

திரு. எஸ். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளாக இருப்பவர்கள் போலீஸ் துறையைச் சேர்ந்தவர் களாக இருப்பதால் அதை மாற்றி, தனியாக ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் அளவில் இயங்கும்படியான முறையில் தனியாக ஒரு குழுவை ஏற்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவைகளை யெல்லாம் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக நான் முதல் கேள்வியிலேயே பதில் சொன்னேன்.

Thiru B. VENKATASWAMY: May I know the names of officers and their designations ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வெளியிடு வதற்கு இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளுக்கு அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லையென்றும், அதனால் பல இடங்களில் பல பேர் தப்பித்துக்கொள் கிறார்கள் என்றும் புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா ? வெளியே இருப்பவர்கள் அப்படிப்பட்ட புகார்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட புகார்கள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. வெளியிலே புகார் கள் இருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி இருந் தாலும் இல்லாவிட்டாலும், இந்தத் துறையை நல்ல முறையில் வலி வாக்கவும், விரிவாக்கவும் இந்த அரசு விரும்புகிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, இவர்கள் எல்லாம் என்ன என்ன காரியங்களுக்காக, குற்றம் சாட்டப்பட்டிருக்கின் றனர் ? என்ன என்ன குற்றங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்கள் மீது எடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும், நடவடிக்கைகளையும் வெளியிடுவதற்கில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்சம் சம்பந்தமான கேஸ்களை பிடிக்கும்போது பொறிவைத்துத்தான் பிடிக்கிறார் கள். இதனால் பல சமயங்களில் நிரபராதிகளைப் பிடித்து தண்டித்து விடு கிறார்கள். ஆகவே, உண்மையில் லஞ்சம் கொடுப்பவர்களைப் பிடித்துத் தண்டிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கேஸ்களை பொறி வைத்தும் பிடிக்கிறார்கள் : வழக்குகள் தொடரப்பட்டும் பிடிக் கிறார்கள்.

திரு. ஆலடி அருணா : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பை தீவிரப்படுத்த, அரசாங்கம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரிகள் தேர்ந் தெடுக்கும்போது, அந்த அதிகாரிகளின் சொத்துபற்றிய விவரங்களையும் பர்ஸனல் ஃபைலில் சேர்க்கும் உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. கே. போஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர் கள் பதில் சொல்லும்போது, 30 அதிகாரிகளின்மீது தொடரப்பட்ட வழக்கு களில் 4 வழக்குகள் வெற்றி பெற்றன என்று கூறினார்கள். நான்கு வழக்குகள் வெற்றி பெற்றன என்றால் மீதி வழக்குகள் தோல்வி யடைந்தனவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நான்கு வழக்குகள் வெற்றிபெற்றன என்றால், மீதி வழக்குகள் தோல்வியடைந் தனவா என்று உறுப்பினர் கேட்கிறார். புலனாய்விலே 16 வழக்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. விசாரணையில் 5 வழக்குகள் இருந்து வருகின்றன. கண்டுபிடிக்க முடியாதவை என்று கருதி கைவிடப்பட்ட வழக்குகள் 3, டிபார்ட்மெண்ட்டில் ஒன்றும், டிரிப்யூனலில் ஒன்றும் இருக்கின்றன.

Advertising Consultants for Government

*268 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have kept any private firm as their advertising consultants ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state the basis which Government adopts in selecting newspapers for giving their advertisements ?

1969 மார்ச் 11]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்தப் பத்திரிகைகளின் விற்பனை, தரம் போன்றவைகளைப் பார்த்து விளம்பரம் அளிக்கப்படுகிறது.

தென்னையிலிருந்து பதநீர் இறக்கல்

*269 வினு.—திரு. கோளத்தூர் கோதண்டம்
திரு. என். எஸ். வி.சித்தன் } மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னையிலிருந்து பதநீர் இறக்குகின்ற அனுமதி எந்தெந்த மாவட்டங்களில் அமுலிலிருக்கின்றது ?

(இ) செங்கற்பட்டு, சேலம் ஆகிய மாவட்டங்களில் உடனடியாக அமலாக்கின்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தமிழ்நாடு முழுவதும் வெல்லம் தயாரிப்பதற்காக மட்டும் தென்னை மரத்திலிருந்து பதநீர் இறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(இ) இவ் வினு எழவில்லை.

திரு. கோளத்தூர் கோதண்டம் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னையிலிருந்து பதனீர் இறக்கப்பட்டு, வெல்லம் மட்டும் காய்ச்சப்படுகிறது. இப்படி பதனீராக விற்ருல் தான் மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தென்னை மரத்திலிருந்து பதனீராக இறக்கப்பட மாட்டாது. அப்படிச் செய்தால் அது வேறு காரியங்களுக்குப் பதப்படுத்தப்பட்ட நீராக அமையும்.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரத்திலிருந்து இறக்குகிற பதனீரையும், தென்னை மரத்திலிருந்து இறக்குகிற பதனீரையும் இரண்டையும் குடித்துப் பார்த்தவர்கள் சொல்கிருர்கள், தென்னை மரத்திலிருந்து இறக்குகிற பதனீர் சுகமாகவும், ருசியாகவும், உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததாகவும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, மக்களுடைய நன்மையைக் கருதி, அப்படிக் குடிப்பவர்களுக்காக மட்டிலும் பதநீர் இறக்குவதற்கு அனுமதி கொடுக்கமுடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சொல்லக் கூறியதோ அல்லது சொந்த அனுபவமோ எனக்குத் தெரியாது. இப்போது அனுமதி வழங்குவதற்கில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, சர்க்கார் உத்தரவு இருந்தும், தென்னம் பதநீரை இறக்கி, சீர்காழி தாலுகா பகுதிகளில் ரோடிலேயே வைத்து விற்கிருர்களே, அப்படிப்பட்டவர்கள் மீது அங்குள்ள அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறுர்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிறகாவது அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அரசு இதைக் கவனத்தில் கொள்ளும்.

Thiru T. MARTIN : May I request the Hon. Minister to state whether the sale of 'Neera' is prohibited under the Act ? If it is not prohibited, what is the obstacle which is preventing the Government from selling the same through Co-operative Jaggery Societies in the City or some other place ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது வெல்லம் தயாரிக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு சில நிபந்தனைகள் மீதுதான் இந்த உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மதுவிலக்குத் திட்டம் அமலில் இருக்கும் நேரத்தில் வெகு ஜாக்கிரதையாக கையாளப்பட வேண்டுமென்பதால், வெல்லம் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டும் என்கிற அளவில் அரசு முடிவு எடுத்திருக்கிறது.

திரு. மு. ச. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீராவிலிருந்து வெல்லம் தயாரிப்பதற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு சர்க்கரை தயாரிப்பதற்கும் அனுமதி கொடுத்தால் உபயோகமாக இருக்கும் அல்லவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தின் சில பகுதிகளில் தென்னையிலிருந்து பதனீர் இறக்குவதற்குப் பதிலாக கள் இறக்கப்படுவதாக அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ? வந்திருந்தால் அரசு அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையினை அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசுக்குப் புகார் வரவில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

அரசுத் துறைகளின் வருடாந்தர தணிக்கை

* 230 வினா—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்களில் வருடாந்தர தணிக்கை (Annual Audit) அந்தந்த இலாகாவைச் சேர்ந்த தணிக்கையாளர் செய்வதற்குப் பதிலாக மாநில அக்கௌண்டன்ட் ஜெனரல் அலுவலகத்தைச் சேர்ந்த தணிக்கையாளர்களைக் கொண்டு தணிக்கை செய்யும் முறையை அரசாங்கம் கொண்டுவரும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: By virtue of Article 149 of the Constitution read with paragraphs 11 (i) and 19 of the Government of India (Audit and Accounts) Order 1936, as adapted under the India (Provisional Constitution) Order, 1947, the Accountant-General, Madras is the statutory Auditor to conduct the annual audit of the various departments of the State Government. The question of appointing the Accountant-General, Madras as auditor for the various departments of the Government to conduct the annual audit does not therefore freshly arise now.

திரு. சி. கோவிந்தராசன் : அந்த அந்த இலாகாவைச் சேர்ந்த தணிக்கையாளர்களைக் கொண்டே ஆடிட் செய்வதனால் பலவிதமான முறைகேடுகள் ஊழல்கள் இருக்கின்றன. ஆகவே, மாநில அக்கவுண்டெண்ட் ஜெனரல் அவர்களின் கீழேயே சில அதிகாரிகளைப் போட்டு ஆடிட் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மூலக் கேள்விக்கான விடையிலேயே நான் சொல்லியிருக்கிறேன். யார் எந்தக் கட்டத்தில் ஆடிட் செய்தாலும் இறுதியாக நம்முடைய கணக்கு எல்லாம் ஆடிட் செய்யப்படுவது அக்கவுண்டெண்ட் ஜெனரல் அவர்களால் தான். இப்போது இருக்கிற எக்சாமினர் ஆஃப் லோகல் பண்டு அக்கௌண்ட்ஸ் நம்முடைய அரசாங்க இலாக்காக்களைப் பரிசோதித்து வருகிறார். சிவில் சப்ளை இலாகாவுக்கு மட்டும் ஒரு தனி நிறுவனமே அதோடு சேர்ந்திருக்கிறது. ஏ.ஜி. ஆபீஸ்

அதிகாரிகளைத்தான் போட்டிருக்கிறோம். இவர்கள் இடைக்காலமாக அவ்வப்போது ஆடிட் செய்து வருகிறார்கள். இந்தக் கணக்கையும் கூட இறுதியில் ஆடிட் செய்வது அக்கவுண்டெண்ட்-ஜெனரல் அவர்கள்தான்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கோவாப்பரேடிவ் இலாகாவில் அந்த இலாகாகாரர்களையே ஆடிட் செய்யப் போட்டிருப்பதனால்தான் பலவிதமான ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதுபோல சிவில் சப்ளை இலாக்காவுக்கும் அந்த இலாக்கா ஆடிட்டே வைத்திருப்பது சரியல்ல. கண்டிப்பாக ஏ. ஜி. அவர்களைக் கொண்டே ஆடிட் செய்ய உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் பெரிய குரலில் பேசுகின்றார். நான் சொன்னதும் அதுதான். இறுதியாக எல்லாவற்றையும் ஏ. ஜி. தான் ஆடிட் செய்கிறார். எக்சாமினர் ஆப் லோகல் பண்டு அக்கௌண்ட்ஸ் மற்றவற்றை ஆடிட் செய்வதுபோல உணவு இலாக்காவுக்கு மட்டும் 10 கோடி ரூபாய்க்கு மேல் வரவு செலவு இருப்பதன் காரணமாக இடைக்கால ஆடிட்டாக அந்த இலாக்காவிலேயே தணிக்கை பிரிவு என்று தணிக்கை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எந்தக் குறை ஏற்படும் என்கிறாரோ அது நீக்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : The system of internal audit has been introduced to have a preliminary check on the accounts and, as the Minister admits, final audit is being carried on by the Accountant-General. This means redundancy or duplication of work, the accounts once audited by the internal auditors being finally audited by the Accountant-General. That is so because the personnel under the Accountant General for audit is less. Will the Government think of the possibility of increasing the auditing personnel under him so that they may be spread all over the State to carry on a uniform single audit and avoiding this duplication of work ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : டூப்ளிகேஷன் ஆப் வொர்க் ஒன்றும் இல்லை. இப்படிச் செய்வதனால்தான் மிக நுணுக்கமாகத் தணிக்கை செய்ய வாய்ப்பு இருக்கிறது.

Representation from Burma Refugees

*** 231 *Q*.—DR. H. V. HANDE :** Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether any representation was received by this Government from the Burma refugees regarding exemption of Sales Tax for five years, i.e. 1968–72 ;

(*b*) whether it is also a fact that the Revenue Department has rejected the representation ; and

(c) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) & (உ) : சென்னையில் உள்ள பர்மா தமிழர் மறுமலர்ச்சிச் சங்கத்திடமிருந்து 14—2—1968 தேதியிட்ட முறையீடும், திருச்சியில் உள்ள பர்மா தமிழர் சங்கத்திடமிருந்து 17—5—1968 தேதியிட்ட மற்றொரு முறையீடும், தனிப்பட்ட பர்மா அகதிகளிடமிருந்து வரப்பெற்ற குறிப்பான சில வேண்டுகோள்களும் தள்ளப்பட்டன. ஆனால் திருச்சியில் உள்ள பர்மா தமிழர் சங்கத்திடமிருந்து கிடைத்த 23—5—1968 தேதியிட்ட முறையீடும் சென்னை, திருச்சி பர்மா அங்காடி வணிகர்கள் மத்தியக் குழுவிடமிருந்து வந்த 3—7—1968 தேதியிட்ட மற்றொரு முறையீடும் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

Dr. H. V. HANDE : Burma refugees are given a very poor deal and refugees from Pakistan have been given a much fairer deal. In view of the fact that Burma refugees to a great extent depend on and believe this Government, will this Government consider why exemption should not be given to Burma refugees under section 17 of the Madras General Sales Tax Act, 1959, as prayed for by the Burma refugees ? While exemption was given to the refugees from Pakistan, why should not the same facility or '*salugai*' be given to Burma refugees?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : I am glad to announce that the Government have already considered the hon. Member's suggestion. The position is as follows :—

This department (Revenue Department) proposed that some exemption can be granted to such refugees for a limited period, say two years, provided the officers in charge of resettlement operations certify that they are *bona fide* refugees engaged in trade for their maintenance in Madras State. Home Department has agreed to that proposal. Finance Department was requested to indicate the probable loss of revenue if the same exemption is granted to them and also if the exemption is extended to the Ceylon repatriates. The matter has been referred to the Board of Revenue for remarks and its reply is awaited.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, இந்த பர்மா அகதிகள் பலபேர் பெட்டிக் கடை வைத்திருக்கிறார்கள். இரண்டாந்தர சாமான்கள் தான் இவர்கள் கைக்கு வந்து போகிறது. ஆகவே விற்பனை வரிக்காக கணக்கு வைப்பது என்பது முடியாத காரியம். கம்பௌண்டிங்காக 50 ரூபாய் வரை கட்டிவிட்டால் போதும் என்று செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இரண்டு வருஷத்திற்கு விதிவிலக்கே அளிக்கலாமா என்பது பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

Repatriates from Ceylon.

*232 *Q.*—Thiru K. VINAYAKAM : and Thiru A. M. RAJA : } Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Tamil Nadu Government has prepared a scheme for raising new tea plantations in Nilgiris district for the settlement of repatriates from Ceylon?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆம், ஐயா. நீலகிரி மாவட்டத்தில் இலங்கை இந்தியர் புனர்வாழ்விற்காக, 3,750 ஏக்கரா நிலத்தில் தேயிலைத் தோட்டத்தை உருவாக்கும் திட்டம் ஒன்றினை தமிழக அரசாங்கம் தீட்டியுள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 5,000 பேர்கள் வேலை வாய்ப்பினை பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் முதல்படியாக மத்திய அரசாங்கம் 750 ஏக்கர் நிலத்தில் தேயிலைத் தோட்டம் உருவாக்கும் திட்டத்தினை அங்கீகரித்துள்ளது.

Thiru K. VINAYAKAM : Whereas we are grateful to what the Government is doing for the repatriates from Ceylon, instead of venturing on new projects and finding out plantation fields for them, will the Government think of the possibility of terminating

the leases with the people with whom lease agreements have been entered into when the lease term expires and give the lands to Ceylon repatriates ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The supplementary question does not arise out of this question.

திரு. ஏ. எம். இ. ராஜா : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் எல்லையோர மாவட்டமாகிய கோவையில் கேரள நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிகமான அளவில் வந்து குடியேறிக்கொண்டிருப்பதனால் சிறிது காலத்தில் அதைக் கேரளத்தோடு சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை எழும்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிச் சொல்லக்கூடாது. இந்தப் பகுதியை விட்டுவிட்டுக் கேள்வி கேளுங்கள்.

திரு. ஏ. எம். இ. ராஜா : வரப்போகின்ற ஆபத்தைத் தடுக்க இலங்கையில் இருந்து வருகின்ற தமிழர்களை இந்த எல்லையோரத்தில் அதிக அளவில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உறுப்பினர் சித்தரிக்கும்படியான அவ்வளவு பெரிய அபாயம் கேரள மக்களால் வந்துவிடாது. கேரள மக்களும், தமிழ் மக்களும் திராவிடத்தைச் சேர்ந்தவர்கள் தான். கோயம்பத்தூர் குடிதண்ணீர் பிரச்சினைக்கு முடிவு காண — கேரள மக்களுக்காகவாவது தண்ணீர் கொடுங்கள் என்றே கேரளாவைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தேவையில்லாத பரபரப்பை உண்டாக்கத் தேவையில்லை.

திரு. க. ர. நல்லசிவன் : நீலகிரி மலையில் அநேக இடங்களில் இது போன்ற காடுகளை அழித்து சாகுபடிக்காகவும், குடியிருப்புக்காகவும் கொடுக்கப்படுகிறது. இப்போது மழையில்லாததின் காரணமாக அதை நம்பியுள்ள பாசனப் பகுதிகள் வறண்டிருக்கின்றன. ஆகவே அடர்ந்த காடுகளை அழிக்காமல் சாதாரணக் காடுகளை மாத்திரம் சிலோன் அகதிகளுக்குக் கொடுக்கச் சர்க்கார் கவனமாகத் திட்டமிடுமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது நீண்ட நெடுங்காலமாக மழை பெய்யவில்லையே என்பதற்காக நாம் சொல்கிற காரணங்களிலே ஒன்று. இருந்தாலும் அரசு காடுகளைக் காப்பதிலும் ஆரண்யங்களை அபிவிருத்தி செய்வதிலும் மிகுந்த அக்கறையோடு இருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : ஆரணிக்குப் பக்கத்திலே பூசிமலைக்குப்பத்தில் இலங்கை அகதிகளைக் குடியேற்றவும், நிலங்களைப் பண்படுத்தவும் திட்டம் இருந்ததே, அது கைவிடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றி தற்போது என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் குடியேற்றப்படுகின்ற தமிழர்கள் தோட்டங்களில் வீடு வசதிகளையும், குடிநீர் வசதிகளையும் செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது சம்பந்தமாக பூர்வாங்க வேலைகள் இப்பொழுதே நடந்துகொண்டிருக்கின்றன.

In the latest progress report of the Chief Conservator of Forests, it is indicated that so far250 standard beds have been formed and the formation of the remaining beds is in progress and also that 50,000 germinated seeds have been pricked out in polythene bags. Sites have been selected for the departmental construction of 10 labour lines and as there is no road and water facilities for this area, a new road is under construction and an earthen dam to store water has

been constructed. Two hundred departmental labourers are at present working in the area. Six temporary sheds with 35 rooms had been constructed for housing the labourers temporarily.

Findings in agricultural science.

270. *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the steps taken by the Government to apprise the farmers and cultivators of the latest findings in agricultural science ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநயகம் : சார், பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே பல துறைகளிலே ஆங்கு ஆங்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக் கிறது. முன்பு எல்லாம் நமது நாட்டிலிருந்து விவசாயிகள் அயல் நாட்டுக்குச் சென்று அங்கு விவசாயம் எப்படி அபிவிருத்தி அடைகிறது, புதிய புதிய முறைகளை எப்படி யெல்லாம் கையாள்கிறார்கள் என்று பார்த்து படித்து அதையெல்லாம் அந்த அனுபவத்தை யெல்லாம் நமக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடிய அளவிலே நாம் முற்போக்கு அடையக் கூடிய திட்டம் இருந்ததே அந்தத் திட்டத்தை இந்த அரசாங்கம் கைவிட்டுவிட்டதா? அந்தத் திட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகிறதா ? தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைக் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஃபார்மர்ஸ் போரம் என்று ஒன்று இருந்தது. அதிலே முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தலைவராக இருந்தார்கள். யார் முதலமைச்சராக இருக்கிறாரோ அல்லது விவசாய அமைச்சராக இருக்கி றாரோ அவர்தான் தலைவராக இருப்பார்கள். துர்ப்பாக்கியவசமாக அவரே தலைவராக இருக்க வேண்டுமென்று அந்த ஃபார்மர்ஸ் போரம் முடிவு செய்திருக்கிறது. அப்படிச் செய்ய வேண்டுமென்று எந்தச் சட்டத் திலே இருக்கிறதோ தெரியவில்லை. அவர்களுக்கு வேண்டியவர்களை அனுப்பி வைத்தார்கள். இப்பொழுது மத்திய அரசாங்கம் நமது ராஜ் யத்தில் ஒருவரை அனுப்பினார்கள். சென்ற ஆண்டு ஒருவரை அனுப்பி னார்கள். அதற்காக ஒரு பேனல் அனுப்ப வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு எட்டுப் பேர்களைச் சிபார்சு செய்திருந்தார். சென்ற ஆண்டு ஒருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள். ஆறு மாத காலம் அமெரிக் காவிற்கு அவர்கள் சென்று சுற்றிப் பார்த்து விவசாயத்தைப் பற்றித் தெரிந்து வந்திருக்கிறார்கள். எனவே மத்திய அரசினுடைய தாக்கீது மேலே ராஜ்ய அரசு சிபாரிசு செய்திருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : 14 எக்ஸ்டன்ஸன் சர்வீஸ்கள் இருப்பதாகத் தெரிகிறது. முக்கியமான கருத்தரங்குக அங்கங்கே மாவட்ட ரீதியாக நடந்துவந்தன. மற்ற விரிவான முறைகள் சரிவரச் செய்யப்படாமல் இருக்கிறதா ? இதைக் கண்காணிப்பதற்கு ஏற்பாடுகள் ஏதாவது செய்யப்பட்டிருக்கின்றனவா? யாராவது அதிகாரிகள் அந்த 15 திட்டங்கள் செயல்படுகின்றனவா என்று கண்காணிக்கிறார்களா ? அப்படியில்லை என்றால் கண்காணிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கண்காணிக்க வேண்டுமென்று அந்தந்த டெபுடி டைரக்டர்களுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறது. அதிலே குறை இருக்குமானால் அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் சம்பந்தப்பட்ட டெபுடி டைரக்டர் மூலமாக மாவட்ட அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து பிளாக்கிலே அதுபற்றி நல்ல முறை யில் கவனிக்க ஏற்பாடுகளைச் செய்யலாம்.

* 212-215ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

ப1969 மார்ச் 11]

திரு. கே. விநயகம்: அறிக்கையிலே விவசாயத்தில் விஞ்ஞானத்தின் மூலம் முன்னேற்றம் எப்படி எப்படி எல்லாம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர அதைப் பயன்படுத்தியதின் விளைவாக என்ன என்ன திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன, விவசாயத்திலே என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது, அரசாங்கத்திற்கு என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது, சமுதாயத்திற்கு என்ன கிடைத்தது என்பதை மந்திரியவர்கள் விவரிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கனம் உறுப்பினர் அவர்கள் கிராமப்புறத்திலே சென்று இம்மாதிரியான விவசாயத்திட்டங்களைப்பற்றித் தெரிந்துக்கொள்ளக்கூடிய நிலைமையிலே ஏதாவது நன்மை இருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாக அவர்கள் சொல்வார்கள். நம்முடைய கருத்திருமன் அவர்களைக் கேட்டாலே அவர்களே சொல்வார்கள். திரு. விநயகம் அவர்கள் சென்னையிலிருந்து கொண்டு அந்த விவரத்தைக் கேட்பதைவிட கிராமத்திற்குச்சென்று அவர்களுடைய தொகுதிக்குச் சென்று சுற்றிப்பார்த்தால் தெரியும். உண்மையிலேயே விவசாயிகள் எவ்வளவு உரம் போடவேண்டும், பயிர்ப் பாதுகாப்புக்கு என்ன என்ன செய்ய வேண்டும், புதிய பொறுக்கு விதைகளை எப்படிப் போடவேண்டும், எந்த அளவுக்கு எந்தக் காலத்தில் உரத்தைப் பயன்படுத்தவேண்டுமென்பதையெல்லாம் சொல்லிக் கொடுக்கிறோம். அதை தனியாகவும் சொல்கிறார்கள், கூட்டாகவும் சொல்கிறார்கள். கருத்தரங்குகளிலும் நல்ல கருத்துக்களைச் சொல்கிறார்கள். அங்கே கேட்கப்படுகிற விஷயங்களுக்கு விவசாய அதிகாரிகள் பதில் அளிக்கிறார்கள். கிராமங்களுக்கு அந்த அதிகாரிகள் போகவில்லையென்றால் ஏன் போகவில்லை என்று கேட்கிறோம். விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் என்று அவர்களை அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய வகையில் அவர்கள் அரைக்கால் சட்டை அணிந்து செல்கிறார்கள். இதைப்பற்றிக் குறைபாடுகள் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்பொழுது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உண்மையிலேயே பல நன்மைகளை இதன் மூலம் செய்கிறோம். வானொலி மூலமாகச் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தப் பிரச்சாரத்தையாவது திரு. விநயகம் அவர்கள் கேட்கவேண்டும். அவர்கள் கேட்டு மற்றவர்களுக்கு அதைப் பிரச்சாரம் செய்யப் பயன்படுத்தலாம்.

வட ஆர்க்காடு மாவட்ட ஒழுங்கு முறை விற்பனை கூடம்

*271. வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் அதிக வரி அல்லது செஸ் நியாயமற்ற முறையில் வசூலிக்கப்படுவது குறித்து அரக்கோணம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. எஸ். ஜே. இராமசாமி அனுப்பிய 13-4-1968-ந் தேதிய கடிதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அரக்கோணம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. எஸ். ஜே. இராமசாமி, வேளாண்மை இயக்குநருக்கு எழுதிய 13-4-1968 தேதியிட்ட கடிதத்திற்கு, வேளாண்மை இயக்குனரிடமிருந்து கடித எண் எம்.கே.டி. ஒ.மு. 135324/64, தேதி 30-5-1 68-ல் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செஸ் என்ற பெயராலே எவ்வளவு ஒவ்வொரு வரிடத்திலும் வசூல் செய்திருக்கிறார்கள். அது எந்த வேலைக்குப் பயன்படுத்தப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் எழுதியிருந்த கடிதத்திற்குக் காப்பி இருந்தால் அவர்கள் அதைத் திருப்பி ஒருமுறைப் படித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் குறிப்பிட்ட பிரகாரம் 25 ஆயிரம் ரூபாய் தக்கோலத்திலிருந்து வசூல்

செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். முழு விவரம் கேட்ட அளவிலே தெரியவருவது என்னவென்றால், செஸ் என்ற பெயராலே வசூலிக்கப்பட்ட தொகை, பனப்பாக்கம், பரஞ்சி, நெமிலி ஆகிய மூன்று ஊர்களிலும் 1967-68-ம் ஆண்டிற்கு 15,576·53 பைசா என்று இருக்கிறது. இதிலே மற்ற அயிட்டங்களும் இருக்கின்றன. புரோக்கர் பீஸ், லைசென்ஸ் பீஸ் என்று 6,602·30 ரூபாய் இருக்கிறது. தக்கோலத்திலிருந்து 2,268·80 வந்திருப்பதாகத் தெரிகிறது. கடந்த எப்ரல், மே, ஜூன் மாதங்களிலே தக்கோலத்திலிருந்து வசூலான தொகை 1,112·90 என்று இருக்கிறது. திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் கேட்டதில் குறிப்பிட்டு இருப்பது தக்கோலமே 25 ஆயிரம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற புள்ளிவிவரத்திற்கும் இதற்கும் நிறைய மாறுபாடு இருக்கிறது. இது மொத்த வியாபாரிகளிடமிருந்தும் சில்லரை வியாபாரிகளிடமிருந்தும் டெகாடிகேட் ஓனர்களிடமிருந்தும்தான் வசூல்செய்யப்படுகிறது. வட ஆர்க்காட்டிலிருந்து மணிலாவை சென்னைக்கும் மற்ற இடங்களுக்கும் எடுத்துவருகிறார்கள். மிடில் மென் இதற்காக ஏற்பாடு செய்து கடனாகக் கொடுத்து செஸ் கொடுக்காமல் தவறான முறையிலே எடுத்துச்சென்றால் வழியிலே மறித்து உண்மையான வியாபாரமா என்று பரிசிலனை செய்கிறார்கள். திரு. எஸ். ஜே. ராமசாமி போன்ற வியாபாரிகள் செய்தால் நிச்சயமாக செஸ் வரி வசூல் செய்யமாட்டார்கள். ஆனால் தரகர்கள் எடுத்துச்செல்கின்றபொழுது யாராய் இருந்தாலும் அதற்கு செஸ் வரி வசூல் செய்யப்படுகிறது.

Supply of fertilisers in Damaneri and Rangapuram Panchayats.

272. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that fertilisers like Ammonium Sulphate and Urea are not made available to the farmers of Damaneri and Rangapuram Panchayats in Ramakrishnarajupet Panchayat Union, Tiruttani taluk, Chingleput district ; and

(*b*) if so, the steps taken to rectify this defect ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை, மொத்தம் கிடைத்த உர அளவையொட்டி முடிந்த அளவிற்குக் கடந்த ஆண்டில்
மு.ப 10-00 1967-68) உரம் வழங்கப்பட்டது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து அனுமதிச் சீட்டுப்பெறாமல் உழவர்களுக்கு அமோனியம் சல்பேட்டும் யூரியா உப்பும் கூட்டுறவுச் சங்கங்கள் விற்கலாமென 1968, மே திங்களில் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளை பிறப்பித்தார். ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளிடம் எவரும் உரம் கிடைக்காமல் இடர்ப்பாடு அடைந்ததாக கூறவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. விநாயகம் : நான் கேள்வி கேட்ட நேரத்தில் யூரியா, அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்கள் அந்த இரண்டு ஊர்களுக்கும் கிடைக்காத நிலை இருந்தது. அந்த இரண்டு ஊர்களுக்கும் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இருந்து போக வேண்டுமென்றால் மலைகளைச் சுற்றி குறைந்தது 15 மைலுக்கு மேல் போகவேண்டியிருக்கிறது. அப்போது மக்கள் உரம் வந்து சேரவில்லை என்று கேட்ட காரணத்தால்தான் கேள்வி போட்டேன். இப்போதாவது அந்தப் பகுதி விவசாயிகளுக்குத் தேவையான அளவுக்கு உரம் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது உரம் நிறையத் தேங்கியிருக்கிறது. உரம் இல்லாத பகுதியே கிடையாது. உரத்தை எப்படியாவது விற்க வேண்டுமென்ற நிலைதான் இருக்கிறது. கனம் விநாயகம் அவர்கள் பிரச்சாரம் செய்து உரத்தை விற்பதற்கு வழி செய்ய

வேண்டும். அந்தப் பகுதியில் உரத்தை உபயோகிக்காததற்குக் காரணம் காலாகாலத்தில் மழை இல்லாமையினால்தானே தவிர, கனம் அங்கத்தினர் சொல்லுவது போல் உரத் தட்டுப்பாடினால் அல்ல.

Liberalisation of abortions.

*273 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state whether the State Government has been consulted by the Union Government on the question of liberalisation of abortions ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : கருச் சிதைவைச் சட்ட பூர்வமாக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அரசு ஆதரிக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது கருச் சிதைவை சட்ட பூர்வமாக ஆக்கப்படுமா என்ற கேள்வி அல்ல. கருச் சிதைவைச் செய்வதற்கு மருத்துவ மனையில் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளனவா என்பது கேள்வி. இதைப் பற்றி ஏற்கெனவே குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரித்து சென்னையில் ஃபாமிலி ப்ளானிங் கவுன்சில் ஆலோசனைப்படி சாந்திலால் கமிட்டி மூலம் பரிசிலனை செய்து அந்தக் கமிட்டியினர் சில காரணங்களை முன்னிட்டு பெண்களின் உடலுக்கும், உயிருக்கும் எந்தவித ஊறும் ஏற்படாத வகையில், சிந்தாகூல முடைய பெண்கள் கருவுற்றிருந்தாலும், 16 வயதுக்குட்பட்ட பெண்கள் கருவுற்றிருந்தாலும் எந்த விதமான கோளாறும் ஏற்படாத வகையில் அந்தக் கருவைச் சிதைப்பதற்கு மருத்துவ சிகிச்சை அளிக்கலாம் என்ற முடிவை எடுத்திருந்தார்கள். ஆனால் டைரக்டர் ஆப் ஹெல்த் சர்விசஸ் அண்டு பாமிலி பிளானிங் நமது மாநிலத்தில் இருக்கிற நிபுணர்களான டாக்டர் ஏ. எல். முதலியார், எம். கே. கே. மேனன் ஆகியோரைக் கலந்து ஆலோசித்ததில் அவர்கள் சம்மதிக்கவில்லை. ஆனாலும் இதை அவசியம் என்று உணர்ந்து இதை ஏற்றுக் கொள்ளும் முறையினால் மேற்கூறிய வகையில் எந்த விதக் குந்தகமும் ஏற்படாத வகையில் சில நல்ல காரணங்களை முன்னிட்டு குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரித்து சட்டப்படி தவறு இல்லாத அளவுக்கு முன் வருவார்களானால் அவர்களுக்குக் கருச் சிதைவைச் செய்யலாம் என்று பல நிபந்தனைகளோடு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

Public Buildings (Licensing) Act.

*274. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the details of the establishment set up to enforce the Madras Public Buildings (Licensing) Act ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கெனவேயுள்ள அரசாங்கப் பணியாளர்கள் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தற்போதைக்குப் பயன்படுத்தப்படுகின்றனர். சென்னை, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர்களது தனி உதவியாளர்களும், வருவாய்க்கோட்ட அதிகாரிகள் அனைவரும், (தனிப் பொறுப்பு வகிக்கும் எல்லாத் துணைத் தாசில்தார்களும் உட்பட) எல்லாத் தாசில்தார்களும் இச்சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குவதற்குத் தகுதியுள்ள அதிகாரிகளென இச்சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த பப்ளிக பில்டிங்ஸ் லைசென்ஸிங் என்ற சட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 2, 3 லட்சம் சிறு வியாபாரிகள், கடை வைத்திருப்பவர்கள் இதன் கீழ் வரக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தாலும் பல வியாபாரிகள் இந்த அரசாங்கத்திடம் முறையிட்டு

மூன்று ஆண்டுகள் தள்ளுபடி செய்யவேண்டுமென்று டெலிகிராம் அனிப்பிய காரணத்தாலும் இந்த அரசாங்கம் குறைகளைக் கவனித்து மீண்டும் மூன்று ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்க முடிவு எடுக்கத் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது 31-3-1969 வரையில் கால நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தேதிக்குள்ளாக அவர்கள் தங்களது மனுக்களைத்தர வேண்டும். அவற்றை பரிசிலனை செய்து அவசியப்பட்டால் காலவரையறை நீடிக்கப்படும்.

Thiru K. VINAYAKAM : Since this Act is an all-pervading one which applies to all public institutions and buildings and whereas the request of the petty stall holders to postpone the Act for a few years could not be met, will the Government think of the possibility of exempting these small shop-keepers and small establishments from the purview of this Act. ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விதிவிலக்குத் தருவதற்குச் செயற்குறிப்பு எதுவும் இல்லை. அவ்வப்போது அவர்கள் புதுப்பித்துக் கொள்ளலாம். காலவரையறையை நீடிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இடும்பாவனம் ஸ்ரீ சற்குணநாத சுவாமி தேவஸ்தானம்

*265. **வினா.—திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா இடும்பாவனம் ஸ்ரீ சற்குணநாதஸ்வாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திருத்துறைப்பூண்டி சன்னதி தெருவில் உள்ள மனையையும் அதில் அமைந்துள்ள வீட்டையும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யாமலும், மனையையும் வீட்டையும் ரூ. 25,000-க்கு மேல் ஒருவர் எடுத்துக் கொள்ள முன் வந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியதைப் புறக்கணித்தும் மேற்படி வீட்டில் குடியிருக்கும் ஒருவருக்கு ரூ. 14,000-க்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், விற்பனையை ரத்து செய்து பகிரங்க ஏலத்தில் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : இப்போது இல்லாவிட்டாலும் உடனடியாக அதை ரத்து செய்து சரியாகப் பணம் கிடைக்கக்கூடிய அளவில் அந்த இடத்தை விற்க அரசு துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அந்த மனையை வாங்கியவர் 1927-ம் ஆண்டிலிருந்து அங்கு குடியிருந்து வருகிறார். அந்த வீட்டுக்காக ஏற்கெனவே அவர் கிட்டத்தட்ட 13,000 ரூபாய் வரை செலவு செய்திருக்கிற காரணத்தாலும், அவரை வெளியேற்ற சட்டம் இடம் கொடுக்காத காரணத்தாலும் அந்த வீட்டை அவரிடமே விற்றால்தான் இலாபம் இருக்கிறது என்ற காரணத்தாலும்தான் விற்கப்பட்டது.

திரு. கே. என். குமாரசாமி : அதிகமான விலைக்கு ஏலத்தில் எடுக்க பலர் தயாராக இருந்தும் அவருக்கே விற்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : குடியிருந்த அவரை வெளியேற்ற சட்டம் இடம் கொடுக்காத காரணத்தால்தான் அவரிடமே விற்கப்பட்டது.

1969 மார்ச் 11]

திரு எம். ஆர். கண்ணன் : தற்போது பலர் கோயில் வீடுகளில் குறைந்த வாடகைக்கு இருந்துகொண்டு அந்த நிலத்தையெல்லாம் உபயோகித்து வருகிறார்கள். இதைப் பற்றி ஒரு சர்வே செய்து இந்த முறைகளை நல்லபடி திருத்தியமைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தனிக் கேள்வி போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) மண்ணெண்ணெய் பங்கீட்டு முறையில் திடீர் மாறுதலும் வண்டிக்காரர்கள் வேலை இழப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

'I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the sudden order of the Commissioner of Civil Supplies re-orienting the distribution system of kerosene oil resulting in the unemployment of nearly three thousand kerosene oil cart pullers'

என்று அறிவிக்கையில் கண்டிருக்கிறது. இது இந்த அரசின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உட்பட்டது. மேலும் உறுப்பினர் அவர்களுக்கு வருகிற மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பிருப்பதால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) மதுரை தியாகராயர் கல்லூரி மாணவர்கள் கல்லூரி தின விழாவில் தேசியகீதம் பாடுவதைத் தடுத்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

'That the business of the Assembly do stand adjourned for the purpose of discussing a definite matter of urgent public importance, namely, that the students of the Thyagaraja College, Madurai, have prevented the National Anthem being sung on 9th March 1969 at the conclusion of the College Day Celebrations while the Tamil Nadu Education Minister was presiding over that function'

என்று அறிவிக்கையில் இருக்கிறது. இது எப்படி இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிப்பதற்குரியது என்பது பற்றி மட்டும் அவர்கள் விளக்கக் கோருகிறேன்.

* **திரு ஆர். பொன்னப்ப நாடார்** : தலைவர் அவர்களே, 9-3-1969-ம் தேதி அன்று நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் உயர்திரு மாதவன் அவர்கள் அந்தக் கல்லூரி காலேஜ் டேயில் தலைமை தாங்கி நடத்திய தாகவும் கடைசியாக தேசிய கீதம் பாடுவதற்கு முன்னடியாக ஒரு சிலர் அந்த மேடையில் புகுந்து தேசிய கீதம் போடுவதை தடைசெய்ததாக நான் கேள்விப்பட்டேன். இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் ஆங்காங்கு நடைபெறுமானால் இந்தத் தேசத்தின் ஒற்றுமையை அது குலைக்கும் என்ற காரணத்தினால் அதிலும் குறிப்பாக நாம் நாட்டு வணக்கம் பாடுகிற ஒரு மரபை நம் மாணவர்களானாலும் சரி அல்லது தேசத் தலைவர்

மூன்று ஆண்டுகள் தள்ளுபடி செய்யவேண்டுமென்று டெலிகிராம் அனிப்பிய காரணத்தாலும் இந்த அரசாங்கம் குறைகளைக் கவனித்து மீண்டும் மூன்று ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்க முடிவு எடுக்கத் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது 31-3-1969 வரையில் கால நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தேதிக்குள்ளாக அவர்கள் தங்களது மனுக்களைத்தர வேண்டும். அவற்றை பரிசீலனை செய்து அவசியப்பட்டால் காலவரையறை நீடிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Since this Act is an all-pervading one which applies to all public institutions and buildings and whereas the request of the petty stall holders to postpone the Act for a few years could not be met, will the Government think of the possibility of exempting these small shop-keepers and small establishments from the purview of this Act. ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விதிவிலக்குத் தருவதற்குச் செயற்குறிப்பு எதுவும் இல்லை. அவ்வப்போது அவர்கள் புதுப்பித்துக் கொள்ளலாம். காலவரையறையை நீடிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இடும்பாவனம் ஸ்ரீ சற்குணநாத சுவாமி தேவஸ்தானம்

*265. வினா.—**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா இடும்பாவனம் ஸ்ரீ சற்குணநாதஸ்வாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திருத்துறைப்பூண்டி சன்னதி தெருவில் உள்ள மனையையும் அதில் அமைந்துள்ள வீட்டையும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யாமலும், மனையையும் வீட்டையும் ரூ. 25,000-க்கு மேல் ஒருவர் எடுத்துக் கொள்ள முன் வந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியதைப் புறக்கணித்தும் மேற்படி வீட்டில் குடியிருக்கும் ஒருவருக்கு ரூ. 14,000-க்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், விற்பனையை ரத்து செய்து பகிரங்க ஏலத்தில் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : இப்போது இல்லாவிட்டாலும் உடனடியாக அதை ரத்து செய்து சரியாகப் பணம் கிடைக்கக்கூடிய அளவில் அந்த இடத்தை விற்க அரசு துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அந்த மனையை வாங்கியவர் 1927-ம் ஆண்டிலிருந்து அங்கு குடியிருந்து வருகிறார். அந்த வீட்டுக்காக ஏற்கெனவே அவர் கிட்டத்தட்ட 13,000 ரூபாய் வரை செலவு செய்திருக்கிற காரணத்தாலும், அவரை வெளியேற்ற சட்டம் இடம் கொடுக்காத காரணத்தாலும் அந்த வீட்டை அவரிடமே விற்றால்தான் இலாபம் இருக்கிறது என்ற காரணத்தாலும்தான் விற்கப்பட்டது.

திரு. கே. என். குமாரசாமி : அதிகமான விலைக்கு ஏலத்தில் எடுக்க பலர் தயாராக இருந்தும் அவருக்கே விற்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : குடியிருந்த அவரை வெளியேற்ற சட்டம் இடம் கொடுக்காத காரணத்தால்தான் அவரிடமே விற்கப்பட்டது.

திரு எம். ஆர். கண்ணன் : தற்போது பலர் கோயில் வீடுகளில் குறைந்த வாடகைக்கு இருந்துகொண்டு அந்த நிலத்தையெல்லாம் உபயோகித்து வருகிறார்கள். இதைப் பற்றி ஒரு சர்வே செய்து இந்த முறைகளை நல்லபடி திருத்தியமைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தனிக் கேள்வி போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) மண்ணெண்ணெய் பங்கீட்டு முறையில் திடீர் மாறுதலும் வண்டிக்காரர்கள் வேலை இழப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

'I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the sudden order of the Commissioner of Civil Supplies re-orienting the distribution system of kerosene oil resulting in the unemployment of nearly three thousand kerosene oil cart pullers'

என்று அறிவிக்கையில் கண்டிருக்கிறது. இது இந்த அரசின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உட்பட்டது. மேலும் உறுப்பினர் அவர்களுக்கு வருகிற மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பிருப்பதால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) மதுரை தியாகராயர் கல்லூரி மாணவர்கள் கல்லூரி தின விழாவில் தேசியகீதம் பாடுவதைத் தடுத்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

'That the business of the Assembly do stand adjourned for the purpose of discussing a definite matter of urgent public importance, namely, that the students of the Thyagaraja College, Madurai, have prevented the National Anthem being sung on 9th March 1969 at the conclusion of the College Day Celebrations while the Tamil Nadu Education Minister was presiding over that function'

என்று அறிவிக்கையில் இருக்கிறது. இது எப்படி இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிப்பதற்குரியது என்பது பற்றி மட்டும் அவர்கள் விளக்கக் கோருகிறேன்.

* **திரு ஆர். பொன்னப்ப நாடார்** : தலைவர் அவர்களே, 9-3-1969-ம் தேதி அன்று நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் உயர்திரு மாதவன் அவர்கள் அந்தக் கல்லூரி காலேஜ் டேயில் தலைமை தாங்கி நடத்தியதாகவும் கடைசியாக தேசிய கீதம் பாடுவதற்கு முன்னடியாக ஒரு சிலர் அந்த மேடையில் புகுந்து தேசிய கீதம் போடுவதை தடைசெய்ததாக நான் கேள்விப்பட்டேன். இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் ஆங்காங்கு நடைபெறுமானால் இந்தத் தேசத்தின் ஒற்றுமையை அது குலைக்கும் என்ற காரணத்தினால் அதிலும் குறிப்பாக நாம் நாட்டு வணக்கம் பாடுகிற ஒரு மரபை நம் மாணவர்களானாலும் சரி அல்லது தேசத் தலைவர்

களானாலும் சரி அதைக் காப்பாற்றுவது சாலச் சிறந்ததாக இருக்கும். அதற்கு நேர்மாறாக வருந்தத்தக்க விதத்தில், துரதிருஷ்டவசமாக இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் ஏற்படுமானால் ஆங்காங்கு பிரிவினை சக்திகள், தீய சக்திகள் இந்த நாட்டில் தலை தூக்கி ஓங்கும் என்ற காரணத்தினால் இந்தமாதிரியான சம்பவங்கள் மேலும் தொடர்ந்து நடக்குமானால் இது ஒரு பேராபத்தை விளைவிக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இது ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். ஆகவே இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இந்த முக்கியமான விஷயம் பற்றி விவாதிக்கவேண்டுமென்று சபையின் அனுமதியை தங்கள் மூலம் நான் கோருகிறேன்.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மதுரையில நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி பற்றி மாண்புமிகு எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்னை சாதாரணமாக நடைபெறக்கூடிய தல்ல என்றும் எங்கேயோ ஒரு சில இடங்களில் இப்படி நடைபெற்றுவிடுகின்றன என்றும் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். இது அவையை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய பிரச்னையா என்பதை அவர்களும் உணருவார்கள் என்று நம்புகிறேன். நடந்த நிகழ்ச்சிகளை செய்தித் தாள்களில் மிகப் பெரியதாக, நடக்காததை யெல்லாம் இணைத்துப் போடுவதால் இத்தகைய பரபரப்பு ஏற்படுகிறது. இந்தச் செய்தித்தாள், அந்தச் செய்தித்தாள் என்று நான் குற்றம் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேள்விப்பட்டேன் என்றுதான் சொன்னார்கள். பத்திரிகைகளில் வந்ததைக் கூட அவர்கள் நம்பவில்லை. அவர்களுக்கு நன்றி, அந்த நிகழ்ச்சியை அப்படிக் குறிப் பிட்டதற்காக.

அந்தக் கல்லூரியில் விழா முடிந்தவுடன் தேசீய கீதம் பாடப்பட்டது. பாதியில் நிறுத்தியதாக போட்ட செய்தி முழுவதும் தவறு. முழுதும் பாடப்பட்டு முடிக்கப்பட்டது. நானும் பக்கத்திலேயே நின்று கொண் டிருந்தேன். மேடையில் யாரோ ஏறிவந்து ஒலிப்பெருக்கியைப் பிடித் தார்கள் என்று போட்டிருப்பது மிகப் பெரிய தவறு. அந்தமாதிரி மாணவர்கள் யாரும் வரவில்லை. தேசீய கீதம் பாடப்பட்டது. சிலபேர்கள் பின்னாலிருந்து கொண்டு ஒலி எழுப்பினார்கள். அவ்வளவுதான் நடந்ததே தவிர வேறு எதுவும் நடக்கவில்லை. ஏன் அப்படிச் செய்தார்கள் என்று அவர்கள் கேட்கலாம். அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்கெனவே இங்கு சொல்லியிருப்பதுபோல் இந்தி எதிர்ப்பில் இது வராது. இது வங்காள மொழியில் பாடப்பட்ட தேசீய கீதம். தேசீய கீதத்தை நாங்கள் முழு வதும் மதிக்கிறோம் என்று ஏற்கனவேயே சொல்லியிருக்கிறோம். அன்று மூன்று கல்லூரி நிகழ்ச்சிகளில் நான் பங்கு பெற்றேன். இரண்டு கல்லூரி நிகழ்ச்சிகளில் தேசீய கீதம் பாடும் போது மாணவர்கள் அமைதியாக நின்றார்கள். இங்கு கூட ஒரு சில பகுதியினர்தான் அப்படிச் செய்தார்கள். அதைப் பெரியதாகச் செய்ய வேண்டாம் என்பது என் கருத்து. பத்திரி கைகளில் வந்த செய்தி இரண்டு பிரச்னைகளையும் பொறுத்தளவிற்கு முற்றி லும் தவறானதாகும். தேசீய கீதம் பாடி முடிந்ததற்குப் பிறகு சில பேர்கள் "சங்கே முழங்கு" என்ற பாடலைப் பாடவேண்டுமென்று கேட்டார்கள். அதுவும் பாடப்பட்டது. அதற்கும் நான் நின்று அதற்கும் வணக்கத்தைச் செலுத்திவிட்டு இறங்கி வந்தேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்க கள் ஒரு விளக்கம் கொடுத்தார்கள். இந்தமாதிரி சில இடங்களில் நடக் கின்றது என்று சொன்னார்கள். இதைவிடப் பெரியதொரு தவறு என்ன வென்றால், தேசீய கீதம் பாடியதற்குப் பின்னால் விழா முடியாது "சங்கே முழங்கு" என்ற பாடலைப் பாடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள் என்று சொன்னார்கள். அது ஒரு தவறான பழக்கம். தேசீய கீதம் முழங்கி விட்டால் அதற்குப் பிறகு எதுவும் நடக்கக்கூடாது. அப்படிச் செய்வதுதான் தேசீய கீதத்திற்கு கொடுக்கும் ஒரு மரியாதையாகும். தேசீய கீதம் பாடியதற்குப் பின்னால் "சங்கே முழங்கு" என்ற பாடலைப் பாடச் சொன்னதாகவும் அதையும் கேட்டுக்கொண்டிருந்ததாகவும் அமைச் சர் அவர்கள் சொன்னார்கள். எப்படி அவர்கள் அதற்குக் கட்டுப்பட்டார்கள்

என்று கேட்கிறேன். பத்திரிகைகளில் வந்தது தவறு என்றார்கள். தேசிய கீதம் பாடி முடிந்ததற்குப் பிறகு "சங்கே முழங்கு" என்ற பாடலைப் பாடச் சொன்னதாகச் சொன்னார்கள் என்பதை அமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். தேசிய கீதம் பாடும்போது இடையிலே கூச்சல் போட்டிருப்பதாகவும் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். கூச்சல் இடையில் போடப்பட்டதா, பின்னால் போடப்பட்டதா என்ற ஒரு நிலைமையும் இருக்கிறது. தேசிய கீதம் பாடுகிறபோது எப்படி சப்தம் போடலாம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது இரண்டு பேர்கள் கூச்சல் போடலாம் அல்லவா? முழுவதும் பாடப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தேசிய கீதம் பாடும் போது அப்ஸல்யூட் ஸைலன்ஸ் கண்டிப்பாக இருக்க வேண்டும். தேசிய கீதம் பாடும்போது எந்தவிதமான சப்தமும் இருக்கக்கூடாது. ஆனால்அங்கு சப்தம் கூச்சல் போட்டிருக்கிறார்கள். இவர்களும் அதைக் காதால் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் அதற்குப்பின்னால் "சங்கே முழங்கு" என்ற பாடலைப் போட்டிருக்கிறார்கள். அதைவிட ஒழுக்கக்கேடு வேறு ஒன்றும் இல்லை. அதுதான் எங்கள் கட்சி துணைத் தலைவர் அவர்களின் ஒத்தி வைப்புத் தீர்மானம். அதாவது தேசிய கீதம் பாடப்பட்டதற்குப் பின்னால் அந்தப்பாட்டு போடப்பட்டு அமைச்சர் அவர்களும் அதை உடனிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படி அது இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைப்பதற்குரியது என்பதை மட்டும் விளக்க வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தேசிய கீதம் பாடும் போது அதற்குரிய மரியாதை கொடுக்கப்படவில்லை. சப்தங்கள் எல்லாம் எழுப்பப்பட்டன. அமைச்சர் அவர்களும் அப்போது அங்கு இருந்திருக்கிறார்கள். ஆகவே இது பற்றி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும். ஏற்கனவே நான் ஒரு சில பிரச்னைகளை எழுப்பியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் தேசியக் கொடியைப் போடுவதில்லை என்று. சிலர் கட்சிக் கொடியைப் போட்டுக்கொண்டு போகிறார்கள். சிலர் தேசியக் கொடியையும் கட்சிக் கொடியையும் போட்டுக் கொண்டு போகிறார்கள், என்று

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கு வந்துள்ள பிரச்னையைப் பற்றிமட்டும் பேசுங்கள். நடந்து போனதைப் பற்றி பேசக்கூடாது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நோய் வரும்போது எங்கேயோ ஆரம்பிக்கும். பின்னர் அது பெரிதாக ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பேசும் சமயம் வரும் போது பேசுங்கள். இப்போது அவை முன் இருப்பது திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கொண்டு வந்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவை நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிப்பதற்குரியதா என்பதாகும். அதற்குண்டான காரணங்களை மட்டும் கூறவேண்டும். மற்றப் பிரச்னைகள் பற்றி பேசி விளக்கிக் கொண்டு போவதற்கு இது உரிய இடமும் அல்ல. உரிய நேரமும் அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தேசிய கீதம் பாடும்பொழுது, அதற்கு அவமானம் வருகிற நிலை ஏற்படும் போது சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று சொல்கிறோம். இதற்குக்கூட சபையை ஒத்தி வைத்து விவாதிக்காவிட்டால் எதற்காகத்தான் ஒத்திவைத்து விவாதிப்பது என்று புரியவில்லை. இது ஒரு ஜீவாதாரமான பிரச்னை, தேசியப் பிரச்னை எவ்வளவோ போராடி சுதந்திரம் பெற்ற நிலை. தேசிய கீதம் பாடும்போது சப்தம் போட்டதை அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். சங்கே முழங்கு என்ற

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறீர்களே.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தேசீய கீதம் முடிந்ததற்குப் பின்னால் சங்கே முழங்கு என்ற பாட்டை பாடி அமைச்சர் அவர்களும் இருந்திருப்பது ஒழுக்கமா. ஆகவே இதுபற்றி விவாதிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, இன்று எழுப்பப்பட்டுள்ள இந்த ஒற்றிவைப்புப் பிரேரணை குறித்து மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் அவரே அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டிருந்த காரணத்தினால் அதற்கான விளக்கத்தை அளித்திருக்கின்றார்கள். தேசீய கீதம் பாடப்படுவது எப்படியிருக்க வேண்டும், எந்த நிலைகள் அங்கே கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பது குறித்து விவாதிப்பது என்பது தேசீய கீதத்திற்கு நாம் தருகின்ற மரியாதை ஆகாது. ஏனென்றால் அது முடிவெடுக்கப்பட்ட ஒன்றாகும். அரசாங்க நிகழ்ச்சிகள் எதுவானாலும் அல்லது அரசாங்கத் துறையிலுள்ளவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் எதுவானாலும் அந்த நிகழ்ச்சியின் இறுதியிலே தேசீய கீதம் பாடப்படவேண்டுமென்பது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு நாட்டில் ஒரு தவறான பிரச்சாரம், நாங்கள் தேசீய கீதத்தை மதிப்பதில்லை, தேசீயக் கொடியை அவமதிக்கிறோம் என்றெல்லாம் ஒரு தவறான பிரச்சாரம் நாட்டிலே செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இப்பொழுது அந்தப் பிரச்சாரத்திற்கு அவ்வளவாக மதிப்பில்லை என்றாலும் ஆரம்பத்திலே செய்யப்பட்டது.

நான் ஒன்றை மாத்திரம் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். சென்னை மாநகராட்சி மன்றத்தை திராவிட முன்னேற்றக் கழகம் 1959-ம் ஆண்டு கைப்பற்றிய அந்த நேரம் தொட்டு அங்கே தேசீயக் கொடியை ஏற்றி வைப்பதில் திராவிட முன்னேற்றக் கழக மேயர்கள் முன்னின்று இருக்கிறார்கள். தேசீய கீதம் பாடுகின்ற அந்த நிகழ்ச்சிகளில், நாங்கள் அப்பொழுது எதிர்க்கட்சியிலே இருந்த நேரத்திலும்கூட மாநகராட்சி மன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் நிர்வகிக்கும் இந்த ஏறத்தாழ பத்தாண்டு காலங்களில், எல்லா நிகழ்ச்சிகளின் இறுதியிலும் தேசீய கீதம் பாடப்பட்டு, நாங்களும் அதிலே கலந்துகொண்டு அதற்குரிய மரியாதையைச் செலுத்தி வந்திருக்கிறோம்.

ஆனால் இப்பொழுது மதுரையிலே அந்தக் கல்லூரியிலே நடைபெற்ற சம்பவம் குறித்து எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எந்த அளவுக்கு மனம் புண்ணடைந்து உணருகின்றார்களோ அதைப் போலவே நானும் புண்ணடைந்து அந்த உணர்ச்சியைப் பெறுகின்றேன். ஏனென்றால், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கூறியது போல தேசீய கீதம் பாடப்பட்ட நேரத்தில் யாரும் ஒலிபெருக்கியைப் பிடித்துத் தடுக்கவில்லை யென்றாலும், சிலர் ஒரு ஓரத்திலிருந்து எதிர்ப்புக் கோஷங்களை எழுப்புவது என்பதுகூட தேசீய கீதத்திற்குக் காட்டும் மரியாதை ஆகாது. அது நம்முடைய பண்பாட்டுக்கு மரியாதை அல்ல. நம்முடைய பண்பாட்டை அழித்துக் கொள்கிறோம் என்று கூடச் சொன்னால் அது மிகையாகாது என்றே கருதுகிறேன். தேசீய கீதத்தைப்பொறுத்த வரையில், அது தமிழ்நாடு மக்களின் மீது தமிழகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற இந்தி மொழியால் ஆக்கப்பட்டது அல்ல. வங்க மொழியால் ஆக்கப்பட்டது. இன்னும் சொல்லப் போனால், வங்க மொழிக்கும், தமிழ் மொழிக்கும், வங்கத்திலேயுள்ள மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் நீண்ட நெடுங்காலமாகத் தொடர்புண்டு. அந்த வகையில் தேசீய கீதத்தை மறுப்பதற்கு தமிழகத்தில் உள்ள மாணவர்களுக்கு மாத்திரம் அல்ல, வேறு யாருக்கும் அந்த எண்ணம் ஏற்பட்டால் அது தமிழ்நாட்டின் துரதிருஷ்டவசமேயாகும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

"சங்கே முழங்கு" என்ற பாடல் இறுதியாகப் பாடப்பட்டதுகூட, ஏதோ அந்த நேரத்திலே கல்வியமைச்சரவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் தேசீய கீதம் பாடப்பட்டபொழுது குழப்பம் ஏற்பட்டுவிட்டது என்று

நாட்டிற்கு அறிவிப்பது நல்லது அல்ல என்ற காரணத்தினாலே, அமைதியை உருவாக்கும் நிலையிலே இருந்திருக்கின்றார்களே யல்லாது வேறல்ல என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்களும் உணர்வார்கள் என்று கருதுகிறேன். அங்கே சங்கே முழங்கு என்ற பாடலை தேசீய கீதத்திற்குப் பிறகு போடக் கூடாது என்று அவர் தடுத்திருந்து அதன் காரணமாக அமளி ஏற்பட்டிருந்தால், அந்த அமளிபற்றிய செய்தி இந்தியா வெங்கும் பரவி, அது அகில உலகச் செய்தியாக ஆகி, ஒரு கல்லூரியில் இந்தியாவின் தேசீய கீதம் பாடப்பட்ட பொழுது பெரிய அமளி ஏற்பட்டது என்று செய்தி வருமே தவிர, சங்கே முழங்கு என்ற பாடலைப் பாட வேண்டுமென்று அமளி ஏற்பட்டது என்று செய்தி வராது. ஆகவே, இந்தியாவின் பெருமையைக் காப்பாற்றும் வகையிலும், தேசீய கீதத்தின் மீது கொண்டிருக்கும் பற்றை உணர்த்தும் வகையிலும் கல்வி யமைச்சரவர்கள் மிகுந்த சாதுர்யமாக நடந்து கொண்டிருக்கிறார்கள்.

இனிமேல், அந்தப் பாடலை மாணவர்கள் விரும்பினால், அப்படி விரும்புகின்ற மாணவர்கள், அதை தேசீய கீதத்திற்கு முன்பு பாடிவிட்டு, கடைசியாகத் தேசீய கீதத்தைப் பாடச் செய்ய வேண்டுமென்பது முறையாகும். மேல்சபையில் மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய கலைஞர் திரு டி. கே. ஷண்முகம் அவர்கள் தேசீய கீதத்திற்குப் பதிலாக வேறு ஒரு தமிழ்ப் பாடலைப் பாடுவதைப்பற்றிக் கேட்டதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஏடுகளிலே பார்த்திருப்பார்கள். நான், நிச்சயமாக அது முடியாது, இந்தியாவின் தேசீய கீதத்தைத் தான் இறுதியில் பாட வேண்டும் என்று கூறியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள், எவ்வளவு கருத்துக்களைச் சொல்ல வேண்டுமோ அவ்வளவு கருத்துக்களையும் வெகு அழகாகச் சித்தரித்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்தனை பேரும் சொல்லி யிருக்கக் கூடிய பொருளை உள்ளடக்கி, எதிர்க்கட்சித் தலைவரவர்கள், குறள்போல, எழ்கடலைத் திணித்த குறள் என்பார்களே அதுபோல, அவ்வளவு கருத்துக்களையும் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வெகு அழகாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இதைப் பற்றி விவாதித்து, தேசீய கீதம் பாடப்பட வேண்டுமா, வேண்டாமா, அதை மாணவர்கள் எதிர்க்கலாமா, கூடாதா என்று விவாதத்திற்குரியதாக தேசீய கீதத்தை ஆக்க வேண்டாம். அது தேசிய கீதத்திற்கு நாம் காட்டும் மரியாதை அல்ல என்று கூறிக்கொண்டு, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டாமென்ற கருத்தினை பேரவைத் தலைவரவர்களுக்கு கூறிக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சரவர்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும் விளக்கம் கொடுத்ததற்குப் பிறகு இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. பி ஜி. கருத்திருமன் : சபாநாயகரவர்களே, முதலமைச்சரவர்கள் சாதுர்யமாகவும், நல்ல முறையிலும் இம்மாதிரி தேசீய கீதத்தைப்பற்றிச் சொன்னதற்கு நன்றி. இருந்தாலும்கூட என்னுடைய கருத்துக்களிலே அவரும் ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டது பற்றி.........

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முழுக்க, முழுக்க.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முழுக்க, முழுக்க ஏற்றுக் கொண்டது பற்றி நன்றி. அதே சமயத்தில் நான் இன்னொரு பிரச்சினையைப் பற்றியும் சொன்னேன். தேசீய கீதத்திற்குப் பிறகு சங்கே முழங்கு என்று பாடிய பாடலை அமைச்சரவர்கள் இருந்து கேட்டுக் கொண்டு வந்தது அமளியாகாமல் இருப்பதற்காகத்தான் என்று கூறினார்கள். முதலமைச்சரவர்கள் நினைத்த மாதிரி, கல்வியமைச்சரவர்கள் சங்கே முழங்கு என்ற பாடலைப் பாடினதுபற்றி என்ன கருதுகிறார்கள் என்று தெரிய வேண்டும். தேசீய கீதத்திற்குப் பின்னால் பாடியது தவறு என்பதை உணருகிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் அப்படிக் கருதும் பொழுது அவரும் அப்படிக் கருதுவதாகத் தான் அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சரவர்களும், முதலமைச்சரவர்களும் கூறிய விளக்கத்திற்குப் பிறகு, இதை விவாதிக்கத் தேவையில்லை என்று நினைக்கின்ற காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

புது உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்குவதில் தாமதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 41-வது விதியின்கீழ் ஒரு விஷயத்தை டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்களும் மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of Hon. the Minister for Food and Agrculture to a matter of urgent public importance, namely, the delay in the distribution of new ration cards and the consequent inconvenience and hardship to the public of Madras.

THIRU GOMATHYSANKARA DIKSHIDAR: Sir, under rule 41 of the Assembly Rules, I call the attention of Hon. the Minister for Food and Agriculture to a matter of urgent public importance, namely, the delay in the distribution of new ration cards and the consequent inconvenience and hardship to the public of Madras.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவரவர்களே, சென்னை நகரில் 1966-67ம் ஆண்டில் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றைப் புதுப்பித்து 1969-ம் ஆண்டுக்கான அட்டைகள் வழங்கும் பணியை உணவு வழங்குதுறை 1968-ம் ஆண்டு டிசம்பரில் மேற்கொண்டது. 5,49,641 பழைய கார்டுகள் சென்னை நகரில் வழங்கப்பட்டிருந்தன. அவற்றைப் புதுப்பிப்பதற்கு முன்பு ஒவ்வொரு வீடாகச் சென்று ஆய்வு செய்து புதுக் கார்டுகளை வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

குடும்பத்தில் உள்ளவர்களின் பெயர்களையும் விவரங்களையும் பதிவு செய்ய நமூனாக்கள் பங்கீட்டுக் கடைகளின் மூலம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. இந்த நமூனாக்களைப் பெற்றுக் கொண்டு, அதில் தங்கள் குடும்பங்களைப் பற்றிய விவரங்களைக் குறித்துத் தங்கள் வீடுகளுக்குக் கணக்கெடுப்பாளர் வரும் வேளையில் அந்த நமூனாக்களைக் கொடுக்குமாறு பொது மக்கள் வேண்டிக் கொள்ளப்பட்டனர். வீடுகளுக்குக் கணக்கெடுப்பாளர் சென்றபோது குடும்பத் தலைவர் கொடுத்த விவரங்கள் சரியாக இருக்கின்றனவா என்று பரிசோதித்துப் பார்த்துவிட்டு நமூனாக்களை பெற்றுக் கொண்டு செல்ல எற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நமூனாக்களைச் சரிபார்த்து அதன் அடிப்படையில் புதிய கார்டுகளை அலுவலகங்களில் எழுதி வீடுகளுக்கே சென்று வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் மூலம் குடும்பத்தினர் பற்றிய சரியான விவரங்களை அறியவும், அதுவரை புழக்கத்திலிருந்த பல போலிக் கார்டுகளை நீக்கவும், வசதியாக இருக்குமென்றும் கருதப்பட்டது.

இந்த ஏற்பாடுகள் பற்றி பொது மக்களுக்கு முன்னதாகவே அறிவிப்பு வழங்கப்பட்டது. இதன்படி 5,76,223 நமூனாக்கள் கடைக்காரர்களிடம் கொடுக்கப்பட்டன. இதில் 5,28,148 நமூனாக்களை கடைக்காரர்கள் குடும்பத் தலைவர்களிடம் வினியோகித்து விட்டு, எஞ்சிய 48,075 நமூனாக்களை குடும்பத் தலைவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை என்று கூறி அலுவலகத்தில் திருப்பித் தந்துவிட்டனர். இவற்றில் 33,148 நமூனாக்களை பின்னர் குடும்பத் தலைவர்கள் ரேஷன் அலுவலகங்களிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொண்டனர். ஆக மொத்தம் 5,61,296 நமூனாக்கள் குடும்பத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டன.

கணக்கெடுப்பாளர் வீடுகளுக்குச் சென்று ஆயவு செய்து, 4,65,577 நமூனாக்களை வீடுகளிலிருந்து சேகரித்து வந்தனர். இதற்கு மேலாக 54,176 நமூனாக்களை குடும்பத் தலைவர்களால் நேரடியாக ரேஷன் அலுவலகங்களில் கொடுக்கப்பட்டன. ஆக மொத்தம் 5,19,753 நமூனாக்கள் சேகரிக்கப்பட்டன.

அவற்றில் முதல் ஆய்வுக் கட்டத்திலேயே 3,316 நமூனாக்கள் உண்மையானவை அல்ல என்று கண்டு பிடிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டன. எஞ்சிய 5,16,437 நமூனாக்களின் பேரில் புதுக் கார்டுகளை எழுதி அவற்றை வீடுகளுக்குச் சென்று வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாறு, மு.ப. 10-30
மார்ச் மாத முதல் தேதி வரை 5,06,707 கார்டுகள் நேரடியாக வீடுகளுக்குச் சென்றே வழங்கப்பட்டன. இன்னும் எஞ்சியுள்ள சுமார் 9,700 நமூனாக்களைப் பொறுத்த வரையிலே அவற்றுக்குப் புதுக் கார்டுகள் எழுதியுள்ள போதிலும், அந்த நமூனாக்களில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்குப் பல முறை கணக்கெடுப்பாளர் சென்றபோதிலும் வீடுகளில் அவற்றை வழங்க முடியவில்லை. சிலர் தங்கள் வீடுகளை மாற்றி விட்டதால் முகவரியில் மாறுதல் ஏற்பட்டுள்ளது ஒரு காரணம். நமூனாக்களில் கொடுக்கப்பட்டுள்ளபடி ஆட்கள் சில இடங்களில் இல்லவே யில்லை. இன்னும் சில இடங்களில் வீடுகளின் கதவுகள் பூட்டப்பட்டிருந்ததால் அட்டைகளை வழங்க முடியவில்லை. இதைப் போன்ற சில காரணங்களால் இந்த 9,700 கார்டுகள் இன்னும் வழங்கப்படாமல் இருக்கின்றன. அவற்றுக்கு உரியவர்கள் ரேஷன் அலுவலகங்களுக்கு எழுதி தங்கள் புதிய முகவரியைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு வந்துள்ள கடிதங்களின்பேரில் ஆய்வு செய்து அவையும் உடனுக்குடன் வீடுகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

புதுக் கார்டுகள் வழங்குவதை ஜனவரி மாதக் கடைசிக்குள் முடித்து விடலாம் என்று முதலில் எண்ணியிருந்தோம். ஜனவரி மாதக் கடைசிக்குள் 4,67,862 கார்டுகள் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டன. எஞ்சிய கார்டுகளைப் பொறுத்த வரையிலே ஆய்வு செய்து அவற்றை வழங்கும் வரை பொது மக்களுக்கு இடைஞ்சல் எதுவும் ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தில் பழைய கார்டுகள் மார்ச் முதல் தேதி வரை செல்லுபடியாகுமென்று உத்தரவிடப்பட்டது. ஆகவே புதுக் கார்டுகள் வழங்குவதில் ஒரு சிலரைப் பொறுத்த வரையிலே தாமதம் ஏற்பட்டிருந்தாலும், பழைய கார்டுகள் செல்லுபடியாகும் என்று உத்தரவிடப்பட்டிருந்ததால் அவர்களுக்கு இடைஞ்சல் எதுவும் ஏற்பட்டிருக்க நியாயமில்லை. மார்ச் முதல் தேதிக்குப் பிறகு பழைய கார்டுகள் செல்லுபடியாகாது. இப்போது மேலே சொன்னபடி 5,06,707 கார்டுகளின் வினியோகம் ஏற்கனவே முடிந்து விட்டது. எனவே எஞ்சியுள்ள 9,700 கார்டுகளைப் பொறுத்த வரையிலே உண்மையான விவரங்களைச் சேகரித்து ஆய்வு செய்து அவற்றையும் வீடுகளில் உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நாம் இது வரை 5,06,707 புதுக் கார்டுகளை வழங்கியுள்ளோம். எஞ்சியுள்ள 9,700 கார்டுகளில் அத்தனையும் நியாயமாக வழங்க வேண்டியவை என்று எடுத்துக் கொண்டால்கூட 5,15,887 கார்டுகள்தான் புழக்கத்தில் இருக்கும். முன்பிருந்த பழைய கார்டுகளின் எண்ணிக்கை 5,49,611. புதிதாக சென்னைக்கு குடியேறியிருந்தவர்கள் பலரையும் ஆய்வு செய்து அவர்களுக்கும் கார்டுகள் வழங்கியுள்ளோம். இவ்வாறு வழங்கப்பட்டுள்ள கார்டுகளின் எண்ணிக்கை 10,000-க்குமேல் இருக்கும். ஆகவே பழைய கார்டுகளில் ஏறக்குறைய 30,000 கார்டுகள் போலிக் கார்டுகளாய் இருந்தன என்றும், அவை இப்போது நீக்கப்பட்டுள்ளன என்பதும் தெளிவாகிறது. சென்னை நகரிலுள்ள இலட்சக் கணக்கான குடும்பங்களுக்கு நேரடியாகச் சென்று விவரங்களைச் சேகரித்து ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட கார்டுகள் வினியோகம் செய்வது என்பது மிகப் பெரிய வேலை. அதில் அதிகாரிகளுடன் பூரணமாக ஒத்துழைத்த பொது மக்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். எஞ்சியுள்ள சிலருக்கும், அவர்கள் கொடுத்துள்ள புது முகவரியைக் கொண்டு ஆய்வு செய்து உடனுக்குடன் புதுக் கார்டுகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் சட்டபூர்வமான பங்கீட்டு முறை அமலில்

இல்லை. ஆகவே சென்னை நகரை அடுத்துள்ள பகுதிகளில் வாழ்பவர்கள் அனைவரும் பங்கீட்டு அட்டை கோரி மனுச் செய்துள்ளனர். அவர்கள் உண்மையில் சென்னையின் எல்லைக்குள் வாழ்கின்றனரா அல்லது செங்கற்பட்டு மாவட்டத்தில் வாழ்கின்றனரா என்ற ஆய்வுக்குப்பின் நிர்ணயம் செய்வதில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. முகவரிகள் தெளிவாக இல்லாமல் ஆங்காங்கு குடிசைகளில் வசிப்பவர்களின் தொகையும் ஏராளமாக இருந்தது. அவற்றையும் சரியாக கணக்கிட்டு, ஆய்வுக்குப் பின் தெளிவான உண்மை நிலையின் அடிப்படையின் பேரில் புதுக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வளவு பெரிய பணியைச் செய்து முடிப்பதில் ஒரு சில தாமதங்களும் இடைஞ்சல்களும் ஏற்பட்டிருந்தால் அவை தவிர்க்க முடியாதவை என்று பொது மக்கள் பொறுத்தருள வேண்டும் என்று கோருகின்றேன்.

இன்றுள்ள நெருக்கடியான உணவு நிலைமையிலே ஏறக்குறைய 30,000 போலிக் கார்டுகளை நீக்கி, அவற்றின் பேரில் வழங்கப்பட்டு வந்த அரிசியைச் சேமித்து, நியாயமாகக் கிடைக்க வேண்டியவர்களுக்கு வழங்கியுள்ளது மிகப் பெரிய சாதனையாகும். சிக்கல்கள் நிறைந்த இப் பணியைச் சீராக ஆற்றுவதில் திறமையாகப் பணியாற்றிய அதிகாரிகளையும், அவர்களுக்குப் பூரணமாக ஒத்துழைத்த பொது மக்களையும் நான் பாராட்ட விரும்புகின்றேன்.

Dr. H. V. HANDE : While we appreciate the steps taken by the Ministry and the Department concerned, I would like to know why steps for the detection of these bogus cards could not have been planned earlier so that the people could not have been put to the hardships to which they have been put ? A number of people have been beaten, a number of people have been lathi-charged, and a number of people were treated with scant courtesy by those right from the top to those in the lowest rung of the ladder. Why was not this planned even before ? Even Mr. Mathialagan, when he was the Minister for Food, said that there were bogus cards. If the Government had opened their eyes earlier and discovered the bogus cards . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் மட்டிலும் கேட்கலாம். 'ஆர்குமெண்ட்' செய்யக்கூடாது. புதுக் கருத்துக்களைச் சொல்லக்கூடாது.

Dr. H. V. HANDE : If the 30,000 bogus cards had been discovered earlier, the hardships to which some lakhs of persons have been put to could have been avoided. Will the Hon. Minister enlighten us on the point why it has not been planned earlier ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் என்னுடைய விளக்க அறிக்கையிலே டிசம்பர் மாதத்திலேயே இந்த வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறேன். பல பகுதிகளாகப் பிரித்து அதிகாரிகள் போய் அந்தக் கார்டுகளுக்கான தகவல்களை சேகரிக்கிறார்கள். வேண்டுமென்றே குழப்பத்தை விளைவிக்க வேண்டுமென்று சில பேர், சில தகாத காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். பொதுமக்கள் தொல்லைக்குள்ளானது உண்மை. அதே நேரத்திலே அதிகாரிகளிலும் பலர் தொல்லைக்கும் இன்னல்களுக்கும் ஆளாக்கப்பட்டிருப்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் சேர்த்து சொல்லியிருப்பாரானால் அவர்களுக்கு முழு விவரம் கிடைத்திருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்ள முடியும். அதிகாரிகளுக்கும் தொல்லை ஏற்பட்டிருக்கிறது ; சில அதிகாரிகளும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். வெளி மாவட்டங்களிலிருந்து சில பேர் புதிதாகக் குடியேறியிருப்பதாகச் சொல்லி கார்டுகள் கேட்கிறார்கள். அவர்கள் சொல்லும்போது, இந்தத் தெரு, இந்த வீட்டிலே குடியிருக்கிறோம் என்ற தகவல் கொடுப்பதில்லை. சில இடங்களிலே தகவல் இல்லாமல், "பேவ்மெண்ட்ஸ்" ஸிலே வசிக்கிறவர்களும் குடும்பக் கார்டு கேட்கிறார்கள். கூவம் ஆற்றங்கரையிலே,

1969 மார்ச் 11] [திரு. எ. கோவிந்தசாமி]

சித்ரா தியேட்டருக்கு எதிரிலே வசிக்கிறோம் என்று தகவல் கொடுத்தாலும் கூட அந்தப் பகுதிகளுக்கும் அதிகாரிகள் சென்று விசாரணை செய்கிறார்கள். காலை நேரத்தில் விசாரணை செய்கிறார்கள், இரவு நேரத்தில் விசாரணை செய்கிறார்கள், மற்ற நேரங்களிலே அவர்கள் வெளியே போகிறார்கள் என்ற காரணத்தினாலே. பல போலிக் கார்டுகள் இருக்கும்படியான நிலைமை இருக்கிறது. உண்மையாகவே கார்டுக்குரியவர்கள் தொல்லைக்குள்ளானால் அதுபற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டியதுதான். அதே நேரத்திலே பொதுமக்களுக்கு அரிசி கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உண்டாக்குவதற்காக, அரிசிப் பற்றாக்குறை ஏற்படாமலிருப்பதற்குத்தான், அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படக்கூடாது என்ற காரணங்களுக்காகத்தான் இந்த நிலை கையாளப்படுகிறது. சில பேர் அரிசி வாங்கி விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாலே அதைத் தவிர்க்க அரசு இந்த நிலையைக் கையாளுகிறது. 5 பேர் இருக்கக்கூடிய இடத்திலே 7 பேர் என்று கொடுக்கிறார்கள். சிலபேர் விலாசத்தைக் கொடுப்பது கிடையாது. விசாரணைக்கு அதிகாரி வருவார், அங்கு பெயர் கொடுங்கள் என்றால், விசாரணைக்கு அதிகாரி என் வர வேண்டும், நான் இங்கே வருகிறேன், கார்டு கொடுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் கொடுக்கின்ற தகவலிலுள்ளபடி ஆட்கள் இருக்கிறார்களா என்று அதிகாரிகள் சென்று பார்த்தால், அப்படிப்பட்ட ஆட்களை அங்கே கிடையாது என்ற தகவல் கிடைக்கிறது. இதனாலே சங்கடம் ஏற்பட்டதே தவிர, இதனாலே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவே தவிர, அவர்கள் டிசம்பர் மாதத்திலேயே இந்த வேலையை ஆரம்பித்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. நடைமுறைக் கேள்வி

வினாக்களுக்கு விடையளிப்பதில் தாமதம்

* **திரு. எம். சுரேந்திரன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். தமது அவையின் விதிகளிலே, வினாப் பகுதியிலே, 34-வது விதியிலே உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு 22 நாட்களிலே பதில் அளிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அதைவிட அதிகமான நாள் தேவை என்று துறையினர் கேட்டால், சபாநாயகருக்கு எழுதி அனுமதி பெற வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. நேற்று நான் வினாப் பிரிவிலே விசாரித்தபொழுது பல மாதங்களுக்கு முன்னால் அனுப்பப்பட்ட கேள்விகள் எதற்குமே பதில் ஒன்றுகூட வரவில்லையென்று கூறினார்கள். ஆகவே, இந்த விஷயம் குறித்து நான் கேட்பது, அனுமதி கேட்டு கால தாமதம் ஆகியதா? அனுமதி கேட்காமலேயே காலதாமதம் ஆகியதா? இது என்னுடைய குறை மட்டுமல்ல, இங்கே உள்ள உறுப்பினர்களுடைய உணர்ச்சிகளை நான் வெளிப்படுத்துகிறேன். ஆகவே, இதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகளுக்கு விடைகள் வரவில்லை என்று சொன்னால் அதை மாண்புமிகு உறுப்பினர்கள் இலாகாவிலே சென்று கேட்பது அவ்வளவு முறையாக இருக்காது. அதைப்பற்றி பேரவைத் தலைவரைக் கேட்டிருக்க வேண்டும். பேரவைத் தலைவர் தன்னாலியன்றவரை உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வினாக்களுக்குரிய விடைகளை மாண்புமிகு அமைச்சர்கள் மூலமாக இலாகாவிலேயிருந்து எவ்வளவு விரைவிலே பெறமுடியுமோ அவ்வளவு விரைவாகப் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இலாகாவாலே குறிப்பிட்ட காலத்தில் விடையைத் தரமுடியாத நேரத்திலே அவ்வப்போது காலத்தை நீட்டித்துத் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுடைய காரணம் நியாயமாக இருந்தால் அந்தந்த நேரங்களிலே அவர்களுக்குரிய காலமும் நீட்டித்துத் தரப்படுகிறது. எவ்வளவு விரைவிலே விடைகளை உறுப்பினர்களுக்கு கொடுக்கமுடியுமோ அவ்வளவு விரைவிலே அவர்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளை நான் செய்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்பு.

காமன்வெல்த் பார்லிமெண்டரி சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையில் பேரவை உறுப்பினர்கள் உறுப்பினராதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு வேண்டுகோள். நம் உறுப்பினர்கள் காமன்வெல்த் நாடாளுமன்ற நிகழ்ச்சிகளில் பெரும் பங்கு கொள்ள அந்த நிறுவனத்தில் உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்று வேண்டப்படுகிறது. அதன் காரணமாக, உறுப்பினர்கள், காமன்வெல்த் பார்லிமெண்டரி அஸோசியேஷன் மாநாடுகள் கூடும் இடங்களில் சென்று பங்கு பெறும் வாய்ப்பு இருக்கும். திரு. ஆசைத்தம்பி அவர்களும், திரு. சௌந்திரராஜ மூப்பனர் அவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அப்படி மற்ற உறுப்பினர்களும் சென்று வர வேண்டும் என்கிற ஆசை எனக்கு இருக்கிறது. ஆகவே பெருமளவில் அந்தச் நிறுவனத்தின் தமிழ்நாட்டுக் கிளையில் உறுப்பினர்களாகவேண்டும். அதற்கு ஆண்டுச் சந்தா ரூ. 5 தான். ஆயுள் சந்தா ரூ. 50. எல்லோரும் அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

6. 1969–70-ம் ஆண்டிற்கான நிதி கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 20.—தொழில்கள்

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 20—தொழில்கள்* என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,88,08,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்கிற வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, மூடப்பட்ட ஆலைகளை அரசாங்கமே ஏற்று நடத்துகின்ற கொள்கை பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நான்கு சர்க்கரை ஆலைகளிலிருந்தும் கிடைக்கும் கரும்புச் சக்கையிலிருந்து கடலூரில் ஓர் காகித தொழிற்சாலை நிறுவுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து விவாதிக்க,

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, வறட்சியான பகுதிகளில், குறிப்பாக கோவில்பட்டி தாலுகாவின் விவசாயிகளுக்கு உப-தொழிலாக சிறு தொழில்கள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று விவாதிக்க,

* 217–301-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. கரு. சிமைச்சாமி : தலைவர் அவர்களே, பெர்மிட்-லைசென்ஸ் போன்ற வேண்டாத கட்டுப்பாடுகளை நீக்குவது பற்றி வலியுறுத்த,

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என் பெயரில் இருக்கும் வெட்டுத் தீர்மானத்தை பிரேரேபிக்கி றேன்.

(ஆ) கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவர் அவர்களே, On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 12,71,39,400 under Demand No. 40—Capital Outlay on Industrial Development."

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும், மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும், மக்களுக்குத் தேவையான பொருள்களை தமிழகத்திலே உற்பத்தி செய்வதற்கும் தொழில்கள் உண்டாக்குவது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,71,39,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion:—

That the allotment of Rs. 12,71,39,400 under Demand No. 40—Capital Outlay on Industrial Development—be reduced by Rs. 100.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வருகின்றன.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சபாநாயகர் அவர்களே, என்னுடைய கட்சியின் பேரில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஓரிரு கருத்துக்களை இந்த சபைமுன் எடுத்து வைக்க முற்படுகிறேன். இந்த தேசத்திலே தொழில் வளர்ச்சி அதிகமாகப் பெருகி வருகிறது என்பதைக் காண்கிறபோது மட்டில்லாத மகிழ்ச்சி உடையவனாக இருக்கி றேன். தமிழகத்தில் தொழில் வளர்ச்சி சம்பந்தமாக

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

வருந்தத்தக்க ஒரு சில நிகழ்ச்சிகள் முன்னாலேயிருந்து இருந்து கொண்டே இருக்கிறது. தொழில் மந்தம் நாடு எங்கும் ஏற்பட்டிருந்து இன்றைக்கு ஓய்ந்து போயிருக்கிறது என்பதைக் காண மகிழ்ச்சி ஏற்படுகிறது. தொழில் மந்தத்தால் மாநிலத்தில் தொழிற்சாலைகள், அதிலும் குறிப்பாக, சரியாக நடந்து கொண்டிருந்த பஞ்சாலைகளில் நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டதையும் நாம் உணர்வோம். இந்தமாதிரி நிலைமைகள் தவிர்க்கப்பட்டாக வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை துரிதமாகவும், உடனடியாகவும் மேற்கொள்வதற்கான ஓரிரு கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

இதற்கு முன்னதாக ஈடுபட்டு, பல ஆலைகளை நிறுவத் திட்டம் இட்டிருக்கிறது. தனியார்களும் திட்டமிட்டு வருகிறார்கள். பெரு நகரங்களைச் சுற்றியே தொழில் நிறுவனங்கள் சென்று கொண்டே இருக்கின்றன

என்கிற அபிப்பிராயம் உலவிக் கொண்டு இருக்கிறது. குறிப்பாக, சென்னை, கோவை போன்ற நகரங்களைச் சுற்றித்தான் ஆலைகள் பொதுவாக விஸ்தரிக்கப்படுகின்றன. திட்டமிடும்போது, "ரீஜனல் இம்பாலன்ஸஸ்" என்று சொல்லப்படும், வளர்கின்ற பகுதியே வளர்ந்து கொண்டு இருக்கிறது, பிற்பட்ட பகுதிகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன என்ற நிலையைப் பார்க்கிறோம். பொதுவாக தொழில் நிறுவனங்கள் உருவாகும்போது, மூலப்பொருள்கள் இருக்கும் அந்தப் பகுதிகளில் விஸ்தரிக்க வேண்டும் என்பதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகள் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சென்னை மாநகரத்தில் பல நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. சுமார் 22 லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. அருகாமையில் பல பெரிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. இருக்கும் மக்களுக்கு போதிய அளவிற்கு வசதிகள் செய்து கொடுப்பதில் மாநகராட்சிக்கு துன்பங்கள், கஷ்டங்கள், தொல்லைகள் ஏற்படுகின்றன. முதலாவதாக குடிநீர் கஷ்டம் இருக்கிறது. அதேமாதிரி தொழில் நிறுவனங்கள் இவற்றிற்கும் போதிய அளவில் தண்ணீர் கொடுக்க கஷ்டம் இருக்கிறது. இந்தமாதிரிப் பகுதிகளில் புதிதாக ஆலைகளைத் துவங்காமல், ஏனைய பகுதிகளில் மாற்றி அமைக்க வழிவகை செய்வது நல்லதாக இருக்கும்.

தொழில் கொள்கை பற்றி ஓரிரு கருத்துக்கள் கூறவேண்டும் என்று நினைக்கிறேன். சாதாரணமாக, தொழில் அதிபர்கள் புதிய தொழில்களில் ஈடுபட முற்படுகிறார்கள். ஆனால், தொழில் அரங்கிலே நிலையற்ற தன்மை காரணமாக தொழில் அதிபர்கள் புதிதாகத் தொழில்களை நிறுவ கஷ்டப்படும், தயக்கப்படும் நிலைமைகளை உன்னிப்பாகப் பார்க்கிறோம். இந்த நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும். இப்பொழுது அரசாங்கத்தின் கொள்கை காரணமாக புதிதாக ஆலைகள் துவங்கக்கூடிய புதிய சூழ்நிலை, "க்ளைமேட்", ஏற்படுகிறது என்று கருதுகிறேன். பெருந்தொழில்கள் ஏற்படுவதற்கு, "எண்ட்ரப்ரினூர்" களுக்கு போதிய ஊக்கம் அளிக்க அரசாங்கம் முன்வரவேண்டும். இன்று கேபிடல் மார்க்கெட்டில் இருக்கின்ற மந்த நிலைகளை, அவை நீங்கிக் கொண்டு இருக்கும் நிலைகளைப் பார்க்கிறோம். தொழில் வளர்ச்சி அதிகமாக ஏற்படும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறோம். அதிலே தொழில் அதிபர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும்போது, தனியார் தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட நிலை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக, தொழில்கள் நல்ல முறையில் நடக்காத காரணத்தால், பல இடங்களில் கதவடைப்பு, லாக்-அவுட் ஸ்ட்ரைக் போன்ற நிலைகள் நடமாடிக்கொண்டு இருக்கின்றன. இவைபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டம், அமைதியைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், இந்த சந்தர்ப்பங்களில் முத்தரப்பு மாநாடுகளைக் கூட்டி, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படா முறையில் தொழில் அரங்கில் வேண்டிய கருத்துக்களைப் பெறுவதற்கு முன்வந்தால்தான், இந்தத் தொழில் வளர்ச்சியை நல்ல முறையில் ஊக்குவிக்க முடியும் என்பதை கூறுகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாலைகளில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளைப்பற்றி இந்த மன்றத்தின் முன்பு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் பல ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, கோவை போன்ற பகுதிகளில் பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்ற அவல நிலை இருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பட்டினியாலும், பசியாலும் வாடும் நிலை இருக்கிறது. நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக ஒரு குழுவானது நிறுவப் பெற்றது, டாக்டர் லோகநாதன் தலைமையில், அந்தக் குழு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தரவேண்டும் என்று. அவர்களும் கருத்துக்களை அரசாங்கத்திற்கு பரிந்துரைத்திருக்கிறார்கள். அந்த ஆலோசனைகளின் பேரில் ஒரு சில மில்களுக்கு உதவி அளிப்பது, "காரண்டி" கொடுப்பது போன்ற திட்டங்களை அரசாங்கம் செய்திருக்கிறது. ஆனால், காரண்டி கொடுத்த பாதிலும் கூட, தொழில் நிறுவனங்கள் இயங்காத நிலையில்தான்

இருக்கின்றது. அதற்குக் காரணம், இன்றைக்கு இருக்கின்ற "இன்டஸ்ட்ரியல் ரெகுலேஷன் ஆக்ட்", மத்திய சர்க்காரின் கொள்கை இவைதான். இவற்றின் காரணமாகத்தான், இன்றைக்கு போதிய பாதுகாப்பு, பராமரிப்பு கொடுக்கும் அதிகாரம் மாநில அரசினிடத்தில் இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால் இந்தக் கூற்றுகளை நாம் நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மத்திய அரசாங்கம் வரிக் கொள்கையை, அதாவது எக்சைஸ் வரியை ஓரளவு தள்ளி வைத்திருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். பூராவாக அதைத் தள்ளி வைக்காத காரணத்தால் அநேக சிக்கல்களும், கஷ்டங்களும் ஏற்படுகின்றன. பஞ்சாலைகளிலுள்ள நெருக்கடியைக் குறைக்க முடியாததற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. பஞ்சு விலை, மின்சக்தி, ராஜ்ய சர்க்காரின் விற்பனை வரி போன்றவைகளின் காரணமாக நல்ல முறையில் இத்தொழிலை நடத்த முடியாமல் பெரும் கஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. பஞ்சு மார்க்கெட்டைப் பார்க்கிற போது, அது ஓரிரு தொழிலதிபர்களின் கையில்தான் இருக்கிறது. பம்பாயிலும், ஆமதாபாத்திலும் இருக்கின்ற ஆலைகள் பஞ்சு மார்க்கெட்டை வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தால் பஞ்சு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மேலும் தரமான பஞ்சை அவர்கள் வினியோகம் செய்வதில்லை. இவைகளையெல்லாம் கண்காணிப்பதற்கு மத்திய அரசும், மாநில அரசும் பாடுபட வேண்டும். பஞ்சு கட்டுப்பாட்டின் உரிமை மத்திய அரசுக்கு இருந்தாலும், மாநில அரசு இந்த நிலைமையை நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டும். ஆகவே, பஞ்சு விலையைக் கட்டுப்படுத்தி, நல்ல தரமான பஞ்சை இந்த நிறுவனங்களுக்கு சப்ளை செய்தால், இந்த நெருக்கடியைச் சமாளிக்க இது சாதகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரச் செலவைக் குறைப்பதற்கு அரசாங்கம் திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. விற்பனை வரியைத் தள்ளுபடி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது. விவசாயம் எப்படி நாட்டுக்கு இன்றியமையாததாக இருக்கிறதோ அதேபோல பஞ்சாலைத் தொழிலும் நமக்கு அத்தியாவசியமாக இருக்கிறது. நாம் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். நல்ல ரகமான நூல்களை உற்பத்தி செய்வதற்குப் போதிய ஊக்கம் கொடுக்க வேண்டும். எக்சைஸ் வரிகளையெல்லாம் நீக்குவதற்கு மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"மானேஜிங் ஏஜென்சி சிஸ்டம்" இருக்கும் காரணத்தால் பஞ்சாலைகளை சரியான முறையில் நடத்துவதற்குக் கஷ்டம் இருக்கிறது. மானேஜிங் ஏஜென்சி சிஸ்டம் சரியாக இயங்குகிறதா, இல்லையா என்ற பிரச்சினைக்கு நான் வரவில்லை. கூடுமான அளவில் கிரெடிட் சொசைட்டி கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் வகை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் இந்தத் தொழில் குன்றாமல், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடிக்கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். "டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன்" ஒன்றை நிறுவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். மாநில அரசாங்கம் 49 சதவீதமும், மத்திய அரசாங்கம் 51 சதவீதமும் பங்கு பெற்று இந்த நிறுவனம் துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மேலும், அரசாங்கத் தரப்பிலே இவைகளைக் கண்காணிப்பதற்கு நல்ல பயிற்சி பெற்ற அதிகாரிகள் தற்போது இல்லை. பொதுத் துறையிலே இருக்கும் நிறுவனங்களில் எல்லாம் லாபமே இல்லை, நஷ்டம்தான் வருகிறது என்ற குறை இருந்து வருகிறது. பொதுமக்களிடையே இந்த அபிப்பிராயம் பரவலாக இருந்து வருகிறது. இந்த நிறுவனத்தை நேரடியாக அரசாங்கமே ஏற்று நடத்த முன்வந்தால், போதிய பயிற்சி பெற்றவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தத் தொழிலை நல்ல முறையில் நடத்த ஏதுவாக இருக்கும்.

கூட்டுறவுத் துறையிலே நடக்கின்ற பஞ்சாலைகளின் நிர்வாகத்தைப் பற்றி ஒரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 12 கூட்டுறவு ஸ்பின்னிங் மில்கள் இருக்கின்றன. இவைகளில் ஒன்றிரண்டு மட்டும்தான் லாபகரமாக இருக்கின்றன. இந்தத் தொழிலில் பெரும் மந்தம் ஏற்பட்டாலும், நஷ்டம் ஏற்பட்டாலும் ஆலைகள் சரியான முறையில் இயங்கவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் வருகின்றன. இதில் ஏன் நஷ்டங்கள் வருகின்றன என்பதை ஆய்வதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைப்பது சாலச் சிறந்ததாகும். கூட்டுறவுத் துறையில் இருக்கும் மில்களில் நஷ்டங்கள் இருக்கின்றன. பஞ்சு விலை, மற்ற நிர்வாகச் செலவுகள், நாணய மதிப்புக் குறைவு காரணமாகவும் நஷ்டம் ஏற்படுகிறது. இவைகளையெல்லாம் மாற்றி, நல்ல லாபகரமாக நடத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கூட்டுறவு மில்லை நடத்துவதில் நானும் ஒரு காலத்தில் அனுபவம் பெற்றவன் என்ற முறையில் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே " காட்டன் பர்ச்சேஸிங் கமிட்டி " இருக்கிறது. அந்தக் கமிட்டியில் போதிய பயிற்சி பெற்றவர்கள் இல்லாத காரணத்தால் தரமான பஞ்சை வாங்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. பெரும்பாலும் அதிகாரிகள்தான் அந்தக் கமிட்டியில் இருக்கிறார்கள். மேலும் சாம்பிள் கொடுக்கும் பஞ்சு ஒரு ரகம், சப்ளை செய்யப்படுவது வேறு ரகம். இதுமாதிரியான பல தவறுகள் நடைபெறுகின்றன. ஆகவே, இதைக் கண்காணிப்பதற்கு வேறு எந்த முறையையாவது கையாள முடியுமா என்பதை ஆலோசித்துப் பார்க்க வேண்டும். எனது மாவட்டமாகிய கன்னியாகுமரி பகுதியில் இருக்கும் ஸ்பின்னிங் மில்லிலே டி.ஆர்.ஓ. கிரேடிலே உள்ள நபரை மானேஜிங் டைரக்டராகப் போட்டிருக்கிறார்கள். பெரிய அதிகாரிகள் மானேஜிங் டைரக்டராக இருக்க வேண்டுமா என்பதை அரசாங்கம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தத் தொழிலில் அனுபவம் இல்லாத, ரெவின்யூ இலாகா, மற்ற இலாக்காக்களிலிருந்து வருபவர்களை, வேலை தெரியாதவர்களை, மானேஜிங் டைரக்டராகப் போட்டு விடுகிறார்கள். அவர்களுக்கு தொழில் நுட்பம் இருக்கிறதா, இல்லையா என்பதைப் பார்ப்பதில்லை. இந்தக் குறையை அரசாங்கம் கூர்ந்து கவனித்து ஆவன செய்யவேண்டும்.

இன்னொரு விஷயம். சமீப காலத்தில், இடைத் தேர்தல் நடந்த காலத்தில் அந்த மில்லின் காரை தேர்தலுக்கு உபயோகித்தார்கள். இதற்குப் போதிய ஆதாரம் என் கையில் இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலுள்ள எம்.டி.கே. 2637 கார் பல இடங்களிலும் தேர்தலுக்காகக் கொண்டுவரப்பட்டது. இந்தமாதிரியான காரியங்கள் எல்லாம் நடைபெறக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். அப்படிச் செய்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நானும் கூட்டுறவு மில்லில் பங்குதாரன் என்ற முறையில் கூறுகிறேன். மில்லில் இருக்கும் காரை துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு வருத்தப்படுகிறேன். இம்மாதிரியான குற்றச்சாட்டுக்களுக்கு இடமில்லாத வகையில் நிர்வாகம் நடைபெற வேண்டும்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தைக் கூற வேண்டுமென்று விரும்புகிறேன். பொதுவாக தொழில் நிறுவனங்கள் நடக்கிறபோது எங்கள் ஜில்லாவில் உள்ள ஒரிரு வளங்களைப்பற்றிக் கூறுவது பொருத்தமாக இருக்கும் (மணியடிக்கப்பட்டது). கன்னியாகுமரி மாவட்டத்தின் தென் பகுதியில் அதிகமான உப்பு எடுக்கப்படுகிறது. ரப்பர் தயாரிப்பு, கயிறு தயாரிப்பு போன்ற தொழில்கள் தாராளமாக நடைபெறுகிறது. இந்த மூலப் பொருள்களையெல்லாம் வைத்து தனியார் துறையிலாவது, பொதுத் துறையிலாவது ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். தனியார் துறையில் ஏற்படுவதாயிருந்தாலும் அதற்கு அரசாங்கம் லைசென்ஸ் வழங்க வேண்டும். இது தூத்துக்குடிக்கு அருகாமையில் இருப்பதால் புதிய தொழில்கள் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1969 மார்ச் 11] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் மார்த்தாண்டம் பகுதியிலுள்ள இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டைப்பற்றிக் கூற விரும்புகிறேன். இதில் ஐந்து யூனிட்டுகள் செயல்பட்டுக்கொண்டிருந்தன. இப்பொழுது அது மூடிக் கிடக்கிறது. தனியார் துறையைச் சேர்ந்த ஓரிரு நண்பர்கள் அதை வாடகைக்கு எடுத்தார்கள். அரசாங்கம் அதற்குப் போட்டிருந்த வாடகையை திடீரென்று அபரிதமாகக் கூட்டியதன் காரணமாக அதை மூடிவிட்டார்கள். அந்த எஸ்டேட்டை ஒரு ஐ.டி.ஐ. டிரைனிங் ஸ்கூல் ஆக மாற்றுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அந்தப் பகுதியில் பலரும் ஐ.டி.ஐ. அட்மிஷன் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். ஆகவே, மூடப்பட்டுக் கிடக்கிற இந்தத் தொழிற்பேட்டையைத் திறந்து ஐ.டி.ஐ. பயிற்சி கொடுக்க ஆரம்பித்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பொதுவாக, இந்த மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற தொழில் வளர்ச்சியைப் பார்த்து பெருமிதம் அடையவேண்டும். சேலம் உருக்காலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதை வரவேற்கிறேன். தூத்துக்குடியில் ரசாயன தொழிற்சாலை ஏற்படுத்த இருப்பதை வரவேற்கிறோம். இந்தத் தொழில் துறையில் முன்னால் இருந்த அரசாங்கம் காட்டிய ஊக்கத்தைப்போலவே இந்த அரசாங்கமும் ஊக்கமும், அக்கறையும் காட்டி, தொழில்துறையில் அமைதியோடு வளர்ச்சி ஏற்பட எல்லாக் காரியங்களையும் செய்வார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம். முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் எட்டு நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற தொழில் வளர்ச்சி என்ற புத்தகத்தில் தொழில் துறையில் என்ன என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிற காரணத்தினால் அதை முழுவதுமாக வரவேற்று எனது உரையைத் தொடங்குகிறேன்.

கடந்த இரண்டாண்டு காலமாக தொழில் துறையில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இந்த மன்றத்தில் பல நேரத்தில் பேசப்பட்டிருப்பதை நாம் அறிவோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை குறிப்பிட்டபடி குறிப்பிட்ட காலத்தில் தொடங்காது போனதுதான் தொழில் துறையில் மந்தம் ஏற்பட்டிருப்பதற்கு அடிப்படையான காரணமாகும்.

நமது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சிறந்த முறையில் வளர்ச்சி அடைந்துள்ள தொழில்களில் ஒன்று பஞ்சாலைத் தொழில். இன்னொன்று என்ஜினியரிங் தொழிலாகும். இந்த இரண்டு தொழில்களில் இன்றைக்கு பஞ்சாலைத் தொழில் மிகவும் நெருக்கடியான நிலையில் இருப்பதை நாம் அறிவோம். பஞ்சாலைகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு அடிப்படையான காரணமே மத்திய அரசாங்கம் விதித்துள்ள வரிதான். மத்திய அரசாங்கத்தின் வரிக் கொள்கையின் காரணமாகத்தான் பஞ்சாலைகளை மூட வேண்டிய நெருக்கடி தமிழ்நாட்டில் ஏற்பட்டுவிட்டது. அந்த வரியைக் குறைக்கவேண்டுமென்று பல்வேறு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியும், நமது அரசாங்கமும் டெல்லிக்கு வற்புறுத்திச் சொல்லியும் கூட அதை அவர்கள் எடுத்தார்களா என்றால் இல்லை. பஞ்சாலை வரிக்கு குறிப்பிட்ட பிரிவுக்கு மட்டும் சலுகை கொடுத்திருக்கிறார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக்கொண்டால் ஏறத்தாழ 288 பஞ்சாலைகள் நெசவுத் தொழிலில் வீவிங் மில்கள் இருக்கின்றன. வடக்கே இருக்கிற பஞ்சாலைகளோ நூல் நூற்பதோடு கூட, நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டிருக்கின்றவைகளாக இருக்கின்றன. ஆனால், தென்னகத்தை எடுத்துக்கொண்டால் தமிழகம்,

ஆந்திரம், கேரளம் ஆகிய எல்லாவையுமாகச் சேர்ந்து 46 பஞ்சாலைகள் தான் நெசவாலைகளாகவும் இருக்கின்றன. இந்த 46 ஆலைகளுக்கு மட்டும் இங்கே சலுகை கிடைக்கக்கூடியதாக இருக்கிற நிலைமையில் வடக்கே 288 ஆலைகள் பயன்படக்கூடிய அளவில் மத்திய அரசாங்கம் சலுகை அறிவிப்பைச் செய்கிறது. மத்திய அரசாங்கம் அளித்துள்ள வரிச் சலுகைகள் இங்கே உள்ள எல்லாப் பஞ்சாலைகளுக்கும் பொருந்தக்கூடிய சலுகை அல்ல. குறிப்பாக நெசவு செய்கின்ற பஞ்சாலைகள் என்பதாக வடக்கே இருக்கிற 288 பஞ்சாலைகளுக்கு ஆதரவும், பலனும் கொடுக்கின்ற அளவில் மத்திய அரசாங்கம் அவற்றின் மீது விதித்திருந்த கலால் வரியைக் குறைத்திருக்கிறார்கள். இந்தச் சலுகை மூலம் தமிழ் நாட்டுக்கு 40 லட்சம் ரூபாய்தான் கிடைக்கக்கூடும். இது போதுமானதல்ல. இங்கிருக்கிற நிலைமை என்னவென்றால் நம்முடைய பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் 1963-64 ஆம் ஆண்டில் இருந்த கலால் வரியின் அளவுக்கு இப்போதுள்ள வரி விகிதத்தைக் குறைத்தாலொழிய தமிழ் நாட்டில் இருக்கிற பஞ்சாலைகளுக்கு விமோசனம் ஏற்படக்கூடிய வாய்ப்பே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டில் இருக்கிற பஞ்சாலைகள் இங்கே உற்பத்தி செய்கின்ற நூல்களை எல்லாம் வடக்கே பம்பாய், ஆமதாபாத், பஞ்சாப் என்று அனுப்பிவைத்தாக வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். காரணம், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற நூலின் அளவு 157·99 மிலியன் கிலோ கிராம் ஆகும். தமிழ்நாட்டுக் கைத்தறிகள், மற்ற நிறுவனங்கள் மூலமாக நாம் இங்கே உபயோகித்துக்கொள்ள முடிகிற நூலின் அளவு 63·20 மிலியன் கிலோ கிராம்தான். ஆக மீதமுள்ள 94·79 மில்லியன் கிலோ கிராம் நூலை நாம் ஆமதாபாத்திற்கும், பஞ்சாபிற்கும், வேறு மாநிலங்களுக்கும்தான் அனுப்பித்து—அங்கே நெசவு செய்யப்பட்டு நமக்குத் துணியாகப் பெறவேண்டிய நிலையில் இருக்கிறோம். இதில் ஒரு மாற்றத்தைக் கண்டிப்பாக ஏற்படுத்தியாக வேண்டும். நம்முடைய தமிழகத்தில் உற்பத்தி செய்கிற நூல்களை இங்கேயே நெசவு செய்யக் கூடிய வகையில் நாம் பவர் லூம்களை அதிகமாக்கியாக வேண்டும். இன்றைக்கு 12,500 விசைத்தறிகளை ஏற்படுத்த ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதை துரிதப்படுத்துவதோடுகூட 12,500 விசைத்தறிகள் போதாது 25,000 விசைத் தறிகளையாவது ஏற்படுத்தித் தந்தால்தான் நமது நாட்டில் பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியைத் தவிர்க்க முடியும்.

இன்னொரு நெருக்கடியும் பஞ்சாலைகளுக்கு இருக்கின்றது. நம்முடைய பஞ்சாலைகளுக்குத் தேவையான பஞ்சின் அளவு 9·31 லட்சம் பேல்களாகும். தமிழ்நாட்டில் உற்பத்தியாகக்கூடிய பஞ்சின் அளவு 3·69 லட்சம் பேல்கள்தான். நமக்குப் பற்றாக்குறை 5·62 லட்சம் பேல்களாகும். ஆக தமிழ்நாட்டுக்குத் தேவைப்படுகிற இந்த 5·62 லட்சம் பேல்கள் பஞ்சை நாம் மகாராஷ்டிரத்தில் இருந்தும், குஜராத்தில் இருந்தும், பஞ்சாபிலிருந்தும்தான் பெறவேண்டியதாக இருக்கிறது. இப்படி நமக்கு அங்கிருந்து பஞ்சு வரவேண்டிய காரணத்தினால் வடக்கே இருக்கிற மில்களுக்குத் கிடைப்பதைவிட அதிகமான விலைக்கு வாங்கவேண்டியதாகப் போய்விடுகிறது. ஐந்து கிலோகிராமுக்கு 4 ரூபாய் அளவில் விலை அதிகம் போகிறது. அங்கு 784 ராத்தல் 2,200 ரூபாய், அதேபோல விற்பனை வரி 66 ரூபாய், கமிஷன் 22 ரூபாய், மில்களுக்கு வருவதற்காகின்ற செலவு 20 ரூபாய் இது வடக்கே இருக்கிற நிலைமை. தமிழ் நாட்டில் கொண்டு வருவதற்குச் செலவு, 55 ரூபாயில் இருந்து 110, 120 ரூபாய் வரை வடக்கே இருந்து பஞ்சை கொண்டுவருவதற்கு ஆகிவிடுகிறது. வடக்கே உள்ள பஞ்சாலைகளுக்கு ஒரு கண்டில் 2,308 ரூபாய்க்குக் கிடைக்குமானால் நம்முடைய பஞ்சாலைகளுக்கு 2,508 ரூபாய் வரை ஆகிவிடுகிறது. ஏறத்தாழ 200 ரூபாய் அதிக அளவுக்குக் கொடுக்கிறோம். அப்படிக் கொண்டுவரப்பட்டு நூற்கப்படுகிற நூலும் இங்கே நெசவு செய்யப்படாமல் வடக்கே அனுப்பவேண்டிய நிலை இருக்கிறது. ஆக இதற்கு நிரந்தரமான ஒரு

பாதுகாப்பு ஏற்பட்டாகவேண்டும். இங்கே ஏராளமான விசைத்தறிகள் வைப்பதன் மூலமாகத்தான் உற்பத்தியாகிற நூலை நாமே அதிக அள வுக்கு உபயோகப்படுத்திக் கொள்கிற நிலை வருகிறபோதுதான் இன்றைக்கு இருக்கிற குறைபாட்டை நீக்க முடியும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பிரையாரிடி லிஸ்டு என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பட்டியலில் பஞ்சாலை களையும் சேர்த்திருக்கிற சலுகை எல்லாம் கிடைக்கச் செய்யவேண்டும். இன் னும் சிமிண்டு போன்ற பல்வேறு தொழிற்சாலைகளுக்கு பிரையாரிடிலிஸ்டு கொடுத்திருக்கிறோம். பஞ்சாலைகளுக்கும் துரிதமாக நிவாரணம் கிடைக்க பிரையாரிடி லிஸ்டில் வழி செய்யவேண்டும். குறிப்பாக பஞ்சாலைகளுக்கு காட்டன் டிரான்ஸ்போர்ட் ஆக்ட் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் மூலம் பஞ்சாலைகள் பஞ்சு வாங்கவேண்டுமென்றால் விவசாயத்துறை டைரெக்ட ரிடத்தில் அனுமதி வாங்கவேண்டும். அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. நமது அரசாங்கம் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து இதைப் போக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மின்சாரத்திற்குச் சலுகை கொடுப்பதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் ஒரு யூனிட் 12·88 பைசாவுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் கேரளாவில் 8·72 பைசா வுக்குக் கொடுக்கப்படுகிறது. பல மாநிலங்களிலும் குறைவாகத்தான் கொடுக்கிறார்கள். ஆகவே இங்கும் குறைந்த விலையில் கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

விற்பனை வரியில் இருந்தும் சலுகை கொடுப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

கோவைப் பகுதியில் பஞ்சாலைத் தொழில் தவிர சிறப்பாக இருப்பது என்ஜினியரிங் தொழில். ஒரு மாதத்திற்கு 16 ஆயிரம் பம்பு செட்டுகள் தயாரிக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்கியாகவேண்டிய நேரத் தில் 16 ஆயிரம் பம்பு செட்டுகள் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற் சாலைகளுக்கு—அண்மையில் 20 சதவீதம் வரியை மத்திய அரசு கூட்டி யிருப்பது சரியல்ல.

தமிழ்நாட்டை திட்டமிட்டே புறக்கணிக்க வேண்டுமென்ற நோக்கத் தோடும், தமிழ்நாட்டைத் திட்டமிட்டே ஒதுக்கிவைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும் மத்திய அரசு பஞ்சாலைத் தொழிலுக்கு வரியைக் கூட்டிய தின் மூலம் அத்தொழிலுக்கு சீர்கேட்டை உண்டாக்கினார்கள். இப்பொழுது என்ஜினியரிங் தொழிற்சாலையைப் பொறுத்தவரையிலும்கூட வரியைப் போடுவதன் காரணமாக எஞ்சியிருந்த என்ஜினியரிங் தொழிலையே நசுக்கு வதற்கு மத்திய அரசாங்கம் எண்ணுகிறதோ என்று எண்ணத் தோன்று கிறது. தமிழ்நாட்டை தொழிற் துறையிலே பின்னேற்றுவதற்கும், தொழிற் துறையில் தமிழ்நாட்டை முடக்குவதற்கும் மத்திய அரசாங்கம் முயற்சியெடுக்கின்ற நிலைமை நீடிக்குமானால் தமிழகத்து மக்கள் இந்தியத் துணைக் கண்டத்தோடு எப்படி எல்லாம் ஒன்றுபட்டு இருக்கலாம் என்று எண்ணுகிறார்களோ அந்த எண்ணம் ஈடேறுமா என்ற சந்தேகம் உண் டாகிறது. எனவே, இருக்கின்ற குறைபாடுகளைப் போக்கவேண்டும். குறிப் பாக கோயம்புத்தூரில் இருக்கிற என்ஜினியரிங் தொழிற்சாலைக்கு ஆண்டுக்கு 5 ஆயிரம் டன் தேனிரும்பு தேவைப்படுகிறது. ஆனால் ஆயிரம் டன் இரும்புதான் இங்கே கிடைக்கிறது. மீதமுள்ள இரும்பைக் கொடுப்பதற்கும் நம்முடைய அரசு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் வருகிற 17-ஆம் தேதியன்று டெல்லி செல்வதாக பத்திரிகையின் வாயிலாகப் பார்த்தோம். அவர்கள் டெல் லிக்குப் போகின்ற நேரத்தில் அங்கே தமிழ்நாட்டிலே உள்ள நெருக்கடியை

தீர்த்து என்ஜினியரிங் தொழிற்சாலைகளைப் பாதுகாக்கவும், பஞ்சாலைத் தொழிலைப் பாதுகாக்கவும் முயற்சியெடுத்துக்கொள்வதோடு, தமிழ்நாட்டிலே உள்ள பனியன் தொழில், மற்ற பல தொழில்களை ஊக்கப்படுத்தக்கூடிய முறையிலே உற்பத்தி செய்த பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும் நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் உலகத்தின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அவற்றை வெளிநாடுகளிலே விற்பதற்கான முயற்சியையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் டெல்லிக்குச் செல்கின்ற நேரத்தில் மாநிலத்திலுள்ள தொழில் நெருக்கடியை எடுத்துச்சொல்லி அதற்குப் பரிகாரம் தேட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடிக்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

* THIRU K. S. KOTHANDARAMIAH: Hon. Deputy Speaker, Sir, I thank you very much for giving me this opportunity to say a few words about 'Industries' today. On account of the limited time given to me, I wish to concentrate my speech only on the development of industries in my district of Dharmapuri which has been recently formed and which is very backward.

Sometime before there was a proposal to hold an 'Industries Seminar' at Dharmapuri district to discuss and find out what industries, major and minor and what cottage industries could be started in the district in order to develop it industrially, in addition to developing it agriculturally. But it is more than a year and I do not know what happened to that proposal. I know some work was done but I request the Hon. Minister to give special attention to this and see that the Seminar is conducted as early as possible.

With regard to Dharmapuri district, there are many natural resources, both forest and agricultural, which we can develop for major, minor and medium industries. Especially in Hosur taluk there is a very large forest and people are not making use of the forest for industrial purposes since they are mostly agriculturists. Agriculture is also not paying on account of continuous drought and if we start some industries to help the agriculturists, I think both agriculture and industry will develop on a par.

Various industries can be started there. There is the 'Sandalwood oil extracting industry'. Hosur has got excellent sandalwood trees. In adjoining Mysore State, there are facilities for oil extraction. In Chittoor district, in Kuppam, where there are no sandalwood trees as in Hosur, there is an oil-extracting industry there. They purchase sandalwood trees here and extract oil there. But whereas in spite of having excellent sandalwood trees in Hosur, we have no oil extracting industry there. It is better we start that industry there which could be developed further later on.

Next is 'Silk'. Government is spending a lot of money over this. We have got plenty of scope to make this as a major industry and the entire Madras can look to Hosur with regard to this industry. The people of this place are today agriculturists. But they know the technical side of the industry and if sufficient encouragement is given, I think they will take keenly to this industry. Recently the Government have introduced 'silk twisting' in Hosur. I hope

this will be developed if weavers are given special silk thread. Most of the silk weaving people in Bagalur, which is a famous centre for silk weaving, on account of poverty and because the Government did not give sufficient help, had gone to Bangalore. They are doing excellent work there as silk weaving is a major industry in Bangalore, covering the entire world. If the Government gives them encouragement and special silk thread, some of them will come back and we can have the industry at Hosur.

Bamboo industry is another one which can be developed. Bamboo is available in plenty in Denkanikota forest. I learn from news papers that the Agriculture Research Station at Jorhat has found out a new method by which they can prepare a kind of simple corrugated sheets. These sheets will be helpful to us for roofing purposes and it will cost 40 per cent less than asbestos sheets. I request the Hon. Minister for Industries to start this industry in Dharmapuri district where plenty of bamboo is available.

'Stone polishing' is done on a large scale in Chittoor district. They are purchasing stones from us and having polishing industry there, whereas we do not have such an industry. I think it is better we give encouragement to this 'stone polishing' industry in Hosur. Recently a private gentleman started stone polishing' in Uddanapalli, but he wants so many facilities, which Government can try to give. If this industry is started, many agriculturists may take to it and get more income.

'Next is the Lac' industry. The lac available in Denkanikota is considered the best in the entire State. Sometime before lac industry was in vogue on a large scale and I do not know why that enterprise was given up. People have abandoned that industry and forgotten the same. It is better we ask the officials there to re-start the industry. There is plenty of scope and I also suggest that local officials should be consulted in this matter and if sufficient encouragement is given, I think the lac industry can be developed in that area.

In addition there is scope for developing cottage industries and small-scale industries. For instance, take Ragi-malt. Hosur is considered to be granary for Ragi. This industry can be taken up. There is the Agarbathi industry. Bamboo sticks are available and this industry can be developed in the district. It is flourishing in adjacent Mysore State, in Bangalore. Doll-making, mat weaving and Cumbli weaving—these industries can be started in Hosur and other places. If the idea of holding industrial seminar that was thought of previously is now continued and necessary discussions take place, I think we can start a number of industries in Dharmapuri district and develop it so that it can come on a par with other developed districts of the State. Thank you.

***திரு. ஏ. எம். இராஜா:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழிற் துறையிலே முன்னேறியிருக்கிறது என்று இந்த அறிக்கையிலே கூறப் பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையிலே தமிழ்நாடு

எந்த அளவுக்கு முன்னேற வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அந்த அளவுக்கு நாம் இன்னும் முன்னேற்றம் அடையவில்லை என்பதைத் தான் காட்டுகிறது. அந்த அளவுக்கு முன்னேற்றத்தை ஏற்படுத்த வருங் காலத்தில் திட்டங்களை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அதற்கான நிதிப் பொறுப்பு நம்மிடம் அதிகமாக இல்லை. அது மத்திய அரசிடம் இருக் கிறது. அந்த நிதியைத் தொழிலமைச்சர் அவர்கள் போராடிப் பெற்று இந்த நாட்டைத் தொழில் நாடாக மாற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்த நேரத்தில் நான் தொழில் அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டு கோள் விடுக்க விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அந்தப் பஞ்சாலைகள் மூடப்பட்டதற்குப் பல காரணங் கள் இருக்கின்றன. அதற்கு முக்கிய காரணம் இந்தியப் பேரரசின் நேர்மை யற்ற கொள்கைதான் என்று குற்றம் சாட்டுகிறேன். இந்த நேரத்திலே அந்தப் பஞ்சாலைகளை அரசு ஏற்று நடத்தவேண்டுமென்று தொழிலாளர்கள் சார்பிலும் மற்றவர்கள் சார்பிலும் கோரிக்கைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இந்த நேரத்தில் தமிழக அரசு அந்தப் பஞ்சாலைகளை எடுத்து நடத்த முன் வருமுன் அதிலே நன்றாகச் சிந்தித்து முடிவுக்கு வரவேண்டுமென்று நான் தொழிலமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாலைகள் மூடப்படுவதற்குக் காரணம் அவற்றிற்கு விதிக்கப்பட்டுள்ள எக்ஸைஸ் டியூட்டி—ஆயத் தீர்வை பெரும் பளுவாக இருப்பதுதான். 25,000 கதிர்கள் கொண்ட ஒரு பஞ்சாலை 57 லட்சம் ரூபாய் ஆயத் தீர்வை விதிக்கப்பட்டு கட்ட வேண்டியிருக்கிறது. நாணய மதிப்பின் குறைவாலும், பஞ்சு விலையேற்றத்தாலும் பஞ்சிற்கு சுமார் 26 லட்சம் ரூபாய் அதிகமான விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. தமிழகத்தில் உற்பத்தியாகிற பஞ்சு சுமார் நான்கு லட்சம் பேல்கள் தான். தேவை சுமார் 10 லட்சம் பேல்கள். பாக்கி 6 லட்சம் பேல்களை வடக்கே இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. வடக்கே இருந்து இறக்குமதி செய்யும்போது அங்குள்ள பஞ்சு வியாபாரிகள், பெரும் பணக்காரர்கள் பஞ்சை வாங்கித் தேக்கி வைத்துக் கொண்டு அதிலே கலப்படம் செய்து விற்கிறார்கள். அந்தக் கலப்படத்தின் காரணமாக ஒரு ஆலைக்கு சுமார் 24 லட்சம் ரூபாய் நட்டமாகிக் கொண்டிருக்கிறது. வடநாட்டு வியாபாரி களின் லாப நோக்கு காரணமாக தமிழ்நாட்டில் ஒரு ஆலை ஆண்டுக்கு 24 லட்சம் ரூபாய் நட்டம் அடைய வேண்டிய நிலை இருக்கிறது. இந்த முறைகளிலே பார்த்தால் ஆலை ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு கோடிக்கும் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இந்த ஒரு கோடி ரூபாயை எங்கிருந்து பெறப் போகிறோம். இந்தியப் பேரரசு ஆயத் தீர்வையில் சலுகைகளை அளித்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்தச் சலுகைகளை ஆராய்ந்து பார்ப்போமானால் தமிழகத்தில் இருக்கின்ற பஞ்சாலைகள் பெறுகின்ற பலன் மிக மிகக் குறைவாக இருக் கிறது. மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் கூறியது போல் 40 லட்சம் ரூபாய்தான் பலன் கிடைக்கிறது. ஒரு ஆலைக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் அதிகச் செலவாகின்ற நேரத்தில் இந்த 40 லட்சம் ரூபாயை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும் ?

காங்கிரஸ்காரர்கள், ஒரு படி அரிசித் திட்டம் என்ற பலன் அற்ற திட்டத்தை வைத்து கொண்டு எட்டு கோடி ரூபாய் நட்டமடைகிறீர்களே என்று கூறுகிறார்கள். இப்போது அவர்களுடைய வெட்டுத் தீர்மானத் திலே பஞ்சாலைகளை அரசு எடுத்து நடத்த வேண்டுமென்று சொல்லு கிறார்கள். மராட்டியத்தில் “இந்தியா யுனைடெட் மில்ஸ்” என்ற பெயரில் ஐந்து மில்களை மராட்டிய அரசு எடுத்து நடத்தி வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளிலே அந்த மில்களை அந்த அரசு எடுத்து நடத்துவதால் ஏற்பட்ட நட்டம் சுமார் எட்டு கோடி ரூபாய். இதை கவனத்தில் கொள்ள வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு எட்டு கோடி நட்டமேற்படுகிறது என்றால் ஆண்டு ஒன்றுக்கு $2\frac{1}{2}$ கோடிக்கும் அதிகமாக நட்டம் ஏற்படுகிறது. இதனால் பயனடைகிறவர்கள் 15,000 தொழிலாளர்கள் தான். $1\frac{1}{2}$ கோடி மக்கள்

1969 மார்ச் 11] [திரு. ஏ. எம். இராஜா]

பயனடையும் வகையில் எட்டு கோடி ரூபாய் நாம் படியரிசித் திட்டத்திற்காகச் செலவழிப்பதை அறிவற்ற செய்கை, பயனற்ற செய்கை என்று கூறுகின்ற காங்கிரஸ்காரர்கள் 15,000 பேரே பலனடைவதற்காக ஆண்டு ஒன்றுக்கு 2½ கோடி ரூபாய் நட்டம் அடைய வேண்டுமென்று கூறுகிறார்களா? அப்படிக் கூறுவது எந்த விதத்தில் நியாயம் என்று புரியவில்லை. ஆகவே, இந்தப் பஞ்சாலைகளை அரசு எடுத்து நடத்துவதைப் பற்றி அரசு நன்றாகச் சிந்திக்க வேண்டும். இந்தப் பஞ்சாலைகளை எடுத்து நடத்துமுன் ஏற்படக்கூடிய பின் விளைவுகளை நன்கு சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. சி. கோவிந்தராஜன்** : தலைவர் அவர்களே, தொழில் மானியத்திலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநில அரசு பல தொழில்களை நடத்தி வருகிறது. மேலும் பல தொழில்களை நம்முடைய மாநில அரசே நடத்த வேண்டுமென்று நான் குறிப்பிடும் போது மாநில அரசுக்கு நிதி கிடையாது என்பதும் உண்மை. நாம் புதிய தொழில்களை நடத்துவதற்கு அதிகப்படியான மூலதனச் சேகரிப்புக்கு ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். மேலும் மேலும் "டாக்ஸ் திரிச்" என்ற கொள்கையை கடைப் பிடித்தால் அரசு பல தொழில்கள் நடத்த இயலும். நம்முடைய மாநில அரசு தற்போது நடத்தும் பல தொழில்களில் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் ஒன்று. இந்த நிர்வாகத்திற்கு அதிகாரிகளைப் போடும்போது தனியார் துறையோடு போட்டாப் போட்டி போடும் அளவில், பொதுத் துறையில் உற்பத்தியாகும் பொருள்கள் மலிவான விலைக்கு மக்களுக்குக் கிடைக்கும் வகையில் தொழில் திறமையும் அப்படிப்பட்ட மனோபாவமும் உள்ள அதிகாரிகளைப் போட வேண்டும். அதற்குப் பதிலாக இப்படிப்பட்ட பொதுத் துறையில் உள்ள தொழில்களில் உற்பத்தியாகும் சாமான்கள் கூடுதலான விலை இருப்பதற்கு காரணம் பொறுப்போடு நடைபெறாததுதான். உதாரணத்திற்குப் பல சொல்ல முடியும். ஒரு மரத்தை அறுத்து நாற்காலி செய்வதாக வைத்துக் கொண்டால் அந்த நாற்காலி செய்த பிறகு அதிலே துண்டு விழுந்த கட்டைகளை வைத்து தனியார் துறையாக இருந்தால் ஒரு ஸ்டூல் செய்து விடுவார்கள். ஆனால் அரசுத் துறையிலே நாற்காலி செய்து விட்டு துண்டு விழக்கூடிய மரத்தை வீணாக்கி விடுகிறார்கள். அதனால் தனியார் துறையில் ஒரு நாற்காலி விலை 12 ரூபாய் என்றால் அரசுத் துறையில் 14 ரூபாய் அல்லது 15 ரூபாய் ஆகிறது. இவ்வாறு வீண் விரயம் ஆகக்கூடிய நிலையும், அதிகாரிகள் பல்வேறுவிதமான ஊழல்களைச் செய்யக்கூடிய நிலையும் பொதுத் துறையிலே இருக்கின்றன. கூடுதல் விலை காரணமாக அரசுத் துறையில் உற்பத்தியாகும் சாமான்கள் விற்பனையாவதில்லை.

கடந்த ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் ராஜபாளையம் என்ஜினியரிங் ஒர்க்ஷாப்பில் மூலப் பொருள்கள் வெளியே விற்கப்பட்டிருக்கின்றன. எவர்-சில்வர் தகடுகள் 11,500 ரூபாய்க்கும், எம்.எஸ். ஷீட்டுகளும் தனிப்பட்ட நபர்களுக்கு விற்கப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றிக் கேட்டால் நம்முடைய பொருள்களை எல்லாம் தயார் செய்யக்கூடிய ஷாப்புகளுக்கு கேட் பாஸ் போட்டு அனுப்பப்படுகிறது என்று கூறுகிறார்கள். விருத்தாசலத்தில் சிராமிக் இண்டஸ்ட்ரீசுக்காக ஒரு மிஷினை சென்னை துறைமுகத்திலிருந்து டிரான்ஸ்போர்ட் செய்வதற்கு டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் மட்டும் 36,000 ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 12 லாரிகளில் அந்த மெஷினின் பாகங்கள் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாறு 36,000 ரூபாய் டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் என்று செலவு செய்வது நியாயந்தானா ?

மூலதன ஒதுக்கீட்டில் சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன். இண்டஸ்ட்ரியல் கோவாப்ரேடிவ்ஸ் நம்முடைய மாநிலத்தில் 411 இருக்கின்றன. அதற்காக ஒதுக்கப்பட்டிருப்பது 19,36,100 ரூபாய். ஆனால் மானியத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 1,20,000 தான். மீதி 18,16,100 ரூபாய் ஆபீசர்ஸ் செலவு, எஸ்டாப்ளிஷ்மெண்ட் செலவு, அலவன்ஸ் ஆகியவற்றுக்கே போய்க்கொண்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட கோவாப்ரேடிவ் சொஸைடி

களை ஊக்குவிக்க அதிகப்படி மானியம் கொடுப்பதோடு கூட, நல்ல முறையில் கண்காணித்து உண்மையான உழைப்பாளர்கள் பயன்படும் முறையில் நடத்தியாக வேண்டும். திருமழிசையில் நடத்தப்படுகிற மெகனைஸ்டு ப்ரிக் பிளாண்ட் நல்ல முறையில் நடைபெறக் கூடிய சூழ்நிலை இருக்குமானால் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை மேலும் விரிவுபடுத்த வேண்டியது அவசியம். நம்முடைய மாநிலத்தில் 12 கூட்டுறவு நூற்பாலைகளும், 7 சர்க்கரை ஆலைகளும் இருக்கின்றன. இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதாது. இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் சரியான முறையில் நடத்தப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(திரு. சு. துரைசாமி—தலைமை.)

குடிசைத் தொழில்களுக்கு விற்பனை ஏற்பாடுகளைச் சரிவரச் செய்ய
மு.ப. 11-30 வேண்டும். 10,835 ரெஜிஸ்டேர்ட் ஸ்மால் ஸ்கேல் சொஸைட்டிகள் இருக்கின்றன. இவை தொடர்ச்சியாக இயங்கவும், மேலும் மேலும், பொருள்களை உற்பத்தி செய்யவும், அவைகளுக்கு வேண்டிய கடன் உதவி அளிக்கவும், அவற்றில் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்னையையும் இதில் இணைத்துச் செய்தால் நன்றாகயிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

கலைகள் கைத்தொழில் பயிற்சிக்காக மகாபலிபுரத்தில் ஒரு ஆர்ட்ஸ் ஸ்கூல் இருக்கிறது. அங்கு படிக்கின்ற மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஸ்டைபெண்ட் குறைவாகயிருக்கிறது. ஆகவே அதை அதிகப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன் அவர்களுக்கு ஹாஸ்டல் வசதியும் செய்து கொடுக்கப்படவேண்டும். அங்கு படித்து பட்டம் பெறுகிறவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பளிக்க ஏற்பாடு செய்யாமல் அந்தப் பள்ளியை வைத்துக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. அப்படி ஏற்பாடு செய்யாவிட்டால் அந்தத் துறையிலும் மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கத்தான் அது உதவி செய்யும்.

ராஜபாளையத்தில் சிமெண்ட் தொழிற்சாலை, அரக்கோணத்தில் தொடர் வார்ப்பட தொழிற்சாலை இவை எல்லாம் இத் திட்டத்தில் இருக்கின்றன. ராஜபாளையம் சிமெண்ட் தொழிற்சாலைக்கு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவைகளைச் சீக்கிரத்தில் கட்டி முடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மூடப்பட்டிருக்கும் பஞ்சாலைகள் பற்றி இங்கு எல்லாக் கட்சி உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். இதற்காக 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது மிக மிகக் குறைவு. ஒரு சிறிய தொழிற்சாலைக்குக் கூட அந்தப் பணம் போதாது. ஆகவே இதற்காக மத்திய அரசு அதிகப்படியான நிதி ஒதுக்கிட மாநில அரசு போராட வேண்டும். அவசியமானால் தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கட்சி மக்களையும், பொதுமக்களையும் திரட்டி மூடப்பட்டிருக்கும் மில்களுக்கு அதிகப்படியான நிதி திரட்ட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கூட்டுறவு ஸ்பின்னிங் மில்ஸ், மார்க்கெட்டிங் சொஸைட்டிகளுக்கு கணிசமான அளவிற்குப் பண உதவி அளித்து நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும். அவசியமானால் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களே கூட திடீர் விஜயம் செய்து நிலைமைகளைக் கண்டறிந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். இன்று காலை ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள். அங்குள்ள கணக்குகளை இறுதியாகத் தணிக்கைசெய்வது மாநில அக்கவுண்டண்ட்–ஜெனரல் என்று. திடீர் திடீரென்று கூட்டுறவுத் தொழிற்சாலைகளைப் பரிசீலனை செய்து அவை நல்ல முறையில் இயங்க வழிவகை செய்யவேண்டும். மாநில அரசு ரைஸ் மில்களை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் நமக்கு நல்ல அரிசி கிடைக்க முடியும். ஹாண்ட்லூம் சொஸைட்டி மாநில சொஸைடியானாலும் சரி அல்லது ப்ரைமரி வீவேர்ஸ் சொஸைட்டிகளானாலும் சரி மூன்று லட்சம் ஐந்து லட்சம் ரூபாய் என்று ஒதுக்கியிருப்பது குறைவாக இருக்கிறது. ஆகவே பங்குத் தொகையை அதிகரிக்கும்

முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு நிர்ணய விலையில் நூல் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கு மார்க்கட்டைப் பிடிக்கவும் துணிகளை விற்பதற்குமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் இதுவரையில் பொதுத் துறை நிறுவனங்களுக்கே உதவி செய்து வந்தது. இப்போது தனியார் துறைக்கும் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் நிதி உதவி கொடுக்கும் என்ற கொள்கை மாற்றம் ஏற்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. இது தவறான கொள்கையாகும். எந்தக் காரணத்திற்காக அந்தக் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டதோ அந்தக் கொள்கையே தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். அதன் அடிப்படையில்தான் தூத்துக்குடி உரத் தொழிற் சாலைக்குத் தனியார் துறையில் பத்து கோடி நாம் பத்து கோடி என்று போடுவது. அந்தத் தொழிற்சாலையை நாமே நடத்த முடியும், பாலி—டெக்னிக்கிலுள்ள ஆசிரியர்கள் பல்லாண்டுகள் பணி புரிந்தும் தாற்காலிகமாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு அவர்களின் சர்வீசை டெர்மினேட் செய்துவிட்டு மறுபடியும் அவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் போது நியூ சர்வீஸ் என்று போடுகிறார்கள். எந்தக் காலத்தில் அவர்கள் அமர்த்தப்பட்டார்களோ அந்தக் காலத்திலிருந்து தொடர்ந்து கண்டினியுவஸ் சர்வீஸ் என்று போட்டு அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

* திரு. பி. வேலுசாமி: தலைவர் அவர்களே, இன்றையதினம் நம் மாநிலத்தில் தொழில் சம்பந்தப்பட்ட வரையில் முதன்மையான தொழிலில் பஞ்சாலைத் தொழிலாகும். அந்தப் பஞ்சாலைத் தொழிலில் கிட்டத்தட்ட இன்றையதினம் 27 பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இருபத்து ஏழு பஞ்சாலைகளிலும் சேர்ந்து சுமார் 15,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதோடு பஞ்சாலை உறுப்புகளைத் தயார் செய்கிற தொழிற்சாலையான டெக்ஸ்டூல் கம்பனியும் மூடப்பட்டு 5,000 தொழிலாளர்கள் இன்று வேலையற்ற நிலையில் இருந்து வருகிறார்கள். இந்த நிலைமை தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இருந்து வருகிறது. இப்படி இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து இருக்கிற நிலையில் சர்க்காரிடம் பல தடவை விண்ணப்பித்தும், அதற்கான முயற்சிகளை மேற்கொண்டும் பல வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. அப்படி வாக்குறுதிகள் பல கொடுக்கப்பட்டும் அந்த வேலை இழந்த தொழிலாளர்களுக்கான வாழ்விற்காக சௌகரியங்கள் ஏதாவது வருகிறதா என்றால் அதைப் பற்றி நினைக்கக் கூட முடியாத அளவிற்கு அவர்கள் ஏக்கத்தோடு நின்று கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இன்று வேலை இழந்து பட்டினி கிடக்கிறார்கள். வேறு தொழில்களுக்கும் வாய்ப்பில்லாமல் இன்று நாட்டில் வறட்சி ஏற்பட்டிருக்கிற நிலையில் புது வேலைவாய்ப்பற்ற நிலையில் அவர்கள் நொடிந்து போயிருக்கிறார்கள். அவர்களுக்காக இந்த அரசு இன்னும் அதிகப்படியான முயற்சிகளை மேற்கொண்டிருக்குமானால் சிறப்பாக இருக்க முடியும். தொழில் அமைச்சர் அவர்கள் கோவையிலும் நேற்றையதினம் மதுரையிலும் பேசியிருப்பதைப் பார்க்கும்போது அது வரவேற்கத்தக்கதாகயிருப்பினும் அதை உடனடியாக அமல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் எந்தளவிற்கு இருக்கும் என்பதை நடைமுறையில் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் தொழிலாளர்கள். ஆகவே அந்தத் தொழிலாளர்கள் புது வாழ்வு பெறுவதில் இந்த சர்க்கார் இன்னும் கொஞ்சம் கவனம் எடுத்திருக்குமானால் அது சாலச்சிறப்புடையதாக இருந்திருக்க முடியும்.

மத்திய அரசு இதுவரையில் இந்தப் பஞ்சாலைத் தொழிலுக்காக 17 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மற்ற மாநிலங்களை விட இங்குதான் அதிகப்படியான பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இருக்கிற பஞ்சாலைகள் மூடப்படாமல் இருப்பதற்கான வகைகளை ஆராய்ச்சி பூர்வமாக எடுத்துக் கொண்டு தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏற்கனவே அவர்கள் கலால் வரியைக் குறைத்திருக்கிறார்கள். மத்திய அரசு கலால் வரியைக் குறைக்குமானால் மாநில அரசு எலக்ட்ரிஸிட்டி

சார்ஜ், விற்பனை வரி இவைகளைக் குறைப்பதாக சொன்னார்கள் முன்பு. ஆகவே எலக்ட்ரிஸிட்டி சார்ஜைக் குறைப்பது ஒருபக்கமிருப்பினும் குறைந்த பட்சம் அதற்குரிய சர்சார்ஜையாவது குறைத்து விற்பனை வரியிலும் கொஞ்சம் குறைவு ஏற்படுத்தி மேலும் ஆலைகள் மூடப்படாமல் இருப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

தேசிய தொழில் கார்ப்பரேஷன் பற்றி சொல்லப் பட்டிருக்கிறது. அந்தக் கார்ப்பரேஷனை உடனடியாக ஏற்படுத்தி வேலை இழந்துள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான முயற்சியை அரசு துரிதமாக எடுக்குமானால் நன்றாகயிருக்கும்.

அதோடு, விசைத் தறிகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதுபற்றி பேச்சு அடிபடுகிறது. இங்கு விசைத் தறிகளுக்கு அனுமதி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் வடக்கே உற்பத்தியாகிற பல துணிகள் தெற்கு வந்து சர்வசாதாரணமாக விற்கப்படுகிறது. இங்கு விசைத்தறிகளுக்கு லைசென்ஸ் கொடுக்கவில்லை என்றால் வடக்கே உள்ளவர்கள் தென் மாநிலங்களுக்கு வந்து அவர்களுக்கு இங்கு நிரந்தர மார்க்கெட்டை நாம் தேடிக் கொடுப்போமே தவிர, இங்குள்ள பஞ்சாலைகளைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் செய்வதிலிருந்து நாம் தவறிவிடுவோம் என்று நினைக்கிறேன். ஆகவே உடனடியாக தென் மாநிலங்களில் விசைத்தறிகளுக்கு அதிகப்படியான லைசென்ஸ் வழங்கப்பட்டு இங்குள்ள பஞ்சாலைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை அதிகப்படியாக மேற்கொள்ள வேண்டும்.

அதோடு, இந்த சிறிய தொழில்கள் சம்பந்தப்பட்ட வரையில் தொழில் இலாக்கா டைரக்டர்களை நியமிக்கும்பொழுது சாதாரணமாக அந்தத் தொழிலில் அனுபவம் உடையவர்கள், அந்த தொழிலில் தேர்ந்தவர்கள், டெக்னிக்கல் தகுதி உடையவர்கள், எந்திர நுணுக்கங்களையும், அதன் தன்மைகளையும் புரிந்தவர்களை நியமிப்பது சிறப்பாக இருக்கும். ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், சாதாரணமாகப் பேப்பரைப் பார்ப்பதிலும், கொள்கைத் தீர்மானத்திலும் வல்லுநர்களாக இருக்கலாம். ஆனால் தொழிலில் திறைமையானவர்களாக, எந்திர நுணுக்கங்களையும், விசை நுணுக்கங்களையும் புரிந்தவர்களாக இருக்க முடியாது. இந்த இலாக்காவில் நியமிப்பவர்களை ஐ. ஏ. எஸ். அதிகாரிகளாக நியமிப்பதற்குப் பதிலாக தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களாகப் பார்த்து நியமிப்பது சிறப்பாக இருக்கும்.

அதோடு சிறுதொழில் கார்ப்பொரேஷன், தொழிலுக்கு மட்டுமே தனியாகப் பிரித்து ஏற்பாடு செய்யப்பட்டது. பிறகு அந்தக் கார்ப்பொரேஷனில் தொடர்ந்து நஷ்டமேற்பட்டு சமீப காலத்திலேயிருப்பதைப்பற்றிச் செயல் குறிப்பு தெளிவாகக் காட்டுகிறது. போடப்பட்டிருக்கும் முதல் 10 கோடி மூலதனம். வியாபாரம் நடத்தியது 5 கோடி ரூபாய்க்கு. நஷ்டம் 30 லட்சம் ரூபாய். எப்படி நஷ்டமாயிற்று ? சிறுதொழில் கார்ப்பொரேஷனில் எப்படி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தோமேயானால் மிகவும் விந்தையாக இருக்கும். சமீபத்தில் இந்தச் சிறுதொழில் கார்ப்பொரேஷனைச் சேர்ந்த, தோல் பதனிடும் தொழிற்சாலை யொன்று விண்ணமங்கலத்தில் இருக்கிறது. அதற்குப் பொறுப்பு அதிகாரியாக இருந்தவர் பல 10 லட்சம் ரூபாயைக் கையாடல் செய்ததாகச் சமீபத்திலே, அவர்கள் 14-2-1968-ம் தேதியன்று சஸ்பெண்ட் செய்யப்பட்டார். சஸ்பெண்ட் செய்யப்பட்ட அந்த அதிகாரியின் மேல் 8 மாதங்கள் வரையிலும் குற்றம் இன்னது என்று சார்ஜ் ஃப்ரேம் செய்யாத காரணத்தினால் அவர் கோர்ட்டிலே வழக்காடி மீண்டும் அதே தகுதி உள்ள ஒரு உத்தியோகத்தைப் பெற்றிருக்கிறார் இந்தச் சர்க்காரிலே. இப்படியிருந்தால் தவறுகள் செய்கின்றவர்கள் அந்தத் தவறுகளிலிருந்து எப்படித் திருந்துவார்கள் என்பதுதான் புரியவில்லை. தவறாக நடந்தவர் மீது உடனடியாகக் குற்றம் சாட்டாமல், 8 மாதங்கள் வரையிலும் அவர்கள் பேரிலே குற்றச்சாட்டுக்களைச் சரியாகக் கொடுக்கவில்லை என்றால், 7, 8 வருஷங்கள் தொடர்ந்து நடந்திருக்கும் தவறுகளுக்கு பலபேர் உடந்தையாக இருந்

திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அதனுல்தான் 8 மாதங்கள் வரையிலும் குற்றச்சாட்டுகளை அவர்கள் பேரிலே கொடுக்காமல் இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது. ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலையிலேயே இப்படியிருக்கிறது என்ருல், தமிழ்நாட்டில் உள்ள தொழில் பட்டறைகளில் என்னென்ன நடக்கிறது, எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பது மிகவும் பரிதாபத்திற்குரியது. இன்னும் சொல்லப் போனுல் உற்பத்தியாகும் பல பொருள்கள், வெளிமார்க்கெட்டுகளில் உள்ளதைவிடத் தரக்குறைவாக இருந்தாலும் நமது சர்க்கார் அந்தப் பொருள்களை வாங்குகிறது. அதிகப்படியான விலை கொடுத்து வாங்கினுலும் கூட, பட்டறைகளில் நஷ்டம் ஏற்படுகிறது என்ற நிலையிருக்கிறது. இது எவ்வளவு கேவலமானது. தொழில் பட்டறைகளை வாஸ்தவமாகவே சரியான முறையில் கண்காணிக்கும் முறையில் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தால் இப்படிப்பட்ட நிலை வந்திருக்கா. அந்த விண்ணமங்கலத்தில் வேலை பார்த்த அதிகாரிக்கு 15 தினங்களுக்கு முன்பு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரிகூட, குறிப்பாக ஏலகிரிமலையில் ஒரு பங்களா வாங்கியும், கோட்டயத்தில் வீடு வாங்கியும் இருக்கிருர்கள். பல்லாவரத்தில் வேறு ஒருவர் பெயரால் டேனரி ஆரம்பித்திருக்கிருர். இந்த அதிகாரிக்கு ஏற்றுமதி இறக்குமதி டிபார்ட்மெண்டிலே வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த ஏற்றுமதியைச் செய்வாரோ தெரியவில்லை. ஆகவே, இம்மாதிரியான தவறுகளைத் தடுப்பதற்கு முயற்சியை நாம் கொள்ளவில்லையென்ருல் சர்க்கார் நடத்துகின்ற தொழிற்சாலைகள் முழுவதற்கும் நிரந்தரமான கெட்ட பெயரே ஏற்படும். எனவே, அவ்வாறில்லாமல் பாதுகாக்க வேண்டுமென்று அமைச்சரவர்களை மிகவும் வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இம்மாதிரி தவறுகள் நடப்பதைக் கண்டுபிடிக்க, பொதுஜனங்களைக் கொண்ட கமிஷனை ஜில்லா வாரியாக நியமித்து அவர்கள் அங்கு விற்பனையாவது என்னென்ன என்று மாதாமாதம் பரிசீலித்துக் கண்காணிக்க வேண்டும் என்று கோருகிறேன். குறைந்தபட்சம் அந்தப் பகுதியிலேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களாகிலும் தொழிற்சாலைகளைப் பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்து, அவர்கள் பரிசீலிக்கின்ற உரிமையைத் தந்தால் இப்படிப்பட்ட தவறுகளிலிருந்து பாதுகாக்க முடியும் என்று கருதுகிறேன். இந்த நேரத்திலே இம்மாதிரியான நிலைகளிலிருந்து இந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த நேரத்தை அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் தோல் பதனிடும் தொழிற்சாலையைப் பற்றி—விண்ணமங்கலத்தில் உள்ளது பற்றி என்று நினைக்கிறேன்—தகவல் எல்லாம் சேகரித்துப் பேசியிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஆனுல், அவர்கள் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டிவிட்டுப் போவதுதான் வருத்தமாக இருக்கிறது. இந்த அரசாங்கம் பொறுப்பை ஏற்றவுடன் தவறு நடப்பதைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் தனி அக்கறை காட்டி, அவரை சஸ்பெண்ட் செய்திருந்தோம் (இடைக்கால வேலை நீக்கம்). அவர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்ருர். நம்முடைய உயர்நீதி மன்றம், இத்தனை மாதங்களுக்குள் சார்ஜ் ஷீட் போட வேண்டுமென்று சொன்னது. அதற்கும் முயற்சி செய்தோம். விஜிலன்ஸ் இலாக்காவையும் கலந்து வேகமாகச் செய்ய வேண்டுமென்று, அறிக்கை வேண்டினேம். அந்த அறிக்கையால் இன்னும் பல லட்ச ரூபாய்களைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை வந்தது. அந்தப் பல லட்சம் ரூபாய்களைக் கண்டுபிடிக்க மேலும் விசாரணை செய்ய வேண்டிய ஒரு நிலை வந்தது. அவர் விடவில்லை. மீண்டும் உயர்நீதி மன்றத்திற்கு வழக்கு சென்றது. அதற்கு நீதிபதி, நீங்கள் இத்தனை மாதங்களாக சார்ஜ் ஷீட் போடவில்லை, ஆகவே, சஸ்பெண்ட் ஆர்டரை ரத்து செய்கிறேன் என்று உயர்நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. நாங்கள் சொல்லவில்லை. அதற்குப் பின்னுலே என்ன செய்வது என்று சொல்லி, உயர்நீதி மன்றத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்ற

ஒரே காரணத்திற்காக அவருக்குத் தனியாக ஒரு இடம் ஒதுக்கப்பட்டு, அந்த இடத்திலே போடப்பட்டிருக்கின்றார். நிச்சயமாக அவருடைய தவறை அந்த இடத்திலும் கண்காணிக்கும்.

திரு. பி. வேலுசாமி : நான் சொல்வது என்னவென்றால் எட்டு வருஷங்களாகத் தப்பு பண்ணியிருக்கிறார்கள். இந்தச் சர்க்கார் வந்து தான் தப்பு நடந்தது என்று அர்த்தமில்லை. எட்டு வருஷங்கள் நடந்திருக்கின்றன. எட்டு வருஷங்களாக நடந்திருப்பதைக் கண்காணிக்க வில்லை. அதில் சேர்ந்திருக்கும் ஆடிட்டர்கள், அக்கவுண்டெண்டுகள், மேற்பார்வை பார்க்கும் அதிகாரிகள் ஆகிய இத்தனை பேரும் 8 வருஷங்களாக என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதுதான் புரிய வில்லை.

* **திரு. க. முருகேசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டிற்கான தொழில்களுக்கான மானியக் கோரிக்கையின் மீது என் கட்சியைச் சேர்ந்துள்ளவர்கள் கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

தர்மபுரி மாவட்டம் மிகவும் பின் தங்கிய ஓர் மாவட்டம். மாவட்டத்தினுடைய பொருளாதாரம் உயர, செழுமையும் ஏற்பட அரசு சில தொழில்மயமான முன்னோடித் திட்டங்களை நிறைவேற்ற முன் வர வேண்டும். நான் ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் பேசும்போது சின்னாறு அணைத் திட்டத்தைப் பற்றியும், ஒகேனக்கல் மின்சார அணைத் திட்டத்தையும் முடித்தால் மாவட்டம் ஓர் நல்ல நிலையை அடையும் என பேசியிருக்கிறேன். தர்மபுரி மாவட்டம் சிறியதாக இருப்பதால், மாவட்டம் முழுவதும் கனிவளங்களை பரிசீலனை செய்து, ரூரல் இண்டஸ்டிரீஸ் ப்ராஜக்ட்டாக முடிவு செய்து, எங்கெங்கு சிறிய பெரிய தொழில்கள் ஆரம்பிக்கப்படலாமோ அங்கெல்லாம், தொழில் மயமாக்கக் கோருகிறேன்.

தற்பொழுது கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலை பாலக் கோடுக்கு சமீபம் திம்மனஹள்ளியில் சுமார் 2·25 கோடி மதிப்பீட்டில் சர்க்கரை ஆலை ஏற்படப் போகிறது. இதில் மக்கள் பங்குத் தொகையாக ரூபாய் சுமார் 40 லட்சம் சேர்க்கப்பட வேண்டும். இதில் ஏற்கனவே மக்களிட மிருந்து பங்குத் தொகையாக 26 லட்சமும், தற்பொழுது மீதி 14 லட்சமும் வசூல் செய்து வருகிறோம். மழைக் குறைவு காரணமாக விவசாயிகளிடையே பங்குத் தொகை வசூலிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆலைக்கு வேண்டிய கட்டிட வேலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்திய தொழில் நிதி உதவிக் கழகம் 125 லட்சம் கடன் வழங்கியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் நான் அரசைக் கேட்டுக் கொள்வது, அரசு ஆலைக்காக இன்னும் செலுத்த இருக்கும் 10 லட்ச ரூபாயை முன்பணமாக ஆலைக்கு அளிக்க வேண்டுமென்றும், மக்கள் பங்குத் தொகையை ஓரிரு ஆண்டுகளில் வசூலித்து கட்டி விடுகிறோம் என்று அந்தத் தொகுதிஅங்கத்தினன் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன். இந்த உதவியை அரசு செய்தால் இந்த ஆண்டே சர்க்கரை ஆலை முடிவு பெற்று சிரமம் இன்றி நடைமுறைக்கு வந்து விடும். விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் நன்மை அடைவார்கள் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆலை முடிவு பெற்றால் நிறைய உப தொழில்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். தர்மபுரி மாவட்டத்தில் அஞ்செட்டி காட்டில் நிறைய மூங்கில் காடு உள்ளது. ஆலை, கழிவுப் பொருளை, அதாவது கரும்பு சக்கையைக் கொண்டும், மூங்கிலைக் கொண்டும் ஒகேனக்கல் காவேரியில் ஓடும் தண்ணீர் வசதி கொண்டும் ஓர் பேப்பர் ஆலை ஏற்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில் நிறைய தென்னைமரத் தோட்டங்கள் இருக்கிறபடியால் கயிறுத் தொழில் செய்ய நிறைய வாய்ப்பிருக்கிறது. இந்தத் தொழிலைச் செய்ய முன்வரும் மக்களுக்கு அரசு ஊக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

1969 மார்ச் 11] [திரு. க. முருகேசன்]

நெசவுத் தொழில் மந்த நிலையில் உள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், நெசவாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்கள் வாழ்வு வளம் பெற குடிசைத் தொழில் முறையை செய்ய அவர்களுக்கு ஆதரவு அளிக்கக் கோருகிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் உடனடியாக இண்டஸ்டிரியில் செமினர் நடை பெற வேண்டுமென்றும், அதன்மூலம் தொழில் வாய்ப்புகளை முடிவு செய்து தர வேண்டு மென்று அரசைக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் தொழில் மானியத்தில் எனது கருத்துக்களை கூற விரும்புகிறேன். 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 8-ம் தேதி இதே மானியத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றியபோது அவர் நம்முடைய திட்ட வட்டமான தொழில் துறை கொள்கைகளை விளக்கினார்கள். அதை இன்றையதினம் நினைவூட்ட விரும்புகிறேன். பொதுவாக இந்த நாட்டிலே தொழில் வளர வேண்டுமென்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்ற ஒரு கொள்கையாகும். ஆனால், முதல் திட்டம், தொழில் துறையில் உள்ள மந்த நிலையை நீக்க வேண்டும். அடுத்து தொழில் துறையில் ஒரு சுமுகமான உறவு ஏற்படுவதற்கு வேண்டிய எல்லா வழிவகைகளையும் இந்தச் சர்க்கார் மேற்கொள்ளும். மூன்றுவ தாக, தொழில் துறையில் கிடைக்கிற வருவாய் சமூகம் முழுவதற்கும் பரவலாக்கப்பட, படிப்படியாக இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். நான்காவதாக, கூடுமான வரையில் புதிய தொழில்கள் துவக்கப்படுகிற நேரத்தில் அதிலேயிருந்து கிடைக்கக்கூடியது மாநிலத்திற்கு வரக்கூடிய அளவில் துவக்கப்பட வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். தொழில் களை பொதுத் துறையில் ஆரம்பிக்க வேண்டுமா, தனியார் துறையில் ஆரம்பிக்க வேண்டுமா, சிறு தொழில்களாக ஆரம்பிக்க வேண்டுமா, கூட்டுறவு முறையிலே ஆரம்பிக்க வேண்டுமா, அல்லது காந்தியார் சொல்லியபடி கதர் தொழிலை வைத்தே முன்னேறி விடலாமா என்பதைப் பற்றி பேசி வருகிற நேரத்தில், தெளிவாக, திட்டவட்டமாக இதைப்பற்றி கூறினார்கள். "ஏதோ தொழிலில் மந்தம் ஏற்பட்டுவிட்டது" தொழில் கள் மூடப்படுகின்றன, தொழில்கள் துவக்கப்படவில்லை, என்று பொறுப்பில்லாமல் பொதுப்படையாகக் குற்றம் சாட்டிவிட்டுச் செல்வதற்கு நான் விரும்பவில்லை. ஆகவே, இந்தத் தொழில் முன்னேற்றத்திற்காக சில ஆலோசனைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டில் ஏராளமான பேர் வேலையில்லாத் திண்டாட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். பல இலட்சக்கணக்கான பேர் வேலையில்லாத் திண்டாட்டத்தாலே தவிக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை தருவதற்கு தொழில்கள் வளர வேண்டும். ஆகவே, இந்த பல இலட்சக் கணக்கான மக்களுக்கு வேலை தரவேண்டிய இந்தக் கட்டத்தில், நம் முடைய பிளானிங் கமிஷன் டெப்புட்டி சேர்மென் புரஃபொசர் காட்கில் அவர்கள் ஒன்று கூறியுள்ளார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு இருக்கிற ஒரே வழி சிறுசிறு தொழில்களாக, அதே நேரத்தில் "லேபர் இன்டென்சிவ்" தொழில்களை ஏற்படுத்தி ஏதாவது வேலையைத் தருகின்ற தொழில்களாக அமைக்க வேண்டும் என்ற கருத்தை தெரிவித்தார்.

" Small-scale and labour-intensive industries must be organised talukwise. Then only our unemployment problem can be solved. That is the only solution ".

என்று காட்கில் அவர்கள் கடந்த ஆண்டு இந்தத் தொழில்கள் பற்றிய கருத்தரங்கில் பேசியபோது எடுத்துரைத்தார்கள். ஆனால், இன்றைக்குப் பார்க்கின்றபோது ஏராளமான பொறியியல் வல்லுனர்கள், பல ஆண்டு காலம் படித்து, பட்டம் பெற்ற பொறி இயல் வல்லுனர்கள், வேலை யில்லாமல் தவிக்கிறார்கள். அது மட்டுமல்ல, வேலை இன்றி தினக் கூலியாகக்கூட வேலை செய்யத் தயார் என்ற நிலையிலே இன்றைய தினம் அவர்கள் அரசாங்க அலுவலகங்களுக்கு படையெடுத்து வருகிறார்கள்.

அவர்களை யெல்லாம் பயன்படுத்தி, அவர்களுடைய திறமையைப் பயன் படுத்தி அதே நேரத்தில் இங்கே உள்ள பல தொழிலாளர்களையும் சேர்த்து, சிக்கனமாகத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு வழிவகைகளை உருவாக்க வேண்டும். "செல்ப் எம்ப்ளாய்மெண்ட் ஸ்கீம்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். சிறுசிறு தொழில்களாக ஆரம்பித்தோமானால், ஜப்பான் நாட்டிலே இருப்பதைப் போல் ஆரம்பித்தோமானால், அந்த நாட்டிலுள்ள தொழில் வளர்ச்சியை நாம் பெற முடியும். வேலையில்லாமல் திண்டாடுகின்ற பொறி இயல் வல்லுநர்களை வைத்து, தொழில் ஆரம்பிக்க, தொழில் நடத்த, அத்தகைய தொழில்களை ஆரம்பிக்கலாமா என்பதைப்பற்றி நம்முடைய அரசு கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த செல்ப் எம்ப்ளாய்மெண்ட் ஸ்கீமைப் பொறுத்த வரையில் இப் பொழுது பொறியியல் வல்லுனர்கள் அவர்களாக வந்து தொழில் ஆரம்பிக்க போகிறோம் என்று சொன்னால், எங்கே பணம் கிடைக்கிறது என்று தெரியாத நிலைமை இருக்கிறது. ஆகையினால் இந்த வேலை யில்லாத் திண்டாட்டம் தீர்க்கப்பட வேண்டுமானால், அந்த அளவிற்கு அவர்களுக்கெல்லாம் வேலை தர வேண்டுமென்ற அடிப்படையிலே, தொழில் திட்டத்தை தொடங்க வேண்டுமானால், அதற்கு 10 கோடி ரூபாய் தேவைப்படும் என்று வைத்துக்கொண்டால், அதற்கு இந்திய அரசை நாம் கேட்க வேண்டும். செல்ப் எம்ப்ளாய்மெண்ட் ஸ்கீம் பிளான்ஸ் கார்ப்பொரேஷன் ஒன்றை நிறுவ வேண்டும். யார் யார் தாங்களாகத் தொழில்கள் வைக்க முன் வருகிறோம் என்று சொல்லு கிறார்களோ, சாதாரண நிலையிலிருந்து படித்துப் பட்டம் பெற்று, வேலையில்லாமல் இவ்வாறு சொல்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் உட னடியாகப் பணத்தைக் கொடுத்து உதவி செய்தால் தொழில் வளரும். அதற்கு இந்தக் கார்ப்பரேஷன் நல்ல முறையிலே பயன்படும் என்று கருதுகிறேன்.

அண்மையில், கடந்த ஆண்டு பஞ்சாப் மாநிலத்திற்கு நான் சென்றி ருந்த போது, அங்கே தொழில் வளம் பெருகியிருந்ததைக் கண்டேன். இங்கே நாம் வைத்திருக்கிற பணத்தில் பாதி, பாக்டரி லாண்டை சீர் செய்வதற்கும் பெரிய கட்டிடங்களைக் கட்டுவதற்கும் நிலம் வாங்குவதற்கும் செலவாகிவிடுகிறது. மொத்தத்தையும் வைத்து தொழில் ஆரம்பிக்கின்ற நிலை இல்லை. அங்கே இருக்கிற நிலையைப் பார்த்தால், சாதாரண கிராமங்களிலெல்லாம் மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்கிற காரணத் தாலே, குக்கிராமங்களிலே, சிறுசிறு கிராமங்களிலே சிக்கனமான முறையிலே மூலப்பொருள்களை எல்லாம் உற்பத்தி செய்கிறார்கள். அந்த முறையிலே, இங்கேயும் கிட்டத்தட்ட தமிழ் நாட்டை பொறுத்தவரையிலே சுமுகமான நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இங்கே படித்தவர்கள், திறமை யானவர்கள் இருக்கிறார்கள். ஆகையினாலே இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி அங்குள்ளதைப் போன்று சிறு தொழில்களை துவக்கினால் வேலையில்லாத் திண்டாட்டம் தீரும். அவர்கள் இன்னும் கெய்ரோனை புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். "பாக்டரி இன்ஸ்பெக்டரைப் பற்றி கவலைப் படாதே, லேபர் இன்ஸ்பெக்டரைப்பற்றி கவலைப்படாதே" என்று பணத்தை அள்ளித் தந்தார் கெய்ரோன் என்று அவர்கள் பெருமையோடு சொல்லிக் கொள்கிறார்கள். இந்தப் பொறுப்பேற்றிருக்கிற தொழில் அமைச்சர் அவர்கள், அவர்களுடைய காலத்திலே இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இங்கே தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்றால் திட்டங்களுக்கும் இந்திய அரசுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. லைசென்ஸ் பெறுவதற்கும் இந்திய அரசுக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. இப்படி எதற்கெடுத்தாலும் இந்திய அரசுக்குப் போவது சரிதானா? நம்முடைய தொழில்களுக்கு அங்கு செல்ல வேண்டி இருக்கிறது. இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் ஆக்ட்டின்படி, ஒரு மாநிலத்திலே உள்ளவர்கள்,

அந்த மாநிலத்திலே, அவர்களே ஒரு திட்டமிட்டுத் தொழிலை வளர்ப்பதற்கான முயற்சிகளை எடுப்பதற்கு, அங்குள்ள தொழிலை வளர்ப்பதற்கு எல்லா உரிமைகளும் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது திட்டங்களைப் போடுவதற்கும், லைசென்ஸ் கொடுப்பதற்கும், இந்த இடத்திலே இந்த தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்வதற்கான அதிகாரத்தையும் இந்திய அரசு வைத்துக் கொண்டிருப்பது நியாயம் தானா ? வேலையில்லாமல் மக்கள் கஷ்டப்படுவது இங்கே, வேலையில்லாததால் போராட்டம் நடத்துவது நம்மை எதிர்த்து, அவர்களுடைய பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டியது நாம். அப்படி இருக்கும் பொழுது இங்கே தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய லைசென்ஸை இந்திய சர்க்காரிடத்திலே பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருப்பது சரிதானா ? வேண்டுமானால் அன்னிய நாட்டு மூலப் பொருள்களை நாம் பெற்றுத் தர வேண்டுமென்று அவர்களைக் கேட்டால் அவர்கள் அதைப் பெற்றுத் தருவதிலே நியாயம் இருக்கிறது. ஆனால் இங்கே இருக்கிற பொருள்களை வைத்து தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று அவர்களை நாம் லைசென்ஸ் கேட்க வேண்டுமென்றால் இது என்ன நிலைமை ?

இங்கே கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கவேண்டுமென்று காலமெல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். பவர்லூம்களைப் போடலாம் என்று அவர்கள் ஏராளமாக விசைத்தறிகளைக் கொடுத்து விட்டார்கள். இன்றைய தினம் மார்க்கெட்டில் கைத்தறி நெசவாளர்களுடைய துணியோடு, பவர்லூம் துணிகள் போட்டி போடுவதால், கைத்தறி நெசவாளர்களின் கண்ணீரை நாம் துடைக்க வேண்டி இருக்கிறது.

அதேபோல் இந்த நாட்டிலே இருக்கிற நூற்பாலைகள் வட நாட்டிலே இருக்கின்ற ஆலைகளெல்லாம் துணி நெய்கின்ற ஆலைகள். இங்கே இருக்கிற ஆலைகள் நூல் நெய்கின்ற ஆலைகள். நூலுக்கு வேண்டிய பஞ்சை பெறுவதும் வடக்கே இருந்து. நூலை கொண்டு போய் விற்பதும் வடக்கேயுள்ள ஆலைகளுக்கு. காட்டன் கண்ட்ரோல் ஆர்டர்படி லைசென்ஸ் கொடுத்துவிடுகிறார்கள், வடக்கேயுள்ளவர்களுக்கு. இங்கே உள்ளவர்கள் வடக்கே சென்று இரண்டு பங்கு விலை கொடுத்து வாங்க வேண்டி இருக்கிறது, பஞ்சை நூற்கும் நூலுக்கு எக்ஸைஸ் வரி போடப்படுவதால் மறுபடியும் கொண்டுபோய் கொடுக்கும்போது உற்பத்திச் செலவு அதிகரித்திருக்கிறது. இந்திய அரசு கடைபிடித்து வருகின்ற தொழில் கொள்கையின் காரணமாக இன்றையதினம் இங்கே பாதிக்கப்பட்டிருப்பது நம்முடைய தொழில்கள், நம்முடைய தொழிலாளர்கள், நம்முடைய தொழில் வளர்ச்சி. ஆகையினால் தொழில் வளர்ச்சிக்கான அதிகாரங்களை நாம் பெறுவதற்குப் பாடுபட வேண்டும், நமது அரசாங்கம் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் சேலத்தில் இரும்பாலை வைக்கப்படும் என்பதைப் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். 1957-ம் ஆண்டிலே இதே மன்றத்தில் சேலம் இரும்பாலை வரத்தான் போகிறது, வரத்தான் போகிறது என்று மூன்று முறை அன்றையதினம் சர்க்கார் கட்சித் தலைவராக இருந்த சி. சுப்பிரமணியம் அடித்துப் பேசினார்கள். இன்னும் வரவில்லை. அதேபோல் தான், இலங்கையைச் சுற்றி செல்கின்ற கப்பல்கள், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றினால், அந்த வழியே வரும், போக்கு வரத்து செலவு குறையும், தொழில் மேம்பாடடையும் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறோம். இன்னும் நிறைவேற்றப் படவில்லை. அதே போல், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காகத் திட்டமிடப்பட்டு, அது ஆரம்பிக்க வேண்டிய காலமும் கடந்துவிட்டது. திட்டமிடப்பட்டு 2 ஆண்டு காலமாகி விட்டது. நாம் அங்கே கேட்கப் போனால் மாற்றாந் தாய் மனப்பான்மை யுடன் தான் அவர்கள் நடத்துகிறார்கள் என்பதை அங்கேயுள்ள நிலைமைகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. 'நெய்வேலியே நாங்கள்

கொடுத்த திட்டம்' என்கின்ற எண்ணம்தான் அவர்களிடம் இருக்கிறதே தவிர, அது சென்ட்ரல் செக்டாரிலே வருகிற திட்டம் என்ற எண்ணம் அவர்களிடத்திலே இல்லை. நெய்வேலியில் இரண்டாவது மைன் கட்டும் திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். சேலம் திட்டம், சேது சமுத்திர திட்டம் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டால்தான், இந்த நாட்டில் ஓரளவுக்காவது தொழில் பெருகும். அந்தத் திட்டங்களை ஆரம்பித்தால்தான், பல்வேறு துணைத் தொழில்கள் பெருக ஏதுவாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

நண்பகல் 12-00 அடுத்தபடியாக ஒன்றே ஒன்றைச் சொல்ல வேண்டும். "Industry is a Science" தொழில் நடத்துவது என்றால், ஒரு அதிகாரியைப் போட்டால், அந்தத் தொழிலைப் பொறுத்த வரையில், அதிலே இருக்கின்ற "Technical know-how" அதைப் பற்றிய அறிவும் பெற்று இருக்க வேண்டும். உற்பத்தி செய்யும் போது, காலத்திற்கு ஏற்ப பொருள்களை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். ஒரு அதிகாரியை நியமித்தால், அந்தத் தொழிலில் அந்த அதிகாரி அறிவைப் பெற்று நடத்திக் கொண்டு வருவார். அப்படி வரும்போது, தயவு செய்து அவரை மாற்றக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். தொழிலின் வளர்ச்சியோடேயே அந்த அதிகாரியின் வளர்ச்சியும் இணைந்திருக்கும். இரண்டும் ஒன்றாக இருக்கும். அவரைப் பற்றிய ரகசிய அறிக்கை பெறுவதை விட்டுவிட்டு, அவருடைய பணியாற்றலைப் பற்றி, "performance report" என்று சொல்லுவார்களே, அந்த "performance report" ஒன்றைப் பெற வேண்டும். தொழில் துறை அதிகாரங்கள், தலைமை அதிகாரிக்கு தொழிலுக்கு ஏற்ப பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். காலதாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும். திறம்பட நடத்தினால், அவரை மாற்றக் கூடாது.

இந்த நேரத்தில் ஒன்றே ஒன்றைமட்டும் சொல்ல விரும்புகிறேன். அமெரிக்க பொருளாதார நிபுணர், ஜான் கென்னத் கால்ப்ரெய்த் அவர்கள் இந்திய நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது, சோவியத் நாட்டிலுள்ள தொழிலுக்கும், அமெரிக்க நாட்டிலுள்ள தொழிலுக்கும் அமைப்பு முறையில் எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது. சந்திர மண்டலத்திலிருந்து ஒருவன் வந்தாலும் கூட, அமெரிக்கத் தொழில் அமைப்புக்கும், சோவியத் தொழில் அமைப்புக்கும் வித்தியாசம் எதையும் காணமுடியாது. இங்கேயும் டெக்னிகல் நோ-ஹௌ" உள்ளவர்கள் செயலாற்றி வருகிறார்கள். அங்கேயும் அப்படியே தான், தொழில் ஆற்றல் பெற்றவர்கள்தான் முதல்வர்களாக இருந்து நடத்துகிறார்கள். ஆகவே, தொழில் அமைப்பில் எந்த விதமான வித்தியாசமும் கிடையாது. ஆனால், சோவியத் நாட்டிலே, "Planning done by the Government" அதாவது, திட்டம் இடுவது அரசாங்கத்தால் செய்யப்படுகிறது. அதே நேரத்தில், அமெரிக்காவில் திட்டமிடுவதை தனியார் செய்கிறார்கள். இந்தியாவில் தொழில் அமைப்பு முறையிலேயே மாற்றம் இருக்கிறது. நிலத்தில் பரம்பரை வாரிசு உண்டு என்று கருதினோம். ஆனால், இந்திய நாட்டில் தொழிலில் கூட வாரிசு இருக்கிறது. தந்தை ஒரு தொழிலை நடத்தினார் என்றால், தந்தைக்குப் பிறகு மகனும் அந்தத் தொழிலைத் தொடர்ந்து நடத்துகிறான். "Hereditary management" என்ற முறையில், பரம்பரை பாத்யதையாக, பரம்பரை பரம்பரையாக அவர்களேதான் நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதன் விளைவு என்னவென்றால், தொழில் தெரிகிறதோ இல்லையோ பரம்பரையாக நடத்துகிறார்கள். அதனால் தொழிலில் சீர்கேடுகள் விளைகின்றன என்று எச்சரித்திருக்கிறார்கள்.

தொழில் வளம் பெருக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளவேண்டும். வேண்டிய அதிகாரம் பெற தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. பி. வெங்கடசாமி அவர்கள் தெலுங்கில் உரையாற்றினார்.

1969 மார்ச் 11]

***திரு. எம். ஆர். கண்ணன்** : தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி மானியத்தை ஆதரித்து என்னுடைய எண்ணத்தைச் சொல்ல விழைகிறேன். தொழில் துறையிலே, அதிலும் குறிப்பாக பொதுத் துறையிலே சர்க்கார் முதலீடு செய்யும்போது மிகமிகக் கவனிப்பாகச் செய்ய வேண்டும். பொதுத் துறையில்-ஸ்டேட் செக்டாராக இருந்தாலும், சென்டர் செக்டாராக இருந்தாலும் சரி—எல்லாம் நஷ்டத்திலே நடைபெறுகிறது. இதற்குக் காரணம் முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சிதான். கடந்த 20 ஆண்டு காலமாக, மேலும் மேலும் பொதுத் துறையில் எவ்வளவோ தொகைகளை முதலீடு செய்து, பொதுத் துறையை ஊக்குவித்தது தவறு என்பது என் எண்ணம் பொதுத் துறையினால் மக்களுடைய பணம் பாழாகிறது. நாட்டு பணம் பாழாகிறது. தனிப்பட்ட ஒருவர் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினால் நஷ்டம் ஏற்பட்டாலும், தனிப்பட்ட ஒருவருடைய பணம் மட்டும் தான் நஷ்டமாகும். ஆனால் பொதுத் துறையில் அதிகாரிகள் தருகிற புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு ஐந்து ஆண்டுகளில் இப்படிச் செய்யலாம், அப்படிச் செய்யலாம் என்று கணக்குப் பார்ப்பதனால் பொது மக்களுடைய பணம்தான் பாழாகிறது. ஆகவே, இன்றுள்ள ஆட்சியாகிலும் பொதுத் துறையில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் பேட்டைகளை ஏற்படுத்துகிறார்கள். அங்கே அவர்களுக்கு நிலத்தை அசைன்மெண்ட் செய்கிறார்கள். ஹெவி இண்டஸ்ட்ரீஸ் என்ற தலைப்பில் நான்கு, ஐந்து, ஆறு லட்சம் ரூபாய் செலவு செய்து பெரிய கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். தொழில் நசித்துப் போகும்போது, தொழிலில் நஷ்டம் ஏற்படுகிறபோது, தொழில் வளர்ச்சிக்காக மற்றவர்களிடமிருந்து கட்டிடத்தை அடமானம் வைத்து பணம் வாங்க வேண்டுமென்றால் எளிய முறையில் கிடைப்பதில்லை. அந்த நிலத்தை சர்க்கார் ஓரளவு பணம் வாங்கிக் கொண்டுதான் கொடுக்கிறார்கள். ஆனால் அதை அவர்களுக்கு உரிமையாக்குவதில்லை. கட்டிடத்தின் மீது பணம் பெற்றுக் கொள்ளலாம் என்று விதிமுறைகள் இருந்தும்கூட பணம் கிடைப்பதற்கு வேண்டிய அனுமதியை அதிகாரிகளிடமிருந்து பெற அதிக காலதாமதமாகிறது. அதனால் தொழில்கள் நசித்துப் போகின்றன. முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சி பல ஆண்டுகளாக இப்படி தவறான சில கொள்கைகளை வகுத்து வைத்ததன் காரணமாக எந்தத் தொழிற்சாலையும் எளிய முறையில் கடன் வாங்க பயன்படாத சூழ்நிலையே இருந்து வந்திருக்கிறது.

அடுத்தபடியாக, ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ், காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் இவைகளை எல்லாம் காங்கிரஸ் கட்சியைப் பெருவாரியாக ஆதரிப்பவர்களுக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் என்று பெயர்கள் கோட்டா லைசென்ஸ் பெற்று உழைக்காமலே சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் இருந்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சியிலே கோட்டா பர்மிட், என்று கொடுத்து வந்தார்கள். காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் சரியான முறையில் இயங்குவதில்லை. குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பவர்கள்தான் காங்கிரஸ் எலெக்ஷன் என்றால் முன்னாலே கொடி தூக்க வருவார்கள். எதிர்க்கட்சித் தலைவர் ஏதோ காங்கிரஸுக்கு பாரம்பர்யம் இருக்கிறது, உங்கள் கட்சிக்கு அந்த பாரம்பர்யம் இருக்கிறதா ? என்று கேட்டார். இதுவா பாரம்பர்யம் ? இருபதாண்டு காலமாக இப்படி குறுக்கு வழியில் பணம் சம்பாதித்தார்கள். குறிப்பாக சென்னையில் பலபேர் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொழில் செய்வது இல்லை, கோட்டா பெற்றிருக்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மன்னித்துக்கொள்ள வேண்டும். எங்கள் அரசாங்கம் இரு கும்பேது தவறு செய்தது என்றே வைத்துக்கொள்வோம். உங்கள் அரசாங்கம் இன்று இருக்கும்போது ஏன் அவர்களைப் பிடித்து தக்க நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதுதான் கேள்வி. அதிகாரிகள் ஆலோசனைகளை வாங்கி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ?

திரு. எம. ஆர். கண்ணன் : அதிகாரிகளுடைய வேலை அது. அமைச்சர் அவர்களும் இதைக் கவனிப்பார்கள். அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

இன்னும் ஸ்பிரிட் பர்மிட் என்று சொல்கிறார்கள். அதிகாரிகளை என்னுடன் அனுப்புங்கள். எவ்வளவு கேஸ்களை பிடித்துத் தருகிறேன். சில சமயங்களில் அதிகாரிகளுக்குத் தவறான தகவல்களைக் கொடுப்பார்கள். அந்தச் சமயத்தில் அதிகாரிகள் விழிப்போடு இருந்து பணியாற்ற வேண்டும். அவர்கள் இருபதாண்டுக் காலமாக ஒரே கட்சியின் ஆட்சியின் கீழ் இருந்தவர்கள். தங்களுடைய பிரமோஷன் போன்ற காரியங்களுக்காக அந்த ஆட்சியிடம் எதிர்பார்த்தவர்கள், தவறுகளை எடுத்துக் காட்டுவதில்லை. முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சி நாட்டைக் குட்டிச்சுவராக்கி மக்களையே பாழ்படுத்தி விட்டது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. காங்கிரஸ் இத்தகைய பாரம்பர்யத்தை விடவேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சில புள்ளி விவரங்களை எடுத்துக்காட்டி, இன்னின்ன அதிகாரி, இன்னின்ன தவறுகள் செய்தார் என்று சொன்னால் நலமாக இருக்கும். அதை விட்டுவிட்டு, அடிக்கடி காங்கிரஸ் பாரம்பர்யம், பாரம்பர்யம் என்று சொன்னால் என்ன அர்த்தம் ?

திரு. எம். ஆர். கண்ணன் : புள்ளி விவரத்திற்கு கஷ்டப்பட வேண்டியதில்லை. கொடுத்திருக்கும் கோட்டா, பர்மிட்டுகளை எடுத்துக்கொண்டு பார்த்து, அங்கெல்லாம் வேலை நடைபெறுகிறதா என்று பார்த்தால் 100-க்கு 90 பேர் உழைக்காமலே உட்கார்ந்து கொண்டிருப்பது நன்கு தெரியவரும். உழைக்காமலே சம்பாதிக்கும் போக்கு தொழில் துறையிலிருந்து ஒழிய வேண்டும். தொழில் அமைச்சரைப்பற்றி எந்த விதமான சந்தேகமும் கொள்ளவேண்டாம். அவர் நிச்சயமாகத் தவறு செய்யமாட்டார். யாரும் அவரிடமிருந்து கோட்டாவோ, பர்மிட்டோ தவறான வழியில் பெறமுடியாது என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறுவேன்.

டபிள்யூ. எஸ். இன்சுலேட்டர் என்ற ஒரு நிறுவனத்தின் விழாவில் கலந்து கொண்ட தொழில் அமைச்சர் நம் மாநிலத்தில் தயாராகும் பொருள்களையே வாங்க வேண்டுமென்ற எண்ணம் நம் மக்களுக்கு வர வேண்டும் என்று குறிப்பிட்டார். அப்படி நம் மாநிலப் பொருள்களை வாங்கினால்தான் நாட்டில் தொழில் வளம் பெருகும். அசோக் லேலண்ட் என்ற நிறுவனம் இருக்கிறது, அதில் நல்ல பஸ்கள், லாரிகளுக்கு வேண்டிய ஹெவி டூட்டி சேஸிஸ் அமைத்துத் தருகிறார்கள். சர்க்கார் அதிகமாக அவைகளை வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது சென்னையிலே நடைபெறுகிற தொழிலாகும். எனது பகுதியிலுள்ள நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் அங்கு வேலை செய்கிறார்கள். அவர்கள் ரூ. 400, 500 என்று நல்ல சம்பளத்தைப் பெறுகிறார்கள். அத்தகைய நிறுவனத்தைச் சர்க்கார் ஊக்குவிக்க வேண்டும். இது அகில உலகப் புகழ்பெற்ற ஸ்தாபனமாகும். மேலும் ஈஸ்வரன் எஞ்ஜினிரிங் இண்டஸ்ட்ரீஸ் டிரான்ஸ்பார்மர்களைச் செய்து வருகிறது. இதற்கு மகாராஷ்டிரத்தில் நல்ல கிராக்கி இருந்து வந்தது. ஆனால் இப்போது தங்கள் மாநிலத்தில் தயாராகும் டிரான்ஸ்பார்மர்கள் தரக்குறைவாக இருந்தாலும் மகாராஷ்டிர அரசு அவர்கள் மாநிலத்தில் தயாராகும் பொருள்களைத்தான் வாங்குகிறார்கள். அந்த எண்ணம் நமக்கும் வரவேண்டும். அப்பொழுதுதான் நம் மாநில தொழில்வளம் சிறப்படையும்.

இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் அவர்களுக்கு ஒதுக்கி கொடுத்த நிலங்களை உரிமை செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்து கொடுத்தால், அந்த நிலங்களை விற்றுவிடுவார்களோ, அல்லது வேறு காரியத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்வார்களோ என்று ஐயப்படலாம். நாலைந்து லட்சம் செலவு செய்து கட்டிடம் கட்டியபிறகு அதை வேறு ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே நிலத்தைக் கிரயம் செய்து கொடுத்தால் நல்ல முறையில் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

பொது நிறுவனங்களில் கம்யூனிஸ்ட் நண்பர்களும் யூனியன் தலைவர்களாக இருக்கிறார்கள். தொழிற்சங்கத் தலைவர்களைக்கூட நிர்வாக அமைப்பிலே சேர்க்க முடியுமானால் நல்லது. என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், இந்த நிர்வாக அமைப்பிலே சில நான்-அபிஷியல்களையும் சேர்த்து நிர்வாகம் சீராகவும், லாபகரமாகவும் இயங்க வழிவகை செய்ய வேண்டும். பொதுத்துறையில் ஒரு தொழிலை ஆரம்பிக்கும்

போது, தொழிலாளர்களேயும் பங்குதாரர்களாக சேர்த்துக் கொள்ளவேண்டும். தொழிற்சாலேயில் வருமானத்திற்கேற்றவாறு சம்பளம், போனஸ் கொடுக்கும் நிலேயை ஏற்படுத்தவேண்டும். இதை ஒரு எடுத்துக்காட்டாக நடத்த வேண்டும். அரசியல் கட்சித் தலேவர்கள் தொழிற்சங்கத்திலிருந்து கொண்டு நன்மை செய்வதாக இல்லாமல் இருந்தால் நிச்சயமாக அவர்கள் வெளியேற்றப்படுவார்கள். அதனுல் ஸ்டிரைக் போன்ற தொந்தரவுகளும் சர்க்காருக்குக் குறையும். ஏற்கனவே கொடுத்திருக்கிற ஸ்பிரிட், கோட்டா ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் போன்றவைகளே அமைச்சர் அவர்கள் கணக்கெடுத்து ஒரு கமிட்டியைப் போட்டு நடத்தினுல் உற்பத்திப் பொருள்கள் அதிகரிக்க ஏதுவாகும். அதனுல் விலேவாசியும் குறையும், முன்பு 2 ரூபாய்க்குக் கிடைத்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டம்ளர் இப்பொழுது 6 ரூபாய் ஆகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர் தலேமை.)

இதற்கு முழுப் பொறுப்பு கடந்த இருபதாண்டு காலமாக இருந்து வந்த காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத்தைச் சேர்ந்ததாகும். அது நாட்டையே குட்டிச்சுவராக்கி விட்டது என்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. என். மருதாசலம் : உதவி சபாநாயகர் அவர்களே, தொழில் துறை மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எல்லா உறுப்பினர்களுமே நமது மாநிலத்தில் தொழில் வளரவேண்டும் என்பதில் அக்கறை உடையவர்களாக இருக்கிருர்கள். புதிய ஆலேகளேத் திறக்க வேண்டும், ஓடிக்கொண்டிருக்கிற ஆலேகள் மூடப்படாமல் இருப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று பேசுகின்றேம். அப்படிப் பேசுகின்றபோதே சிலர் தொழில்களே மூடிக்கொண்டு வருகிருர்கள். கோவையில் வேளண்டுப்பாளேயம் என்ற இடத்தில் ஓடிக்கொண்டிருந்த ரப்பர் பாக்டரியை மூடி ஒரு மாதம் ஆயிற்று. அதைப்பற்றி லேபர் ஆபீசரிடம் முறையிட்டுக்கொண்டோம். மந்திரியிடமும் தெரிவித்திருக்கிருர்கள். லேபர் ஆபீசர் அந்த பாக்டரி முதலாளியைக் கூப்பிட்டால் வருவது இல்லே. லேபர் ஆபீசர் பஞ்சாயத்து பண்ணுகிற மாதிரிதான். அவருக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது. அவர் கூப்பிட்டால் முதலாளி வந்தாலும் வரலாம், வராமலும் இருக்கலாம். இப்படிப்பட்ட நிலேயில் எதற்காக சம்பளம் கொடுத்து ஒரு அதிகாரியை வைத்திருக்க வேண்டும். இவர்களால் தொழிலாளர்களுக்கு ஏதாவது நன்மை உண்டா என்றுல் இல்லே. சட்டத்தைத் திருத்தி அவர்களுக்கு முதலாளிகள் பயப்படும்படி செய்ய வேண்டும். இல்லே என்றுல் இன்றைக்குப் பல இடங்களில் இந்த அதிகாரிகள் முதலாளிகளே அணேத்துக் கொண்டுதான் போகிருர்கள். முதலாளிகளுக்குத்தான் இவர்களால் லாபம் ஏற்படுகிறது. தொழிலாளர்களுக்கு நன்மை இல்லே என்பது என் கருத்து.

மில் முதலாளிகளே எடுத்துக் கொண்டால், தங்களுக்கு நஷ்டம் என்று அவர்கள் சொல்கிருர்கள். அந்த நஷ்டத்திற்குக் காரணம் என்ன ? மில் முதலாளிகள் அந்த ஸ்தாபனத்தின் மானேஜிங் டைரெக்டர் என்று பணியாற்றுகிற நேரத்தில் அந்த மில்லின் பணத்தை எடுத்தே எவ்வளவு தன் பெயரில் புதிதாக சிறு தொழில்களே ஆரம்பித்துக்கொண்டிருக்கிருர்கள் என்று பார்க்க வேண்டும். இதை நஷ்டப்படுத்தி விடுகிருர்கள். ஆனுல் தன் சொந்தப் பெயரில் புது தொழில்களே ஆரம்பித்துக்கொண்டு விடுகிருர்கள். இப்படிப்பட்டவர்களுடைய சொத்தை பறிமுதல் செய்ய வேண்டும்.

அதேபோல தொழிலாளர்கள் தங்களுடைய இன்ஷூரன்ஸ் நிதிக்காகப் பணம் கொடுக்கிருர்கள். அதோடு மில் நிர்வாகஸ்தர்கள் போடவேண்டிய தொகையைப் போட்டு அதை அரசாங்கத்தில் கட்டவேண்டும். அப்படிச் கட்டாமல் முதலாளிகளிடமே தேங்கி இருக்கக்கூடிய பணம் ஒரு கோடிக்கு மேலேயே இருக்கும். அப்படிப்பட்ட முதலாளிகளின் பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லே, அரசாங்கம். மற்ற மாநிலங்களில்

இப்படி இன்ஷூரன்ஸ் தொகையை உபயோகித்துக்கொள்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல இங்கும் கண்டிப்பாக எடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஒவ்வொரு மாதமும் 7 ஆம் தேதி, 10 ஆம் தேதி என்பதாக இந்த தினத்திற்குள் சம்பளப் பட்டுவாடா செய்துவிடப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆயினும் மாதக் கணக்கில் சம்பளம் கொடுக்காத முதலாளிகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முதலாளிகளின் பேரிலும் நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. இன்று மில்கள் சாத்தப்படுவதற்குக் காரணம் மில்களில் நஷ்டம் வருகிறது என்பது ஒன்றுமே இல்லை. மானேஜிங் டைரெக்டர்கள் லாபத்தில் பல உப தொழில்களை தங்கள் பெயரில் ஆரம்பித்துக்கொண்டு விடுவது தான். இதை அரசு பரிசீலனை செய்து அந்த உப தொழில்களைப் பறிமுதல் செய்யுங்கள். மில்லைத் திறந்து ஓட்டுவதற்கு இப்படி அவர்களுடைய உப தொழில்களை, சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டும் என்பதற்கு மத்திய சர்க்கார் சட்டம் குறுக்கிடுகிறது என்றால் அதை எதிர்த்துப் போராடுவோம். கோவை தொழிலாளர்களின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக அந்தப் போராட்டத்தில் நாங்கள் எல்லாம் கலந்து கொண்டு முழு ஒத்துழைப்பையும் தருகிறோம் என்று தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்று நமது தொழில் துறை இண்டஸ்ட்ரியல் டெவலெப்மெண்டு கார்ப்பரேஷன், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் என்பதாக இரண்டு வகையாகப் பிரிந்து வேலை செய்கின்றது. இன்று நம்முடைய தொழில் இலாகாவை எடுத்துப் பார்த்தால், மாவட்டத்திற்கு ஒரு அசிஸ்டெண்ட் டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரிஸ், இரண்டு மாவட்டத்திற்கு ஒரு ரீஜனல் டெபுடி டைரெக்டர் 3 மாவட்டத்திற்கு ஒரு கோவாப்ரேஷன் ஏ. டி., ஒவ்வொரு யூனிட்டிற்கும் ஒரு சூப்ரவைசர் என்பதாக எல்லாம் பலபேர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு பேர்களும் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. இப்படி தொழில் துறையை எடுத்துக் கொண்டால், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரி, பெரிய இண்டஸ்ட்ரி என்பதாக இரண்டு பிரிவுகள் அவற்றுக்குத் தனித்தனி ஆபீசர்கள் இப்படி இருக்க வேண்டியது அவசியம்தானா ? அவர்கள் வேலை செய்வதைக் கண்காணிப்பதற்கு ஒரு நான் அபிஷியல் போர்டாவது இருந்தால் நலமாக இருக்கும். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் சம்பந்தப்பட்ட வரையில் அப்படி இருப்பது பொது மக்களுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு உபயோகமாக இருக்கிறது. அதைப் போல இதற்கும் ஒன்று ஏற்படுத்த முயற்சிக்கலாம். அதோடு ரீ ஆர்கானிசேஷன் பற்றிச் சொல்கிறார்கள். ஏன் இந்த இரண்டு இலாக்காவையும் ஒன்றிணைத்து செம்மையாக நடைபெறச் செய்யக்கூடாது என்பதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டும். இரண்டுக்கும் தனித் தனியாக இவ்வளவு அதிகாரிகளைப் போட்டு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைச் சரியான முறையில் கண்காணிக்காது விடுவது நலம் அல்ல. இதை அரசு கவனிக்க வேண்டும்.

அதுபோல எனக்குத் தெரிந்து இன்னும் சில குறைபாடுகள் இருக்கின்றன. ஆக்டிவ் கார்பன் யூனிட் என்று வடலூரில் இருக்கிறது. அது லாபகரமாக இருக்கிறதா என்று தெரியவில்லை. அதைப் பரிசீலித்தாக வேண்டும் அதேபோல் டால்மியாபுரத்தில் மாடல் சிமிண்டு ப்ளாண்ட் யூனிட் இருக்கிறது. பல சிமிண்டு தொழிற்சாலைகள் மாநிலத்தில் ஏற்பட்ட பிறகு மாடல் சிமெண்ட் பிளாண்ட் யூனிட் என்று வைத்திருப்பதன் அவசியம் என்ன என்று தெரியவில்லை. அதோடு அதிகாரிகளை வெளிநாட்டுக்கு அனுப்புவதனால் என்ன பயன் ஏற்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. தொழில் துறையில் அனுபவம் உள்ளவர்களை வெறும் அதிகாரிகளை அனுப்பாது — எக்ஸ்பர்ட்ஸ் இன் இண்டஸ்ட்ரி — அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1969 மார்ச் 11] [திரு. வ. ஆர். சுப்பையா முதலியார்]

சாதாரணமாக எடுத்துக் கொண்டால் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸிலே உற்பத்தியாகக் கூடிய சாமான்கள் அதிக விலைக்கு விற்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்குப் பல சலுகைகள் கொடுக்கப்படுகிற பொழுது ஏன் அப்படிப்பட்ட சாமான்களுக்கு அதிக விலை என்று தெரிய வில்லை. அவற்றை வாங்கக்கூடியது சர்க்கார் தான். சர்க்காரே வாங்குவ தால் ஒரு புத்தகத்திலிருந்து இன்னொரு புத்தகத்திற்கு மாற்றப்படுகிறது அவ்வளவுதான். இதனால் பொது மக்களுடைய பணம்தான் அனாவசியமாக இழப்பாகிறது. ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸுக்குப் பலவித மான சலுகைகள் தரப்படுகின்றன. அப்படியிருக்கும் பொழுது உற்பத்தி விலையை ஏன் கூட்ட வேண்டும். அந்தச் சாமான்கள் ஏன் ஓப்பன் மார்க் கட்டில் வரமுடியாமல் போய்விடுகிறது. ஓப்பன் மார்க்கட்டிலே வந்தாலும் வாங்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த பட்ஜெட்டிலே $19\frac{1}{2}$ கோடி ரூபாய் வரை நஷ்டத்தில் துண்டு விழக்கூடிய நிலைமையை வைத்துக்கொண் டிருக்கிறோம். இரண்டு இலாகாக்கள், பல அதிகாரிகள், இப்படி வைத்துக் கொண்டு நடத்தினாலும் தொழிலும் அபிவிருத்தி அடையவில்லை, மக்க ளுக்கும் அது பிரயோஜனப்படவில்லை. எனவே இதில் அரசாங்கம் ஊன்றி கவனஞ் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பி. ப. 12-30

அடுத்தபடியாகப் பார்த்தால், இந்த கார்பென்டெரி, பிளாக்ஸ்மித் யூனிட்டுகள் இருந்தன. அவற்றிற்காகப் பணம் ஒதுக்கப்பட்டது. இப் பொழுது அவை யெல்லாம் மூடப்பட்டு விட்டன. அந்த இயந்திரங்கள் எல்லாம் துருப்பிடித்துப் போய்விட்டன. இதனால் எவ்வளவு பணம் விரய மாகிறது ? இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டின் மேற்பார்வையிலே இருந்தது தான். எனவே அந்த கார்பென்டெரி, பிளாக் ஸ்மித் யூனிட்டுகளின் மெஷின்களை உடனடியாக விற்கவோ அல்லது நம்முடைய இலாகா விலேயே இணைத்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இண்டஸ்ட்ரியல் யூனிட்டு கோவில்பட்டியிலே இருக்கிறது. அது மூடப் பட்டுவிட்டது. அதை வாடகைக்கு அடுத்த இலாகாவுக்குக் கொடுத்தால் லாபகரமாக இருக்கும். ஆயிரக் கணக்கான ரூபாய் செலவழித்தும் இன்று மூடப்படக் கூடிய நிலைமை யிருந்தால் நல்லதல்ல. திறந்துவிட்டு வாட கைக்கு விட்டால் நஷ்டம் இல்லாமல் இருக்கும். அன்எக்கனாமிக் யூனிட்டு கள் சில இருக்கின்றன. அதையும் நன்றாக யோசித்துப் பார்த்து மேற் கொண்டு நஷ்டத்தோடு நடத்தாமல் நிறுத்திவிட்டால் சிக்கல்கள் ஏற்படாத வாய்ப்பு இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு எம். சண்முகம் : தலைவர் அவர்களே, தொழில் வள மானியக் கோரிக்கையின் மீது அதை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களைத் தெரி வித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாட்டில் தொழில் வளம் அதிகரித் தால் தான் மக்களிடத்திலே பொருளாதாரத் துறை வளம் பெறுவதற்கு வழிவகை உண்டு என்று சொன்னால் மிகையாகாது. கடந்த இருபது ஆண்டுக் காலத்திலே தொழில் வளத்திலே, கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு பல திட்டங்கள் வகுத்து பெருந் தொழிற்சாலைகளைத் தொழிலதிபர்கள் நடத்துவதற்கு வழிவகைகள் செய்திருந்தாலும் கூட பெரும்பாலும் நாட்டிலே இருக்கிற ஆறில் ஐந்து பங்கு மக்கள் வாழும் கிராமப்பகுதிகளில் உள்ள மக்கள் பொருளாதாரத் துறையில் வளரக்கூடிய வகையில் அது பயன்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே நம் நாட்டு மக்களில் பெருமபாலானவர் பொருளாதாரத் துறையிலே வளமுறுவதற்குக் கிராமங் களிலே சிறு அளவு தொழில்கள் என்ன என்ன செய்ய முடியுமோ, அவற் றைச் செய்வதிலே கவனம் செலுத்தினால் ஒழிய பொருளாதார வளம் ஏற்படாது. கிராமப் பகுதிகளிலே பெரும் பகுதியாக வாழக்கூடியவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களே. அவர்கள் விளைபொருள்களைக் கொண்டு அவற்றை விற்று பொருளாதாரத் துறையை வளர்த்துக் கொள்வதற்கு முடியாத நிலைமை இருந்து வருவது என்பது நாம் கண்கூடாகப் பார்க்கிற விஷயம். எனவே பொருளாதாரத் துறையிலே அவர்கள் வளம் பெறுவதற்கு தொழில் துறையில் உள்ள வளத்தை நாம் பெருக்க வழி வகை செய்ய வேண்டும். விவசாயத்தின் மூலம் உற்பத்தியாகும் பொருள்

களை உப பொருள்களாக மாற்றி விற்பதற்கு ஏற்ற வகையில் சிறு சிறு அளவு தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். அதற்கான வழியிலே நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டும். அப்படி விளைபொருளை உப பொருளாக்கி விற்பதால் அவர்களுடைய பொருளாதாரத் துறை இயற்கையாகவே வளம் அடைவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே உபபொருள்களை உற்பத்தி செய்வதற்கேற்ற முறையிலே கிராமங்களிலே சிறு அளவு தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

பொருளாதாரத் துறை அபிவிருத்தி அடைவது மட்டும் அல்ல, அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் குடும்பங்களிலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தினால் கஷ்டப்படுகின்ற நிலைமை மாறி கிராம மக்கள் ஓரளவு தொழிலைப் பெறுவதற்கு நாம் வகை செய்கிறோம். அவர்கள் நகரப் புறங்களிலே வேலை தேடி சுற்றிக்கொண்டு அலைவதை மாற்றி கிராமப் புறங்களிலே தொழில் செய்யக் கூடிய முறையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் முடியும். கிராமப் பகுதிகளிலே விவசாயிகளுடைய வளம் பெருவதற்கு திட்டங்கள் போட வேண்டும். அந்த வகையிலே கிராமங்களிலே சிறு அளவு தொழில்களையும் ஆரம்பிக்க வேண்டும். சிறு அளவு தொழில்களை வளம்பெறச் செய்வதற்கு தற்போது அரசாங்கத்திலே உள்ள தொழில் இலாகாவினர் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் கூறினார்கள் அதிலே கவனம் செலுத்தவில்லையென்று. எனவே இன்னும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் கோவாப்ரேடிவ் பாங்க் என்று அமைக்கப்பட்டு அதன் மூலம் உதவிவருவது தெரிந்ததே. அந்த முறையிலே கூட்டுறவுத் துறையில் பண உதவி செய்யப்படுகிறது. கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தப்பட்ட தொழில்கள் எல்லாம் பெரும் பகுதி அதிகப் பலன் தரக்கூடிய அளவிலே தொழில்கள் விருத்தியான முறையிலே நடைபெறுகின்ற நிலைமையைக் காணமுடியாது. அதனால்தான் குறை இருக்கிறது என்பதை தொழில்துறை அதிகாரிகள் பார்த்து அதிலே கவனஞ் செலுத்தி அதை அபிவிருத்தி செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். நாம் செய்கின்ற உதவி நல்ல பலனை அளிக்கக் கூடிய வகையில் இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். உதாரணமாக இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேடிவ் பாங்க் மூலமாக சேலம் மாவட்டத்திலே டீஹைட்ரேட்டட் கேஸ்டராயில் இண்டஸ்ட்ரி நிறுவுவதற்கு $1\frac{1}{2}$ லட்சத்திற்கு ரூபாய் எல்லாம் கொடுத்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் கூட துவக்கப்படாமல் இருந்து வருகிறது. அந்த நிதியை உரிமையாளர்கள் எதற்காகப் பயன்படுத்தினார்கள் என்பதுகூட தெரிந்துகொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் தொழில் துறை இலாகாவினர் கவனம் செலுத்தி அவற்றை திறப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அந்தத் தொழிலைத் திறப்பதற்கு வழியுண்டா என்றால் கொடுத்த பணத்தை ஈடு செய்யக் கூடிய அளவுக்குச் சொத்து இரண்டு லட்சத்திற்கு மேலே இருக்கிறது என்று பதில் சொல்வது சரியாகாது. விழுப்புரத்திலே வனஸ்பதி தொழிற்சாலைக்காக 50 லட்ச ரூபாய் முதலீடு கொடுத்து 15 வருஷங்களுக்கு மேல் ஆகியும் கூட இன்னும் வேலைசெய்யாமல் இருந்து வருகிறது. அதனுடைய உரிமையாளர் இறந்துவிட்ட காரணத்தால், அவருடைய குடும்பத்தார் மேற்கொண்டு நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை அரசே ஏற்று நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிடாகம் என்ற கிராமத்தில் கைமுறைக் காகிதத் தொழிற்சாலை நடைபெற்று வருகிறது. அதற்குப் போதுமான அளவு நிதியுதவி அளித்தால்தான் அது நல்ல முறையில் நடைபெற முடியும். அது நல்ல முறையில் வளருவதற்கான ஆதாரங்கள் இருப்பதால், அதற்கு வேண்டிய உதவியை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, on behalf of the Swatantra Party we have given two cut-motions to the two Demands and in support of the cut-motions I wish to make the following observations.

Firstly, I request this Government to finalise the matter with regard to Salem Pelletisation Plant. It was only a year ago that I had the unique honour and privilege to make a statement for the first time on the floor of the House with regard to Pelletisation Plant. Subsequently I have suggested to the Government that instead of wasting time we should concentrate on pelletisation and we could then send the billets to Japan. Then our distinguished Chief Minister at that time, the late Anna called me and said that it was brilliant idea and that he would like to pursue the same. So, we belonging to Swatantra party are glad that a very realistic stand has at last been taken by this Government with regard to Salem Steel Plant. In addition I want to make one more observation. We could also have a Pig Iron plant of 1000 tonnes. It need not be very big. We have got near Sandur, in Mysore State, a Pig Iron Plant wherein by electrolytic process, by electrolysis, they are making pig iron. I understand that it will be of very high purity. That pig iron can be used for several purposes, and it can also be exported. This can be the basis for alloy steel production. I think our Industries Minister, who is very energetic, will try to implement the same.

Coming to S.S.I. (Small-scale Industries Corporation) I request the Hon. Minister to start small-scale industries which will have short gestation period. The 2½ years that the D.M.K. Government still have, should be used to start many such industries so that when they go in for next elections in 1972, they will have a neat record to say to the people. They can start quick-yielding small-scale industries with short gestation period.

The biggest problem facing the Coimbatore textile mills should be properly met by all the parties meeting together and taking a nationalistic view and not a partisan view. It is not a question of politics between the D.M.K. and Congress, or between Communists and other parties. All must take a nationalistic view, sort out the difficulties and arrive at a solution. It is not a question of labour and management or between Centre and State. It is not a question whether the Centre is going to waive any tax. Let us for argument sake assume that the Centre will waive certain taxes. Let us for arguments. sake think that the State Government also will waive certain taxes. Let us for argument's sake assume that labour is prepared to forego a little amount of bonus. Even then, the problem will be there. The real problem is there is no diversification. Most of us are aware that college students and lecturers have taken to Terrylene and Terrycot. Number of ,mills had closed in Coimbatore, Ahamedabad, etc. and there had been strikes. But still we do not find any effect in the market. If you go to the market, you can get any cloth you want. It is because there had been over-production. It is a national disaster. Inspite of all these closure of mills, how is it that there is no shortage of cloth in the market. If you go to the bazaar, you can get any cloth you want. This shows that over-production is not the miracle to solve this problem. You have to remember the fact that people have begun to use

different kinds of cloth. The only solution is diversification. I think that a proper committee should be appointed to find out how best the diversification could be carried out.

Next I come to the petro-chemical complex, in our State. There will be a number of by-products which will come out. We are going to have a refinery also. We may have a fertiliser plant also. So we will have a number of wastes, petro-chemical wastes, which will be useful for many medical firms to manufacture some chemicals they may require. A proper assaying of the possibility of improving the petro-chemical complex may be done by the Industries Department.

We must have an industrial complex for manufacture and servicing of nuclear reactor equipment. I want to state that a few months ago, I wrote a letter to the Hon. Minister for Education who was good enough to take it up seriously. Unfortunately afterwards I received a laconic reply from the department. Let us not go into controversy of Centre and State. What is required is materials for manufacture of nuclear reactor equipment. These materials can be manufactured here itslef. I will give an example. A tender notification has been issued by the Bhabha Atomic Research Centre, Bombay for fabricating and supply of Fuel Charging Machine carriages and cable carts. The value is expected to be around Rs. 85 lakhs. These equipments are required for Rajasthan and Kalpakkam power projects. It is very reliably understood that the Atomic Energy Establishment authorities are very keen on having all these equipments fabricated in India, thus saving foreign exchange and also building up local technical base for such sophisticated equipment and machinery. The Madras Government is having a net work of production units with very well manned engineers. These units can definitely undertake the manufacture of such units required by the Bhabha Atomic Research Centre. Foreign trained engineers are also employed in these Units, functioning in the Madras State Small scale Industries Corporation Ltd. This is a fully owned State Government subsidiary. I wish the Small Scale Indutries Corporation should go in tor manufactuing not only bolts and nuts found in Wall-tax road but that they should go in for sophisticated, challenging though complicated jobs. The materials required for Atomic Research stations at Rajasthan and Kalpakkam and which have been published in the tender notification should be taken note of by the State Industries Corportion and necessary steps taken to manufacture those items. They should fully utilise the installed capacity which is at present not fully utilised. The organisation is having 64 units having the finest of the machines. It has a turnover capability of nearly Rs. 20 crores. But according to me the actual turnover is only Rs. 5 crores. The entire organisation is controlled by one Managing Director assisted by a Production Manager and a few Deputy Managers stationed in different parts of the State. This does not provide efficient management for the following reasons :—

(1) The working level gap between top management and the lower cadre at the various units are such that the latter is unable

to assert itself in genuine cases while the top is sitting far away from the actual problem.

(2) The Unit Officers are low paid compared to their counterparts in a private factory and yet their responsibility is more while authority is minimum.

(3) Even for minor problems, the Unit Officer for example from Tirunelveli will have to rush to the top man for guidance, causing not only delay but confusion resulting in the loss of production.

(4) There is no bonus or incentive given by management for improving production.

These reasons should be taken note of by Government. Further the present bureaucratic management has no stake in this organisation nor has it any interest. Small-scale industry is tending to become a farce where really big industrialists in the name of small-scale industry get all the benefits of permit-licence-quota and this has been very clearly explained by my distinguished friend Thiru M. R. Kannan. Big industrialists get rentals in the industrial estates at comfortable rates thus denying a genuine small-scale industrialist a fair chance and opportunity to serve the State. I believe, right now, so many units in industrial estates have been cornered and are being used as godowns by big industrialists in the garb of small-scale industrialists. This is a serious affair. I am sure the Hon. Minister will give sufficient attention to this.

The present Ministry should review all these from a fresh angle and remove the cobwebs that have accrued for the past two decades. Otherwise this D.M.K. Government will have to pay heavily for the momentum of avalanche, of intrigue, confusion, and indecision started nearly ten years ago. What is the final solution ? Set up a committee of half a dozen competent men to submit a report within three months. Within three months they must submit their report. Let them make a thorough analysis of the working of the organisation and streamline the whole thing. If that is done I may assure the House that the turnover will be increased to at least four times to what it is today. Let the Corporation take up challenging jobs with an attempt to earn valuable foreign exchange instead of competing in conventional items like bolts, nuts, doors, grills, etc. There is so much possibility for engineers as well as production units.

We should constitute an export cell. We should think of export not only in the filed of tools. etc., but also with regard to leather. I know there was a lot of scandal with regard to the previous Ministry. Leather is an important product and it should be properly exploited. We should have an independent directorate in Madras for leather. There is good scope ahead for finished leather garment. Other items, like press tools, forgings, sheet metal work and finished and semi-finished castings can also be thought of for the purpose of export.

Lastly I come to one or two points. With regard to industrial education, I am sorry to say that this State does not have a good base for industrial education. We do not have for instance scope for education in nuclear science. Hereafter the most lucrative, the most paying and the most job-giving is going to be the departments utilising nuclear science. We should have nuclear science engineering, we should have electronic engineering. To study electronic engineering students from our State have to go to other States. This is a very important point about which we must think.

There is a report called the Babha Committee Report on Electronic Industry. I only hope and trust that our departmental heads would have gone through it and, if they have not gone through it, I am sure our Minister will see that they read it and explore the possibility of etabilishing electronic industries. So far electronic industries are centred round Delhi, Bombay and Bangalore.

With regard to Coimbatore textile mills, I have one request to make to this Government. Let us form a committee—let us forget politics—and see which are the mills whose production could be diversified. For argument's sake let us take that this Government itself takes over the mills. There is a lot of pressure from diffierent quarters for the Government taking over the mills. The Government cannot allow the unemployed persons to rot. The only solution is to take to new lines and see whether it will not be possible to diversify their production. There is a demand for nylon, terrylene and other types of cloth. Cloth of this type can be produced. I am quite sure that there will be a realistic appraisal of the problem and I have full faith that this Government will reach a correct decision. Money is being pumped into the Fourth Five-Year Plan. So far as Tamil Nadu is concerned, we have very brilliant scope. If the departments are properly toned up and if my suggestions are accepted, the Small Scale Industries Corporation run by the Government will come out with a clean record and give a profit or at least wipe out the deficit to a certain extent.

Thank you, Sir.

***திரு. மு. ச. சிவசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் துறை மானியத்தின்மீது நான் ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். இதுவரை பேசிய உறுப்பினர்கள் பலரும் தமிழக அரசு அமைந்ததற்குப் பின்னால் தொழில் துறையில் அபிவிருத்தி இல்லை, தென்னகத்தில் பல நூற்பாலைகள் மூடிக் கிடக்கின்றன, அவைகளைத் திறப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அப்படி அவை மூடிக் கிடப்பதற்குக் காரணம் எல்லாம் தமிழக அரசுதான் என்ற தோரணையில் எதிர் கட்சியில் உள்ள பல உறுப்பினர்கள் பேசினார்கள். தமிழக அரசு அமைந்ததற்குப் பின்னால் தொழில் துறை உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதை பல புள்ளி விவரங்கள் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. 1966-ம் ஆண்டு உற்பத்தியான பொருள்களின் மதிப்பையும் 1968-ம் ஆண்டில் தமிழகத்திலுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தியான பொருள்களின் மதிப்பையும் பார்த்தால் தமிழக அரசு அமைந்ததற்குப் பின்னால் தொழில் உற்பத்தியில் அதிகப்படியான முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

1969 மார்ச் 11] [திரு. மு. ச. சிவசாமி]

உதாரணத்திற்குக் கூறவேண்டுமென்றால் வார்ப்பட உற்பத்தி 1966-ஐ விட 876 டன் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. காஸ்டிக் சோடாவை எடுத்துக் கொண்டால் 62,232 டன் 1966-ம் ஆண்டை விட சென்ற ஆண்டு அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது. சிமெண்டை எடுத்துக் கொண்டால் 102,573 டன்கள் அதிகமாக நாம் உற்பத்தி செய்திருக்கிறோம். இரசாயன உரத்தை எடுத்துக் கொண்டால் 13,809 டன் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். கந்தக அமிலத்தை எடுத்துக் கொண்டால் 12,294 டன் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். பஸ் பாடி கட்டுகிற தொழிலை எடுத்துக் கொண்டால் 1966-ஐ விட 1,158 எண்ணங்கள் அதிகப்படியாக நாம் தயார் செய்திருக்கிறோம். சைக்கிள் உற்பத்தியை எடுத்துக்கொண்டால் 1966-ஐ விட சென்ற ஆண்டு 1,134,745 அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். அதேபோல் பஸ்களுக்கு உபயோகப்படக் கூடிய டயர் உற்பத்தியை எடுத்துக் கொண்டால் 192,726 டயர்கள் 1966-ல் இருந்ததைவிட அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். பஸ் டயர்களுக்கு வேண்டிய ட்யூப் உற்பத்தியை எடுத்துக்கொண்டால் 1966-ஐ விட 328,207 அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். டீஸல் என்ஜினை எடுத்துக்கொண்டால் 4,183 டீஸல் என்ஜின்கள் 1966-ஐ விட அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம்.

இந்த அரசு அமைந்ததற்குப் பின்னால் தொழில் துறையில் நல்ல அபிவிருத்தி இல்லை, இந்த அரசு தொழில் துறையில் அதிகமாக ஒன்றும் செய்யவில்லை என்று கூறிய குற்றச்சாட்டுகளுக்கு, உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டும் என்று நம்புகிறேன். தமிழக அரசு அமைந்ததற்குப் பிறகு தொழில் துறையில், பல துறைகளில் 1966-ல் இருந்ததைவிட 1968-ல் உற்பத்தி அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபக மூட்ட விரும்புகிறேன். இந்த மன்றத்தில் பிரதானமாக பேசப்பட்ட பொருள், நூற்பாலைகள் தமிழகத்தில்தான் அதிகமாக மூடப்பட்டிருக்கின்றன, இவற்றிற்கு காரணம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பதவியேற்ற தமிழக அரசுதான் என்ற குற்றச்சாட்டுதான்.

நூற்பாலைகளுக்கும் மாநில அரசுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? தமிழகத்தில் ஒரு 12,000 கதிர் உள்ளதொரு நூற்பாலையை அமைக்க வேண்டுமென்றால் அந்த நூற்பாலையை அமைப்பதற்குரிய அனுமதியை கொடுக்கக்கூடிய அதிகாரம் மத்திய அரசினிடத்தில் இருக்கிறதா அல்லது மாநில அரசினிடத்தில் இருக்கிறதா என்று பார்த்தால் அந்த அதிகாரம் மத்திய அரசினிடத்தில்தான் இருக்கிறது. 10,000 கதிரை 15,000 கதிராக கூட்ட வேண்டுமென்றால், 15,000 கதிர்கள் கூட்டவேண்டு மென்றாலும் அதற்கும் மத்திய அரசினிடம்தான் அனுமதி பெறவேண்டியிருக்கிறது. சரி. ஒரு நூற்பாலையைத் துவங்கியாகிவிட்டது. அந்த நூற்பாலையிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் மத்திய அரசுக்குப் போகிறதா அல்லது மாநில அரசுக்குப் போகிறதா என்று பார்த்தால் எக்ஸைஸ் ட்யூட்டி மூலம் அத்தனை வருமானமும் மத்திய அரசுக்குத்தான் போகிறது. நூற்பாலைகளிலிருந்து கிடைக்கக்கூடிய வருமான வரி மத்திய அரசுக்குத் தான் போகிறது. மாநில அரசுக்கு இந்த நூற்பாலையிலிருந்து என்ன வருமானம் வருகிறது என்றால் 150 ரூபாய் தான் தொழில் வரி ஒன்று தான் கிடைக்கிறது. மில்லை அமைக்கக்கூடிய அதிகாரத்தை மத்திய அரசு வைத்துக் கொண்டு அந்த மில்லிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தையும் மத்திய அரசு வைத்துக்கொண்டு மாநில அரசுக்கு ஒன்றுமே கிடைப்பதில்லை. ஆகவே இது அரசியல் நோக்கத்தோடு சாட்டப்படுகிற குற்றச்சாட்டு என்றுதான் கூறுகிறேன்.

ஒரு மில்லை கட்டியாளுகிற அதிகாரத்தை மத்திய அரசு வைத்துக் கொண்டிருந்தாலும், அந்த மில்லிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தை மத்திய அரசு எடுத்துக் கொண்டிருந்தாலும்கூட இந்த நாட்டில் உள்ள ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில்தான் நமது அரசாங்கம் 256 லட்சம் ரூபாய்க்கு பாங்க் காரண்டி கொடுத்திருக்கிறது என்றால் இது மாநில அரசு செய்த

மிகப் பெரிய உதவி என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தென்னகத்தில் மட்டும், குறிப்பாக தமிழகத்தில் மட்டும் நூற்பாலைகள் மூடிக்கிடக்கக் காரணம் என்ன? எனக்கு முன்பு பேசிய திரு. ராமச்சந்திரன் அவர்கள் கூறியதுபோல் தென்னகத்தில் இருக்கிற மில்கள் பெரும்பான்மையும் ஸ்பின்னிங் மில்ஸ்தான், நூற்கக்கூடிய மில்கள்தான்.

உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களை எடுத்துக்கொண்

பி.ப. 1–00 டால் அங்கே இருக்கும் மில்கள் "காம்போஸிட் மில்கள்", அதாவது நூற்று அவர்களே நெய்யக்கூடிய மில்களாயிருக்கின்றன. அவர்களே நூலைத் தயார் செய்து நெய்யக்கூடிய வாய்ப்பு இருப்பதால் வட மாநிலங்களுக்கு நூல் அனுப்பும் ஏற்றுமதி குறைந்துவிட்டது. அந்தக் காரணம் மட்டும் மல்ல. இங்கே 22 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன என்றால் என்ன காரணம்? அந்த மில்களின் உரிமையாளர்கள் "பப்ளிக் லிமிடெட் கம்பெனிகள்" என்று வைத்துக் கொண்டு அதில் மேனேஜிங் டைரக்டர்களாகயிருப்பவர்கள், "பிரைவேட் லிமிடெட் கம்பெனி" என்று தங்களின் குடும்பங்களின் பெயரால் ஒரு நூற்பாலை தொடங்குகிறார்கள். அந்த மேனேஜிங் டைரக்டர் பப்ளிக் லிமிடெட் கம்பெனியிலுள்ள நயம் பஞ்சுகளை தங்கள் பிரைவேட் லிமிடெட் கம்பெனிக்கு, குடும்பங்களின் மில்களுக்கு அனுப்பிவிட்டு, அங்கே யிருக்கும் வேஸ்ட் காட்டனை தாங்கள் மேனேஜிங் டைரக்டராக உள்ள மில்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இப்படிச் செய்தால் நூல், நூற்பாலை எப்படி அபிவிருத்தி அடைய முடியும். தாங்கள் மேனேஜிங் டைரக்டராகயிருக்கும் மில்களில் வேலை பார்க்கும் கிளார்க்குகளையும், மேனேஜர்களையும் தங்களுடைய சொந்த மேனேஜ்மெண்டில் இருக்கும் மில்களின் நிர்வாகத்திலும், பொறுப்பிலும் ஒப்படைத்து மோசடி செய்கிறார்கள். அதுமட்டுமல்ல; பப்ளிக் லிமிடெட் மில்லில் தாங்கள் மேனேஜிங் டைரக்டராக இருக்கின்ற காரணத்தினால் மில்களின் ஸ்பேர் பார்ட்ஸ் சாமான்களையெல்லாம் பப்ளிக் லிமிடெட் மில்லின் பெயரால் வாங்கி தங்களுடைய சொந்த மில்களுக்கு மாற்றிக்கொண்டு விடுகிறார்கள். இப்படியிருந்தால் பப்ளிக் லிமிடெட் நூற்பாலைகள் மூடப்பட்டு கிடக்காமல் வே றென்ன செய்ய முடியும்? இவைகளைக் கவனிக்க மத்திய சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில அரசின்மீது ஒரேயடியாகக் குற்றம் சாட்டுவது தவறு என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தொழில் துறை பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நெல்லை மாவட்டம் நாங்குனேரியில் ரெட்கார்னெட் மணல் இருக்கிறது. அந்த உலோகத்திற்கு உலகத்திலும், வட இந்திய தொழிற்சாலைகளிலும் நல்ல கிராக்கி இருக்கிறது. இட அமைப்பு 150 அடி அகலத்தில் 4 மைல் நீளத்தில் இருக்கிறது. மைனிங் லீஸ் ஆக்ட்டின்படி 1 பங்கு அகலமும், 4 பங்கு நீளமும் இருந்தால்தான் அனுமதி கொடுக்கப்படும் என்றிருக்கிறது. 150 அடி அகலமுள்ள இடத்தில் மைனிங் லீஸ் ஆக்ட்டின்படி லைசென்ஸ் பெற்று நடத்த முடியாது. தமிழகத்திலுள்ள ரெட்கார்னெட் மணல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகவும், வடமாநிலங்களுக்கு ஏற்றுமதியாகவும் கூடிய சூழ்நிலையில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுது என்ன திருட்டுத்தனம் நடக்கிறது என்றால் பக்கத்திலேயுள்ள பட்டா நிலத்திற்கு லைசென்ஸ் வாங்கிக்கொண்டு, தங்களுடைய நிலத்தில் குவாரி செய்யாமல், சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் இருப்பதைத் திருட்டுத்தனமாக வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு செய்வதால் சட்டம் கெடுவதோடு சர்க்கார் வருமானமும் பாதிக்கப்படுகிறது. எனவே, இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று தொழில் துறை இயக்குநரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கோயில்பட்டி தாலுகாவில் வைப்பாற்றங்கரையில் ஆயிரக்கணக்கான டன் அளவில் Rutil e ore கிடைக்கிறது. நிறைய அளவிற்கு டிட்டேனியம் ஆக்ஸைடு தயார் செய்ய முடியும். இதில் தமிழக அரசு கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

1969 மார்ச் 11] [திரு. மு. ச. சிவசாமி]

தூத்துக்குடியில் மீன் இலாகாவில், இந்தியாவில் Agar Agar பற்றுக் குறையாக இருக்கும் நேரத்தில் வெளிநாடுகளுக்கு அகரகர் தயார் செய்து அனுப்பப் பேஸ் மட்டம் வரை கட்டிப் போட்டு விட்டார்கள். மூலப்பொருள் கள் கடலிலே ஏராளமாக இருக்கிறது. என்போன்ற வற்றுமதியாளர்கள் தூத்துக்குடி கடலிலேயுள்ள கடற்பாசியை எடுத்து ஜப்பானுக்கு அனுப்பி னால், அவர்கள் அதைக் கொண்டு அகரகர் தயார் செய்து அமெரிக்காவுக்கு அனுப்புகிறார்கள். தமிழக அரசு ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழிற்சாலை யின் வேலைகளை உடனடியாகப் பூர்த்தி செய்து விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த ஆண்டு பட்ஜெட் உரையில் உப்பு சம்பந்தமாக தொழிற்சாலை பற்றி கண்டிருக்கிறது, பணமும் ஒதுக்கியிருக்கிறது. உப்பு தொழில் நுட்ப ஆலோசகரைப்பற்றியும் கண்டிருக்கிறது. இதில் என்ன திருட்டுத் தனம் நடக்கிறது என்றால், உப்பு தொழில் நுட்ப ஆலோசகர் என்ற பதவி யை வகித்து வருபவர்கள், உப்பளங்கள் போடுவதற்கு லாயக்கான இடங் களைத் தெரிந்துகொண்டு, தங்கள் குடும்பங்களின் பெயரால் உள்ள கம்பெனி களுக்கு அந்த இடங்களைக் குத்தகைக்குத் தர வேண்டுமென்று மனுச் செய்திருக்கும் செய்தி எனக்குத் தெரிகிறது. இவைகளை யெல்லாம் சர்க்கார் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். தூத்துக்குடி பகுதியில் ஆண்டுக்கு 10 மாதங்கள் உப்பு உற்பத்தியாகக்கூடிய அளவிற்கு அங்கு தட்ப வெப்ப நிலை இருக் கிறது. அங்கே ஸ்டேட் ஸால்ட் டிரேடிங் கார்ப்பொரேஷனை அமைத்து, வீணாகக் கிடக்கும் நிலங்களை உப்பு உற்பத்திக்குக் கொண்டுவந்தால் சுனேட், ஜிப்ஸம், பொட்டசியம் குளோரைட் போன்றவைகளைத் தயாரிக்கும் சூழ்நிலை இருக்கிறது. இதில் தமிழக அரசு அதிகக் கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உரத் தொழிற்சாலைக்கு மனுச் செய்திருக்கிறோம். இப்பொழுதிருக்கும் நிலை என்னவென்றால், டாட்டா கம்பெனியார் 200 கோடி ரூபாய் மூல தனம் போட்டு வட இந்தியாவில் உரத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க முயற்சி எடுத்திருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது எடுத்திருக்கும் முயற் சிக்குப் பாதகமாக இருக்கும், தமிழக அரசுக்கு அனுமதி கொடுத்தால்; ஆகவே அனுமதி கொடுக்கக் கூடாது என்ற நிலை இருக்கிறது .அப்படி ஒரு தொழிற்சாலையை டெல்லியில் ஆரம்பிக்க இருக்கிறார்கள். எனவே, தமிழக அரசு போராடியாவது அந்தத் தூத்துக்குடி உரத் தொழிற் சாலைக்கு அனுமதி வாங்க ஆவன செய்ய வேண்டு மென்று கூறி இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் உதவி சபாநாயகரவர்களே, இப் பொழுது இருக்கும்படியான தொழில் மானியக்கோரிக்கையின்மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதிலே பல கட்சி அங்கத்தினர்கள் கலந்துகொண்டார்கள். வழக்கம்போல, ஆளும் கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருந் தார்கள். நாளாகநாளாக புத்தி திருந்துமோ என்று நான் நினைத்தேன். பழையமாதிரியே பழைய கதையையே பேசிக்கொண்டிருந்தார்கள். காங்கி ரஸ் குட்டிச்சுவராக்கிவிட்டது, நாங்கள் இரண்டு வருஷங்களிலே சாதித்து விட்டோம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்வதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இரண்டு வருஷங்களிலே என்னென்ன காரியத்தைச் செய்திருக்கிறோம் என்று சொன்னால் அரசியல் பண்பு இருப்பதாக நாங்கள் நினைத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் சொல்வதெல்லாம் என்ன, ரொம்ப வேகமாகச் சொல்கிறார்கள். 17 வருஷங்களாக குட்டிச்சுவர் ஆக்கிவிட்டார்கள், இரண்டு வருஷங்களாகத் தான் அற்புதமான காரியங்கள் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படியே வைத்துக்கொள்வோம். நான் ஒரு ஆலோசனை சொல்ல விரும்பு கிறேன். 1951-ஆம் வருஷத்திலிருந்து இண்டஸ்ட்ரியல் டெவலெப்மெண்ட் பற்றிய புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டது. 1951-ஆம் வருஷத்தில் 70 புள்ளியாக இருந்தது 1967-ஆம் வருஷத்தில் 240 புள்ளிவரைக்கும் ஆகி யிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்வது என்ன

வென்றால், இந்த நாட்டிலேயிருந்து வேண்டாம், வெளிநாட்டிலே உள்ள தொழில் நிபுணர்களைக் கொண்ட கமிட்டி நியமித்து அவர்களைக் கொண்டு வந்து காண்பித்து, அவர்கள் தமிழகத்திலே காங்கிரஸ் ஆட்சி செய்த காலத்துலே, 20 வருஷங்களிலே இங்கே எந்தவிதமான தொழிலும் நடக்கவில்லை, குட்டிச்சுவராக்கிவிட்டது, இந்த இரண்டு வருஷத்திலேதான் சிறப்பாக நடந்திருக்கிறது என்று நிபுணர்கள் சொன்னார்கள் என்றால் நான் அரசியிலிருந்தே விலகிக்கொள்ளத் தயாராகயிருக்கிறேன்.

எனவே, பொறுப்பற்ற தன்மையிலே பேசிக்கொண்டு, மலிவான விளம்பரத்திற்காகப் பேசிக்கொண்டு, பழைய அரசியல் கட்சிகளையும், இருக்கும் படியான வேலை செய்த அதிகாரிகளையும் தவறுகப் பேசிக்கொண்டும் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. மக்களின் பிரதிநிதிகளாகயிருந்து கொண்டு,பொறுப்பை உணர்ந்துதான் பேச வேண்டும். குட்டிச்சுவராக்கி விட்டார்கள், குட்டிச்சுவராக்கிவிட்டார்கள், என்று சொன்னால், சில அங்கத்தினர்கள் சொன்னதைப் போல, ஒன்றுமே வேலை செய்யாமல் இருந்து விட்டார்கள் என்றால், இப்பொழுது இருப்பது அவர்களுடைய அமைச்சரவை தானே ? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்க வேண்டியதுதானே, அப்படி எடுக்காமலிருக்கிறார்கள் என்பதற்காக இவர்களும் அவர்களுக்கு உளவாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சாட்ட முடியாதா ? தவறைச் செய்தவர்கள் மீது இவர்கள் அதிகாரத்திற்கு வந்தபிறகு அவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுத்து நடத்தவில்லை ? அதற்கு அவர்களும் உதவியாக, உளவாக இருக்கிறார்கள். என்ற குற்றச் சாட்டை ஏன் சாட்டக்கூடாது? மலிவான விளம்பரத்திற்காக, 17 வருஷங்களாக, 20 வருஷங்களாக காங்கிரஸ்காரர்கள் குட்டிச்சுவர் செய்துவிட்டார்கள் என்று சொல்லும்படியான குற்றச்சாட்டுக்கள், பொருத்தமற்ற, பொறுப்பில்லாத குற்றச்சாட்டுதானே தவிர, பொறுப்புள்ள குற்றச்சாட்டாக இருக்க முடியாது என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஒன்று நான் சொல்லுகிறேன், தமிழகத்திலே 20 வருஷ காங்கிரஸ் ஆட்சியிலே, சுதந்திரம் பெற்ற பிறகு எவ்வளவோ பிற்போக்காயிருந்த நிலையை, 70 புள்ளியாக இருந்ததை 240 புள்ளிகளாக கொண்டுவந்து நிறுத்திய பெருமை காங்கிரஸ் கட்சியைத்தான் சாரும். இவர்கள் வந்தவுடன் இந்த இரண்டு வருஷங்களில் என்ன சொல்லுகிறார்கள், மத்திய சர்க்காரைப் பாருங்கள், மத்திய சர்க்காரைப் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். மத்திய சர்க்காரைப் பாருங்கள் என்று சொன்னால் உங்களுக்கு என்ன வேலை என்று கேட்கிறேன். எல்லாவற்றையும் மத்திய சர்க்காரிடம் கொடுத்துவிட்டுப் போய் விடுங்களேன். மத்திய சர்க்கார் சொல்லும்படி செய்யச் சக்தியில்லை என்றால் ஓடிவிடுங்களேன், யார் வேண்டாமென்று சொல்லுகிறார்கள். இம்மாதிரியான நிலையில் பொறுப்பற்ற தன்மையிலே எல்லாவற்றிற்கும் மத்திய சர்க்கார், மத்திய சர்க்கார் என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்க வேண்டாம். அரசியல் நிர்ணயச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்குள் என்ன அதிகாரங்கள் சொல்லப்பட்டிருக்கிறதோ அதன்படி ஆட்சியை நடத்தி வந்தார்கள் என்றால் சரியாக இருக்கும். இப்பொழுது இருக்கும் படியான நிலையிலே இரண்டு வருஷங்களாக என்னென்ன புதிய திட்டங்களைச் சொன்னார்கள், சைக்கிள்கள் அதிகமாகப்போயிற்று என்று சொன்னார்கள்.

நீங்கள் வந்து லைசென்ஸ் கொடுத்தா சைக்கிள்கள் அதிகமாகி இருக்கின்றன ? 10, 15 வருஷத்திற்கு முன்னால் நாங்கள் திட்டம் போட்டோம், லைசென்ஸ் கொடுத்தோம், அதன் காரணமாக, 10,000, 20,000 மாகியது. 20,000—30,000 மாகியது. 30,000 இலட்சமாகி இருக்கலாம். வெளியிலே போய் மக்களிடத்திலே சொல்லிக்கொள்ளலாம், " பார்த்தீர்களா ? நாங்கள் செய்துவிட்டோம், செய்து விட்டோம், " என்று இங்கே மன்றத்திலே பொறுப்பான நிலையிலேதான் பேசவேண்டும்மென்று சொல்ல விரும்புகிறேன்.

பாரம்பரியத்தை எல்லாம் சொன்னார்கள். காங்கிரஸினுடைய பாரம்பரியத்தை நீங்கள் சொல்ல வேண்டாம். எங்களுக்குத் தெரியும்,

உங்களுடைய பாரம்பரியம், நீங்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபோது இட்டிலி கொண்டு வந்து காட்டின பாரம்பரியம் எனக்குத் தெரியும். இது மாதிரி எந்த சபையிலும் நடந்திருக்காது. இன்றைக்கு பொறுப்புள்ள பதவியிலிருப்பவர்கள் அன்றைக்கு இட்டிலியெல்லாம் கொண்டு வந்து காட்டினார்கள். ஏன், இரும்பைக் கொண்டு காட்டுவீர்கள், "பார்த்தீர்களா, நாங்கள் செய்த இரும்பை", என்று. உப்பைக் கொண்டு வந்து காட்டுங்கள், தூத்துக்குடியிலிருந்து எடுத்த உப்பு என்று. அதையும் காட்டினாலும் காட்டுவீர்கள். எங்களுடைய காங்கிரஸினுடைய பாரம்பரியம் மிகப் பெரிய பாரம்பரியம். அதை யாரும் மறுக்க முடியாது, அதை உலகமே அறியும். வெள்ளைக்காரனே அறிந்திருந்தானே, எங்களுடைய பாரம்பரியத்தைப்பற்றி. யாரிடம் இந்த ஆட்சியைக் கொடுத்தால் சரியாக நடக்கும் என்று அறிந்துதான், எங்கள் பாரம்பரியத்தைப் பார்த்து தானே கொடுத்தான். நீங்கள் அதைப்பற்றி பேசுவதானால் அது நன்றாக இருக்காது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீங்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபொழுது என்ன பொறுப்போடு நடந்து கொண்டீர்கள் என்று எங்களுக்குத் தெரியாதா? அதை யெல்லாம் விட்டுவிட்டு, இப்பொழுது இருக்கும்படியான நிலையிலே இந்த காரியத்தைச் செய்தால் மக்களுக்கு அதிகமாக சேவை செய்ய முடியும். அதிகமாக உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற நிலையில் காரியங்கள் செய்ய வேண்டும். தொழில் வளம் பெற்றால்தான் நாட்டிலே மக்கள் வாங்கும் சக்தி ஏறுமே தவிர, இருக்குமே தவிர, தொழில் வளம் பெறாத நாட்டில் மக்களிடத்திலே வாங்கும் சக்தி இருக்காது. இன்றைக்கு ஜனத்தொகை பெருகிக்கொண்டு வருகிறது. ஜனத்தொகை பெருகி வரும்படியான ஒரு சமயத்திலே, விஞ்ஞானம் வளரும்படியான ஒரு சமயத்திலே, நாம் எந்தத் திட்டத்தைப் போட்டால் மக்களுக்கு வேலை வாய்ப்புகளைக் கொடுக்க முடியுமோ அப்படிப்பட்ட திட்டங்களைப் போடவேண்டும். இந்தத் திட்டத்தைப் போட்டால் மக்களுக்கு வாங்கும் சக்தி அதிகமாகும் என்று சொல்வார்களானால் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இரண்டு வருஷத்திலே நாட்டிலே தொழில் மந்தம் இருக்கிறது என்பதை நாங்களும் ஏற்றுக்கொள்ளுகிறோம். இங்கு, தமிழ்நாட்டில் மட்டுமல்ல அகில இந்தியாவிலும் இருக்கும்படியான நிலை இருக்கிறது, அகில உலகத்திலும் இருக்கும்படியான நிலை இருக்கிறது. அந்த தொழில் மந்தம் எங்கும் இருக்கத்தான் செய்கிறது. அந்தத் தொழில் மந்தத்தை நிவர்த்தி செய்ய நாம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டோம். நாங்கள் இன்ன நடவடிக்கை எடுத்தோம் என்று அதைச் சொல்வீர்களானால் நாங்கள் ஏற்றுக்கொள்ளலாம்.

இதே நாட்டிலே இருக்கும் மாநில அரசு, நல்ல நிலையிலே நடவடிக்கை எல்லாம் எடுத்து, துரிதமாக, மிகவும் திறம்பட செயல்பட்டு வந்தது. அந்த நல்ல நிலையிலே இருந்து வந்த தமிழக அரசு ஏன் இன்றைக்கு பிற்போக்காகிவிட்டது. ஏன் இந்த பிரச்சினை தீர்க்கப்படவில்லை. நீங்கள் பதவி ஏற்ற பின்னர் எந்த பிரச்சினையையும் அணுகுவதற்குப் பயப்படுகிறீர்கள். நீங்கள் எந்தப் பிரச்சினையையும் அணுகவில்லை. காரணம் பயம். இதைத் தொட்டால் அவர்களுடைய மனது கெட்டு விடுமோ அதைத் தொட்டால் இவர்களுடைய மனது கெட்டு விடுமோ என்று பயப்படுகிறீர்கள். அந்தக் குற்றத்தைத்தான் நான் சாட்டுகிறேன். எதையும் நடத்துவதற்கு உங்களிடம் சீரான திட்டம் கிடையாது. தொழில் துறை அமைச்சர் அவர்கள், 10, 15 நாட்களுக்கு முன்னால் பேசியிருக்கிறார்கள். "தைரியமாக வாருங்கள், தொழில் திறக்க", என்று. அப்படியானால் இரண்டு ஆண்டுகளாக பயம் இருந்தது என்று ஒத்துக் கொள்ளப்படுகிறது. இவர்கள் வந்தவுடனே முதலீடு அபிவிருத்தி அடைந்திருக்குமானால், இப்பொழுது ஏன் கூப்பிடுகிறார்கள், "தைரியமாக வாருங்கள்," என்று. இவ்வளவு நாட்கள் "சாம்பில்" பார்த்திருக்கிறார்கள். தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன இரண்டு வருடத்திலே. இது அமைசசா அவாகளுககே தெரியும். ஸ்டிரைக், முன்னாலே காங்கிரஸ் காலத்திலே, எத்தனை நடந்தது, எத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இவர்கள் வந்து, தர்மப் பிரபுக்கள் வந்து,

இந்தக் காலத்திலே எத்தனை நாட்கள் தொழில்கள் சிறப்பான நடந்தன என்பதெல்லாம் தெரியும். 1966–67-லே 107 ஸ்ட்ரைக்குகள்தான் நடந்தன. 1967–68-லே 325 ஸ்ட்ரைக்குகள் நடந்தன. முன்னாலே ஆறு இலட்சம் மணி நேரங்கள் இழந்திருக்கிறார்கள். 1967–68-லே அதை விட 4 பங்கு அதிகமாக இழந்திருக்கிறார்கள் இவர்கள்.

நான் சொல்வது என்னவென்றால், எந்தப் பிரச்சினையையும் நேரடியாக அணுகி, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள வில்லை என்பதுதான். உதாரணமாக கோவையிலே உள்ள பஞ்சாலைகளை எடுத்துக்கொள்வோம். நாட்டிலே உள்ள பஞ்சாலைகளுக்கெல்லாம் நெருக்கடி இருந்தாலும் இந்தியாவில் எத்தனை ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன? அதிலே பாதி தமிழ்நாட்டிலே மூடப்பட்டிருக்கின்றன. அந்தப் பாதியிலே கோவையிலே, 26, 27 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதைத் திறப்பதற்கு எங்களுக்குப் பொறுப்பில்லை என்று சொல்லியிருக்கலாமே; மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள், அன்றே, மத்திய அரசே அந்த மில்களைத் திறந்துவிடுங்கள், எங்களுக்கு ஒன்றும் பொறுப்பு இல்லை," என்று சொல்லியிருக்கலாமே. அவர் திருச்சியிலே அர்த்த ராத்திரியிலே கையெழுத்துப் போட்டார். இதில் எங்களுக்கு ஒன்றுமில்லை. மத்திய சர்க்காரே கவனிக்கட்டும் என்று சொல்லியிருந்தால் ஒரு வரியிலே முடிந்திருக்கலாமே. இப்பொழுது இவர்கள் ஆலோசனை சொல்லவேண்டியதில்லை. லைசென்ஸ் கொடுப்பது மத்திய சர்க்கார், வரி வாங்குவது மத்திய சர்க்கார் என்று சொல்கிறார்கள். பூனை கண்ணை மூடினால் பூலோகம் இருண்டுவிடும் என்று சொல்வது பொறுத்தமற்ற வாதம். அப்படிச் சொல்வதானால், அன்று ஏன் கையெழுத்துப் போட்டார்? பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆகாயத்திலே பறந்து போய் உணவு அமைச்சரவர்கள் பணம் வாங்கி வந்தார் என்று பெருமையாகச் சொன்னார்கள். அதற்கொரு பத்திரிக்கை, பெரிதாகப் போடுவதற்கு. "பறந்து போனார் மேலே பார்த்தீர்களா? எங்களுடைய அரசு இப்படியெல்லாம் செய்தது என்று போடுகிறார்கள். ஆகாயத்தில் பறந்து போகாமல் நடந்தா போவார்கள்?

அதே கட்சியைச் சேர்ந்த, அல்லது அதே வீட்டிலுள்ளவர்கள் போட்டுள்ள துண்டு பிரசுரத்தைப் பாருங்கள். "விழிப்புற்ற தமிழர் சமுதாயம் இனி தாங்காது. வீணர்களின் வாய்வீச்சு இனி பலிக்காது. அண்ணாவின் ஆட்சி அடிமை ஆட்சி" ஒரு பிரசுரத்திலே இவ்வாறு போடப்பட்டுள்ளது. அதைப் போட்டவர்கள் நாம் தமிழர் கட்சி என்று போடப்பட்டிருக்கிறது. ஒழிந்து போயிற்று என்று நினைத்தார்கள். எந்த நிலையிலோ பதவிக்கு வந்தார்கள். "ஆலைகளைத் திறக்க அதிகாரமற்ற அரசே ஆட்சியை விட்டுக் கீழே இறங்கு" காங்கிரஸ்காரர்கள் போடவில்லை. இதை எல்லாம் போட்டு, "தனித் தமிழ்நாடு" என்று கேட்கிறார்கள். இந்த சர்க்கார் இந்த காரியத்திலே நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது, இது கையாலாகாத சர்க்கார் என்ற குற்றத்தை நான் சாட்டுகிறேன். "மூடிய மில்களைத் திற என்றால், அதிகாரமில்லை, நல்ல திட்டங்களைப் போடு என்றால், அதிகாரமில்லை, அதிகாரமில்லை, அதிகாரமில்லை என அலறும் அண்ணா ஆட்சியே அதிகாரமில்லாத உனக்கு ஆட்சி பீடம் எதற்கு?" காங்கிரஸ்காரன் போடவில்லை, நாம் தமிழர் கட்சிக்காரன் போட்டிருக்கிறான். "ஆட்சியை விட்டுக் கீழே இறங்கு அல்லது அதிகாரமனைத்தும் பெற்றிட சுதந்திரத் தமிழ்நாடு பிரகடனப்படுத்து" இந்தப் போக்கு வளர்ந்து கொண்டிருக்குமானால் (திரு கா. வேழேந்தன் குறுக்கீடு) அச்சடித்து நிலைப்படி முன்னாலே ஒட்டியிருக்கிறார்கள். இதையெல்லாம் கொடுக்கிறேன். "பிரஸ் இருக்கிறதா, அங்கு போய் பார்த்தீர்களா" என்றால், கிருபானந்த வாரியார் கையெழுத்துப்போட்டு உங்களுக்கு நேரிலே அனுப்பினாரா?" என்று கூட கேட்டீர்கள். ஆகா, பார்த்தீர்களா உங்களுடைய கட்சித் தோழர்கள்....
(திரு. கா. வேழவேந்தன்: அதைப் படிப்பதற்கு அனுமதி வாங்கியிருக்கிறாரா?) நான் படிப்பதற்காக வரவில்லை. இருக்கும்படியான நிலையைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. இதிலே இருக்கிறது, அதைச் சொல்

1969 மார்ச் 11] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

கிறேன். நீங்கள் புள்ளி விவரத்தைக் காட்டுகிறீர்கள், நான் இந்த விவரத்தை காட்டுகிறேன். வேண்டுமானால் சபாநாயகர் அவர்களுக்கு அனுப்பத் தயாராக இருக்கிறேன்

நூல் ஆலைகளை எடுத்துக்கொள்வோம். இங்கே 27 ஆலைகள் மூடப் பட்டிருக்கின்றன. மகாராஷ்டிராவிலே 12 ஆலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன மத்திய சர்க்கார், அங்கு ஒரு சலுகை, தமிழ்நாட்டிற்கு வேறு ஒரு சலுகை என்று கொடுக்கவில்லை. அங்கே என்ன சலுகை கொடுகப்படுகிறதோ அதேதான் எல்லா ராஜ்யங்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அதே சலுகை களை வைத்து மகாராஷ்டிரா 12 ஆலைகளை திறந்திருக்கிறார்கள். இன்னும் 6 மில்கள் திறக்கப் போவதாக பத்திரிகை வாயிலாக நாங்கள் அறிகிறோம். நீங்கள் ஏன் திறக்கவில்லை. அதைக் கேட்டால், ஒரு அங்கத்தினர் பேசினார், அதனால் 8 கோடி நஷ்டம் என்று. நான் கிராமத்திலே இருந்து வந்தாலும் எனக்குக் கொஞ்சம் புள்ளிவிவரக் எனக்குத்தெரியும். 12 மில்கள் இப்பொழுதுதான் திறந்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அதற்குள்ளே 8 கோடி ரூபாய் நஷ்டமா ? 10 நாள் ஆயிற்று அவற்றைத் திறந்து. அதற்குள் 8 கோடி ரூபாய் நஷ்டமா ? 12 மில்களைத் திறந்து விடலாமே 8 கோடி ரூபாயைக் கொண்டு. இது யானைக்கு அல்வா போட்ட கதையாக இருக்கிறது. நாமோ தவறு செய்கிறோம், அவர்கள் சக்தியைக் கூட பாராட்டாமல் 8 கோடி ரூபாய் நஷ்டம் என்று சொல்கிறார் கள். கனம் அங்கத்தினர் ஒருவர், இந்த 12 மில்லுக்கு 8 கோடி ரூபாய் நஷ்டம் என்று சொன்னார்கள். அப்பொழுது நான் ஆச்சரியப் பட்டேன் . . .

திரு. ஏ. எம். இ. ராஜா : தலைவர் அவர்களே, நான் பேசும்போது கூறியது, மராட்டிய மாநிலத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக நடை பெற்றுவரும், இந்தியா யுனைடெட் மில்ஸ் என்கிற ஆலைகள் ஐந்தை அரசு எடுத்து நடத்திவருகிறது, அதில் நட்டம் என்றேன். எதிர்க் கட்சித் தலைவர், தெரியாமலோ அல்லது தவறாகவோ நான் சொன்னதைப் புரிந்து கொள்ளாமல் சொல்லுகிறார்கள். மராட்டியத்திலே கடந்த மூன்று ஆண்டுகளாக மராட்டிய அரசு ஐந்து மில்களை இந்தியா யுனைடெட் மில்ஸ் என்கிற பெயரில் நடத்திவருகிறது. இந்த மூன்று ஆண்டில் நட்டம் ஏற்பட்டிருக்கிறது, அது சுமார் எட்டு கோடி என்று தான் குறிப்பிட்டேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : விளக்கத்திற்கு நன்றி. ஆகவே, இப்பொ ழுது எட்டு கோடி நஷ்டத்தில் மூடப்பட்டிருக்கிறது (குறுக்கீடு) ஐந்து மில்கள் நடத்தி லாபத்தில் நஷ்டமாக இருக்கலாம். (சிரிப்பு) பாலன்ஸ் ஷீட்டை வைத்துக் கொண்டு பார்த்தால் தெரியும். அப்படியே வைத்துக் கொள்ளலாம். இன்றைக்கு கோவையில் என்ன நடக்கிறது ? 45 மில்கள் நடைபெறுகின்றன. அவைகள் நூல்கள் விற்பனையாகின்றன. இரண்டு, மூன்று ஷிப்டிலிருந்து, நாலு ஷிப்டுக்கு மாற்றியிருக்கிறார்கள். 85 மில்களுடைய ப்ரொடக்ஷன் எவ்வளவோ அவ்வளவு இந்த 45 மில்களில் நடக்கிறது. 90 சதவிகிதம் நடக்கிறது. 25 மில்களோ, 27 மில்களோ மூடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன. அவர்கள் பழைய இயந்திரங்களையே வைத்துக் கொண்டு இருப்பதால், நடத்த முடியாத நிலைமை இருக்கலாம். நஷ்டம்.ஏற்படுவதை எடுத்து நடத்த வேண்டும் என்று சொல்லவில்லை. சில மில்களுக்குச் சில சலுகை கள் கொடுக்கிறோம். இந்த 15 லட்சம் காணாது. 51 சதவிகிதம் மாநில சர்க்கார் எடுத்துக் கொண்டு 49 சதவிகிதம் மத்திய சர்க்காரை எடுத்துக் கொள்ளச் சொல்லி, அப்படி ஒரு திட்டத்தைப் போட்டு, இந்த மில்களைத் திறக்க இத்தனை கோடி ரூபாய் வேண்டும், நாங்கள் அதில் இத்தனை போடுகிறோம், நீங்கள் இத்தனையைக் கொடுங்கள், முதலாளிகள் இவ்வளவு போடுவார்கள் என்று சொல்லும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் இந்த அரசாங்கம். எதற்கெடுத்தாலும், மத்திய சர்க்கார், மத்திய சர்க்கார் என்று அவர்கள்பேரில் பழியைப் போட்டு கையை கழுவுவது சரியில்லை. ஆற்றிலே கொட்டுவதாக இருந்தாலும், அளந்து கொட்ட வேண்டும்.

வரிகளை நீக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். சலுகைகள் கொடுக்கவேண்டும் என்கிறார்கள். இந்த மாதிரி நிலையில், அமைச்சர் சொன்னார்கள், மகராஷ்ட்ராவிற்கு அதிகாரிகளை அனுப்பியிருக்கிறோம் பார்த்தார்கள் என்று சொன்னார்கள்., குஜராத் மகராஷ்ட்ராவில், நடப்பது போல நடக்க வேண்டும் என்றால், அதற்கு இந்த 15 லட்ச ரூபாய் போதாது. அதை வைத்துக்கொண்டு நடத்த முடியாது. அவர்களுக்கு இது ஒரு நாளைக்குக் கூடப் போதாது. மூடியிருக்கும் மில்களை நடத்த வேண்டுமென்றால், அதற்கு கணக்குப் போட்டு, இவ்வளவு முதலீடு தேவை, எப்படி முதலைத் தேடுவது என்பதற்கான திட்டம் சரிவர இல்லாததால், இவை தேக்கிக் கிடக்கிறது. இது சாதாரண விஷயம் அல்ல. ஒரு மில் மூடிக்கிடக்கிறது என்றால், ஆயிரம் குடும்பங்கள் தொல்லைக்குள்ளாவது மட்டுமல்லாமல், அவர்களுடைய வாங்கும் சக்தியும் குறைகிறது, வாழ்க்கைத்தரம் குறைகிறது. வளர்ந்து வரும் சமுதாயத்தில் இது பாதகமானது. ஒரு கார் போய்க்கொண்டே இருக்கிறது என்றால், சட்டென்று அதை நிறுத்திவிட்டால், அந்த ஸ்பீடை எடுக்க வெகு நேரமாகும். நம்முடைய லட்சியத்தை அடைய முடியாது. தொழில் வளர்ச்சி, வளரும் சமுதாயத்தில், நிற்காமல், தூங்காமல் நடக்கவேண்டும். திட்டங்களைப் போட்டு இப்படி இப்படிச் செய்யவேண்டும் என்று திட்ட வட்டமாகச் சொல்லுங்கள். மத்திய சர்க்கார் மீது பழி, மத்திய சர்க்கார் மீது பழி என்று போடுவது, அல்லது வேறு ஏதாவது பழி போடுவது என்பது கூடாது.

முதலீடு போடத் தயங்குகிறார்கள். ஏன்? வேலை நிறுத்தம் பல விதமான தொழிற்சங்கங்கள்—இதையெல்லாம் பற்றி லேபர் டிமாண்டில் பேசவேண்டும். தொழிற்சங்கங்கள் காரியங்களில் சர்க்கார் தலையிடாமல் இருக்கும் காரணத்தால், இவ்வளவு தூரம் தேக்கம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வேறு கருத்துக்குபோய் விடுவதற்கு முன்னர், எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன கருத்தைப் பற்றி ஒன்றை அறிய விரும்புகிறேன். மத்திய சர்க்கார் மீது பழி போடுகிறோம் மத்திய சர்க்கார் மீது பழி போடுகிறோம் என்றார்கள். அதே போல கோவையில் எட்டு ஆலைகள் மூடப் பட்டு இருந்தபோது அப்பொழுது எதிர்க்கட்சியில் இருந்த நாங்கள் தொழில் அமைச்சர் திரு.வெங்கட்டராமன் அவர்களை, மாராட்டியத்தில் மில்களைத் திறக்க முயற்சிகள் செய்யப் படுகின்றனவே அதைப் போல நம்முடைய மாநில அளவிலும் செய்யக் கூடாதா என்று கேட்டோம், அதற்கு திரு. வெங்கட்ராமன் அவர்கள் அது நஷ்டத்தில் நடைபெறுகிறது. நாமும் அப்படிப் பட்ட முயற்சியில் ஈடுபடுவது முடியாத காரியம் என்று சொன்னார்கள். எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார் மீது பழி போடுகிறோம் என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது காங்கிரஸ் சர்க்காரோடு சேர்ந்து நாங்கள் மத்திய சர்க்காரை இன்னும் வற்புறுத்தி இவைகளை திறக்கச் செய்ய தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்று கேட்டோம். மத்திய சர்க்கார் உடன்பட்டு, மூடப்பட்ட ஆலைகளைத் திறக்க முன் வரவேண்டும் என்று சொன்னோம். இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் ஒரு இடத்திலே கூட, மத்திய சர்க்கார் உதவி புரியவேண்டும் என்று சொல்லவில்லை. இப்படிச் செய்வது மாநில அரசு செய்யவேண்டும் என்னும் போது, மத்திய சர்க்கார் தட்டிக் கழிக்க ஏதுவாக ஆகிவிடாதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதல் அமைச்சர் அவர்களுடைய தலையீட்டிற்கு மிக மிக நன்றி. ஒரு திட்டத்தைப் போடுங்கள். 51 சதவிகிதம் நம்முடையது., மத்திய சர்க்கார், அவர்கள் பிடியில் சிக்காமல் அவர்களுடைய பங்கு 49 சதவிகிதம் என்றும் போட்டு, ஒரு திட்டத்தை போட்டுக் கொடுங்கள். மத்திய சர்க்காரோடு சண்டை போடவேண்டுமானால், சண்டை போடத்தயாராக இருக்கிறேன். ஒன்றுமே இல்லாமல், மத்திய சர்க்கார், மத்திய சர்க்கார் என்று சொல்வது எப்படித்தரும்? இன்றைன்று, திரு. வெங்கட்டராமன் சொன்னார் என்றார்கள். அப்பொழுது நான் சட்டசபையில் இல்லை. அவர் ஏதோ சொல்லியிருப்பார். ஏன், உங்கள் மறைந்த முதல் அமைச்சர் அண்ணா சொன்னதையே ஞாபகப்

படுத்த விரும்புகிறேன். எதையாவது பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று இந்த சர்க்காரைக் கேட்டால் ,திரு. வெங்கட்டராமன், மத்திய சர்க்காரை காட்டுகிறார்கள். இந்த சர்க்கார். என்ன செய்தது என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார் அண்ணா.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தவில்லை என்று கூறியிருப்பார்கள் அண்ணா அவர்கள். வேறு விதமாகச் சொல்லியிருக்க மாட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எங்களோடு மத்திய சர்க்காரை வற்புறுத்த வரவேண்டும் என்றுதான் துணைக்கு அழைக்கிறோம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பரிபூரணமாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன். ஆனால் மனசிலே சுத்த மில்லையே ! (சிரிப்பு) அதுதானே கஷ்டம். சரி சேர்ந்து செய்கிறோம். என்ன சொல்வீர்கள் ? பார்த்தீர்களா செய்து விட்டோம் என்பீர்கள். எழுச்சி நாள் நடத்துவீர்கள். எழுச்சி நாள் நடத்தினீர்களே, காங்கிரஸ் காரனைக் கூப்பிட்டீர்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எழுச்சி நாளுக்குக்கூப்பிட்டோம். கூப்பிட்டபோது, மதுரையில், திரு.காமராஜரை, “எழுச்சி நாள்” அன்று நாங்கள் என்ன செய்யட்டும் என்று கேட்ட காங்கிரஸ்காரர்களை, “தூங்குங்கள்” என்று அவர்கள் சொன்னார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்கள் என்னவோ கேட்டார்கள். இவர் என்னவோ சொன்னார். அது கிடக்கட்டும். மத்திய சர்க்கார் தவறு செய்தால் கேட்போம். இன்றைக்கு நெல் விலையையே எடுத்துக் கொள்வோம். நான் நேற்று திரு. ஜகஜீவன் ராம் அவர்களைச் சந்தித் தேன். கேட்டேன். 60 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றேன். அது விவசாயினுடைய பிரச்சினை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நேற்று மத்திய அமைச்சரை தனியாகப் போய்ச் சந்தித்ததன் மர்மம் என்ன ? எங்களோடு சேர்ந்து ஏன் வரவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இத்தனை மணிக்கு வா என்று சொன்னீர்களா ? சொல்லவில்லையே. என் இஷ்டப்படி வரமுடியுமா ?. யார் என்று கேட்டால் எப்படி ? நான் ஒன்றும் பயந்தவன் இல்லை. யாராக இருந்தால் என்ன. பிரைம் மினிஸ்டராக இருந்தாலும் பார்ப்பேன் எனக்கு என்ன பயம் ? தைரியம் இருந்தால், இத்தனை மணிக்கு வா என்று கூப்பிட்டிருந்தால், வந்திருப்பேன். பயப்பட்ட ஆள் கிடையாது. அவரை வந்தவுடனேயே கேட்டேன். இரவெல்லாம் சாப்பிட்ட பிறகு ராஜபவனத்தில் பார்த்தேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : “இரவெல்லாம் சாப்பிட்டபிறகு என்றீர்களே ? இரவெல்லாமா சாப்பிட்டார்கள் ? (சிரிப்பு).

திரு. பி. ஜி. கருத்திருமன்: அடிப்படையான பிரச்சினை விவசாயிகளுடையது. திரு ஜகஜீவன் ராம் அவர்களைக் கேட்டேன், ஐயா உங்கள் மாநிலத்தில் ரூ. 56 என்று சொல்லும்போது. இங்கே மட்டும் ரூ. 43 தானா என்று கேட்டேன். அவர், “என்னை அவர்கள் கேட்கவே இல்லையே” என்றார்கள். (குறுக்கீடு) ஆமாம் ; விவசாயம் இல்லாமல் இண்டஸ்ட்ரீஸ் வராது. வயிற்றுக்கில்லாமல், இன்டஸ்ட்ரீஸ் ஏது ? நான் சொல்வது என்ன வென்றால், இனி காங்கிரஸ்காரன் குட்டிச் சுவர் பண்ணி விட்டான், குட்டிச் சுவர் பண்ணி விட்டான் என்று அமைச்சர் சொல்வதில் அர்த்தம் இல்லை. நான் முன்பே சொன்னேன். அப்போது முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. ஒரு நிபுணர் கமிட்டியைப் போட்டு, 20 வருஷ காலத்தில் காங்கிரஸ் நாட்டைக் குட்டிச்சுவராக்கியதா ? அல்லது உங்களுடைய இரண்டு வருஷ ஆட்சியிலே நாடு குட்டிச்சுவரானதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். காங்கிரஸ் கட்சிதான் நாட்டைக் குட்டிச்சுவராக்கியது என்று தீர்ப்பு கிடைக்குமானால், நான் அரசியலை

பிற்பகல் 1–30

விட்டே விலகிவிடத் தயாராக இருக்கிறேன். இதைச் செய்ய வேண்டுமென்று முன்பே சவால் விட்டிருக்கிறேன். பெருந்தன்மையாக, என்னமோ சொன்னோம் என்று அவர்கள் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கு நிபுணர் கமிட்டியைப் போடத் தேவையில்லை. அகில இந்தியப் புகழ் வாய்ந்தவரும், அரசியலில் நெடுநாள் இருந்தவரும், தமிழ்நாட்டின் மதிப்புமிகு திரு. காமராஜ் எம்.பி. அவர்கள் திருச்சியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் இதை ஒத்துக் கொண்டிருக்கிறார். "நாம் போட்ட மூன்று ஐந்தாண்டு திட்டங்களின் மூலமாக ஏழை ஏழையாகவே இருக்கிறான், பணக்காரன் மேலும் பணக்காரனாக மாறுகிறான்" என்று கூறியிருக்கிறார். அவரைவிடப் பெரியவர் யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் கேட்டது வேறு, அவர் சொல்வது வேறு (சிரிப்பு) அப்படியா திரு காமராஜ் அவர்கள் சொன்னார்கள் ? என்னுடைய பத்து வருட ஆட்சியில் நாடு குட்டிச்சுவராகப் போய்விட்டது என்று சொன்னார்கள் ? பணக்காரன் மேலும் பணக்காரனானான் ஏழை ஏழையாகவே இருக்கிறான் என்று ஏதோ சினிமாவில் டயலாக் சொல்வது போல் திரித்துக் கூற வேண்டியதில்லையென்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நானும் சினிமா வசனம் எழுதவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கம்பராமாயணம் காலட்சேபம் செய்ய வேண்டியதில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கம்பராமாயண காலட்சேபமா செய்கிறேன். நான் கேட்பதெல்லாம் என்னவென்றால், நாம் மத்திய சர்க்காருடன் ஆக்கபூர்வமான முறையில் போராட வேண்டும். நமக்குரிய பங்கைக் கேட்கவேண்டும். பாரத தேசம் ஒன்று, இந்த நாட்டினுடைய சுதந்திரம் மிக முக்கியம், இந்த நாட்டினுடைய பாதுகாப்பும் முக்கியம், இந்த நாட்டு மக்களுடைய வாழ்வு முக்கியம், பொருளாதார முன்னேற்றம் முக்கியம் என்ற நிலையில் நியாயமான காரியத்திற்காக நாம் உரிமையைப் பெற வேண்டுமென்று சொன்னால், நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். அதுமட்டுமல்ல, மத்திய சர்க்காரிடத்திலே சண்டை போட்டுக்கூட வாங்கிக்கொடுக்கத் தயாராக இருக்கிறேன். " ஒன் வே டிராஃபிக் என்று சொல்வார்களே அதுபோல அல்ல. நீங்கள் ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், நேரடியாக மத்திய சர்க்காரை அணுக வேண்டும். கோவையில் ஏன் மில் திறக்கப்படவில்லை சில மில்காரர்கள் சௌகரியமாக நடத்திக்கொண்டிருப்பதால், அவர்கள் பக்கத்தில் போகாமல் அவர்களை ஆதரிக்கும் நிலை சர்க்காருக்கு இருக்கிறது. பல மில்கள் மூடிய நிலையில் உள்ளன. இந்த சட்டசபை கூட்டம் முடிந்த பிறகாவது அந்த மில்களை மீண்டும் திறப்பதற்கு ஆக்கபூர்வமான முறையில் முயற்சி எடுத்துக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். எங்கள் கட்சி அதற்குப் பூரண ஒத்துழைப்பைக் கொடுக்கும் என்று கூறி, என் கட்சி கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்திலே ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்களும், இந்தத் துறை சிறந்த முறையில் செயல்படுவதற்கு, வரியற்ற வருமானத்தை ஒரு அரசு கொண்டுவருவதற்கு சிறந்த ஆலோசனைகளைக் கூறியதற்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துறையை நடத்திச் செல்லக்கூடிய அரசு அலுவலர்கள் எல்லாம், கனம் அங்கத்தினர்கள் சொன்ன சிறந்த கருத்துக்களை ஏற்று உற்சாகத்தோடு ஆண்டுக்காண்டு ஜனநாயக நாட்டிலே வரி போடாமல் வருமானத்தைப் பெருக்கி, மக்களுக்கு நன்மை செய்வதற்குப் பாடுபடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இத்துறையில் பணியாற்றக் கூடியவர்களுக்கு எல்லாம் நான் நன்றி தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன்.

1969 மார்ச் 11] [திரு. செ. மாதவன்]

தொழில் துறை சிறந்த முறையில் நம் நாட்டிலே பெருக வேண்டும். தமிழ்நாட்டிலே தொழில் வளம் பெருக வேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடுகள் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடக்கத்திலே, "இதில் அரசியல் வேண்டாம், கட்சிப் பிரசாரம் வேண்டாம், நாட்டுக்கு நன்மை செய்வோம்" என்று நல்ல சகுனத்தோடு ஆரம்பித்துவைத்தார்கள். அவருடைய உரையின் முடிவும் சுபமாக இருக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால் எனக்கு ஏமாற்றத்தையே தந்தார்கள். ஏதோ தொழில் வளர்ச்சிக்கு புள்ளிவிவரங்கள் தருவார்கள் என்று எதிர்பார்த்தேன். காங்கிரஸ் கட்சியைப்பற்றிப் பேசப்பட்ட காரணத்தாலோ என்னவோ புள்ளிவிவரங்களை மறந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன். தொழில் வளத்தில் எதிர்க்கட்சியும் நல்ல ஆர்வம் காட்டுகிறது என்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டை வளமுள்ளதாக மாற்றுவதற்கு உறுப்பினர்கள் சொன்ன ஏராளமான கருத்துக்களை நான் வரவேற்கிறேன். "ஒவ்வொரு தொழிலையும் இன்னும் சிறப்பான முறையில் நடத்தவேண்டும் அரசாங்கம் தக்க கவனம் எடுக்க வேண்டும்" என்ற கருத்தை நான் ஆதரிக்கிறேன். ஓர் அங்கத்தினர் குறிப்பிட்ட ஒரு தொழிலைப் பற்றிச் சொன்னார்கள். "லாபம் வரக்கூடியதா இல்லையா என்பதற்கு அதிகாரிகளை மட்டும் நம்பாமல், மக்கள் பிரதிநிதிகளையும் இணைத்து நல்ல முறையில் செயல்பட வேண்டும்" என்று யோசனை கூறினார். தொழில் துறையினர் அங்கத்தினர் சொன்ன கருத்துக்களை குறித்து வைத்துக்கொண்டு பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர், "தமிழ் நாட்டில் கனிவளம் எங்கெங்கு கிடைக்கிறது என்பதைக் கண்டறிந்து அதைப் பயன்படுத்திக் கொள்ள சிறந்த திட்டங்களை உருவாக்க வேண்டும்" என்று சொன்னார்கள். தொழில் துறையினர் குறித்து வைத்துக்கொண்டு, எங்கெங்கு கனிவளம் கிடைக்கிறது என்பதைக் கண்டறிய தக்க நடவடிக்கைகளை எடுக்க முயற்சி செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. சுதந்திரா கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள், "ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பொரேஷன் ஒன்று செயல்பட்டு, அரசாங்கத்தின் சார்பில் இருக்கும் சிறு தொழில்களில் நல்ல இலாபம் வர வேண்டும் அப்படி லாபம் வராவிட்டால் வராததற்கான காரணங்களைக் கண்டறிந்து தக்க பரிகாரம் காண வேண்டும்" என்று தன்னுடைய உரையில் குறிப்பிட்டார்கள். அவர் சுதந்திரா கட்சி அங்கத்தினராக இருந்தும், சர்க்கார் நடத்தும் தொழில்கள் அதிகமாகி, நல்ல முறையில் நடைபெற்று, நல்ல இலாபம் கொடுக்க வேண்டும் என்று சொன்னது எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தருகிறது.

நாம் எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், உறுப்பினர்கள் கூறிய பெரும்பாலான காரணங்கள் உண்மை. அதைத் தடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். பல அங்கத்தினர்களும் ஒரு குறிப்பிட்ட காரணத்தையே சொன்னார்கள். நம்முடைய நிறுவனங்கள் மிகத்திறமையாகச் செயல்பட வேண்டுமானால், அலுவலர்கள் தொழில் துறையில் அனுபவம் உள்ளவர்களாக ஆக வேண்டும். சாதாரண நிர்வாகத்தில் உள்ளவர்கள் தொழில் துறையில் பங்கு பெறுவதைவிட தொழில்துறையில் அனுபவம் உள்ளவர்கள் பங்கு பெற வேண்டும். மறைந்த முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் இதைச் சொன்னபோது, இந்தக் கருத்தை ஒத்துக்கொண்டார்கள். "தொழிலில் அனுபவம் உள்ளவர்களே தொழில் நிர்வாகத்தில் பங்குபெற வேண்டும்" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணா அவர்களின் கருத்தை இந்த அரசாங்கம் நிச்சயம் பரிசீலிக்கும்.

தொழில் வளத்தை நாம் பார்க்கும்போது, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், "தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது" என்று சொன்னார்கள். தொழில் மந்தம் நாடு முழுவதும் பரவியிருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலக சந்தையிலும் பரவியிருக்கிறது. ஏதோ குறிப்பிட்ட சில ஆண்டுகளில்

இது வருவதில்லை; சில குறிப்பிட்ட கட்சி ஆட்சியில் வருவதில்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு நாட்டினுடைய பொருளாதாரத்தை எடுத்துக்கொண்டாலும், சில தொழில்களுக்கு பாதகங்கள் ஏற்படத்தான் செய்யும். இது அந்தத் தொழில் துறையில் ஏற்படக்கூடிய தொழில் மந்தம் என்கிறோம். இதைப் போக்குவதற்கு நாம் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்னொரு கருத்தை என்னுடைய தரப்பிலிருந்து சொல்லப்பட்டதை, எதிர்க்கட்சித் தலைவர் பலமாக எதிர்த்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொன்னார்கள். தொழில்துறை வளரும்போது மத்திய அரசின் உதவி நம்முடைய மாநிலத்திற்கு அதிகமாகத் தேவை என்று கூறுவதை எதிர்க்கட்சித் தலைவர் ஒருகாலும் மறுக்க மாட்டார்கள். அவரும் தமிழ்நாட்டில் வாழ்பவர்தான். தமிழ் நாடு வளமுடையதாக மாற வேண்டும் என்பதில் அவருக்கும் அக்கறை இருக்கிறது. தமிழ்நாட்டிற்காக அவரும் போராட வேண்டும். நம்முடைய எதிர்க்கட்சி காங்கிரஸ் கட்சியாக இருக்கிறது. டெல்லி ஆட்சியிலே காங்கிரஸ் கட்சி இருக்கிற காரணத்தாலே பூரணமாக எடுத்துச் சொல்லி, மத்திய உதவி கிடைக்க வழி செய்ய வேண்டும். எங்களோடு சேர்ந்து அவரும் போராட முன்வர வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதையெல்லாம் மத்திய அரசிடமிருந்து வாங்கிக்கொடுத்திட பூரணமாக போராடத் தயாராக இருக்கிறேன். இன்றைக்கு நீங்கள் அங்கே இருக்கலாம்; நாளைக்கு நாங்கள் அங்கே வரலாம். தொழில் முன்னேற்றத்தில் அரசியலே வேண்டாம். தொழில் முன்னேற்றத்திற்கும் அரசியலுக்கும் சம்பந்தம் வேண்டாம். நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது, தொழிலதிபர்கள் உங்களை ஆதரிப்பார்கள், நாங்கள் அந்தப் பக்கம் வந்த பிறகு எங்களை ஆதரிப்பார்கள். தொழில் முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் கட்சி அரசியல் இல்லை. தொழில் முன்னேற்றத்திற்காக காங்கிரஸ் கட்சி பூரணமாக உதவி செய்து, மத்திய அரசிடமிருந்து உதவியை வாங்கிக் கொடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஜனநாயகப் பண்பை மாலை நேரத்திலும் வெளியில் காட்ட வேண்டும்.

முதல் அமைச்சர்களின் மகாநாட்டுக்கு நான் அண்ணா அவர்களுடன் சென்றிருக்கிற நேரங்களில் எல்லாம் கண்டு இருக்கிறேன். நமது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்றில்லை, காங்கிரஸ் ஆளுகின்ற மாநில அரசுகளைச் சேர்ந்தவர்களும் கூட—என்னிடம் சொல்லுங்கள், சொல்லுங்கள் என்று தூண்டிவிட்டு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதை வற்புறுத்தி வருகிறார்கள். நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் உரத்த குரலில் "நமது மாநிலத்திற்கு அதிகமான அதிகாரங்கள் தேவை, தொழில் வேண்டும். லைசென்சு கொடு என்று டெல்லியிடம் வந்து கேட்டு நிற்காத அளவில் நாங்களே தொழில் வளர ஆவன நடவடிக்கை எடுத்துக்கொள்ள உரிமை தரப்படவேண்டும்" என்று கோர வேண்டும். அப்படிக் கேட்பது தவறு என்று சொல்ல வேண்டாமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒத்துக்கொள்கிறேன், மத்திய அரசிடம் சில அதிகாரங்கள் இருக்கத்தான் வேண்டும். நாம் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு அதிகாரம் தேவையில்லை என்று சொல்லமாட்டேன். நாடு முழுவதும் தொழில் சீரான வளர்ச்சி அடைய அவர்களிடத்தில் சில பிடிப்பு வேண்டும். ஆனால் அவர்களிடம் இருக்கும் அதிகாரம் நம்முடைய தொழில் வளர்ச்சியைத் தடை செய்வதற்காக, காலம் தாழ்த்துவதற்காக இருக்குமானால் அதை மாற்றியாக வேண்டும் என்று டெல்லியிடம் கேட்கிறோம். அது தவறும் அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆட்சி வந்தது முதல் என்ன செய்தது என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். இதுதான் வாடிக்கையாகக் கேட்கக் கூடிய கேள்வி. நாங்களும் வாடிக்கையாக பதில் அளித்தாக வேண்டிய கேள்வி. ஆனால் உண்மை என்ன என்பதை நாம் சிந்திக்கவேண்டும். நாம் தொழில் அதிபர்களிடம் இருந்து மனுக்களைப் பெறுவதற்கும், அந்த மனுக்களின் மீது சிபார்சு செய்வதற்கும், அது பற்றி கடிதங்கள் எழுதிக்கொண்டிருப்பதற்கும் தான் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறோம். அந்த மனுக்களைப் பரிசீலித்து முடிவு சொல்லக்கூடிய அதிகாரம் டெல்லியில்தான் இருக்கிறது. அந்த அதிகாரத்தை நாமே பெற்றாக வேண்டும் என்கிற முயற்சியில்தான் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் என்பனபோன்ற கட்சிப் பிரிவு இல்லாமல் எல்லோரும் ஒருமுகமாகப் பாடுபடவேண்டுமென்ற கோரிக்கையை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த ஆட்சி வந்தபிறகு என்ன என்ன தொழில் வளம் ஏற்பட்டிருக்கிறது என்கிற புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் படித்திருப்பார்கள். அதைப்பற்றி ஒரு வார்த்தை. . ஒரு பாராட்டு ? இந்த ஆட்சி வந்த பிறகு ஒன்றுமே நடக்கவில்லை, ஏன் உறங்கிக்கொண்டிருக்கிறது? என்கிறார்களே, உறங்கிக்கொண்டிருந்த சேலம் உருக்காலைத் திட்டத்தை விழிக்க வைத்திருக்கிறோமே அதைப்பாராட்டினார்களா ? நமக்கு ஏராளமாக ரசாயன உரம் தேவைப்படுகிறது, அதற்காக திட்டக் கமிஷனிடம் அனுமதி பெற்று தூத்துக்குடியில் ரசாயன தொழிற்சாலையை ஏற்படுத்த முன்வந்திருக்கிறோமே அதை ஆதரித்து ஏதாவது ஒரு வார்த்தை சொன்னார்களா என்றால் இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நீங்கள் வந்த பிறகு அப்ளிகேஷன் போட்டீர்களா ? ஏதோ நல்லவேளை காங்கிரஸ் கட்சி காலத்திலேயே அப்ளிகேஷன் போடப்பட்டிருந்தது, அதற்காக நன்றி, அதை நாங்கள் வந்தவுடன் தொடர்ந்து வற்புறுத்திப் பெற்றிருக்கிறோம் என்று நீங்கள் ஒரு வார்த்தை, நன்றி சொன்னீர்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்படித்தான் பேசவேண்டும். ஆளும் கட்சியை ஆதரித்துப்பேசிவிட்டால் வெளியில் ஆபத்து.

இன்னும் அதிகமான திட்டங்கள் நமது தமிழகத்துக்கு வேண்டும் என்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. தொழிலதிபர்களை "வாருங்கள் வாருங்கள்" என்று நான் அழைத்ததாகக் குறிப்பிட்டார்கள். முன்னால் இருந்த அமைச்சரும் தான் அழைத்தார். அப்போது யாரும் வரவில்லை என்று பொருள் இல்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே குறிப்பிட்டார்கள். இப்போது பணப் புழக்கம் அதிகமாக இருக்கிறது. பலவிதமான வங்கிகளும் பணம் கொடுத்து உதவ முன் வந்திருக்கின்றன. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு புதிய தொழில்களைத் துவக்க தொழிலதிபர்கள் முன்வரவேண்டும் என்பது நம் கருத்து. டெல்லி ஆட்சி குறுக்கிட்டாலும் நாம் குறுக்கிடமாட்டோம். அதிகமான தொழில்கள் ஏற்பட்டாகவேண்டும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்தாக வேண்டும். இதுதான் எங்கள் கருத்து.

நான் முன்பும் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். எந்த அரசியல் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அவர்களுடைய அரசியல் கொள்கைகள் நாட்டின் தொழில் வளத்தைப் பாதிக்கக்கூடாது. அரசியல் கொள்கைகள் மேடையில் இருக்கட்டும். தேர்தல் காலத்தில் வரட்டும். அரசியல் கட்சிகளின் சித்தாந்தங்கள் தொழில்துறையின் ஊடே, அதன் வளர்ச்சியினூடே புகக்கூடாது என்பதைக் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நாங்கள் தொழில் வளர்வதற்கு எல்லாவகையான உதவிகளையும் அளிக்கத் தயாராய் இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

யார் இங்கே தொழில்களை ஆரம்பிக்க முன்வருகிறார்கள், உங்களுடைய கொள்கையில்தான் சந்தேகம் அடைகிறார்களே என்பதாகச் சொல்லலாம். அது உண்மை அல்ல. என்னைப் பொறுத்தவரையில் நாள்தோறும் தொழில் அதிபர்கள் என்னிடம் வந்து கூறிக்கொள்வது எல்லாம்—நாங்கள் இன்ன தொழிலை ஆரம்பிக்க விரும்புகிறோம், நீங்கள் ஆதரவு தாருங்கள், டெல்லிக்கும் சிபார்சு செய்யுங்கள் என்பதாகவும், நாங்கள் இன்ன தொழிலை விரிவுபடுத்த விரும்புகிறோம், நீங்கள் ஆதரவு தாருங்கள் என்பதாகவும் தான் இருக்கின்றன. யாரும் எங்களிடம் இங்கே நாங்கள் தொழிலை ஆரம்பிக்கமாட்டோம் என்றோ, இங்கே உள்ள தொழிலை வேறு மாநிலத்திற்குக் கொண்டு போகப்போகிறோம் என்றோ சொல்லவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நம்முடைய தொழிலாளர்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் நான் சொல்கிறேன். மற்ற மாநிலங்களில் இருப்பவர்களை எல்லாம் விட நம்முடைய மாநிலத் தொழிலாளர்களின் திறமைதான் மிக அதிகமாக இருக்கிறது என்று என்னைச் சந்திக்கிற தொழில் அதிபர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இங்கே உற்சாகத்தோடு தொழில் ஏற்படுத்த ஆர்வம் தெரிவிக்கிறார்கள். இந்த உற்சாகத்தைக் குன்றச் செய்யும் வகையில் நாம் பேசுவது நல்லது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்பீரியல் டொபாகோ கம்பெனியார் வந்து இன்னும் அதிக அளவில் இங்கே தொழிலை விரிவு படுத்த விரும்புகிறோம், டெல்லியிடத்தில் சொல்லி எங்களுக்கு ஆதரவு கொடுங்கள் என்கிறார்கள். இப்போது டையர்கள் கிடைக்காமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள், டன்லப் கம்பெனியார் வெளிநாட்டு உதவியுடன் இன்ன இன்ன வகையில் இங்கே நாங்கள் தொழிலை விரிவுபடுத்த விரும்புகிறோம், எங்களுக்கு ஆதரவு கொடுங்கள் என்கிறார்கள். இன்னும் டிராக்டர்களை எடுத்துச் கொண்டால் இப்போதுதான் நமது விவசாயத் துறையில் டிராக்டர்களை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்கிற புரட்சிகரமான மாறுதல் வந்திருக்கிறது. எங்கே பார்த்தாலும் டிராக்டர்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். செக்கோஸ்லொவாக்கியா நாட்டு உதவியுடன் இங்கே அதிகமான அளவில் டிராக்டர்களை உற்பத்தி செய்ய விரும்புகிறோம், டெல்லியிடம் சொல்லி அனுமதிபெற்றுத்தாருங்கள் என்பதாகக் கேட்கிறார்கள். இதுதான் அன்றாடம் என்னிடம் தொழிலதிபர்கள் கேட்கின்ற நிலைமை. இன்றுகூட நான் இங்கு வருவதற்கு முன்னால் ஒரு தொழிலதிபர் சந்தித்து—நான் இன்ன தொழிலை விரிவுபடுத்த விரும்புகிறேன். உங்கள் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு வேண்டும் என்று கேட்டார்கள். நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன். இந்தத் தமிழகம் தொழில்துறையில் முன்னணியில் நிற்க இந்த அரசு ஆவன செய்யும். அதிகமான அதிகாரம் அதன் காரணமாகத்தான் தேவை என்று வற்புறுத்திவருகிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், அன்றைக்கு எங்கள் பக்கம் இருந்த தொழிலதிபர்கள், இன்று உங்கள் பக்கம் இருப்பார்கள், நாளை நாங்கள் வந்தால் எங்கள் பக்கம் வருவார்கள் என்பதாக. நான் அவர்கள் யார் பக்கம் இருக்கிறார்கள் என்று பார்க்கவில்லை. தமிழகத்தை தொழில்வளம் நிறைந்ததாகச் செய்கிற எங்கள் முயற்சிக்கு மக்கள் ஆதரவு வேண்டும். அவர்களது துணை இந்த ஆட்சிக்கு நிச்சயம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் மற்ற மாநிலங்களில் எல்லாம் புதுத் தொழில்கள் தோன்றுவதற்கு என்ன என்ன உதவிகள் அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்துவர ஒரு அதிகாரியைப் போட்டு அறிக்கை தயாரித்தார்கள். அந்த ஆலோசனையை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். அந்த அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தொழில் அதிபர்கள் கேட்பது எல்லாம் கேரளத்தில் கொடுக்கவில்லையா, மைசூரில் கொடுக்கவில்லையா அதுபோல குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கவேண்டும். என்பதுதான். அதைப்பற்றியும் பரிசீலித்தோம். அங்கே உற்பத்திச் செலவே குறைவாக இருக்கிறது. நாம்கூட அவர்களிடம் இருந்தும் வாங்குகிறோம். நம்முடைய உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. என்றாலும், முதல் அமைச்சர் அவர்கள் தொழிலதி

பர்களுக்கு இந்த உண்மையை எடுத்துக் காட்டியதோடுகூட, அரசாங்க அள வில் மின்சாரவாரியத்தையும் இணைத்து ஒரு குழு அமைத்து எந்த எந்தப் பகுதியில், எந்த எந்தத் தொழிற்சாலைக்கு எப்படி எந்த அளவுக்கு மின்சாரத்தை குறைந்த கட்டணத்தில் கொடுக்கலாம் என்பது பற்றி பரிசீலிக்க வகை செய்திருக்கிறார்கள். அவர்கள் முடிவு தெரிந்ததும் முயற்சிகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மத்திய அரசைக் குறை சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்ல வில்லை. ஆயினும் சில புள்ளி விவரங்களைத் தர விரும்புகிறேன். நாம் கொண்டு வர வேண்டும் என்று முயற்சி எடுத்தும், அதற்கு நிலம் கொடுக்கத் தயாராய் இருந்தும், பணம் கொடுப்பதற்குத் தொழில் அதிபர்கள் தயாராய் இருந்தும், அதில் பங்குபெற அரசாங்க இன்ஸ்டிட் டியூஷன்கள் தயாராய் இருந்தும் டெல்லியில் காலதாமதம் ஆகிறது. இது சரிதானா ? எதிர்க்கட்சித் தலைவர் சரிதான் என்று ஒத்துக் கொள்கிறாரா? இதற்குப் பதில் நீங்கள்தான் சொல்லவேண்டும். ஆகவே, எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, நம்முடைய முயற்சியிலே கொஞ்சங்கூட நாம் காலந் தாழ்த்தவில்லை.

சில நாட்களுக்கு முன்புகூட ஒரு தொழிலதிபர் சொன்னார், அல்லாய் அண்ட் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தொழிற்சாலை தொடங்குவதற்காக இங்கே நெடுங்காலமாக முயற்சி செய்தோம், கிடைக்கவில்லை, இப்பொழுது உங்கள் ஆட்சிக் காலத்தில் அதைத் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று சொன்னார். பக்கத்து மாநிலங்களிலிருந்து எர்த் மூவிங் மெஷின், புல்டோசர்கள் போன்றவை வாங்குவதற்குப் பதிலாக இங்கே அவற்றை உற்பத்தி செய்யக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யலாம். எந்த ஆட்சியிலும் இதைச் செய்யலாம், எந்த ஆட்சி என்று கவலைப் படவில்லை, மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதுதான் இங்கே முக்கியம். டெல்லியிலேதான் லைசென்ஸ் கொடுப்பதிலே தாமதம் இருக் கிறது, யார் பெறுவது என்பதிலே போட்டியிருக்கிறது என்றால் என்ன பொருள் ?

இன்னொரு தொழிலதிபர் சொன்னார், இந்த நாட்டிலே ஒரு வாட்ச் பேக்டரி தொடங்கலாம் என்று சொன்னார். இதைத்தவிர ஒரு எலக்ட் ரானிக் கம்ப்யூட்டர்ஸ் உற்பத்திசெய்கிற தொழிற் சாலையைத் தொடங்கலாம். என்று சொன்னார்கள். இன்னொருவர் கிழக்கு ஜெர்மனியின் ஒத்துழைப்போடு எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர்ஸ் தொழிற்சாலையைத் தொடங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எங்கே நிற்கிறது ? எங்கே தடைபடுகிறது ? எதிர்க்கட்சித் தலைவர் அதற்காக வாதாட வேண்டும்.

மேற்கு வங்காளத்திலிருந்து ஒரு தொழிலதிபர் வந்தார், உங்கள் தமிழ் நாட்டிலே மின்சார வாரியம் மிகச் சிறந்த முறையிலே வேலை செய்கிற காரணத்தாலே வேண்டிய மின்சார பல்புகளைத் தயார் செய்வதற்கான எங்கள் கம்பெனியின் கிளைகளை இங்கே திறந்து மின்சார பல்புகளைத் தயார் செய்து தருகிறோம் என்று சொன்னார்கள். உங்கள் ஆட்சிக்கு ஒத்துழைப்புத் தருகிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பெருமையை பார்த்து ஓடோடி வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்தப் பண்பு, அந்த ஆர்வம் எதிர்க்கட்சித் தலைவருக்கும் வரவேண்டுமென்பது தான் என்னுடைய பணிவான வேண்டுகோள். இவையெல்லாம் நான் சொல்லுகிறேன் என்றால் நம் தமிழ் நாட்டினுடைய வளத்தைப் பெருக்கு வதற்காக நாம் எல்லோரும் சேர்ந்து பாடுபடவேண்டுமென்பதற்காகத் தான்.

எதிர்க் கட்சித் தலைவர் பஞ்சாலைப் பிரச்சினை, நூல் பிரச்சினை இந்த இரண்டு பிரச்சினைகளையும் திருப்பித் திருப்பிப் பேசிக்கொண்டிருக் கிறார்கள், இந்த இரண்டு ஆண்டு காலமாகவே அதைப் பேச வேண்டு மென்று பேசிப் பேசி வருகிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது தீர வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம். பேசவேண்டுமென்பதல்ல.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதுதாவது தீரவேண்டு மென்று எண்ணங்கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். அவர்களுடைய கூற்று எல்லாம் இதற்குப் பரிகாரம் காண முயற்சி எடுக்கக்கூடிய வகையில் இல்லாமல் இந்த ஆட்சி வந்தது இந்த ஆட்சி வந்தது என்றே சொல்லுகிறார்கள். அப்படி நானும் சொல்லலாம். இந்தப் பிரச்சினை, இந்த மூடுவிழா 1967-க்கு பிறகு ஏற்பட்டதல்ல, 1965-ஆம் ஆண்டிலேயே இந்த மூடுவிழா நடைபெற்றது. இங்கே பேசிய சில உறுப்பினர்கள் புள்ளிவிவரங்களோடு பேசினார்கள், நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். பஞ்சாலைப் பிரச்சினைப் பற்றி உள்ள வருத்தத் தோடு பேசினார்கள்.

ஆனால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மராட்டியத்தைப் பார்த் தாயா, மராட்டியத்தைப் பார்த்தாயா என்று கேட்டார்கள். மராட்டி யத்தைச் சுட்டிக்காட்டி அதுபோல் நாமும் செய்யவேண்டுமென்று உண்மையிலே சொன்னால் மகிழ்ச்சியடைவேன். ஆனால் எதையோ நினைத்துக்கொண்டு மராட்டியத்தைப் பார்த்தாயா என்று சொன்னதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. நானும் பார்த்தேன். அதிகாரி களும் முதலிலே சென்று பார்த்தார்கள். அண்ணா அவர்கள் சொல்லிய படி நானும் பார்த்தேன். நஷ்டம் வந்தாலும் நடத்துங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள். ரொம்ப மகிழ்ச்சி. அவர்கள் இலாபத்திலே நஷ்டம் என்று என்னமோ சொன்னார்கள், அது எனக்கும் புரியவில்லை. நஷ்டம் வந்தாலும் நடத்தவேண்டும். தொழி லாளர்களின் வாழ்க்கையைப் பாதுகாக்கவும், தொழிலை மேம் படுத்தவும் நஷ்டம் வந்தாலும் நடத்த வேண்டுமென்று சொன்னதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால், அடுத்த ஆண்டு நஷ்டம் வந்தால் என் வந்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் குறையாகச் சொல்லமாட்டார் கள் என்று கருதுகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்திலே நூற்பாலையையும் நெய்யும் ஆலையை யும் பொறுத்த வரையிலே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஒரு கொள் கையை ஏற்று நடத்தி வந்தார்கள். அந்தக் கொள்கை சரியா தவறு என்பது பொருளாதார பிரச்சினை. அந்தக் கொள்கையைப் பின்பற்றியதால்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிந்தித்துப் பார்த்தால் இந்தப் பிரச்சினையை எப்படிச் சந்திக்கப் போகிறோம் என்பது தெரியும். ஸ்பின்டில்ஸைப் பொறுத்தவரையில் இந்திய நாட்டிலே உள்ளதில் 23 சதவீதம் நம்முடைய மாநிலத்திலே இருக்கின்றன. ஆனால், அங்கே காம்போஸிட் மில்ஸ் இருக்கின்றன. நூலை நூற்றவுடன் அதை நெய்யக்கூடிய வசதியும் அவர்களுக்கு இருக்கிறது. நெய்யப்பட்டவுடன் விற்பதற்கேற்றவகையில் சந்தையும் அவர்களுக்குக் கிடைக்கிறது. அதுதான் அவர்களுக்கு அதிலே வெற்றி, அந்தக் கொள்கையை இங்கே காங்கிரஸ் ஆட்சி ஏற்று நடத்தாத காரணத் தாலேதான் இந்த இழப்பு நமக்கு. கட்சி வாதம் பேசாமல் அவர்கள் அப்படிச் செய்திருந்தால் இந்த இழப்பு நமக்கு ஏற்பட்டிருக்காது.

பவர்லூம்ஸைப் பொறுத்தவரையிலுங்கூட மற்ற மாநிலங்களோடு நம் முடைய மாநிலத்தைப் பார்த்தால் நம்மிடம் இருப்பது 4 சதவீதம்தான். மீதம் 96 சதவீதம் உற்பத்தி செய்யப்படுவது அல்ல, வெளிநாட்டி லிருந்தோ மாநிலங்களிலிருந்தோ பெறக்கூடிய சூழ்நிலையைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது. பல உறுப்பினர்கள் நல்ல புள்ளிவிவரங்களோடு எடுத்துப்பேசினார்கள், எனக்கு மிக்க மகிழ்ச்சி.

பஞ்சை எடுத்துக்கொண்டால் நமக்குத் தேவையான பஞ்சில் இங்கே பெறக்கூடிய நிலை 20 சதவீதம்தான். மீதமுள்ள 80 சதவீதம் மற்ற மாநிலங்களிலிருந்து அல்லது வெளிநாடுகளிலிருந்து பெறக்கூடிய சூழ் நிலைதான் இருக்கிறது. அது தவறு என்று சொல்லவில்லை. நூற் பாலை என்று எடுத்துக்கொண்டால் நம்முடைய மாநிலத்திலே எவ்வளவு செலவு அதிகமாகிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் வெளி இடங்களிலிருந்து இங்கே வருவதற்கு ஒரு ஃப்ரைட் சார்ஜ், உற்பத்தி

1969 மார்ச் 11] [திரு செ. மாதவன்]

செய்த பிறகு மற்ற இடங்களுக்கு அனுப்புகின்றபொழுது ஒரு ஃப்ரைட் சார்ஜ். இப்படியெல்லாம் ஆவதனுலேதான் நூற்பாலைகள் இப்பொழுது கொஞ்சம் கஷ்டப்படுகின்றன.

நம்முடைய மொத்த நூலிலே 50 அல்லது 60 சதவீதம் வெளி நாடுகளிலிருந்து, அதாவது வெளிச் சந்தையை நம்பித்தான் நாம் இருக்கவேண்டி இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதாலேதான் இந்தக் கஷ்டம் இருக்கிறது.

வரியைக் குறைக்கவேண்டுமென்று சொல்லுகின்றபொழுது, வரியைக் குறைத்துவிட்டார்களே, நீங்களும் குறையுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னுர்கள். இப்பொழுதாவது குறைத்துவிட்டார்கள் என்று சொன்னுர்கள், ரொம்ப மகிழ்ச்சி. இங்கே நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அடிக்கடி கோபமாகப் பேசுவார்கள். ஒரு அறிக்கையை அவர் வெளியிடாவிட்டாலும் கூட வெளியில் உள்ள அவருடைய கட்சித் தலைவர்கள் தமிழ்நாட்டின் சார்பாக இந்த வரி பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்று அறிக்கை விட்டார்களா? தங்களுடைய கட்சிக் கூட்டத்திலாவது அதை வற்புறுத்தினுர்களா? எங்களுடைய ஆட்சியிலே நானும், முன்னுள் முதலமைச்சர் அண்ணு அவர்களும் அங்கேயுள்ள தொழில் அமைச்சரையும், முதலமைச்சரையும் பார்த்து வாதாடி இருக்கிறோம். முன்னுள் முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம். நீங்கள் எதை எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யுங்கள் என்று சொன்னுர்களே, அதையாவது எதிர்க் கட்சித் தலைவர் ஏற்றுக்கொண்டார்களா? உற்பத்திச் செலவு எப்படி எப்படி அதிகமாகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

எக்ஸைஸ் டியூட்டி என்று போட்டார்கள். 1965–ஆம் ஆண்டிலிருந்து 1968-ம் ஆண்டிற்குள் மூன்று ஆண்டுகளுக்குள்ளே 33 சதவீதத்தில் இருந்தது 300 சதவீதத்திற்கும், 500 சதவீதத்திற்கும் கூடியிருக்கிறது. இதுதான் இன்றைக்கு இருக்கிற நிலை. இந்த நிலைமையை மாற்றியமைக்கவேண்டுமென்று பலமுறைகள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எந்த அளவுக்குக் கிடைத்து இருக்கிறது? அதுதான் வேதனையாக இருக்கிறது. அவர்கள் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னுர்கள். கொடுத்ததற்கு நன்றி. ஆட்சேபணையில்லை. எந்த அளவுக்குக் கொடுத்திருக்கிறுர்கள், அது யாரைப் பாதிக்கிறது இதுதான் இப்பொழுதுள்ள பிரச்னை.

அந்த அறிக்கை வந்தவுடனே ஒவ்வொரு ஆலைக்கும் சுற்றறிக்கை அனுப்பி எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது, எந்த எந்த அளவுக்கு இலாபம் கிடைக்கும் என்றெல்லாம் அறிவுதற்கு முயற்சி செய்தோம். அது கிடைத்ததற்குப் பின்னுலே பார்த்தால் தமிழ்நாட்டுக்கு ரூ. 15 கோடி வருவதில் அந்த விதிவிலக்கிலே லட்சக்கணக்கிலேதான் வரும் என்று புள்ளிவிவரம் காட்டுகிறது. இது ஒரளவுக்குக்கூடப் போதுமானதல்ல. கொடுக்கப்பட்டிருக்கிற சலுகைகள் கம்போஸிட் மில்களுக்கும், பவர் லூம்ஸ்களுக்கும்தான். நூற்பாலைகளுக்கு அதிகச் சலுகைகள் இல்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களும் நானும் டெல்லிக்குப் போக இருக்கிறோம், அங்கே சொல்ல இருக்கிறோம். இன்ன இன்ன சலுகைகள் தந்தால்தான் நூற்பாலைகளுக்கு வாய்ப்பு வசதிகள் இருக்கும் என்பதைச் சொல்ல இருக்கிறோம்.

அதற்கும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு முக்கிய மான காரணம், நம்மிடத்தில் இருக்கிற மொத்த மில்களில் 175 ஆலைகள் நூற்பாலைகள் மட்டுந்தான்; 24மில்கள்தான் நெய்யும் ஆலையும் சேர்ந்தவை நூற்பாலைக்கென்று தனியாகக் கணக்குப் போட்டு அதற்கு வரி விலக்குக் கொடுக்க மத்திய அரசு முன் வந்தால்தான், நூற்பாலைப் பிரச்சினையை ஒரளவாவது தீர்ப்பதற்கு மத்திய அரசு உதவி செய்திருக்கிறது என்று நம்மால் ஏற்றுக்கொள்ள முடியும். 33·3 சதவிகிதமாக இருந்த அந்த

ந. ப. 12–00

வரி 500 சதவிகிதம் அளவுக்கு கடந்த மூன்றாண்டுகளிலே ஒரு வரி இலக்கை மட்டும் அதிகப்படுத்தி இருக்கின்ற நிலையிலே அந்தத் தொழில் பாதிக்கப்படாது எப்படி நடக்க முடியும்? வரி போடுவதே தவறு என்று சொல்லவில்லை. ஒரு தொழில் நன்றாக நடைபெறும்போது எப்படி சர்க்கார் வரி போட்டு அந்தத் தொழில் மூலம் பலன் பெறுகிறதோ அதே போன்று அந்தத் தொழிலுக்கு ஆபத்து என்று வரும்போது அதற்கு வேண்டிய சலுகைகளைத் தரவேண்டுமென்பதுதான் உண்மை நிலை. அந்தத் தத்துவத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை இருக்கிறது. "நீங்கள் என்ன செய்தீர்கள், காங்கிரஸ் கட்சி என்ன செய்தது" என்று கேட்க முடியும். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்படியே கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே, இரண்டு ஆண்டு காலம் கேட்டும் மன நிறைவு ஏற்படவில்லையா, மறந்து விடுங்கள் என்று சொன்னார்கள். ரொம்ப மகிழ்ச்சி. இப்போதாவது, ஊழல்கள் இருந்தாலும் அதை மறந்து விட்டு நீங்கள் நல்ல முறையிலே நடத்துங்கள் என்று சொன்னார்களே என்பதற்கு மகிழ்ச்சி.

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஊழல்களை மறந்து விடுங்கள் என்று சொல்லவில்லை. சொல்வதை கன்ஸ்ட்ரக்டிவ் ஆகச் சொல்ல வேண்டும் இன்ன இன்ன தவறுகளை செய்தீர்கள் என்று சொல்லவேண்டும் என்றுதான் சொன்னேன். அப்படியே ஊழல்கள் இருந்தாலும் வந்திருக்கின்ற நீங்கள் அவற்றையெல்லாம் போக்குங்களேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : "நீங்கள் அதையெல்லாம் மறந்து விட்டு நல்ல முறையில் நடக்கவேண்டும்" என்று ஆலோசனை கூறினார்கள். நிச்சயம் அதை ஏற்றுக்கொள்ளுகிறேன். நீங்கள் முதலிலே எங்களைத் திட்ட வேண்டும்; திட்டி முடிந்த பிறகு இன்னின்ன காரியங்களை நல்ல முறையில் செய்திருக்கிறீர்கள் என்று சொல்லலாம். அப்படிச் சேர்ந்து சொல்லுவதுதான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கடமை. நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது அப்படி நடந்து கொண்டதாகத்தான் நினைவு.

இந்த ஆட்சி வந்த உடனேயே நம்முடைய அண்ணா அவர்கள் கட்சிப் பிரச்சினையாக எடுக்காமல் இதற்கான குழுக்களில் நிபுணர்களையும், தொழில் அதிபர்களையும், தொழிலாளர் தலைவர்களையும் அழைத்துப் பங்கு பெறச் செய்தார்கள். அத்தகைய ஒரு சிறந்த திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தக் குழு என்ன பரிந்துரை செய்தது? நிர்வாகத் திறமை குறைவு காரணமாகவும், பண வசதி இல்லாத காரணத்தாலும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று அந்தக் குழு பரிந்துரைத்தது. இந்த இரண்டு ஆலோசனைகளையும் ஏற்றுக் கொண்டு உடனடியாக நிறைவேற்றினோம். பண வசதி இல்லாத மில்களுக்குக் கிட்டத்தட்ட ரூ. 222·54 லட்சம் (இரண்டு கோடிக்கு மேல்) பணம் வாங்கித் தரும் பொறுப்பை ஏற்று 5 ஆலைகள் நடைமுறையில் செயல்படத் தொடங்கின. சில ஆலைகளில் நிர்வாகம் சரியில்லை என்ற நிலை இருந்ததன் காரணமாக நிர்வாகத்தில் திறமை படைத்தவர்களை, வேறு ஆலைகளை நடத்துபவர்களை அழைத்து நீங்களே இவற்றுக்கும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆலை அதிபர்களும் அதை ஏற்றுக்கொண்டு நிர்வாகத் திறமையைக் கொடுக்க முன் வந்தார்கள். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லையே, காரியம் நடந்ததா என்று கேட்கிறார்கள். அதற்குக் காரணம் பொதுப் பிரச்சினை. நான் முன்னாலே சொன்ன நூற்பாலைப் பிரச்சினை தீர்ந்தாலொழிய இதிலே ஒரு முடிவு காண முடியாது. இவற்றை எல்லாம் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்ற கோரிக்கைகளும் வருகின்றன. எந்த நேரத்தில் எப்படி ஏற்று நடத்துவது? அதற்கான பொருளாதார வசதி என்ன? அதைத்தான் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சில மாநிலங்களில், பொருளாதார வசதி அதிகமாக இருக்கும் மாநிலங்களில் எடுத்து நடத்துகிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் திருப்பித் திருப்பி 49 சதவிகிதம் 51 சதவிகிதம்—49 சதவிகிதம் 51 சத விகிதம் என்று சொன்னார்கள். அது சொல்லு

1969 மார்ச் 11] [திரு. செ. மாதவன்]

வதற்கு எளிதாக இருக்கிறது. கேட்பதற்குக்கூட இனிமையாக இருக்கிறது. ஆனால் உண்மை வேறு. டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஏற்படுத்தி ஒரு ஆலையை ஏற்று நடத்த முன் வந்தால், அதற்கான பணத் தேவை எவ்வளவு என்று கணக்குப் போட்டால், அதற்குப் பிறகுதான் 'எவ்வளவு' என்ற பிரச்சினை வரும். இருக்கிற பிரச்சினை எல்லாம் எடுப்பதற்கு முன்னால் மத்திய ஆட்சிச் சட்டத்தின் கீழ் எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அந்த ஏற்பாட்டிற்கு மத்திய ஆட்சி ஒத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு எடுத்துக் கொள்ளப்படுகின்ற ஆலை நல்ல முறையில் நடைபெறும் என்ற உண்மை நிலை இருந்தால்தான் நாங்கள் அதை ஏற்போம், இல்லாவிட்டால் ஏற்கமாட்டோம் என்று அவர்கள் சொல்லுவார்கள். இந்த நிலை இன்றைக்கு இருக்கிறது. அந்த முறையைக் காண்பதற்காகத்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்காக மூன்று குழுக்களை நியமித்தோம். அந்த மூன்று குழுக்களும் அறிக்கை தயாரித்துத் தந்திருக்கின்றன. அந்த அறிக்கையின் அடிப்படையில் எந்த ஆலையை எடுப்பது என்பது முடிவாக வேண்டும்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சிறந்த ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த 26 ஆலைகளையும் இனிமேல் நடத்த முடியாது என்று தெளிவாகத் தெரியும்போது அந்த ஆலைகளை யாருக்கும் அஞ்சாமல் மூடிவிடுங்கள் என்ற நல்ல கருத்தைச் சொன்னார்கள். அதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகிறேன். மக்களுடைய வரிப்பணம் விரயமாகாமல் இருப்பதில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற ஒரு லட்சம் தொழிலாளர்களிலே 16,000 தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும் என்ற காரணத்திற்காக மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்க வேண்டாமென்ற நல்ல ஆலோசனையைச் சொன்னதற்காக என்னுடைய நன்றி. பஞ்சாலைப் பிரச்சினையில் இந்த அரசாங்கம் கொஞ்சம்கூடத் தயங்காமல் அதிக அக்கறையோடு, பரிவோடு பரிசீலித்து, தொழிலாளர் தலைவர்களுடைய ஆலோசனைகளை எல்லாம் பெற்று இதற்கு நிச்சயம் முயற்சிகளை எடுக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னொரு ஆலோசனையும் சொல்லியிருக்கிறார்கள். நன்றாக நடைபெறக் கூடிய ஆலைகளின் அதிபர்கள் முன்வந்து பண வசதி இல்லாத காரணத்தாலோ அல்லது நிர்வாகக் குறைவு காரணமாக மூடப்பட்டுவிட்ட ஆலைகளை அவர்களே எடுத்துத் தங்களுடைய ஆலைகளுடன் இணைத்து நடத்த முன் வந்தால் அதற்கு அரசாங்கத்தின் சம்மதத்தைத் தருகிறோம் என்றும் சொல்லியிருக்கிறோம். அப்படி எடுத்து நடத்துகிறபோது அப்படிப்பட்ட ஆலைகளுக்கு வருமான வரிப் பிரச்சினை வருகிறது. இரண்டு ஆலைகளை ஒன்றாகச்சேர்த்து நடத்தும்போது வருமான வரியிலே பாதிப்பு ஏற்படலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்கும் இந்த அரசாங்கம், நம்முடைய துணைப் பிரதமர் அவர்களிடம் (நிதியமைச்சர் அவர்களிடம்) வாதாடி அப்படிப்பட்ட ஆலைகளுக்கு வருமான வரிச் சலுகை கொடுக்க வேண்டுமென்று தெரிவிக்க இந்த அரசு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அவ்வாறு எடுத்து நடத்தும்போது ஏற்கனவே உள்ள கடன் தொல்லைக்கு நிவாரணம் காண வேண்டாமா என்ற கருத்தையும் அரசாங்கம் பரிசீலித்து, மராட்டிய மாநிலத்தில் உள்ளது போல், அப்படிப்பட்ட கடன் பளு எடுத்து நடத்தக்கூடியவர்களைப் பாதிக்காத அளவுக்கு அன்றாடச் செலவுகளைச் சரிக்கட்டி நடத்தும் முறையிலே ஒரு சட்டத்தை இந்த அரசாங்கம் தயாரித்து வருகிறது. இந்த நூற்பாலைப் பிரச்சினையிலே எல்லாத் தரப்பிலும் அங்கத்தினர்கள் மிகுந்த கவலையைத் தெரிவித்தார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இது நம்முடைய அடிப்படையான தொழில்; பல்லாண்டு காலமாக நடைபெற்று வரக்கூடிய தொழில், அதற்கு ஆக்கம் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே இந்த அரசு அக்கறையுடன் கவனம் செலுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு தொழில் வளர்ச்சியே ஏற்படவில்லையா? இதுதான் பெரிய பிரச்சினை. அரசியலுக்குச் சுவையான பிரச்சினை, ஏற்றுக்கொள்ளுகிறேன். எல்லா இடத்திலும் மந்தம் இருக்கிறது என்பதை எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களே ஏற்றுக்கொண்டு விட்டார்கள். இந்த ஆட்சி ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லுவது அவ்வளவு நல்லதல்ல. எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் கொடுக்கப்படுகின்ற பட்டியல்கள், அறிக்கைகள் ஆகியவற்றை ஒன்றுமே படிப்பதில்லையோ என்று மக்கள் நினைத்துக்கொள்வார்களோ என்றுதான் நான் கவலைப்படுகிறேன். ஏராளமான தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கும்போது இவர்கள் ஒன்றுமே ஆரம்பிக்கப்படவில்லை என்று பேசிக் கொண்டிருக்கிறார்களோ என்று மக்கள் நினைத்துக்கொள்வார்களே என்பதுதான் என்னுடைய கவலை அவர்கள் அவ்வாறு பேசுவது உண்மையா என்று பார்த்தால், இல்லை —இந்த ஆட்சி வந்த பிறகு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சிறு தொழில்கள் விரிவாகச் செயல்படத் துவங்கியிருக்கின்றன. கார்ப்பரேஷன் தலைவரிடத்தில் கூடச் சொன்னேன்—ஒவ்வொரு யூனிட்டிலும் அங்குள்ள தொழிலாளர்களிடத்தில் நம்பிக்கை வைத்து அவர்களுடைய ஆற்றலில் நம்பிக்கை வைத்து சம்பளம், கோரிக்கை எழுப்புவது தான் அவர்களுடைய உரிமையென்று நினைக்காமல் அவர்களுக்கும் இந்த தொழிலிலே பங்கு உண்டு, உரிமையுண்டு. இந்த நாட்டிற்குச் சொந்தமான தொழில் என்ற எண்ணம் ஏற்படும் திட்டத்தை தயாரியுங்கள் என்று அவரிடத்தில் சொன்னேன். அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய அரசாங்கம் வந்த பிறகு ஸ்டேட் எய்டு இன்ஸ்ட்ரீஸ் ஆக்டின் கீழ் சிறு தொழில்களுக்கு ஏராளமான கடன் கொடுக்கிறார்கள். பினான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்ஸ் நம்முடைய மாநிலத்தில் இருக்கிறது, மத்தியில் இருக்கிறது. பம்பாயில் இருக்கிறது. உலக பினான்ஷியல் இன்ஸ்டிடியூஷன் இருக்கிறது. இவைகள் மூலம் ஏராளமான கடன்கள் கொடுக்கப்பட்டதற்கான புள்ளி விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அதைப் பார்த்தால் கூட இந்த ஆட்சி வந்த பிறகு கொஞ்சம் கூடச் சுணக்கம் ஏற்படவில்லை, தொழில் வளர்ச்சிக்காக இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இந்தச் சட்டத்தின் கீழ் சிறு தொழிலைக் கொண்டு வர வேண்டும், அதிலே பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்தப் புள்ளி விவரத்தைப் படித்துப் பார்த்திருந்தால் கூடத் தெரியும். 1966-ம் ஆண்டில் சிறு தொழில்களின் எண்ணிக்கை 10,436. 1967-ம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறைந்து விட்டது என்று சொன்னது போல் 11,831 ஆகியிருக்கிறது. 1968 டிசம்பர் வரை 14,200. எப்படிச் சொல்லுகிறார்கள் தொழில்கள் குறைந்து வருகின்றன என்று? அவர்கள் இந்தப் புள்ளி விவரத்தை வைத்துப் பேசுகிறார்களா அல்லது அவர்களிடத்தில் வேறு புள்ளி விவரம் இருந்தால் என்னிடத்தில் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். 'எங்கள் ஆட்சியில் ஆண்டுதோறும் 100, 200 என்றுதான் தொழில்கள் எண்ணிக்கை வளர்ந்தன, உங்கள் ஆட்சியில் ஆண்டுக்கு ஆயிரம் என்ற அளவில்தானே வளருகின்றது, ஆண்டுக்கு இரண்டாயிரம் என்ற அளவுக்கு வளர வேண்டும்' என்று கூறுகிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்களுடைய ஆட்சியில் 100, 200 என்றுதான் தொழில்கள் ஏற்பட்டன, உங்களுடைய ஆட்சியில்தான் ஆயிரக் கணக்கில் வளருகின்றன என்ற இந்தப் பேச்சுத்தான் வேண்டாமென்று கூறுகிறேன். எங்களுடைய ஆட்சியிலே ஆயிரக்கணக்கான தொழில்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குத் தொடர்ச்சியாக நீங்களும் செய்து கொண்டு வருவதாகச் சொன்னால் அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. நாங்கள் செய்ததை ஏற்றுக்கொள்ள ஏன் மறுக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாங்கள் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து பேசும்போது அவர்கள் ஆளும் கட்சியில் இங்கு இல்லை. அன்றைய தொழில் அமைச்சர் அவர்களை நாங்கள் பலமுறை பாராட்டிப் பேசியிருக்கிறோம். இன்றும் அவர்களைப் பாராட்டத் தயாராயிருக்கிறோம். அவர்கள் தமிழ்நாட்டிற்குச் செய்திருக்கிற சேவையை யாராலும் மறக்க முடியாது. அப்படியிருக்க நாங்கள் பாராட்டுவதில்லையே என்று சொல்கிறார்கள்.

திரு பி. ஜி. கருத்திருமன் : நீங்கள் பாராட்டுவீர்கள். உங்கள் தம்பிமார்கள் "குட்டிச்சுவர், குட்டிச்சுவர்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதை இந்த நேரத்தில் மறந்திருப்பீர்கள் என்று நினைத்தேன். அதையே இன்னும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எப்படித்தொழில் வளத்தைப் பெருக்கலாம் என்பது பற்றி ஆலோசனைகள் சொன்னார்கள்.

கனி வளத்தைப் பயன்படுத்தலாம். எங்கெங்கு அதற்கான வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன என்பது பற்றி பல உறுப்பினர்கள் யோசனை சொன்னார்கள், டாக்டர் ஹாண்டே அவர்களும் நல்லமுறையில் யோசனைகளைச் சொன்னார்கள். அவை ஏற்றுக்கொள்ளத்தக்கவை.

சேலத்தில் இன்று "பெல்லட்டைஸேஷன் ப்ளாண்ட்" தொடங்க ஏற்பாடு செய்து விட்டோம். அதற்கு திட்டக் குழு அனுமதி தந்து விட்டது. பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமும் உதவும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை வந்தவுடன் அந்தத் தொழிலின் அடிப்படையில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் இல்லாவிட்டாலும் சிறு சிறு தொழிற்சாலைகள் அதைச் சுற்றிவரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியதுபோல் மதருஸ் ரிஃபைனரி வந்துவிட்டது. அடுத்த மாதம் உற்பத்தி தொடங்கிவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதைச் சுற்றி ஒரு "இண்டஸ்ட்ரியல் பெல்ட்" ஏற்படப் போகிறது. "பெட்ரோ கெமிக்கல்ஸ்" இண்டஸ்ட்ரி ஏற்படப் போகிறது. அதற்கான ஒரு என்ஜினியரிங் கம்பெனியை ஏற்பாடு செய்து அவர்கள் என்னென்ன புதுத் தொழில்களை அங்கு உற்பத்தி செய்யலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நெய்வேலியில் அங்கு கிடைக்கக்கூடிய உப பொருள்களைக் கொண்டு என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம், என்ன சிறிய தொழிற்சாலைகளை உருவாக்கலாம் என்பது பற்றியெல்லாம் யோசிக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தையும், அங்கு வர இருக்கிற உரத் தொழிற்சாலையையும், அங்குள்ள உப்பையும் பயன்படுத்தி ஏராளமான சிறுதொழில்களை உற்பத்தி செய்யலாம் என்ற முயற்சியில் பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இப்படியெல்லாம் சொல்கிறீர்களே, எப்போது செய்யப்போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். அந்தக் கவலை எனக்கும் இருக்கிறது. எவ்வளவோ ஏற்பாடுகளை எல்லாம் செய்கிறோம், டெல்லிக்குப் போக வேண்டும், அவர்கள் என்ன சொல்வார்களோ, தருவார்களோ, இல்லை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோபித்துக் கொண்டு விடுவார்கள் என்பதற்காக மாட்டேன் என்று சொல்வார்களோ என்ற பயம் இருக்கிறது. தொழில் வளம் பெருக வேண்டும், தொழில்களைப் பெருக்கவேண்டும், மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவேண்டும் என்பதில் இந்த அரசு முழு முயற்சியும் எடுக்கிறது.

பல கருத்துக்களைச் சொன்னார்கள், அவைகளைப் பற்றித் தனித் தனியாகச் சொல்லாவிட்டாலும் கூட அவற்றில் இந்த அரசு அக்கறை காட்டும் என்று கூறிக் கொண்டு—எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். அரசாங்கம் நடத்தும் கூட்டுறவு நூற்பாலையில் உள்ள ஒரு காரை தேர்தலுக்காகப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டைத் தந்தார்கள். அது உண்மையிலே கவலை தரக் கூடிய குற்றச்சாட்டு, அது கண்டிக்கத்தக்கதாகும். இதை இந்த அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. அவர்கள் கன்னியாகுமரி பற்றிச் சொன்னார்கள். விசாரணை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். முன்னால் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த—பெயரைச் சொல்லக்கூடாது —ஒருவர் இந்தத் தவற்றைச் செய்தார்கள். அதுபற்றி கூட்டுறவு அமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, தேவையற்ற காரியங்களுக்காக பயன்படுத்தினால் அந்தப் பணத்தை மட்டும் வசூலிக்க அதிகாரம் இருக் கிறதே தவிர அதைத் தடுக்க அதிகாரம் இல்லையென்று அப்போது சொன்னார்கள். யாராகயிருந்தாலும் பொதுச் சொத்தை தனிப்பட்டவர்கள் பயன்படுத்திக்கூடாது என்பதை வலியுறுத்தி அதன்மேல் நடவடிக்கை கள் எடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது கன்னியா குமரியோடு நின்று விடக்கூடாது. அங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினரை குறை சொல்லுவதற்காக அதை அவர்கள் சொல்லியிருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன், எனக்கு அவர்கள் மீது நம்பிக்கையுண்டு. கூட்டுறவுத் துறையில் எங்கெங்கு யார் யார் இருக்கிறார் கள் என்பது அவர்களுக்குத் தெரியும். பின்னால் திரும்பிப் பார்த்தால் தெரிய வரும். யார் தவறு செய்தாலும் அதைக் கண்டிக்கவேண்டும்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்வார்கள் என்று நினைத்தேன். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். நூற்பாலைப் பிரச்சினையைத் தீர்க்க இந்த விசைத்தறி பற்றி நாம் ஒரு முடிவு செய்யவேண்டும். கட்சிபேதம் இல்லாமல் எல்லாக் கட்சியினரும் கூடி இதைப் பரிசீலித்து யாருக்கு பாதகம் வந்தாலும் அந்தப் பாதகத்தைப் போக்கவேண்டுமே தவிர பாதகம் வருகிறது என்று அரசியல் காரணத்திற்காக நீண்ட காலம் இந்தப் பிரச்சினையைத் தள்ளி வைப்பது தவறு என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்காக இந்த அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டு இருப்பவர் களையும், கைத்தறி நெசவாளர்களையும், வேறு தொழில்களில் ஈடு பட்டிருப்பவர்களையும், எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொருகூட்டுறவு சங்கத்தையும் அரசாங்க அலுவலர்கள் அணுகி அவர்கள் கருத்துக்களைச் சேகரித்து வைத்தி ருக்கிறோம். மறுபடியும் அது பற்றி பேசயிருக்கிறோம். எல்லோரும் சேர்ந்து இந்த விசைத்தறி பிரச்சினைக்கு ஒரு முடிவு காணவேண்டும். விசைத்தறியைக் கொண்டு வந்தால் கைத்தறி நெசவாளர்கள், கைத்தறி தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஓரளவு பாதிப்பு ஏற்படத்தான் செய் யும், அந்தப் பாதிப்பை எப்படித் தவிர்க்கலாம் என்று பார்க்கவேண்டும். அப்படிப் பாதிப்பதற்காக இந்தக் கொள்கையை, இருபது ஆண்டு காலம் காங்கிரஸ் ஆட்சி ஒத்திவைத்ததைப் போல் மீண்டும் ஒத்திவைக்க முனைந்தால் நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு தாழ்வு ஏற்படும் என்ற உண்மையைச் சிந்தித்துப் பார்த்து இந்த முயற்சியில் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகுவதற்காக ஆலோசனைகள் சொன்ன அத்தனை கனம் அங்கத்தினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தொழில் வளத்தைப் பெருக்குவதில் இந்த அரசு கொஞ்சம் கூட தயங்காது என்று உறுதி கூறி இந்த உறுதி தந்த காரணத்திற்காக, வெட்டுப் பிரேரணைகள் எல்லாம் வாதத்திற்கு துணை புரியக் கொடுக்கப்பட்டனவே தவிர வலியுறுத்துவதற்கல்ல என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கூறி அதைத் திரும்பப் பெறவேண்டு மென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

1969 மார்ச் 11]

டாக்டர். எச். வி. ஹாண்டே : ஒரு தன்னிலை விளக்கம். அமைச்சர் அவர்கள், சுதந்திரா கட்சி உறுப்பினர் கூட அரசாங்கம் நடத்தக் கூடிய தொழில்கள் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று கூறியது மகிழ்ச்சியை தரக்கூடியது என்று பாராட்டிப் பேசினார்கள். பொதுத் துறையில் தவறு இருந்தால் அதை எடுத்துச் சொல்லவேண்டும் என்பது தான் எங்கள் கருத்தே தவிர வேறு அல்ல. எங்கள் பொதுச் செயலாளரான திரு மஸானி அவர்கள் கூட பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் மத்திய அரசின் தவறுகளை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். பொதுத் துறையில் எந்த ஊழல் இருந்தாலும், பொதுமக்களின் பணம் வீணாகக்கூடாது என்பதுதான் எங்கள் கருத்து. பொதுத் துறையில் பணம் செலவிடும்போது தவறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் காந்திஜி, ராஜாஜி, இவர்களின் கருத்து. அதைத்தான் நான் சொன்னேன்.

திரு பி. ஜி. கருத்திருமன் : அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் கொடுத்தார்கள். முன்பிருந்த திரு ஆர். வெங்கட்டராமன் அவர்கள் நல்லமுறையில் தொழில்துறை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தொழில் மந்தம் இருந்தாலும் எல்லோரையும் அணைத்து நாட்டு மக்களுக்காக நிச்சயமாக பாடுபடுவார்கள் என்ற நம்பிக்கையில், இப்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஒத்துழைக்கவேண்டுமென்ற முறையில் நாங்கள் வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை. (ஆரவாரம்).

கோரிக்கை எண் 20-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,88,08,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச்செலவுக்கு முன் மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் யாவும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,71,39,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது. பிற் பகல் 2–18

(7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

*87. Notification issued with G.O. Ms. No. 2935, Agriculture, dated the 5th October 1968 in regard to an amendment to the Food and Agriculture Department Notification II-1 No. 590 of 1966, dated the 25th November 1965, published at page 214 of Part—II Section of the *Fort St. George Gazette* dated the 23rd February 1966. [*Laid on the Table of the House under section* 44(3) *of the Madras Land Improvement Shem es, Act*, 1959 (*Madras Act* 31 *of* 1959)].

* Laid on the Table of the House on 10th March 1969.

B. Reports, Notifications and other papers.

*73. Note on Demand No. 23—Community Development and Panchayat Development (English).

*74. Policy Note on Tamil Nadu Khadi and Village Industries Board (English).

*75. The Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 8 of 1969).

†76. Note on Demand No. 23—Community Development and Panchayat Development (Tamil).

†77. Policy Note on Tamil Nadu Khadi and Village Industries Board (Tamil).

†78. Financial Supplement to Demand under Community Development 1969-70 (English and Tamil).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

* Despatchedon 8th March 1969.
† Despatched on 9th March 1969.

இணைப்பு I.

[128-ம் பக்கத்தில் உள்ள 278-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) அரசாங்கப் புவியியல் பிரிவினரால் 1960 முதல் 1968 வரையிலான காலத்தில் விரிவாக ஆய்வு செய்து கண்டுபிடிக்கப்பட்ட முக்கியமான கனிப் பொருள்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) **பாக்சைட் அலுமனிய கனிப்பொருள் :—**

(அ) கோணலாறு பகுதியில் பேரிஜம் அருகில் கோடைக்கானல் குன்றுகளில்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த குன்னூர் எலடா.

(2) **வெர்மிகுலைட் (விரியும் அப்பிரகம்) :—**

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் கொரட்டி என்னும் இடத்திற்கு அருகிலுள்ள சேவத்தூரில்.

(3) **சுண்ணாம்புக்கல் (Limestone) :—**

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த வரவனை மீனாட்சிபுரம், மதுரை மாவட்டத்திலுள்ள பாளையம், கஜிலம்பட்டி ஆகியவற்றிற்கு இடையிலுள்ள சுண்ணாம்புக்கல் படிவப் பகுதி.

(ஆ) ராமனாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சாத்தூர் வட்டத்திலுள்ள ஆலங்குளம் கள்ளமநாய்க்கன்பட்டி பகுதி.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கல்லை (பெரம்பலூர்), திருப்பத்தூர் (லால்குடி வட்டம்), கல்பாளையம், ரெட்டிப்பாளையம் (உடையார்பாளையம் வட்டம்).

(ஈ) ராமனாதபுரம் மாவட்டத்தின் அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள பலவநத்தம், பந்தல்குடி.

(உ) சேலம் மாவட்டத்திலுள்ள சங்கரி துர்க்கம், திருச்செங்கோடு, நாமக்கல் வட்டம்.

(ஊ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கயத்தாறு அருகே.

(எ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் சிறுகுடி அருகில்.

(4) **படிகம் (Quartz):—**

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

(அ) குளித்தலை வட்டத்தில் மணப்பாறை, கரூர் வட்டத்தில் அரவக்குறிச்சி.

சேலம் மாவட்டம்—

சங்ககிரி வட்டத்தைச் சேர்ந்த இடப்பாடி, ஜலகண்டபுரம்.

(5) **களிமம் (Feldspar):—**

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

நாகனூர், மணப்பாறை, அரவக்குறிச்சி, குளித்தலை, கரூர் வட்டங்கள்.

(6) **களிக்கல் (Gypsum):—**

கோயம்புத்தூர் மாவட்டம்—

பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வட்டங்களைச் சேர்ந்த சில பகுதிகளில் கிடைக்கிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

லால்குடி, பெரம்பலூர் வட்டங்கள்.

(7) **மட்ட உலோகம்** (**Base metal**):—

செம்பு.—

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்தைச் சேர்ந்த மங்கமலை ஒதுக்கக் காடுகள்.

களிமண் (Clays).—

தென் ஆர்க்காடு மாவட்டம், பண்ருட்டி, செங்கற்பட்டு மாவட்டம், திருமழிசை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் காரை.

(இ) அரசாங்கப் புவியியல் துறையினரால் மாநிலத்தின் பல பகுதிகளிலும் செய்துவரும் புலனாய்வுகளின் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

(1) கிளிஞ்சல் கண்டுபிடித்தல்—செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பழவேற்காடு.

(2) சுண்ணாம்புக்கல், களிக்கல் கண்டு பிடித்தல்—திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி அருகில்.

(3) காரீயம் (**Graphite**) புலனாய்வு—திருநெல்வேலி மாவட்டம் அம்பா சமுத்திரம் வட்டம் பாபநாசம் அருகில்.

(4) பவழச் சுண்ணாம்புக்கல் புலனாய்வு—ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேஸ்வரம் பகுதி.

(5) களிமண் புலனாய்வு—தென் ஆர்க்காடு மாவட்டம் சரைசங்கல் அருகே மண்பாண்டத் தொழிற்சாலைக்காக.

(உ) ஆம். ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களின் பகுதிகளாய் அமைந்துள்ள திட்டப் பகுதியில் கனிப்பொருள் வளத்தை அறிய கனிப் பொருள் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. விமானத்திலிருந்து படம் எடுத்தலும், விமானம் மூலம் புவியியலாராய்ச்சியும் முடி வுற்றுள்ளன. அவற்றின் விவரங்களை வகுத்துக் கூறும் அறிக்கை இன்னும் சில திங்கள்களில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(*a*) The following are the important mineral deposits discovered and prospected in detail by the State Geology Branch between the period extending from the year 1960-1968:—

(1) *Bauxite* (Aluminium ore)—

(*a*) Near Berijam in Konal-Ar area, Kodaikanal Hills.

(*b*) Elada, Coonoor, Nilgiris district.

(2) *Vermiculite* (an expandable mica)—

At Sevathur near Koratti, Tiruppathur taluk, North Arcot district.

(3) *Limestone*—

(*a*) The belt of limestone between Meenakshipuram Varavanai in Tiruchirappalli district and Palaiyam, Gajilampatti in Madurai district.

(*b*) Alangulam-Kallamainciakenpatti area, Sattur taluk, Ramanthapuram district.

(c) Kallai (Perambalur), Tirupathur (Lalgudi taluk), Kalpalayam and Reddipalayam (Uddiyarpalayam taluk) in Tiruchirappalli district.

(d) Pandalkudi and Palavanatham in Aruppukottai taluk, Ramanathapuram district.

(e) Sankaridrug, and Tiruchengode in Namakkal taluk of Salem district.

(f) Near Kayathar in Kovilpatti taluk, Tirunelveli district.

(g) Near Sirugudi, Melur taluk, Madurai district.

(4) *Quartz*—

Tiruchirappalli district—

(a) Manapparai in Kulithalai taluk, Aravakurichi in Karur taluk.

Salem district—

(a) Idapadi, Jalakandapuram, Sankari taluk.

(5) *Feldspar*—

Tiruchirappalli district—

(a) Near Naganur, Manapparai and Aravakurichi, Kulithalai and Karur taluks.

Salem district—

(a) Idappadi and Jalakandapuram, Sankarai taluk.

(6) *Gypsum*—

Coimbatore district—

In several areas of Palladam, Pollachi and Udumalpet taluks.

Thiruchirappalli district—

In Lalgudi and Perambalur taluks.

(7) *Basemetal*—

Copper—

Mangamalai R.F.

Thovala taluk, Kanyakumari district.

(8) *Clays*—

Panruti, South Arcot district.

Thirumazhisai, Chingleput district.

Karai, Tiruchirappalli district.

(b) The following are the investigations being carried out by the State Geology Branch at present in different parts of the State:—

(1) Prospecting for limeshells—Chingleput district in Pulicat area.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(2) Prospecting for limestone and Gypsum—Tirunelveli district near Kovilpatti.

(3) Investigation for Graphite near Papanasam—Tirunelveli district, Ambasamudram taluk.

(4) Investigation for coral limestone—Ramanathapuram district in Rameswaram area.

(5) Investigation for clay—South Arcot district near Karaisangal for Ceramic Centre.

(c) Yes, Sir. A mineral survey project has been commissioned under the United Nations Development Programme to explore the mineral potentialities of the Project area forming parts of South Arcot, North Arcot and Salem districts. Aerial photography and air-borne geophysical surveys have been completed and detailed interpretation reports are expected in a few months time.

Appendix II.

[*Vide* answer to starred question No. 270 on page 140]

The following extension methods are adopted by the Government to apprise the farmer of the latest findings in agricultural science :—

1. *Individual contacts—Farm and home visits.*—Extension Officers, Fieldman, Demonstration Maistries and Officers of the Agricultural Department and the Village Level Workers of the Rural Development Department meet the farmers individually at home or in the farm to apprise them of the latest findings in the agricultural science.

Difficulty is, however' experienced in apprising the farmers individually of the latest findings in agricultural science. Hence extension workers conduct public meetings in consultation with the Panchayat President and villagers experienced in agriculture, with a view to apprise them of the latest findings. On such days of meetings, exhibitions are conducted and film shows are arranged. Pamphlets are also distributed free of cost.

2. *Group contacts.*—Farmers, who are enthusiastic on achieving a common object are formed into groups and latest findings or methods are explained to them.

3. *Methods demonstrations.*—" Methods demonstrations " are conducted before groups of farmers with a view to explain to them new methods of farming.

To emphasis that a particular method recommended by the Agriculture Department can be followed by farmers themselves, Extension Workers conduct " Methods demonstrations ". The questions put by farmers are answered and their doubts are cleared.

4. *Result demonstrations.*—To explain to the farmers that a certain new variety of seed or a new method yields good result,

extension workers conduct "Result demonstrations". The "Result demonstrations" are conducted in the lands of farmers themselves and therefore in their presence.

Extension Workers often supervise the "Result demonstions" and assist the farmer at each and every stage in undertaking cultivation work properly. The "Result demonstration" in the final stage takes place in the presence of several farmers when the result of new methods are explained to them.

5. *Campaign.*—To propagate on large scale, the findings which have been accepted by the villagers as good as a result of "Method " and "Result demonstrations", campaigns are undertaken. This method is followed in works like "Rat Eradication" and "Crop protection".

6. *Voluntary and local leadership.*—After selecting village leaders who willingly help others and set an example to others, the Extension Workers explain to them new methods and through them propagate such new methods. As these leaders explain to farmers what they have learnt from the Extension Workers, this helps to propagate the new findings among the farmers in a short time.

7. *Conducting exhibitions.*—Exhibitions are helpful in generating enthusiasm among the people and in propagating new findings among the farmers by displaying exhibits, arranging models, posters, photos, etc., in a proper manner.

These exhibitions are conducted through the Panchayat Unions and the Agriculture Department. They are held during festival time or on 'shandy' days with a view to benefit large number of persons.

8. *Illustrated talk.*—In explaining to the farmer how to do a work, black boards, Fiannelgraphs, placards, models, etc., are used to make the talk interesting and beneficial. Preparation of compost, eradication of pests and conservation of soil, etc., explained by this method.

9. *Tours.*—To visit the Agricultural Research Stations, State Seed Farms, exhibitions, agricultural markets, etc, and to learn personally the new methods followed there, tours are arranged.

10. *Radio programme.*—Radio talks, dialogues, folk songs, dramas and questions and answers conveying agricultural news are broadcast to thousands of farmers from the Tiruchi Radio Station both in the mornings and evenings under the head "Farm and Home."

11. *Literature.*—Leaflets and pamphlets relating to the new findings are published through the Tamilnad Agricultural Information Centre and are distributed to the farmers free of cost.

The new findings in agricultural science are explained to important agriculturists by circular letters. The Extension Specialist, Agricultural College, Coimbatore, communicates to the Extension Workers through 'Agricultural News Letter' the new findings in agricultural science as and when they are made known.

'Mezhichelvam' is a monthly issue published by the Agriculture Department. The latest findings, package cultivation methods, etc., are published in this magazine in the form of essays, stories, poems, conversation and questions-answers.

Last year, a book named "Agricultural Notes" containing 754 pages was printed and sold to the farmers at a cost of Re. 0·50. This book was priced at such a low cost, considering that it would be a good companion to the farmers.

12. *Visual, Audio and Audio-visual aids.*—To propagate the latest findings, the Tamilnad Agricultural Information Centre and the press of the Thanjavur Intensive District Agricultural Programme print and publish posters which attract attention and evoke enthusiasm.

The experiences of good farmers are tape-recorded and broadcast.

Slides relating to agriculture are prepared and exhibited in cinema theatres.

The Agriculture Department produces good films and exhibits them through Panchayat Unions. The mobile van attached to the Tamilnad Information Centre propagates the latest findings throughout Tamilnad by exhibiting agricultural films.

13. *Songs and dramas.*—Songs and dramas are written, having as central theme the latest findings in agricultural science and are sung and enacted by the Rural Development and Information and Publicity Departments. These songs and dramas also finds a place in Radio programmes.

14. *Field Day.*—Field days are celebrated in the agricultural Research Stations, seed farms and model farms. On these days, the latest findings are propagated by conducting public meetings and exhibitions and arranging film shows.

15. *Farmers' training.*—Arrangements are being made for the first time this year, to provide training to farmers in Bhavanisager and Navlok in new methods of cultivation.

16. *Agricultural seminars.*—Agricultural seminars were conducted last year for the first time in every district with a view to apprise the farmers of the latest findings in agricultural science, to explain the new methods and to solve the problems confronting the farmers.

விவசாய விஞ்ஞானத்தில் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய முறைகளை விவசாயிகளுக்கு விளக்குவதற்கு தமிழக அரசாங்கம் பின்கண்ட விரிவினை முறைகளை (Extension Methods) பின்பற்றுகிறது:—

1 **விவசாயிகளைத் தனித்தனியே சந்தித்தல்—விவசாயியின் பண்ணைக்கும் வீட்டிற்கும் செல்லுதல் (Individual Contacts—Farm and Home Units).**—தமிழக விவசாயத் துறையைச் சார்ந்த விவசாய விஸ்தரிப்பு

அலுவலர்கள் (Agricultural Extension Officers), வயலர்கள் (Fieldmen), விளக்கிக்காட்டும் மேலாளர்கள் (Demonstration Maistries) கிராம நலத் துறையைச் சார்ந்த கிராம சேவகர்கள் ஆகியோர்கள் முதல், விவசாயத் துறையில் உயர்மட்ட அதிகாரிகள் வரை விவசாயிகளை நேரடியாக, அவர்களுடைய பண்ணையிலோ அல்லது வீட்டிலோ சந்தித்துப் புதிய கண்டு பிடிப்புகளைப் பற்றிக் கூறி வருகின்றனர்.

ஆனால் இம் முறையில் எல்லா விவசாயிகளையும் தனித்தனியே சந்தித்து புதிய கண்டுபிடிப்புகளைக் கூறுவதென்பது கடினமாக உள்ளது. எனவே விரிவினை ஊழியர்கள் ஏராளமான விவசாயிகளைச் சந்தித்து விவசாயத்தில் நல்ல அனுபவம் உள்ள கிராமத் தலைவர்களையும், பஞ்சாயத்து தலைவர்களையும் கலந்தாலோசித்து புதிய கண்டு பிடிப்புகளைத் தெரிவிப்பதற்கான பொதுக் கூட்டங்களை நடத்துகிறார்கள்.

இப் பொதுக் கூட்டம் நடக்கும் நாளில் பொருட்காட்சியும், சினிமாவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. சிறு வெளியீடுகளும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

2. **விவசாயிகள் குழுவினைச் சந்தித்தல் (Group contacts).**—ஒரு பொதுக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் ஆர்வம் உள்ள தனிப்பட்ட விவசாயிகளைச் சேர்த்து, ஒரு குழுவாக ஆக்கி, அவர்களுக்குப் புதிய கண்டு பிடிப்புகள் அல்லது புதிய முறைகள் பற்றி விளக்கப்படுகிறது .

3. **செய்முறை நிரூபணம் (Methods Demanstrations).**—குழுக்களின் முன்னால், புதிய முறைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்முறை நிரூபணம் நடத்திக் காட்டப்படுகிறது.

விவசாயத் துறை சிபாரிசு செய்யும் குறிப்பிட்ட முறையைத் தாங்களாகவே செய்து கொள்ள முடியும் என்பதை விவசாயிகளுக்கு நன்கு வலியுறுத்துவதற்காகவே விரிவினை ஊழியர்கள் புதிய முறையில் எவ்வாறு செய்யவேண்டும் என்பதுபற்றிய செய்முறை நிரூபணம் செய்து காட்டுகிறார்கள்.

அப்போது விவசாயிகள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளித்து, அவர்களது சந்தேகமும் போக்கப்படுகிறது.

4. **முடிவு நிரூபணம் (Results Demonstrations).**—ஒரு புதிய ரகமோ, அல்லது புதிய முறையோ விவசாயிகளுக்கு நல்ல பயனைத் தரும் என்பதை விளக்க விரிவினை ஊழியர்கள் முடிவு நிரூபணங்களைச் செய்து காட்டுகின்றனர். முடிவு நிரூபணங்கள் விவசாயிகளின் நிலத்திலேயே, விவசாயிகள் முன்னிலையிலேயே செய்யப்படுகின்றன.

முடிவு நிரூபணங்களை விரிவினை ஊழியர்கள் அடிக்கடி மேற்பார்வையிடுவதுடன், ஒவ்வொரு சாகுபடி வேலையையும், விவசாயியே முறைப்படி செய்யத் துணைபுரிகின்றனர்.

இத்தகைய நிரூபணங்களின் முடிவு சோதனையை விவசாயிகள் பலர் முன்னிலையில் நடத்தி, புதுமுறையால் ஏற்பட்ட பலன் விவசாயிகளுக்கு விளக்கப்படுகிறது.

5. **தீவிர இயக்கம் (Campaign).**—செய்முறை நிரூபணங்கள் மூலமாகவும் (முடிவு நிரூபணங்கள் மூலமாகவும் நல்ல பயன்தரக் கூடியவை என்று கிராம விவசாயிகள் ஒப்புக்கொண்டவைகளை விவசாயிகளிடையே அதிக அளவில் பரப்புவதற்காக தீவிர இயக்கம் (Campaign) நடத்தப்படுகிறது.

எலி ஒழிப்பு, பயிர்ப் பாதுகாப்பு போன்ற பணிகளில் இம்முறை பின்பற்றப்படுகிறது.

6. தானே முன்வரும் கிராமத் தலைவர்கள் (Voluntary and Local Leadership).—மற்ற விவசாயிகளுக்காக மகிழ்ச்சியுடன் பணிபுரியும் பண்பு உள்ளவராகவும், மற்ற விவசாயிகளுக்கு வழிகாட்டியாய் விளங்கு பவராகவும் தானே பொது வேலைகளில் ஈடுபட முன்வரக் கூடியவராகவும் உள்ள கிராமத் தலைவரைத் தேர்ந்தெடுத்து, அவருக்கு விரிவினை ஊழியர்கள் புதிய கண்டுபிடிப்புகளை விளக்கி, புதிய முறைகளைப் பின்பற்ற செய்கின்றனர்.

இத் தலைவர்கள் விரிவினை ஊழியர்களிடமிருந்து அறிந்தவற்றை விவசாயிகளிடை விளக்குவதால், குறுகிய காலத்தில் இம்முறையினால் பல விவாசாயிகளிடையே புதிய கண்டுபிடிப்புகளைப்பரப்ப முடிகிறது.

7. கண்காட்சிகள் நடத்துதல் (Exhibition).—புதிய கண்டுபிடிப்புகளை விவசாயிகளிடையே பரவச் செய்ய காட்சிப் பொருள்கள், மாதிரிகள் போஸ்டர்கள், புகைப்படங்கள் முதலியவற்றை முறைப்படி அமைத்து, பார்ப்பவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டுவதற்குப் பொருட்காட்சிகள் மிகவும் துணைபுரிகின்றன.

விவசாயத் துறை மூலமாகவும் பஞ்சாயத்து யூனியன்கள் மூல மாகவும் இத்தகைய பொருட்காட்சிகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆயிரக் கணக்கான பேர் இதனால் பயனடையும் நோக்கத்துடன் இவைகள் திரு விழாக் காலங்களிலோ, சந்தை நாட்களிலோ ஏற்படுத்தப்படுகின்றன.

8. விளக்கத்தோடுகூடிய பேச்சு (Illustrated talk).—விவசாயிகளி டையே பேசும்பொழுது, அப் பேச்சு சுவையுள்ளதாகவும், நல்ல பயனு டையதாகவும், விரைவில் பரவக்கூடியதாகவும் இருக்க கரும்பலகை, "பிளானல் கிராப்", "பிளாகார்டு", மாதிரிகள் முதலியவைகளைக் கொண்டு ஒரு வேலையை எப்படி முடிப்பது என்பதுபற்றி விளக்கப்படு கிறது, கம்போஸ்ட்டு தயாரிப்பது, பூச்சிகளை ஒழிப்பது, மண்வளப் பாதுகாப்பு போன்றவைகள் இம்முறையில் விளக்கப்படுகின்றன.

9. சுற்றுப்பயணம் (Tour).—விவசாய ஆராய்ச்சி நிலையங்களையும், அரசாங்க விதைப் பண்ணைகளையும், பொருட்காட்சி, விவசாய சந்தை போன்றவைகளையும் நேரில் பார்வையிட்டு, அங்கு மேற்கொள்ளப்படும் புதிய முறைகளை விவசாயிகள் தெரிந்து கொள்ள சுற்றுப்பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

10. வானொலி நிகழ்ச்சிகள் (Radio Programmes).—பல்லாயிரக்கணக் கான விவசாயிகளுக்கு நாள்தோறும் காலையிலும் மாலையிலும், விவசாயம் பற்றிய செய்திகள், பேச்சு, உரையாடல், கிராமிய பாடல், நாடகம், கேள்வி-பதில் ஆகியவற்றின் மூலம் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து பண்ணை, வீடு (Farm and Home Unit) ஒலிபரப்பு திட்டத்தின்கீழ் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

11. வெளியீடுகள் (Literature).—தமிழ்நாடு விவசாய செய்தி நிலையத்தின் மூலமாக புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய சிறு துண்டு வெளி யீடுகளும், புத்தகங்களும் (Leaflets and Pamphlets) வெளியிடப்பட்டு, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

பல முக்கிய விவசாயிகளுக்கு அவ்வப்போது விவசாயத்தில் ஏற் பட்டுள்ள புதுமைகள் சுற்றறிக்கை கடிதங்கள் (Circular letters) மூலம் விளக்கப்படுகின்றன.

அவ்வப்போது வெளியாகும், புதிய கண்டுபிடிப்புகளை விவசாய செய்திக் கடிதம் (Agriculture News Letters) என்பதன் மூலம் கோவை விவசாயக் கல்லூரி விரிவினை வல்லுநர், விரிவினை ஊழியர்களுக்குத் தெரிவித்து வருகிறார்.

"மேழிச் செல்வம்" என்ற மாத இதழ் வேளாண்மைத் துறையால் வெளியிடப்படுகிறது. இதில் புதிய கண்டுபிடிப்புகள், கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள் முதலிய எல்லா விபரங்களும், கட்டுரை, கதை, கவிதை, உரையாடல், கேள்வி-பதில் ஆகிய உருவங்களில் வெளியிடப்படுகின்றன.

1969 மார்ச் 11]

சென்ற ஆண்டு "விவசாயக் குறிப்புகள்" என்ற 754 பக்கம் கொண்ட புத்தகம் 50 பைசா விலையில் அச்சிடப்பட்டு விவசாயிகளுக்கு விற்கப்பட்டது. இந்நூல் விவசாயிகளுக்கு ஒரு நல்ல துணைவனாக இருக்கும் என்பதாலேயே எல்லா விவசாயிகளும் வாங்கும் பொருட்டு குறைந்த விலையிலேயே வெளியிடப்பட்டது.

12. பார்க்காகூடிய, கேட்கக்கூடிய பார்க்கவும் கேட்கவும் கூடிய சாதனங்கள் (Visual, Audio and Audio-visual Aids).—புதிய கண்டு பிடிப்புகளை விளம்பரப்படுத்துவதற்காக வழியிலே சென்று கொண்டிருப்பவரின் கண்ணைக் கவர்ந்து, ஆர்வத்தைத் தூண்டிவிடக்கூடிய சுவரொட்டிகளை (Posters) தமிழ்நாடு விவசாயத் செய்தி நிலையமும், தஞ்சாவூர் தீவிர விவசாய மாவட்டத் திட்ட அச்சகமும் வெளியிட்டு வருகின்றன.

சிறந்த விவசாயிகளின் அனுபவங்கள் "டேப் ரிக்கார்டர்" மூலம் பதிவு செய்து வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன.

விவசாயம் பற்றிய 'சிலேடு'களைத் தயாரித்து சினிமாக் கொட்டகைகளில் வெளியிடப்படுகின்றன.

விவசாயத் துறை பல நல்ல சினிமாக்களைத் தயாரித்து பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக வெளியிட்டு வருகிறது. விவசாய சினிமா படங்களைக் காட்டுவதற்கென தமிழ்நாடு விவசாயச் செய்தி நிலையத்திலுள்ள "சுற்றும் லாரி" (Mobile Van) மூலம் தமிழ்நாடெங்கும் சினிமா மூலமும் புத்தம் புதிய கண்டுபிடிப்புகள் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

13. பாடல்களும் நாடகங்களும் (Songs and Dramas).—புதிய கண்டுபிடிப்புகளைப் பற்றிய பாடல்களும், புதிய கண்டுபிடிப்புகளை மையமாகக் கொண்ட நாடகங்களும் எழுதப்பட்டு, கிராமநலத் துறை, செய்தி, மற்றும் விளம்பரத் துறை ஆகியவற்றின் மூலமாக பாடியும், நடித்தும் காட்டப் படுகின்றன. இத்தகைய பாடல்களும், நாடகங்களும் வானொலியிலும் தற்போது இடம் பெறுகின்றன.

14. வயல் தினம் (Field Day).—ஆராய்ச்சி நிலையங்களிலும் விதைப் பண்ணைகளிலும் மற்றும் மாதிரி விளக்கப் பண்ணைகளிலும் வயல் தினம் கொண்டாடப்படுகிறது. இத்தினங்களில் பொதுக்கூட்டங்கள் பொருட்காட்சி, சினிமா ஆகியவற்றின் மூலம் புதிய கண்டுபிடிப்புகளை விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

15. விவசாயிகள் பயிற்சி (Farmers' Training).—பவானிசாகர், நவலாக் ஆகிய இடங்களில் இந்த ஆண்டு முதன் முதலாக விவசாயிகளுக்குப் புதிய முறை சாகுபடியில் பயிற்சி அளிக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

16. விவசாய கருத்தரங்குகள் (Agricultural Seminars).—புதிய கண்டு பிடிப்புகளையும், உற்பத்தியைப் பெருக்கிடும் முறைகளையும், வி வதற் காகவும், உழவர்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களை அறிந்து, அவர்களை உடனே தீர்ப்பதற்காகவும் சென்ற ஆண்டு முதன்முதலாக எல்லா மாவட்டங்களிலும் விவசாயக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

இணைப்பு III.

[154-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

பெரிய நகர்த்தரத் தொழில்கள்

முன்னுரை.

வளர்ச்சி பெற்று வரும் நாடுகளில் மிக இயல்பாக ஏற்படும் மக்கள் தொகைப் பெருக்கம், மக்கள் செறிவு, வாழ்க்கைத் தரக் குறைவு, மூலதனக் குறைவு சேமிப்புக் குறைவு போன்ற சிக்கல்களெல்லாம் தமிழ்

நாட்டிலும் மலிந்திருந்தன. இந்த இடர்பாடுகள் எந்த அளவிற்கு எவ்வகையில் தீர்க்கப்பட்டுள்ளன என்பதை நோக்கும்போதுதான் தமிழ் நாட்டின் தொழில்வள முன்னேற்றத்தின் சிறப்பு விளங்கும். குறிப்பாக சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு நமது தாயகத்தின் பிற மாநிலங்களைவிட முன்னணியிலேயே இருந்து வந்துள்ளது. அண்மைக் காலத்தில் தொழில் துறையில் மந்த நிலை ஏற்பட்டிருந்த போதிலும் பொதுவாக நோக்குமிடத்து, இம்மாநிலம் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் முன்னேற்றம் கண்டுள்ளது. முன்னேற்றவேகம் ஒருசில நேர்வுகளில் தடைபட்டிருந்த போதிலும் தொழில்வளர்ச்சி குன்றி விடவில்லை.

தமிழ்நாடு தனது சீரான பொருளாதார முன்னேற்றத்திற்குத் தொழில் வளர்ச்சியே முக்கிய கூறாக இருக்கவேண்டுமென்பதை உணர்ந்தே முடிவு செய்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து திட்டங்கள் வகுக்கப்படுவதற்கு முன்னரேயே தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி நல்ல நிலைமையிலிருந்தது. பல்வேறு பகுதிகளில் தொழில்கள் சம அளவிலும், ஒரே நேரத்திலும் வளர்ச்சியடைந்துள்ள நேர்வுகளிலும், இந்த முன்னேற்றத்திற்கு அடிப்படையாக, பல காரணங்களைச் சொல்ல லாம். பல ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி மலர்ந்ததற்கு இம் மாநிலத்தில் 1930—39 ஆண்டு வரை நீர் மின் சக்தி உற்பத்தி செய்யப்பட்டதைக் காரணமாகச் சொல்லலாம். இந்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இதுவே அடி கோலியது என்றும் கூறலாம். மேலும் இங்குத் தொழிலாளர் குறைந்த ஊதிய வீதங்களில் கிடைத்தனர். நீர் மின்சக்தி, ஏராளமான அளவில் குறைந்த விலையில் கிடைத்தது. இவை காரணமாக கோவையிலும், மதுரையிலும் பல பஞ்சாலைகள் நிறுவப்பட்டன. மின்சக்தி கிடைப்பதன் காரணமாகவே மேட்டூரில் ரசாயனத் தொழிலும் நிறுவப்பட்டது.

என்றாலும், தமிழ்நாட்டில் இயற்கை வளங்கள் போதிய அளவில் இல்லை. கனி வளம், எரி பொருள், காட்டு வளம், நிலம் வளம் ஆகியவை நமது மாநிலத்தில் மிகவும் குறைவு. புதிய வாயில்களைக் கண்டுபிடிப்ப தற்கும், ஏற்கெனவேயுள்ள வாயில்களை நன்கு பயன்படுத்துவதற்கும் செவ்விய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், விளைச்சல் நிலங்களில் பெரும்பான்மை யானவை சாகுபடியின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. பாசன வசதிகளும் மிகவும் முன்னேறிய நிலையிலுள்ளன. வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் அனைத்தையும் இம் மாநிலம் ஏறத்தாழ பயன்படுத்திவிட்டது. எனவே வேளாண்மைக்கு அடுத்தபடியாகச் சிறப்பிடம் வாய்ந்த தொழில்கள் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில், இம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழில்வள முன்னேற்றம் நல்ல தகுதியான அடிப்படையாக அமையும். பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில் முன்னேற்றம் ஒரு கருவியாகுமென்பது சர்ச்சைக்குரிய வொன் ருகும். அடிப்படைத் தொழிலாகிய வேளாண்மையை வளர்ச்சி செய் யாமல், தொழில் வளர்ச்சிக்கே சிறப்பிடம் கொடுத்து வந்தால், வலிமை யற்ற, நலிந்த அடித்தளத்தின் மீது சுமை மிகுந்த பொருளாதார அமைப்பை ஏற்றுவது போன்றதாகும். ஆயினும், தமிழ் நாட்டைப் போல் வேளாண்மை முழு வளர்ச்சியடைந்துள்ள பகுதிகளில் மேற் கொண்டும் பொருளாதார வளர்ச்சி பெருகுவதற்குத் தொழில் வளர்ச்சி பெரிதும் உதவ வேண்டும்.

தொழில் வளர்ச்சி குறித்துத் திட்டமிட்டு செயல்படுவதின் நன்மைகள் எல்லோருக்கும் தெரிந்ததே. புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்து வதற்கும், ஏராளமான அளவில் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்கும் வேளாண்மையை நம்பியிருக்கும் தொழிலாளர்களைத் தொழில்களின்பால் ஈர்ப்பதற்கும், வேலையின்றி இருப்போர், போதிய வேலையின்றி இருப்போர் இவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும, வேளாண்மையில் நவீன முறைகளை மேற்கொள்ளுவதற்கும், தனி ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய வருவாயைப் பெருக்குவதற்கும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த

துவதற்கும், பயன கொள்வோர் பொருள்கள் பலவற்றை உற்பத்தி செய்வதனால் புதிய விற்பனை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக ஏராளமான தொடக்கத் துணைப் பணிகளை அடிப்படையாகக் கொண்ட தொழில் அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் சமுதாய நல முன்னேற்றம், வளம் கொழுமிய செல்வ நிலை ஆகியவற்றிற்கு வழி கோலவும் தொழில்வள முன்னேற்றமே ஒப்புதல் பெற்ற ஒரே ஒரு வழியாகும். இவ்வாறாக அவசியத்தின் காரணமாகவும் தனது விருப்பத்தின் காரணமாகவும் தொழில் வள முன்னேற்றத்தில் மும்முரமாகக் கருத்து செலுத்தத்தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டில்இயற்கை வளங்கள் போதிய அளவில் இல்லாவிடினும் தொழில் வளர்ச்சியை மேற்கொள்ளுவது தமிழ் நாட்டிற்கு பெரியதோர் அறைகூவலாகும். அறிவு மிகுந்த கட்டுப்பாட்டுடன் கூடிய தொழிலாளர்களும், குறைந்த செலவில் மின்சக்தியும் கிடைத்தமையே தொடக்கத்தில் தொழில் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த போதிலும் தமிழ் நாட்டின் தொழில் வளத்திற்கு, இவை மட்டுமே ஆக்கம் பெறும் புதிய துறைகளை வளர்க்க ஆர்வம் காட்டி அதற்கும் வேண்டிய பெரும் திட்டங்களை உருவாக்கி அவசியமான திட்டங்களுக்கு ஆதரவு நல்கி அரசு மேற் கொண்டுவரும் பெரும் முயற்சியே தமிழ்நாட்டின் தொழில் வள முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாகும். தொடக்கத்தில் தொழில் வளர்ச்சி பஞ்சாலைகளை நிறுவுவதில்தான் இருந்தது. ஆனால் இப்பொழுது பல்வேறு வகையான தொழில்கள் தோன்றி இந்நாட்டில் பயன்படுத்துவதற்காகவும் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காகவும் கனரகப் பொறியியல், மின் கருவிகள் உற்பத்தி, வேளாண்மைக்கான வண்டிகள், இயந்திரங்கள் உற்பத்தி, தொழிற்சாலை, ரசாயனத் தொழில் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்கான வாயு உற்பத்தி பல்வகையான பயன் கொள்வோர் பொருள்கள் உற்பத்தி ஆகியவை மாநில அரசு தொழில்வள முன்னேற்றத்தில் பெரும்பங்கு கொண்டுள்ளதற்குச் சிறந்ததோர் சான்றாகும்.

தமிழ்நாட்டில் இயற்கை வளங்கள் போதிய அளவில் இல்லாத போதிலும் இம்மாநிலம் எங்கணும் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி உறுதியான முறையான வளர்ச்சிக்கு வழியமைக்கக்கூடிய சமுதாய, பொருளாதார சூழ்நிலையை ஏற்படுத்தி அங்கு மூலதன முதலீடு செய்வோர் இயைபான பொருளாதார, சமூக சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வகை செய்ததன் மூலம் தமிழ் நாடு தனது இயற்கை வளப் பற்றாக்குறையை நிறைவு செய்து விட்டது. மின்சக்தி உற்பத்தி, போதிய சாலைகளை அமைத்தல், போக்குவரத்து வசதியைச் செய்தல், நீர் வழங்கல், கடன் வழங்கு நிறுவனங்கள் மூலம் கடன் வசதி பெற உதவியளித்தல் சிறந்த பொறியாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்களும் தொழிலாளர்களும் திட்டமிட்ட அளவிற்குப் போதிய அளவில் கிடைத்தது. கல்வி, சுகாதாரப் பணிகளை ஏற்படுத்துதல் ஆகிய முன்னேற்றப் பணிகளினால் தொழில் வளர்ச்சி பெற முடிந்தது.

தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகுவதற்கும், தொழில்துறையில் முன்னேற்றத்திற்கும் ஏற்ற சில கூறுகள் உள்ளன. புதிய தொழில்களைத் தொடங்கும் வண்ணம் நிலவுகின்ற இனிய பொருளாதாரச் சூழல், செவ்விய நிர்வாக அமைப்பு, சிறந்த பொறியாளர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும், தொழிலாளர்களும் திட்டமிட்ட அளவிற்குக் கிடைத்தல் ஆகியவையே இக் கூறுகளாகும். போதிய மின்சக்தி, நீர்வளம், போக்குவரத்து வசதி, கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் கடன் உதவி பெற உதவியளித்தல், தொழில் நுட்பப் பணியாளர், சுகாதார, கல்வி வசதிகள், ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற பணிகளை மாநில அரசு பெரும் பங்கு கொண்டதே, இம் மாநிலத்தின் தொழில் வள முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாகும். ஆயினும் பற்பல தொழில்களை நிறுவவதற்கான வசதிகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள இயன்ற முற்போக்குநோக்குடைய தொழில்முனைவர்களுக்கும் இம் மாநில தொழில் வளர்ச்சிக்கான பெருமை சாரும். தனியார் துறை தொழில் முனைவர்களுக்கு இம் மாநிலத்தில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக்கழகம், இணைப்பு ரயில்பெட்டித் தொழிற்சாலை, ஹிந்துஸ்தான் நிழற்படச் சுருள் நிறுவனம், பாரத் கனரகப் பொறியியல்

நிறுவனத்தின் கொதிகலன் தொழிற்சாலை, முதலிய பெரிய தொழிற்சாலைகளை மத்திய அரசு இங்கே நிறுவியதும் இம் மாநிலத்தில் தொழில் வளம் பெருகுவதற்குப் பெருமளவில் உதவியுள்ளது. தொழில் வளத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மந்த நிலை நீங்கியவுடன் தனியார் துறை மேலும் அதிக அளவில் தொழில் முதலீடு செய்யும் என்று எதிர்பார்க்கலாம். மத்திய அரசும் புதிய தொழில் திட்டங்களை உருவாக்குகையில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட காலமாக நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சேலம் உருக்காலையும் இதில் ஒன்று என்று நாம் சொல்லத் தேவையில்லை.

தொழில் துறையில் ரசாயனத் தொழில் அதிக அளவில் பங்கு கொள்ளாதது பெருங் குறையே. சென்னை, பாறையெண்ணய்த் தூய்மைத் தொழிற்சாலை. (**Madras Oil Refineries**) ஏற்படுத்தப்பட்டதனை அடுத்தும் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திலிருந்து ரசாயனத் துணைப் பொருள்கள் கிடைப்பதைக் கருதியும் நமது மாநிலத்தின் நீண்ட கடற்கரையோரமாக உப்பு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை நிறுவுவதற்கான வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டும் புதிய ரசாயனத் தொழில்களை உருவாக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறியும் பொருட்டு இம் மாநிலத்தில் பல ஆய்வுகளை அரசு மேற்கொண்டுள்ளது. இம் மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்களையும் தயாரிக்கப்படும் சரக்குகளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளைக் கண்டறியும் ஆய்வு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் முடிவுகள் கிடைத்தவுடன் அவை தொழிலதிபர்களுக்கு அளிக்கப்படும்.

நமது நாடு நான்காவது திட்டத்தை மேற்கொள்ளும் நிலையில் உள்ளது. இந் நிலையில் நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டு நாட்டின் வளர்ச்சியில் தொடர்ந்து முன்னணியில் நின்று பணியாற்றுவதற்கான வாய்ப்பினை தமிழ்நாடு ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்றது.

வேலை வாய்ப்பு, பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள், மூலதன முதலீடு, வழங்கப்பட்ட, செயல்படுத்தப்பட்ட தொழில் உரிமங்கள், தொழிற் காரியங்களுக்காக மின் சக்தியை அதிக அளவில் பயன்படுத்துதல், தொழில் நுட்பப் பணியாளர் பயிற்சி முதலிய, தொழில் வள முன்னேற்றத்திற்கான குறியீடுகளை ஆய்ந்தால், இம் மாநிலத்தில் தொழில் வளம் எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது என்பது விளங்கும். இம் மாநிலத்தின் மொத்த வருவாய் படிப்படியாக அதிகரித்துள்ளது. தொழில் துறையிலிருந்து மாநில மொத்த வருவாய்க்குக் கிடைக்கும் பங்கும் அதிகரித்து வந்துள்ளது. 1960-61-ல் தொழில் துறையிலிருந்து மாநில வருவாய்க்கு 16·02 சத வீதம் வருவாய் கிடைத்தது. இச்சத வீதம் 1966-67-ல் 20·26 சத வீதமாக அதிகரித்துள்ளது. தொழில் துறையின் வருவாய் அதிகரித்துள்ளதினால் மாநில வருவாய் எந்த அளவுக்கு அதிகரித்துள்ளது என்பதைக் கீழ்க்கண்ட விவர அட்டவணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

தமிழ்நாட்டில் தொழில்துறை வழியாக மாநிலத்திற்குக் கிடைத்த வருவாய் (தற்போதைய விலைவாசி அடிப்படையில்–தாற்காலிகமானது).

ஆண்டு.	மாநிலத்தின் மொத்த வருவாய்.	கனிவளம் வெட்டியெடுத்தல், சிறு தொழில் முயற்சிகள் முதலியவற்றின் மூலம் கிடைத்த வருவாய்.	தொழில் துறையிலிருந்து மாநிலத்தின் மொத்த வருவாய்க்கு கிடைத்த வருவாய் சத வீதம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூ. கோடியில்.)		
1960–61	1129·56	181·02	16·02
1961–62	1214·75	205·06	16·88
1962–63	1256·95	223·36	17·77

ஆண்டு.	மாநிலத்தின் மொத்த வருவாய்.	கனிவளம் வெட்டியெடுத்தல், சிறு தொழில் முயற்சிகள் முதயவற்றின் மூலம் கிடைத்த வருவாய்.	தொழில் துறையிலிருந்து மாநிலத்தின் மொத்த வருவாய்க்கு கிடைத்தவருவாய் சத வீதம்.
(1)	(2)	(3)	(4)
		(ரூ. கோடியில்)	
1964–63	1370·98	252·51	18·42
1964–65	1497·31	289·41	19·33
1965–66	1598·94	332·72	20·81
1966–67	1877·37	380·36	20·26

1956-57 முதல் 1967–68 வரை உள்ள ஆண்டுகளில் தொழிற் காரியங்களுக்காக மின்சக்தி பயன்படுத்தப்படுவது படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. எடுத்துக்காட்டாக, 1956–57-ல் தொழிற் காரியங்களுக்காக 560 மில்லியன் யூனிட் பயன்படுத்தப்பட்டது. 1967–68-ல் பயன்படுத்தப்பட்ட மின்சக்தி அளவு 2,043 மில்லியன் யூனிட்டாக அதிகரித்தது. மொத்தம் பயன்படுத்தப்பட்ட மின் சக்தியின் அளவு 3,966 மில்லியன் யூனிட்டுகளாகும். இதில் 2,043 மில்யன் யூனிட்டுகள் 1967–68-ல் தொழிற்சாலைகளால் (உரிமைதாரர்கள் உட்பட) பயன்படுத்தப்பட்டது. அதாவது பயன்படுத்தப்பட்ட மொத்த மின்சக்தி அளவில் 51·5 சத வீதம் தொழிற்சாலைகளால் பயன்படுத்தப்பட்டது. கடந்த பத்து ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியின் மொத்த அளவு (அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கிய மின்சக்தி உட்பட) தொழிற்சாலைகள் பயன்படுத்திய மின்சக்தி அளவு ஆகிய விவரங்களை விளக்கப்பட்டதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

மூன்று திட்டகால அளவிலும் 1967–68 வரையிலும், தனியார் துறையிலும் பொதுத் துறையிலும், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, ஏற்பு பெற்ற அவர்களது மூலதனத். தொகை செலுத்தப்பட்ட மூலதனத் தொகை ஆகியவை குறித்த விவரங்களைக் கீழே கொடுத்துள்ள விவர அறிக்கையில் காணலாம்.

	பொதுத் துறையில் பதிவு செய்யப்பட்ட புதிய நிறுவனங்களின் எண்ணிக்கை.	தனியார் துறையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை.	மொத்தம்.	ஏற்பு பெற்ற மூலதனம்.	செலுத்தப்பட்ட மூலதனம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
				(ரூ. லட்சத்தில்.)	
முதல் திட்ட கால அளவு (1951–56) ..	121	465	586	3,621·01	1,273·45
இரண்டாவது திட்ட கால அளவு (1956–61).	53	847	900	18,495·35	5,032·96
மூன்றாவது திட்ட கால அளவு (1961–66) ..	138	776	914	16,358·35	6.622·76
1966–67	12	79	91	2,200·59	2·99
1967–68	9	83	92	2,583·00	15·50
மொத்தம் ..	333	2,250	2,583	43,258·30	12,957·63

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மூலதன முதலீட்டுக் கட்டுப்பாட்டு அதிகாரி 1968-ம் ஆண்டில் பல முதலீடுகளுக்கு இசைவு அளித்தார். இந்தியா முழுவதற்கும் இசைவு அளிக்கப்பட்ட முதலீடு, அதில் தமிழ்நாட்டிற்கு இசைவு அளிக்கப்பட்ட முதலீடு குறித்த விவரங்களைக் கீழே காணலாம்.

அரசுக்குச் சொந்தமில்லாத நிறுவனங்கள் (தனியார் நிறுவனங்களும், பொது நிறுவனங்களும்.)	இசைவு பெற்ற முதலீடுகள்.		இசைவு அளிக்கப்பட்ட தொகை.	
	இந்தியா.	தமிழ்நாடு மட்டும்.	இந்தியா.	தமிழ்நாடு மட்டும்.
(1)	(2)	(3)	(4)	(5)
			(ரூ. லட்சத்தில்.)	
தொடக்க முதலீடு	19	2	3,674·90	340·00
பிற்பட்ட முதலீடு	43	2	2,662·13	69·93
பூரிப்பூதிய முதலீடு	189	16	2,355·28	267·45
ஈட்டுறுதி ஆவனங்கள்	16	2	2,405·73	400·00
கடன்கள் முதலியவை	18	1	2,22237	73·50
மொத்தம் ..	285	23	14,320·41	1,150·88

தொழில் வளர்ச்சி என்பது இடைவிடாமல் தொடர்ந்து நடைபெறும் பணியாகும். முதல் திட்டத்திற்குப் பின்னர் இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சி விரைவு அதிகரித்துள்ளது. 1968-ல் தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி பெருமிதத்திற்குறியது. தொழில் முன்னேற்றம் குறித்த விவரங்களை அடுத்து வரும் பக்கங்களில் விளக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் இது வரையில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியைப் பொதுவாகக் கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் பாகுபடுத்தலாம். அவையாவன :—

மத்தியத் துறை, மாநிலத் துறை, தனியார் துறை.

மத்தியத் துறை.

பெரிய தொழில் துறையில் மத்தியத் துறையில் நிறுவப்பட்டுள்ள பொதுத் துறை நிறுவனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இம் மாநிலத்தில் பல்வேறு பொதுத் துறைத் தொழில் நிறுவனங்களுக்காக மத்திய அரசு இது வரையில் மொத்தம் ரூ. 371 கோடி முதலீடு செய்துள்ளது. இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு இம் முதலீடு பெருமளவில் உதவியுள்ளது என்பதை கீழ்க்காணும் விவர அறிக்கையிலிருந்து அறியலாம்.

தொடர் எண்ணும், திருவனத்தின் பெயரும். (1)	நிறுவப்பட்ட ஆண்டு. (2)	மூலதன முதலீடு. (3)	உற்பத்திப் பொருள்கள். (4)	ஆண்டு உற்பத்தித் திறன். (5)	மதிப்பு. (6)	வேலை வாய்ப்பு (எண்ணிக்கை) (7)
		ரூ. லட்சத்தில்.	மில்லியன் டன்.	லட்ச டன்.	ரூ. லட்சத்தில்.	
1 நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷன் லிமிடெட், நெய்வேலி.	1962	17,259·76	பழுப்பு நிலக்கரி 6·3 டன்.	30·10	542	21,064 (தற்செயல் வேலை உட்பட).
			நைட்ரஜன் 46 சத விதம். அடங்கிய யூரியா உரம் 1,52,000 டன்.	63,609	480	
			சுட்ட அச்சக்கரி 3,80,000.	பழுப்பு 97,877	180	
			சார்பைன்ஸ் (Charfines) 1,29,000	மின்சக்தி உற்பத்தி நிகரம் 1,564 (உற்பத்தி 1—4—68 முதல் 31—12—68)	20	
			எரி எண்ணெய் 50,000			
			கார்பாலிக் அமிலம் 1,341			
			பாலிவேலண்ட் பினைல் (Polynalent phenols) 1,404			
			ஆர்தோ கிரிசால் (Orthoeresol) 582			
			மெடா-பாராசிரோசல்ஸ் (Meta and Faracresols) 1,431			
			சைலோனல்ஸ் (Xylenols) 582			
			இலேசான எண்ணெய் 300			
			வெள்ளைக் களிமண் 6,000			
2 இணைப்பு இரயில் பெட்டித் தொழிற்சாலை, பெரம்பூர், சென்னை.	1955	2,348·65	620 பெட்டிகள் (700 அகலப்பாதை மூன்றும் வழதுப்பு பெட்டிகளின் கணக்கில்).	வசதி செய்திராத பெட்டிகள் 642. வசதி செய்துள்ள பெட்டிகள் 700 (1967–68).	14·88	10,700
3 அறுவை சிகிச்சை கருவிகள் தயாரிப்புச்சாலை நந்தம்பாக்கம், சென்னை.	1965	468·00	அறுவை சிகிச்சை கருவிகள் 2·5 லட்சம்.	1,24,150 கருவிகள் ஏப்ரல் 1968-டிசம்பர் 1968.	10·9	1,094
4 இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், லிமிடெட், சென்னை.	1964	82·00	டெலிபிரிண்டர்களும், அவற்றுடன் இணைந்த கருவிகளும், டெலிபிரிண்டர்கள் 8,500 யூனிட்கள் முறை மாற்று வேலை இரண்டின் அடிப்படையில்.	3,058 இயந்திரங்கள். 30—11—68 வரை.	187·00	1,092

தொடர் எண்ணும், நிறுவனத்தின் பெயரும்.	நிறுவப்பட்ட ஆண்டு.	மூலதன முதலீடு.	உற்பத்திப் பொருள்கள்	ஆண்டு உற்பத்தித் திறன்	மதிப்பு	வேலை வாய்ப்பு (எண்ணிக்கை.)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
		ரு. லசட்சத்தில்	மில்லியன் டன்.	லட்ச டன். சதுர மீட்டரில்.	ரு. லட்சத்தில்	
5 இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்புக் கம்பெனி, லிமிடெட், உதகமண்டலம்.	1967	1,136·09	சினிமா பிலிம்ஸ் பாசிடிவ் (டயா பாசிடிவ் உட்பட)	2,450,000	1—4—68 முதல் 31—12—68.	79·11 1,444
			சினிமா ஒலிப்படம்	300,000	6,09,327	
			சினிமா நெகடிவ் பிலிம்	250,000		
			மருத்துவ எக்ஸ்ரே பிலிம்கள் ..	1,000,000	84,613	28·17
			உருவப்படம் எடுக்கும் பிலிம் ..	50,000		
			அச்சுருவப்படம்	50,000		
			பிலிம் சுருள்	450,000		
			35 மில்லி மீட்டர் நெகடிவ் பிலிம் ..	100,000		
			போட்டோ காகிதம்	1,500,000	48,919	5·31
6 உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை, திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி.	1965	2,570·00	கொதிகலன் நுண்ப பகுதிகள் ..	750	13,691 டன்.	1,216 5,800
			வால்வ்ஸ் பிட்டிங்	2,500டன்	437	99
			கொதிகலன் பாத்திரம்	1,100 டன்.	235	9
			உயர் அழுத்த வால்வுகளும் சில விசைவ கொதிகலன்களும்.	10 M. W.		
7 சென்னை பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, மணலி, சென்னை.	1965	4,479·00 (திட்டமிடுள்ளது).	ஆண்டு ஒன்றுக்கு டன்கள்— குறைந்த அழுத்த காசலின் 1,666	31—12—69 பணியில் மொத்த முன்னேற்றம்.		430 பேருக்கு வேலை வாய்ப்பு.
			காசலின் 9,416			
			நாப்தா 25,000			
			உயர்ந்த மண்ணெண்ணெய் 33,666			
			கடுவேக டீசல் எண்ணெய். 42,833			
			உயவு எண்ணெய் .. 16,666			
			எரி எண்ணெய் 2,500			
			தார் 6,666			
			கந்தகம் 1,166 டன்.			
8 சென்னை உரத் தொழிற்சாலை, மணலி, சென்னை.	..	5,700·00	திரவ யூரியா கலப்புரம். 2,00,000	கட்டப்பட்டு வருகின்றது.		650 பேருக்கு வேலை வாய்ப்பு
			அமோன்யா யூரியாவுடன் கலப்பு செய்யப்படாதது. 36,500			
			N. P. K. கலப்புரம் 3,62,700			

9 கனரக வண்டிகள் (டாங்குகள்), தொழிற்சாலை, ஆவடி, சென்னை.	1965	1,727·00	நடுத்தர டாங்குகள் . ..	..	..	உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது 1,500.	4,262 பேருக்கு வேலை வாய்ப்பு.
10 படைக்கலன் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.	1966	1,350·00 (தோராயமாக).		..	..	உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.	3,500 பேருக்கு வேலை வாய்ப்பு.

இந்த மத்தியத் துறை திட்டங்களை குறித்து 1968-ம் ஆண்டு ஏற்பட்ட முன்னேற்றம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டம்

(மூலதன முதலீடு ரூ. 173 கோடி)

ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரித் திட்டம் இம்மாநிலத்தில் மத்திய அரசின் கீழுள்ள மிகச் சிறப்பு வாய்ந்த பெரியதொரு நிறுவனமாகும். இத் திட்டத்தின்கீழ் நான்கு பெருந் திட்டங்கள் உள்ளன :—

1. சுரங்கப்பணி.
2. மின்சக்தி உற்பத்தி செய்தல்.
3. உர உற்பத்தி பிரிவு.
4. சுட்ட அச்சுக் கரி பிரிவு.

ஆண்டொன்றுக்கு 5,000 முதல் 6,000 டன் வரை வெள்ளைக் களிமண் உற்பத்தி செய்யும் வெள்ளைக் களிமண் பிரிவு ஒன்றும் இத் திட்டத்தில் சேர்ந்ததாகும்.

இத் திட்டங்களின்கீழ் தற்போது உற்பத்திப் பணி நடந்தேறி வருகிறது. உர உற்பத்தித் தொழிற்சாலையில் தொழில் நுட்ப பகுதியிலும், செய் முறைப் பகுதியிலும் சிறிது இடர்ப்பாடுகள் உள்ளன. 1968–69-ல் 90,000 டன் உரம் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1968-ல் உற்பத்தி செய்யப்பட்ட யூரியாவின் மதிப்பு ரூ. 4·8 கோடியாகும். பென்சின் (**Benzene**) ஏற்கும் இயந்திரம் ஒன்றை நிறுவுவதன் மூலம் இந்த இடர்ப்பாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இயந்திரத்தை நிறுவுதல் 1969–70-ல் முடிவு பெற்றதும் இத் தொழிற் சாலை முழு உற்பத்தியை அதாவது 152,000 டன் உரம் உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுட்ட அச்சுக்கரி தயாரிப்புப் பிரிவில் போதிய பழுப்பு நிலக்கரி கிடைக்காததனாலும், அங்காடிகளின் மந்த நிலையாலும் உற்பத்தி 50 சத வீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது. 60 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யும் வகையில் விரிவுபடுத்தப்பட்ட சுரங்கப் பணி மேற்கொள்ளப்படுகையில் லிக்கோ கரி உற்பத்தித் திறன் அதிகரிக்கும் என்றும், அதே சமயத்தில் இப் பொருள்களின் விற்பனையை இக் கழகம் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1968-ல் ரூ. 1·8 கோடி மதிப்புள்ள லிக்கோ உற்பத்தி செய்யப்பட்டது.

1968-ல் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் யூனிட் ஒன்றுக்கு 5·9 பைசா வீதம் ரூ. 9·2 கோடி மதிப்புள்ள மின்சக்தியை தமிழ் நாடு மின் வாரியத்துக்குக் கொடுத்தது. அனல் மின்சார நிலையத்தின் உற்பத்தியின் அளவை 400 மெகாவாட்டிலிருந்து 600 மெகாவாட்டாக உயர்த்தும் பணி திட்டமிட்டபடி நிறைவேறி வருகிறது. அனல் மின்சார நிலையத்தின் உற்பத்தி அளவை 500 மெகாவாட்டாக உயர்த்தும் VIII-ம் பிரிவு 1969 மார்ச் முதல் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை 600 மெகாவாட்டாக உயர்த்தும் கடைசிப் பிரிவு 1969–70-ம் ஆண்டின் பிற்பகுதியில் செயல்படத் தொடங்கும். 400 மெகாவாட்டிலிருந்து 600 மெகாவாட்டாக மின் திறனை உயர்த்தும் திட்டத்திற்கு ரூ. 15·18 கோடி அந்நியச் செலாவணி உட்பட ரூ. 32·17 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இணைப்பு ரயில் பெட்டி தொழிற்சாலை

(மூலதன முதலீடு ரூ. 23·49 கோடி)

1965-ல் நிறுவப்பட்ட இத் தொழிற்சாலை 1968-ல் 620 இரயில் பெட்டிகளை (இரண்டு வேலை முறைகளில் நிலையான பாதையில் செல்லக் கூடிய மூன்றும் வகுப்புப்பெட்டிகள் 700 ஆகும்) தயாரித்துள்ளது.

1967–68-ல் வேலை நிறைவு பெறாத 642 இரயில் பெட்டிக்கூடுகளும் எல்லா வசதிகளும் கொண்ட 700 இரயில் பெட்டிகளும் உற்பத்தி செய்யப் பட்டன. இந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பெட்டிகளின் மொத்த மதிப்பு ரூ. 1,488 லட்சமாகும். உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 620 பெட்டிகளிலிருந்து 750 பெட்டிகளாக அதிகரிப்பதற்கான திட்டம் ரயில்வே வாரியத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

இத் தொழிற்சாலையினால் அண்மையில் தயாரிக்கப்பட்ட புதிய வகைப் பெட்டிகளில் பல மாநிலக் கடுவிசை இரயில் பெட்டிகளைப் பற்றி இங்கே குறிப்பிட வேண்டியது அவசியமாகும். இது முதல் முறையாக தயாரிக்கப்பட்ட உணவுப் பெட்டியைத் தவிர, மற்றெல்லா விதத்திலும் தற்போதுள்ள குளிர் சாதனங்களுடன் கூடிய சீர் வசதி கடுவிசை இரயில் பெட்டிகளைப் போலவே இருக்கும். இதனுடன் நடப்பாண்டில் குறுகிய பாதை டீசல் இரயில் கார்களை விரைவாக உற்பத்தி செய்யும் பணியையும் மேற்கொண்டுள்ளது.

அறுவை மருத்துவ சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கும் திட்டம்

(மூலதன முதலீடு ரூ. 4·68 கோடி.)

ரஷ்யாவின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்ட இந்திய மருந்துகள்—மருந்துப் பொருள்கள் நிறுவனம் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் நாள் முதல் உற்பத்தியைத் தொடங்கியது. 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையிலுள்ள 9 மாத காலத்தில் இது ரூ. 10·9 லட்சம் மதிப்புள்ள கருவிகளைத் தயாரித்துள்ளது. இதே காலத்தில் ரூ. 1 லட்சம் மதிப்புள்ள பணி ஆணையையும் இந் நிறுவனம் நிறைவேற்றியுள்ளது. மயக்க மருந்து ஊசி, பிரிக்கக்கூடிய சிறு கத்திகள் ஆகியவற்றையும் தயாரிக்கும் வகையில் இதன் உற்பத்தியை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கிடைக்கக்கூடிய உற்பத்தியளவை பயன்படுத்தும் வகையில் பெருமளவில் பணி ஆணைகள் ஏற்றுக்கொள்ளப் படும்.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம்

(மூலதன முதலீடு ரூ. 82 லட்சம்.)

இந்திய அரசுக்கு முழு உரிமையுள்ள இந்த நிறுவனம் 1970–71-ல் ஒரு முறை வேலையில் 5,400 டெலிபிரிண்டர்களையும் இரு முறை வேலை யில் 8,500 டெலிபிரிண்டர்களையும் தயாரிக்கும். இந்த நிறுவனம் 1967–68-ல் 3,500 டெலிபிரிண்டர்களை உற்பத்தி செய்துள்ளது. 1968–69-ல் 5,400 டெலிபிரிண்டர்களைத் தயாரிக்கக் கருதியுள்ளது. காகித டேப் முறையில் டேப் ரீடர்ஸ் (tape readers) டேப் பஞ்சஸ் (tape punches) போன்ற சில நுண்ணிய கருவிகளை உற்பத்தி செய்யும் முகமாக இந்த நிறுவனத்தை நான்காவது திட்டக் காலத்தில் பலவகைப்படுத் தவும் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பாக ஏற்றுமதிக் கென்றே, வெகு விரைவில் அச்சடிக்கும் டெலிபிரிண்டர் யந்திரத்தையும், டெலிபிரிண்டர் மின் விசை யந்திரத்தையும், கான்செண்ட்ரேட்டர் கருவிகள் (concentrator equipment) ஆகியவற்றை உற்பத்தி செய்யும் வகை யில் இந்த நிறுவனத்தை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தட்டெழுத் துக்களைத் தயாரிக்கவும் உற்பத்தி அதிகரிப்பை நிறைவு செய்வதற்குத் தேவையான சில முக்கியமான பொருள்களைத் தயாரிப்பதற்குப் புதிய முறைகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. உற்பத்தியைப் பல வகைப்படுத்துவதற்காக நான்காவது திட்டக் காலத்தில் கூடுதலாக ரூ. 175 லட்சம் மூலதன முதலீடு செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது. உற்பத்தியைப் பலவகைப்படுத்துவதன் மூலம் 8,500 டெலிபிரிண்டர்கள் என்ற குறிக் கோள் அளவு நான்காவது திட்டக்காலத்திலும் தொடர்ந்து நிறைவேற் றப்படும்.

இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிக்கும் நிறுவனம்
(மூலதன முதலீடு ரூ. 11·36 கோடி.)

புகைப்பட பொருள்களின் பல்வேறு வகைகளைத் தயாரிக்க உதக மண்டலத்தில் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு பிரான்ஸ் நாட்டு புஷே என்கிற கம்பெனியுடன் 1960-ல் இந்திய அரசு தொழில் நுட்ப உடனுழைப்பிற்கு ஒப்பந்தம் செய்து கொண்டது. இத் தொழிற்சாலையை 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் தேதியில் தொடங்கப்பட்டது. இத் தொழிற்சாலையின் எல்லாப் பிரிவுகளும் முடிக்கப்பட்டு, இத் தொழி சாலை உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. 1968–69-ல் திரைப்படங்களுக்கான நிழற்பட நேர்ப்படிகள் தொடர்ந்து தயாரிக்கப்படும். நடப்பு ஆண்டுக்காக முடிவு செய்யப்பட்டுள்ள குறிக்கோள் அளவை எய்த சீராக உற்பத்தியளவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முந்தைய ஆண்டில் இறக்குமதி செய்யப் பட்ட பொருள்களைக் கொண்டு நிழற்படச் சுருள்களை மாற்றியமைக்கும் பணி தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதனுடன் மருத்து வத்துக்குத் தேவையான எக்ஸ்-கதிர் சுருள்கள் உற்பத்தியும் இவ்வாண்டில் தொடங்கப்பட்டுள்ளது. இக்கால அளவில் தரமான நிழற்படக் காகிதமும் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை
(மூலதன முதலீடு ரூ. 25·70 கோடி.)

இத்தொழிற்சாலை பாரத கன ரக மின் கருவிகள் நிறுவனத்தின் தொழிற் பிரிவுகளில் ஒன்றாகும். இது இந்திய அரசின் நிறுவனமாகும். உயர் அழுத்த கொதிகலன்களையும், வால்வுகளையும் தயாரிப்பதற்காக இத் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. தொழிற்சாலை கட்டி முடிக்கப் பட்டுள்ளது. எல்லாப் பிரிவுகளிலும் உற்பத்தி தொடங்கியுள்ளது. 1968-ல் தயாரிக்கப்பட்ட உயர் அழுத்தக் கொதிகலன்கள், வால்வுகள், அழுத்தக் கொதிகலன்கள் ஆகியவற்றின் மதிப்பீடு ரூ 13·24 கோடி யாகும்.

சென்னை, பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை

சென்னை, பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையினர் நவீன எண்ணெய்த் தூய்மைப்படுத்து பிரிவு ஒன்றை ஏற்படுத்துகின்றனர். இப்பிரிவு குறைந்த அழுத்த காசொலின், காசொலின், நாப்தா, உயர் மண்ணெண்ணெய், கடுவேக டீசல் எண்ணெய், உய்வு எண்ணெய், எரி எண்ணெய், ஆஸ்பால்ட், கந்தகம் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் இந்த எண்ணெய்த் தூய்மைப்படுத்து நிலையம் அமோகோ (இந்தியா) தேசிய ஈரான் எண்ணெய் நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ரூ. 44·79 கோடி செலவில் நிறுவப்படுகிறது. விரைவில் இது உற்பத்தி யைத் தொடங்கும்.

சென்னை உரத் தொழிற்சாலை

சென்னை உரத் தொழிற்சாலை, பாறை எண்ணெய்த் தூய்மை நிலையத் திற்கருகில் உரத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுகிறது. அமோகோ (இந்திய) நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் யூரியா, அம்மோனியா, கலப்பு உரம் ஆகியவற்றைத் தயாரிக்கும் நோக்குடன் இத் தொழிற்சாலை ரூ. 57 கோடி மூலதனச் செலவில் தொடங்கப்பட்டது. இத் தொழிற்சாலையின் பொருள்கள் 1970-ல் சந்தைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பாதுகாப்புக்குத் தொடர்பான தொழில்கள்

ஆவடியிலுள்ள கன ரக வண்டிகள் தொழிற்சாலை தான் முதல் முதலாக பாதுகாப்புத் தொடர்பான பொருள்களை உற்பத்தி செய்கின்றன. டாங்கிகளுக்குத் தேவையான பெரிய பகுதிகளையும், துணைப் பகுதிகளையும் இத் தொழிற்சாலை உற்பத்தி செய்கிறது. இத் தொழிற்சாலையில் படைக்கல வண்டிகளுக்கு மட்டுமல்லாமல், பாதுகாப்புப் பணிக்காக கன ரகப் பொருள்

கள் தேவைப்படும்போது அவற்றை உற்பத்தி செய்யும் வகையிலும் இத் தொழிற்சாலை திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. எல்லாப் பிரிவுகளும் உற்பத்தி செய்து வருகின்றன.

படைக்கலத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி

இத் தொழிற்சாலையும் திட்டமிட்டபடி முன்னேறி வருகிறது.

நெய்வேலி—சேலம் உருக்குத் தொழிற்சாலை

இத் திட்டம் குறித்த எல்லாத் தொடக்க வேலைகளும் முடிந்துவிட்டன.

மாநில அரசு, இத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான வெளி நாடுகளின் ஒத்துழைப்பு பற்றிய பல்வேறு செயற் குறிப்புகளை ஆலோசனை செய்து வருகிறது.

2. ஜப்பானிய நிறுவனம் ஒன்று (திரு. மருபேனி-இய்தா நிறுவனம், ஜப்பான்), கஞ்சமலை இரும்புக் கனிப் படிவங்களின் மேம்பாடு, அயம் செறிந்த உருள்கட்டித் தொழிற்சாலை ஒன்றை (Concentration and Pellatisation Plant) நிறுவுதல் ஆகியவற்றில் அக்கறை காட்டி வருகிறது. இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள், மாநில அரசின் அதிகாரிகளுடன் உரையாடல் நிகழ்த்தியுள்ளனர். இரும்புக் கனிகளிலுள்ள இரும்பின் அளவைக் கண்டறியவும், ஜப்பானிலுள்ள உருக்கு உலைகளுக்கு எந்த அளவு உருளைகள் வேண்டியிருக்கும் என்பதை அறியவும் இரும்புக் கனிகளைச் சோதனை செய்து பார்ப்பதற்கு எடுத்துச் சென்றுள்ளனர். ஜப்பானிலுள்ள இரும்புத் தொழிற்சாலைக்கு ஆண்டொன்றுக்கு 1 லட்சம் டன் இரும்பு உருண்டைகள் ஏற்றுமதிக்கான ஒப்பந்தத்தைப் பெற, ஜப்பானிய நிறுவனம் ஆர்வம் காட்டி வருகிறது. தற்போது ஜப்பானிய நிறுவனத்துடன் நடத்திய ஆலோசனை முன்னோடியானதாகும். மத்திய அரசின் ஒப்புதலின் பேரில் இதைப்பற்றிய இறுதி முடிவை மேற்கொள்ளவேண்டும்.

3. சேலத்தில் ஒருங்கிணைந்த உருக்குத் தொழிற்சாலையை அமைப்பதற்கு முன் இதற்கு முன்னோடியாக இரும்புக் கனி பற்றி ஆராய்தல் அயம் செறிந்த உருண்டைகள் உற்பத்தி வசதிகள் செய்தல் உட்பட கஞ்சமலை இரும்புக் கனிச் சுரங்கங்களின் மேம்பாடுபற்றி விவரமான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக கல்கத்தாவிலுள்ள பொறியாளர் ஆலோசகர்களாகிய திரு. M. N. தஸ்தூர் அண்டு கம்பெனி பணியைத் தொடங்கியுள்ளது. 1968-69-ல் மேற்கொண்டுள்ள மற்றொரு முக்கிய பணியாகும். இத் திட்டம் பற்றிய அறிக்கை இன்னும் ஓர் ஆண்டிற்குள் அரசிற்குக் கிடைக்கும்.

4. திரு. M. N. தஸ்தூர் அண்டு கம்பெனியிடமிருந்து விவரமான திட்ட அறிக்கை கிடைக்கப்பெற்ற பிறகு சேலம் உருக்குத் தொழிற்சாலையின் முதல் நிலை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும். திட்ட ஆணைக் குழுவின் அனுமதியுடன் சேலம் திட்டத்தின் முதல் நிலையை நான்காவது திட்டத்தில் மாநில அரசு சேர்த்துள்ளது.

மாநிலத்துறை

தனியார் நிறுவனங்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமாகவும் தொழில் முனைவர்களுக்குத் தேவையான உதவியைச் செய்து தருவதன் வாயிலாகவும் மாநில அரசு தொழில் வளர்ச்சியில் மறைமுகமாக முக்கியமானதொரு பங்கினை வகிக்கிறது. கூட்டுறவுத் துறையில் 12 நூற்பு ஆலைகளையும் 7 சர்க்கரை ஆலைகளையும் நிறுவியது மட்டுமன்றி, அவற்றின் பங்கு மூலதனத்திலும் முதலீடு செய்துள்ளது. இதைத் தவிர பெரிய, நடுத்தர தொழில்களின் வளர்ச்சியில் மாநில அரசு இதுவரை நேரடியாக முக்கிய பங்கு எதும் ஏற்கவில்லை. மாநில அரசு சில தயாரிப்பு பிரிவுகளைப் அவையே பொறுப்பேற்று நிறுவ வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் தொழில் வளர்ச்சியை மேலும் தூண்ட முடியும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான இந்த உற்பத்தி பிரிவுகளில்

தங்களது கவனத்தைச் செலுத்த அரசு முடிவு செய்துள்ளது. ஏனெனில் இந்தப் பிரிவுகள் இதுவரை தனியார் மூலதனத்தையோ, தனியார் நிறுவனத்தையோ ஈர்க்கவில்லை. இந்த நோக்கத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் 1965-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இம் மாநிலத்திலுள்ள முக்கியமான தொழில்கள் நிறுவுவதும் முன்னின்று தொடங்கி வைப்பதும் இக் கழகத்தின் நோக்கமாகும். இந்தக் கழகம் எடுத்துக் கொண்ட திட்ட வேலைகளை முழுதுமாக முடிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்காக ஆவன செய்வதற்காக, தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் தன்னுடைய நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் வளர்க்கவும் எண்ணியுள்ளது. இதற்காக இந்த கழகம் நிதி வசதி உட்பட பெரிய அளவில் முன்னின்று தொடங்கி வைக்கும் பணிகளை ஏற்றுக்கொள்கிறது.

1965-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் 1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தனிப்பட்டதொரு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது. பெரிய தொழில் நிறுவனங்களை நிறுவுவதற்காகவும் நிர்வகிப்பதற்காகவும் முனைந்து செயல்படச் செய்வதற்காகவும் நிதி வசதியளிப்பதற்கு ரூ. 10 கோடி மூலதனத்துடன் இந்தக் கழகம் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் பங்கு மூலதனத் தொகை முழுவதையும் அரசாங்கமே கொடுக்க வேண்டும். தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நிதிவசதி செய்து கொடுப்பதற்குத் தேவைப்படும் தொகையை ஏனைய நிதி வாயில்களிலிருந்து பெறச் செய்யும் வகையிலும் மாநில அரசின் சுமையைக் குறைப்பதற்காகவும் இந்தக் கழகத்தை பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக மாற்றிவிட திட்டமிடப்பட்டுள்ளது. இச் செயற் குறிப்புக்கு அரசின் ஒப்புதல் பெறுவதற்காக அதற்கு எழுதப்பட்டுள்ளது. இந்த கழகத்தின் பெயரை தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் என மாற்றிவிடவும் முயற்சியெடுக்கப்பட்டுள்ளது.

நிதி வசதிகள்.—இந்தக் கழகத்தின் பங்கு மூலதனத்திற்காக அரசாங்கம் இதுவரை ரூ. 436·74 லட்சம் கொடுத்துள்ளது. மேலும் நடப்பாண்டின் வரவு–செலவு திட்டத்தில் ரூ. 250 லட்சம் கடன் மூலதனம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் மூலதனத் தொகையில் ரூ. 150 லட்சம் வரை தொகை எடுக்கப்பட்டுள்ளது. 1969 மார்ச் இறுதிக்கு முன்பாக எஞ்சியுள்ள தொகையையும் வாங்கப்படும். இது தவிர, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ரூ. 75 லட்சம் அளவிற்கு கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் வெளியிட்டுள்ளது. இந்த முழுத் தொகையையும் சிண்டிகேட் வங்கி வழங்கியுள்ளது.

A. உருக்குத் தொடர் வார்ப்படச்சாலை, அரக்கோணம்.—தொடக்க நிலையில் ஆண்டுதோறும் 50,000 டன் அளவிற்கு உருக்குப் பாளங்களைத் தயாரிக்கும் திறனுள்ள உருக்குத் தொடர் வார்ப்படச் சாலை ஒன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் நிறுவப்படுகிறது. மோசூர் சாலையில் அரக்கோணம் நகரிலிருந்து 2 மைல் தொலைவில் ரூ. 653 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் (முதலில் ரூ. 582 லட்சம் செலவில் நிறுவப்படுவதாக இருந்தது. பின்னர் ரூ. 653 லட்சமாக அதிகரிக்கப்பட்டது). இந்தத் தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது. இந்த வார்ப்படசாலையின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 100,000 டன் அளவிற்கு அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தேவைப்படுமானால் ஆண்டொன்றுக்கு 200,000 டன் அளவுக்கு தயாரிக்கும் வகையில் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இரும்புத் துண்டு துணுக்குகள் இதன் மூலப் பொருளாக பயன்படுத்தப்படுகின்றன. உருக்குப் பாளங்களை வார்ப்பதே இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்திலுள்ள மறு உருளைக் கலன் ஆலைக்குத் தேவையான உருக்குப் பாளங்கள் போதிய அளவில் கிடைக்காமல் இடர்ப்படுகின்றன. அதனால்

இம் மாநிலத்திலுள்ள மறு உருளைக் கலன் ஆலைகளுக்கு வேண்டிய உருக்குப் பாளங்கள் இங்கு தயாரிக்கப்படும். தேவைப்படுமானால் உருளைக் கலன் ஆலை ஒன்றும் பின்னர் நிறுவப்படும்.

சுமார் 650 ஏக்கரா நிலம் (பட்டா நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆகிய இரண்டு வகை நிலங்களும்) கையகப்படுத்தப்பட்டு விட்டது. கிட்டத்தட்ட 260 ஏக்கரா நிலம் வேலைத் திட்டத்திற்குத் தேவைப்படும். எஞ்சியுள்ள நிலப்பரப்பு, தொடர்பான பிற தொழில்களுக்குத் தேவைப்படும் மேம்படுத்தப்பட்ட மனைகளுக்காக ஒதுக்கப்படும்.

உருக்கை இளகச் செய்வதற்கான பட்டறையைத் தவிர ஏனைய கட்டிடப் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. ஒப்பந்தத்தின்பேரில் சில பணிகள் விடப்பட்டு இன்னும் தொடங்கப்படாமல் உள்ளன. உருக்கை இளகச் செய்வதற்கான பட்டறையைப் பொறுத்த வரை கால்கோள் விழா நிறைவேறி விட்டது. மேல் கட்டிட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இன்னும் ஒரு திங்களுக்குள் ஆய்வு வேலை இறுதி செய்யப்பட்டு விடும். அரக்கோணம் ரயில் நிலையத்திலிருந்து தொழிற்சாலைப் பகுதிக்கு கிளை ரயில் பாதை அமைக்கும் பணியை ரயில்வே நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர். விரிவான திட்ட வரைப்படங்களும் யந்திரக் கருவிகள் வழங்குபவர்களான திருவாளர் மெஷினோ எக்ஸ்போர்ட்டாரிடமிருந்து பெரும் பகுதி வந்து சேர்ந்துள்ளது. இந்த திட்ட வேலை குறித்த அனைத்திலும் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் திரு. தஸ்தூர் நிறுவனத்தைக் கலந்தாலோசிக்கிறது. உள்நாட்டு யந்திரங்களை வாங்குவதற்கான பணி நிறைவேறி வருகிறது. சில யந்திரங்கள் தொழில் மனைக்கு வந்து சேர்ந்துவிட்டன. ரஷிய நாட்டிலிருந்து யந்திரங்கள் அனுப்புவோரிடமிருந்து யந்திரங்கள் 1969 ஜனவரியிலிருந்து கப்பல் மூலம் அனுப்பப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. முதன்மைத் தொழிற்சாலை கட்டிடங்கள் கட்டப்படும்போது ரஷிய பொறியாளர்கள் அங்கு இருப்பார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த திட்ட வேலைக்கென நியமிக்கப்பட்ட உயர் தொழில் நுட்பப் பணியாளர்கள் 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ந் தேதி அன்று உருக்குத் தொடர் வார்ப்படச் சாலைகளில் பயிற்சி பெறுவதற்காக ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டுள்ளனர். இந்த வார்ப்படச் சாலை 1970-ம் ஆண்டின் ஆறு திங்களுக்குள் அரக்கோணத்தில் நிறுவப்பட்டுவிடுமென்றும் 1971-ம் ஆண்டிலிருந்து செயல் படத்தொடங்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

B. **தமிழ்நாடு சிமிட்டித் தொழிற்சாலை, ஆலங்குளம்.**—இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் வட்டத்தில் ஆலங்குளம் கிராமத்தில் சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றை இக்கழகம் நிறுவுகிறது. ரூ. 677 லட்சம் மூலதனத் தொகையில் தொடங்கப்பட விருக்கும் இத் தொழிற்சாலை (ஒவ்வொன்றும் 600 டன் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு காளவாய்கள் அடங்கிய) நாளொன்றுக்கு 1,200 டன் சாம்பல் **(Clinker)** தயாரிக்கும் திறனுள்ளது. (நிலத்திற்காக ரூ. 18 லட்சம், கட்டிடச் செலவுக்காக ரூ. 165 லட்சம், எஞ்சியுள்ள ரூ. 494 லட்சம் இயந்திரக் கருவிகள், கிளை ரயில் பாதை அமைப்பது ஆகியவற்றிற்கு இத் தொகை பயன் படுத்தப்படும்).

முப்பதாண்டுத் தேவைக்குப் போதுமான அளவு சுண்ணாம்புக்கல் படிவங்களும் களிமண்ணும் ஏராளமான அளவில் இங்கு கிடைக்கிறதென்பதாலும் இந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட நிலையிலிருப்பதாலும் தொழிற்சாலையை நிறுவுவதற்கு இந்த இடம் தெரிந்தெடுக்கப்பட்டது. படிவங்களை வெட்டியெடுப்பதற்கென 1,400 ஏக்கரா நிலமும் தொழிற்சாலை, குடியிருப்பு கிளை இரயில் பாதை ஆகியவற்றிற்காக 450 ஏக்கரா நிலமும் கையகப்படுத்தப்பட்டது. தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகளையும் யந்திரங்களையும் திரு. கே. சி. பி. நிறுவனம் வழங்கி நிறுவுகிறது. வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தாங்கிகள்

போன்ற சில இணைப்புப் பகுதிகள் தவிர, யந்திரங்களில் முழுப் பகுதியும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றது. யந்திரங்களில் 70 சத வீதம் வழங்கப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ளவை மார்ச் அல்லது ஏப்ரல் இறுதிக்குள் வழங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பணிக்களரி, ஆய்வுக் கூடத்திற்குத் தேவைப்படும் கருவிகளைக் கழகம் வாங்கியுள்ளது.

கட்டிடப் பணிகள் முடிவுறும் நிலையிலுள்ளன. யந்திரங்களை நிறுவும் பணி நடந்தேறி வருகிறது. 1969-ம் ஆண்டின் ஜூலை அல்லது ஆகஸ்டு முடிவிற்குள் பணி முடிந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. காளவாய்கள் சரியாகச் செயல்படுகின்றனவா என்று ஆகஸ்டு திங்களில் சோதித்துப் பார்க்கப்பட்டன. சிவகாசி ரயில்வே நிலையத்திலிருந்து ஆலங்குளத்திலுள்ள தொழிற்சாலைப் பகுதிக்குத் தோராயமாக 16 கிலோ மீட்டர் தொலைவில் கிளை ரயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறது. 1969 ஏப்ரலில் தயாராகி விடுமென எதிர்பார்க்கப்படுகிறது. சுண்ணம்புக் கற்களை அகழ்ந்தெடுக்கும் பணியும் நிறைவேறி வருகிறது. இத் தொழிற்சாலை செயல்படத் தொடங்குவதற்கு முன்பு 2 லட்சம் டன் தயாரிக்கும் திறனுள்ள முதல் காளவாய் 1969 ஆகஸ்டு திங்களில் 15 நாட்களுக்குள் செயல்படத் தொடங்குமெனவும் இரண்டாவது காளவாய் 1969 நவம்பரில் செயல்படத் தொடங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற்சாலை 1970 ஜனவரி அளவில் முழு அளவில் உற்பத்தி செய்யும் நிலையை அடைந்துவிடுமென்று கருதப்படுகிறது.

C. **முன்னோடி சிமிட்டித் தொழிற்சாலை, டால்மியாபுரம்.**—சிறிய அளவில் செயல்படும் சிமிட்டித் தொழிற்சாலையை மேலும் விரிவுபடுத்துவதற்காக பாதுகாப்புத் துறையிடமிருந்து இம் மாநிலத் தொழில்துறை எடுத்துக் கொண்டது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் நிறுவப்பட்டதனால் இந்த தொழிற்சாலை மேலும் ஆய்வு செய்து கண்டுபிடிக்கப்படுவதற்காக கழகத்திடமே ஒப்படைக்கப்பட்டது.

வணிக முறையில் உற்பத்தியிலீடுபட வேண்டுமென்பதல்லாமல் வடிவமைத்தல், ஆராய்ச்சி செய்தல், சோதனை செய்தல் ஆகியவையே இந்தத் தொழிற்சாலையின் முக்கிய நோக்கங்களாகும். குறைந்த முதலீட்டு செய்தல், சிறிய அளவில் சுண்ணாம்புக் கற்களைப் பயன்படுத்திக்கொள்ளுதல் ஆகியவை இத் தொழிற்சாலையின் நன்மைகளாகும். நாளொன்றுக்கு 75 முதல் 150 டன் வரை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலைகளைத் தயார் நிலையில் ஏற்படுத்திக் கொடுக்க இக் கழகம் முன் வருகிறது. இத்தகைய தொழிற்சாலைகள் குறித்துப் பலரும் கேட்டுள்ளனர். இந்தச் சிறிய தொழிற்சாலையில் இந்தோனேசியா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இது குறித்து இந்திய அரசுக்கும் இந்தோனேசியாவிற்குமிடையே கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

இந்தத் தொழிற்சாலையின் இயைபுக் கூறுகள், சிக்கன முறையில் இயங்கச் செய்தல் ஆகியவற்றை கூட்டுவதற்காக இதைத் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

D. **ஏனைய திட்டங்கள்.**—யந்திரக் கருவி துணைச் சாதனங்கள் தொழிற்சாலை குறித்த திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணி பெங்களூரில் உள்ள திரு இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. துணுக்கு இரும்புத்தொழிற்சாலையின் இயைபுக் கூறுகளடங்கிய அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பு கல்கத்தாவில் திரு தஸ்தூர் கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் வெளி நாடுகளில் முன்னோடி தொழிற்சாலை ஆய்வுகள் நடத்திய பின்னர் 1970-ம் ஆண்டின் இறுதிக்கு முன்பாக அறிக்கை ஒன்று அனுப்புவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள திரு லூர்கி, பிராங்க்பர்ட், சிண்டெராக்ஸ் எஸ். ஏ. ஜெனிவா ஆகியோரால் இச் சோதனைகள் நடத்தப்படும்.

1969 மார்ச் 11]

உப்புத் தொழில்கள்

தற்போதுள்ள உப்புத் தொழில் குறித்தும் அதன் திறனை மேம் படுத்துவதற்கும் தயாரிக்கப்படும் உப்பின் தரத்தை உயர்த்துவதற்கும் வழி வகைகளைக் குறிப்பிட்டு விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரித் தளிப்பதற்காக உப்பு, கடல் சார்ந்த ரசாயனப் பொருள்கள் தொழிற் சாலையைச் சார்ந்த தொழில் நுட்ப ஆலோசகர் ஒருவரை நியமித்துள்ளது. கிடைக்கும் வசதிகளை ஆராய்தல், ஏற்றுமதி நோக்கத்துடன் தயாரிக்கப் படும் உப்பு, உப்பு அடிப்படையிலான தொழில்களை ஏற்படுத்துவதற்குச் சாதகமான இடங்களை ஆராய்தல், கடல் சார்ந்த ரசாயனப் பொருள்களை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் மூலதனத் தொகை, தொடர்பான மற்ற பொருள்கள் குறித்து இந்த அறிக்கை தயாரிக்கப்படும். அவருடைய அறிக்கை 1969 ஏப்ரல் இறுதிக்குள் கிடைக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

சோடா எரி உப்புத் தொழிற்சாலையை நிறுவுவதற்கான முன்னோடி ஆய்வு வேலைகள் நடந்தன. உருக்குக் குழாய்கள், நுண்ணலை தொழில் கருவிகள், பற்றவைப்பு செய்த கறுப்புக் குழாய்கள் ஹ்யூம் நிறுவனத் தாரின் சிமிட்டிக் கற்கலவை குழாய்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான வாய்ப்புகளையும் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆய்வு செய்து வருகிறது.

E. கலப்பு உரம்.—தூத்துக்குடியிலும் அதன் அருகிலுள்ள பகுதி யிலும் பல்வேறு பெரிய, நடுத்தரத் தொழில்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளதால் தூத்துக்குடி துறைமுகத்தை மேம் படுத்த வேண்டியதன் அவசியம் நன்குணரப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் ரசாயன உரத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த முனைந்து செயல்பட அரசு தற்போது முடிவு செய்துள்ளது. நாளொன்றுக்கு 600 டன் அம்மோனியாவையும், 1,000 டன் யூரியாவையும் தயாரிக்கக் கூடிய ரசாயன உரத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த திரு. தென்னிந்திய ஏஜென்சீஸ் (தனியார்) நிறுவனம் முன் வந்துள்ளது. மேலும் நாளொன்றுக்கு 200 டன் உவர்கார அம்மோனியம் குளோரைடு தயாரிக்கும் திறனளவுள்ள தொழிற்சாலையும் நிறுவப்படும். இத் திட்ட வேலையை நிறைவேற்ற ரூ. 45 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கான உரிமம் வேண்டி மனு ஒன்றும் தேவைப்பட்டியல் கடிதம் ஒன்றும் தனியார் நிறுவனம் ஒன்றை இணைந்து தொழில் தொடங்குபவராக கொண்டு தமிழ் நாடு தொழில் வளர்ச்சி கழகத்தால் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இத்திட்ட வேலையின் விவரங்கள் இந்திய அரசுடன் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

F. பொது.—தமிழ் நாடு தொழில் வளர்ச்சி கழகம் தற்போது இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் முனைந்து முக்கிய பங்கேற்றுள்ளது. முக்கியமான பெரிய தொழில் திட்டங்களில் முனைந்து செயல்படுவது மட்டுமின்றி நிதி உதவி செய்யும் கழகமாகவும் உள்ளது. தனியார் துறையில் உள்ள வேலைத் திட்டங்களின் பங்கு மூலதனத்தில் முதலீட்டுப் பங்கேற்பதுடன் நடைமுறை மூலதனம் தேவைப்படும் தொழில்களுக்கும் குறுகியகாலக் கடன் வசதி அளிக்கிறது. கடன் உத்தரவாதம் அளிக்கிற இந்த வேலைத் திட்டங்களுக்காக திட்டத்தில் அரசாங்கம் நிதி வாயில்களை ஒதுக்கியிருந்தாலும் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மேலும் நிதி வாயில்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தக் கழகம் 1968 டிசம்பர் திங்களில் ரூ. 75 லட்சம் மதிப்புக்கு கடன் ஈட்டுறுதி ஆவணங்களை வெளியிட்டுள்ளது. இந்த மூலதனத் தொகைக்கும் வட்டிக்கும் நிபந்தனை ஏதுமின்றி தமிழ் நாடு அரசு உத்தரவாதமளித்துள்ளது.

கூட்டுறவு நூற்பு ஆலைகள்

ஆய்வுக்குரிய இவ்வாண்டில் பஞ்சாலைத் தொழிலில் கண்ட சீர்கேடான நிலைமை நீடித்து வருகிறது. இதன் விளைவாக கூட்டுறவு நூற்பாலைகளின் பணியும் பாதிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு நூற்பு ஆலைகள் இரண்டு விதமான நோக்கங்களுடன் நிறுவப்பட்டன என்பதையும் ஈண்டு நினைவு கூறவேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் தரமான நூலைப் பொதுவாக வழங்குவதும், குறிப்பாக கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு வழங்குவதும் இதன் வேலையாகும். இதன் மூலம் நூலின் சந்தை விலை உறுதி நிலையில் உள்ளது. நூற்பு ஆலைகளை கூட்டுறவுத் துறையின் கீழ்க் கொண்டு வருவதற்கு மூன்றாவது திட்டக் காலத்தில் அரசு ஊக்க மளித்துள்ளது.

கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு மொத்தம் ரூ. 178·78 லட்சம் அளவில் பங்கு மூலதனத் தொகையாகவும் நிறுவன நிதி ஆதாரத்திலிருந்து கடனாக வாங்கிய தொகையைத் திருப்பிக் கொடுக்க ரூ. 773 லட்சம் அளவில் உத்தரவாதம் எடுத்துக்கொண்டும் தமிழ் நாடு அரசு உதவி செய்துள்ளது. வெளிநாடுகளிலிருந்து வாங்கப்பட்ட நூற்பு யந்திரங்க ளுக்குக் கொடுக்கத் தவறிய தவணைத் தொகைகளைக் குறித்த காலத்தில் வாங்கித் தருவதாக கிட்டத்தட்ட ரூ. 89·80 லட்சம் தொகைக்கு உத்தர வாதம் அளித்துள்ளது.

இம்மாநிலத்தில் இப்பொழுது 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகள் மறு ஆய்வு ஆண்டிலும் தொடர்ந்து செயல்பட்டன. மொத்தம் 1,67,456 கதிர்கள் திறனளவுள்ள இந்தக் கூட்டுறவு நூற்பு ஆலைகள் 20-லிருந்து 100 வரையுள்ள நூல் இழையில் 88,24,782 கிலோ கிராம் பருத்தி நூலை நூற்றன. 1968-ம் காலண்டர் ஆண்டில் ரூ. 7,43,05,850 மதிப்புள்ள நூலை விற்பனை செய்தன. 1968-ம் ஆண்டில் இவை வேலை செய்ததின் விவரங்கள் VIII-வது இணைப்பில் கொடுக் கப்பட்டுள்ளன.

ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையும், நாசரத்திலுள்ள திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையும் 25,000 கதிர்கள் திறனளவு கொண்டவையாக விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை நிறைவேற்றி வருகின்றன. இந்த விரிவுபடுத்தும் திட்டங்களுக்குத் தேவையான கூடுத லான கட்டிடப் பணிகள் இரண்டு ஆலைகளிலும் முடிவுற்றன. இந்த ஆலைகள் தருவிக்க ஏற்பாடு செய்த யந்திரங்களும் தொழிற்சாலை மனை யிடத்திற்கு வந்து சேர்ந்து நிறுவப்படுவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ளன. இவ் விரிவு திட்டத்திற்கான முதலீட்டுச் செலவில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்வதற்காக ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலைக்கென மறு ஆய்வு ஆண்டில் ரூ. 5 லட்சம் தொகையை நீண்டகாலக் கடனாக வழங்க ஒப்புதலளித்துள்ளது. திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை விரிவுத் திட்டத்திற்காக 1967–68-ல் ஒதுக்கப்பட்ட ரூ. 10 லட்சம் முன்பணத்தை இந்த ஆலையிலேயே கூடுதலான பங்கு மூலதன முதலீடு செய்வதற்கு மாற்றிவிடும்படி அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

தாயகம் திரும்பும் அகதிகளுக்கு வேலை வாய்பளிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலையின் 12,000 கதிர்கள் கொண்ட திறனளவை 25,000 கதிர் திறனளவாக மாற்றும் வகையில் விரிவுப் பணி மேற்கொள்ளும் செயற்குறிப்பு உள்ளது. இந்த விரிவுப் பணித் திட்டத்தின் கீழ் இந்த ஆலையின் பங்கு மூலதனத் தில் முதலீடு செய்வதற்காக ரூ. 35 லட்சம் நேரடியாகக் கடன் கொடுத் துதவும்படி இந்திய அரசு, மறுவாழ்வு அமைச்சகத்திடம் தமிழ் நாடு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்

அன்றாடம் மொத்தம் 6,500 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட ஆறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தமிழ் நாட்டில் செயல்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டத்தில், திம்மனஹள்ளியில் நாளொன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட புதிய ஆலை ஒன்று கூட்டுறவுத் துறையில், செயல்படுத்துவதற்கான தொடக்க

1969 மார்ச் 11]

நிலையில் உள்ளது. ஏழு சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்திற்காக அரசு இது வரையில் ரூ. 187·93 லட்சம் முதலீடு செய்துள்ளது. மேலும் இந்திய தொழில் நிதி உதவிக் கழகத்திடமிருந்து இந்த ஆலைகள் ரூ. 457 லட்சம் அளவில் பெற்றுள்ள கடன்களுக்கும் உத்தரவாதம் அளித்துள்ளது. இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு ரூ 51 லட்சம் வரை தவணைக் கடன்கள் வழங்க அரசு ஒப்பளித்துள்ளது. 1967–68-ம் ஆண்டு சர்க்கரை ஆலைகளுக்கு ஒரு நல்ல ஆண்டு அல்ல. கரும்பு பற்றுக்குறை, வெல்ல வாணிகத்திலிருந்து போட்டி, சர்க்கரைக் கட்டுப்பாடு ஓரளவு நீக்கப்பட்டதைத் தாமதமாக அறிவித்ததும், அதற்குக் காரணங்களாகும். சர்க்கரைத் தொழிலுக்குரிய சிறந்த வாய்ப்புகளைப் பெற்ற ஆண்டுகளில் 1968–69-ம் ஆண்டும் ஒன்றாகும். கடந்த சர்க்கரை ஆண்டில் (அதாவது 1967 நவம்பர் 1-ம் நாள் முதல் 1968 அக்டோபர் 31-ம் நாள் வரை) இந்த ஆறு சர்க்கரை ஆலைகளும் செயலாற்றியதைப் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை II-ல் காணப்படுகிறது.

அன்றாடம் கரும்பு பிழியும் திறனை, விரிவுபடுத்துவதற்காக நான்கு சர்க்கரை ஆலைகளுக்கு இந்திய அரசு உரிமங்கள் வழங்கியுள்ளது.

தென் ஆர்க்காடு, கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, தன்னுடைய கரும்பு பிழியும் திறனை, இரண்டு நிலைகளில் 1,250 டன்னுக்கு உயர்த்தத் திட்டமிட்டுள்ளது. சேலத்திலுள்ள, சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, ரூ. 90 லட்சம் செலவில் பிழியும் கரும்பின் அளவை 1,000 டன்னிலிருந்து 1,750 டன்னாக உயர்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, அன்றாடம் பிழியும் கரும்பின் அளவை 800 டன்னிலிருந்து 2,200 டன் வரை அதிகப்படுத்தும் விரிவுப் பணியை நிறைவேற்றி வருகின்றது. இந்த அளவு உற்பத்தி 1969–70-லிருந்து தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கோயம்புத்தூரிலுள்ள அமராவதிக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, விரிவுப் பணியைத் தற்போது செயல்படுத்துவதில்லை என்று திட்டமிட்டுள்ளது.

மாநிலத்தில் மேலும் 3 புது சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்கு இந்திய அரசுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இம் மூன்றினுள், குடியாத்தம் தாலுக்காவிலுள்ள பிரம்மபுரத்தில் அன்றாடம் 2,000 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட ஆலை ஒன்றும், திருப்பத்தூர் தாலுக்காவிலுள்ள ஆம்பலூரில் அன்றாடம் 1,250 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட ஆலை ஒன்றும் ஆக இரண்டு ஆலைகள் வட ஆர்க்காடு மாவட்டத்தில் அமைக்கப்படும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் பேரூர் அருகில் அன்றாடம் 2,000 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட மூன்றாவது ஆலை அமைக்கப்படும்.

இயந்திர செங்கற் சூளைப் பிரிவு—திருமழிசை

அன்றாடம் 66,000 செங்கற்களை உற்பத்தி செய்யும் அளவு கொண்ட இயந்திர செங்கற் சூளைத் தொழிற்சாலை நிறுவுவதற்கான திட்டத்திற்கு அரசு 1963-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கியது. இத் திட்டத்தின் மொத்தச் செலவு சுமார் 70 லட்ச ரூபாயாகும். இதற்கான எல்லாக் கருவிகளும், இயந்திரங்களும் யூகோஸ்லாவியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. யூகோஸ்லாவியா வல்லுநர்கள் மேற்பார்வையின்கீழ், கற்களைக் காயவைக்கும் பொறிகள் கட்டுதல், இயந்திர சாதனங்களை நிறுவுதல், தொழிற்சாலையைச் செயல்படுத்துதல் ஆகியவை முடிக்கப்பட்டது இத் தொழிற்சாலை 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து உற்பத்தியைத் தொடங்கியது. சோதனை உற்பத்தியின்போது ஏற்பட்ட தொழில் நுட்ப இடர்பாடுகள் காரணமாகவும், உதிரி உறுப்புகள் இல்லாத காரணத்தினாலும், இந்தத் தொழிற்சாலை 66,000 கற்கள் எண்ணிக்கையை உற்பத்தி செய்யும் குறிக்கோள் அளவை எய்த முடியவில்லை.

உதிர் உறுப்புக்களை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி உரிமம், ஏற்றுமதி இறக்குமதிக்கான உரிமம் வழங்கும் தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து இன்னும் பெறப்படவில்லை. உதிரி உறுப்புகளை பெறுகின்றபொழுது, இந்த உற்பத்திக் குறிக்கோள் அளவை அடைய முடியும்.

தொழிற் பகுதிகள்

பெருந் தொழில்களும், நடுத்தரத் தொழில்களும், சிறு தொழில்களும் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பாகவும் உதவியாகவும் இணைந்து வளர்ச்சி பெற வகைசெய்கிற தொழிற் பேட்டைத் திட்டத்தின்கீழ், தொழிற்பகுதிகளை ஏற்படுத்தியது மூன்றாவது திட்டக் காலத்தின் மிகவும் முக்கிய வளர்ச்சிப் பணியாகும். இத் திட்டம் அம்பத்தூரில் முதன் முறையாகச் செயல்படுத்தப்பட்டது. மேநிலைப் படுத்தப்பெற்ற தொழில் மனைகளை ஒதுக்குவதற்காக அங்கு 1,200 எக்கர் பரப்பளவுள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. ஏறக்குறைய 400 எக்கர் பரப்பு மேநிலைப்படுத்தப்பட்டு, அங்கு குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல், சாக்கடை, மின்சார வசதி, சாலைகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அரை எக்கரிலிருந்து பன்னிரண்டு எக்கர் பரப்பளவு வரையுள்ள இந்த நிலங்கள் சிறிய, நடுத்தர, பெரிய தொழில்களுக்கு தவணை அடிப்படையில் விற்கப் பட்டுள்ளன. பெரும்பாலும் இத் தொழில் மனைகள் அனைத்தும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டன. சுமார் 600 எக்கருக்கான அமைப்புத்திட்டம் இறுதி செய்யப்பட்டு, சாலை போடும் முன்னோடி வேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஏனைய பகுதிகளில் அதாவது திருவள்ளூர், அரக்கோணம், ராணிப்பேட்டை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, கிண்டி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நான்காவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் இது போன்ற மேநிலைப்படுத்தப்பட்ட மனைகள் கொண்ட தொழிற்பேட்டைகளை அமைக்கக் கருதியுள்ளது. மேட்டூரில், இரசாயனத் தொழிலுக்காக மேநிலைப்படுத்தப்பட்ட மனைகள் உள்ள தொழிற்பேட்டை ஒன்றும் அமைக்கப்படும். மேட்டூர், திருச்சிராப்பள்ளி, ராணிப்பேட்டை, ஆகிய இடங்களில் தொழிற்பேட்டை அமைப்பதற்காக நிலங்கள் கையகப்படுத்தப் பட்டுள்ளன. இவற்றிற்கான அமைப்பு, திட்டங்களுக்கும் ஏற்பளிக்கப்பட்டு விட்டது. மேநிலைப்படுத்தப்பட்ட மனைகள் கொண்ட ஏனைய தொழிற் பேட்டைகளுக்காக நிலக்கையகப்படுத்தும் பணி நிறைவேறி வருகின்றது.

தனியார் துறைத் தொழில்கள்

இம்மாநிலத்தைத் தொழில் மயமாக்குவதில் தனியார் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. உலோகங்கள், உலோகவியல் தொழில்கள், இயந்திரத் தொழில்கள், மின்சாரத் தொழில்கள், ரசாயனத் தொழில்கள் ஆகிய துறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் வரையில், தமிழ் நாடு பஞ்சாலைத் தொழிலில் முக்கிய இடம் பெற்றிருந்தது. அண்மை ஆண்டுகளில் தனியார் துறையில் தொழில் மேம்பாட்டில் ஏற்பட்ட பாராட்டத்தக்க முன்னேற்றம் பல்வேறுவகைகளில் உற்பத்தியை பெருக்கும் தொழில்கள் தோன்றியமையாகும். அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்ட இத் தொழில்களினால் பல்வேறு தொழில் களின் உற்பத்தி சக்தி கணிசமான அளவில் பெருகியுள்ளது.

1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் தொழில்களின் பல்வேறு பகுதிகளிலும், பஞ்சாலைகள் நீங்கலாக ஏனையவற்றிலும் மூன்றாம் திட்டக் காலத்திலும், 1968 டிசம்பர் வரையிலும் அளிக்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கைக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

தொழில்கள். (1)	முதல் திட்டம். (2)	இரண்டாம் திட்டம். (3)	மூன்றும் திட்டம். (4)	1968 டிசம்பர் வரை. (5)	மொத்தம். (6)	செயல்படுத்தப்பட்டுள்ள உரிமங்கள் உற்பத்தியில் உள்ளவை. (7)	முன்னேற்றத்திலுள்ள உரிமங்கள். (8)	ரத்து செய்யப்பட்டவை/சரண் அடைந்தவை முதலியன. (9)
உலோகவியல்	9	59	45	4	117	61	28	28
தொழில் (இயந்திரம்)	16	130	73	9	228	153	45	30
தொழில் (மின்சாரம்)	4	45	25	7	81	54	16	11
ரசாயனம்—								
ரசாயன உரம்	19	48	31	5	103	74	10	19
கடின ரசாயனக் கலவைகள், PVC பூச்சு வண்ணங்கள், வெடி மருந்துகள், பூச்சிக் கொல்லி மருந்துகள்.								
உணவுச் சர்க்கரை, சாராயம், மாவு, காய்கறி எண்ணெய், தாவர எண்ணெய் முதலியன.	11	33	43	5	92	57	15	20
பல்வகை—								
காகிதம், சோப்பு, அழகு சாதனங்கள், ரப்பர், தோல், கண்ணாடித் தகடுகள், சிமெண்ட், மரப் பொருள்கள் முதலியன.	9	66	37	9	121	90	14	17
மொத்தம் ..	68	381	254	39	742	489	128	125

பஞ்சாலையில், கடந்த பத்தாண்டுகளில் எண்ணிக்கையிலும் அளவிலும் ஏற்பட்ட முன்னேற்றத்தை கீழ்க்கண்ட புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன:—

ஆண்டு. (1)	நெசவாலைகளின் எண்ணிக்கை. (2)	அடங்கல் ஆலைகளின் எண்ணிக்கை. (3)	ஆலைகளின் மொத்த எண்ணிக்கை. (4)	கதிர்கள். (5)	கடன்கள். (6)
1956, சனவரி 1 ..	58	24	82	21,71,276	8,016
1961, சனவரி 1 ..	109	25	134	31,41,841	7,346
1967, சனவரி 1 ..	158	25	183	37,87,860	9,404
1968, எப்ரல் 1 ..	175	24	199	40,07,058	9,287

அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில், தமிழ் நாட்டில் தொழில் உற்பத்தி விரைவு உயர்ந்தே இருக்கிறது. 1956-ம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு திரட்டிய தொழில் உற்பத்தி குறித்த புள்ளி விவரங்களிலிருந்து இது தெரிகிறது. இம்மாநிலத்தின் தொழில் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த 23 பெருந் தொழில் பொருள்களுக்கு 100 புள்ளிகள் ஆகும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது (1951-55), தொழில் உற்பத்தியில் கண்ட முன்னேற்றம் 29 புள்ளிகளேயாகும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பட்ட வேகத்தின் வீதம், மொத்த உயர்வு 49·9 புள்ளிகளாகும். இந்த உற்பத்திப் போக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் சீராகக் கொள்ளப்பட்டது. இத்திட்டக்காலத்தில் உயர்வு 50·09 புள்ளிகளாகும். 1966-ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 1967-ல் தொழில் உற்பத்தியில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

ஏற்பட்ட உயர்வு 19·2 புள்ளிகளாகப் பெரிதும் உயர்ந்துள்ளது. 1967-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1968-ம் ஆண்டின் முதல் காலாண்டில் குறியீட்டெண் 15·6 புள்ளிகள் உயர்ந்தது. ஆயினும், 1968-ம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் முதற் காலாண்டைவிட 34·1 புள்ளிகள் குறைந்தது. பக்கத்திலுள்ள வரைப்படம் இம்மாநிலத்திலும், இந்திய முழுவதிலுமான தொழில் உற்பத்திக் குறியீட்டெண்ணைக் காட்டுகிறது.

சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருள்கள்	பிரிவுகளின் எண்ணிக்கை.	உற்பத்தி.	பிரிவுகளின் எண்ணிக்கை.	உற்பத்தி.	பிரிவுகளின் எண்ணிக்கை.	உற்பத்தி.	பிரிவுகளின் எண்ணிக்கை.	உற்பத்தி.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1 வேளாண்மை டிராக்டர்கள் ..	..	..	..	..	1	3,400 எண்.	1	3,386 எண்.
2 கண்ணக் கரியகை	..	..	1	5,057 டன்.	1	9,200 டன்.	1	9,400 டன்.
3 கார்கள்	1	2,251 எண்.	1	3,364 எண்.	1	1,008 எண்	1	2,345 எண்.
4 கரிவிருதியதை	3	851 டன்.	3	2,060 டன்.	4	1,741 டன் (3 பிரிவுகள் மட்டும்).	3	1,367 மெ.டன்.
5 வார்ப்படங்கள் (எஃகு வார்ப்பட இரும்பு).	..	..	1	..	7	22,039 டன்.	7	22,903 டன். *
6 எரி உவர்க்காரம் (Caustic Soda)	1	3,729 டன்.	2	25,191 எண்.	2	62,232 டன்.	2	69,819 டன்.
7 சிமிட்டி	3	692,820 டன்.	4	115,123 டன்.	5	1,879,181 டன்.	6	1,981,754 டன்
8 வணிக ஊர்திகள்	1	1,009 எண்.	1	2,071 எண்.	1	3,615 எண்.	2	4,763 எண்.
9 மிதி வண்டிகள்	1	129,922 எண்.	1	207,535 எண்	1	276,514 எண்.	1	400,134 எண்.
10 டீசல் என்ஜின்கள்	2	3,715 எண்.	2	11,766 எண்.	3	8,859 எண்.	3	13,042 எண்.
11 ரசாயன உரங்கள்	2	40,829 டன்.	3	119,312 டன்.	8	249,442 டன்.	8	263,251 டன் *
12 உலையிலிட்டு காய்ச்சி அடித்தல்.	..	..	..	..	5	5,975 மெ.டன்.	5	3,825 டன். *
13 மாவு	2	22,846 டன்.	6	112,119 டன். (5 பிரிவுகள் மட்டும்).	14	201,269 டன்.	14	186,060 டன்.*

பொருள்கள்	1956		1961		1966		1968	
	பிரிவுகளின் எண்ணிக்கை.	உற்பத்தி	பிரிவுகளின் எண்ணிக்கை.	உற்பத்தி	பிரிவுகளின் எண்ணிக்கை.	உற்பத்தி	பிரிவுகளின் எண்ணிக்கை.	உற்பத்தி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
14 மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள்.	1	1,130 எண்.	1	3,901 எண்.	1	8,298 எண்.	1	9,547 எண்.
15 உயிர்வளி	1	314,000 (கன மீட்டர்).	1	1,02,000 (கன மீட்டர்).	2	1,673,300 (கன மீட்டர்).	2	2,175,793 (கன மீட்டர்).
16 பூச்சு வண்ணங்கள்	1	337,249 (காலன்கள்)	1	490,697 (காலன்கள்)	1	3,475,395 (லிட்டர்).	1	1,522,682 (லிட்டர்).
17 காகிதம்	..	..	..	..	3	24,042 டன்.	3	22,787 டன். *
18 குழாய்களும், குழல்களும் (Pipes and Tubes)	..	..	..	..	1	13,247,855 மீட்டர்.	1	11,825,682 மீட்டர்.
19 வானொலிப் பெட்டிகள் ..	2	1,685	..	..	2	9,358	2	6,978 எண். *
20 வானொலியின் அழுத்த மாற்றிகள் (Radio Transformers)	..	..	..	..	1	19,500 எண்.	1	18,000 எண். *
21 கண்ணாடித் தகடுகள்	..	..	..	..	1	5,360 டன்.	1	49,990 ச. மீட்டர். *
22 சர்க்கரை	6	64,227 டன்.	7	129,806 டன்.	14	225,907 டன்.	15	187,707 மெ. டன்.
23 கந்தக அமிலம்	1	14,891 டன்.	1	24,175 டன்.	6	87,492 டன்.	6	99,786 டன். *
24 மின் அழுத்த மாற்றிகள் ..	2	12,000 கே.வி.ஏ.	3	183,160 கே.வி.ஏ.	3	946,275 கே.வி.ஏ.	3	692,123 கே.வி.ஏ.
25 தட்டச்சு யந்திரங்கள்	1	977 எண்.	1	3,755 எண்.	1	8,660 எண்.	1	8,385 எண்.
26 வண்டிகள்	..	..	..	..	1	7,000 எண்.	1	377 எண்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

27 மோட்டார் வண்டி டயர்கள் ..	..	..	1	104,700 எண்.	2	423,123 எண்.	2	515,199 எண்.*
28 மோட்டார் வண்டி டியூப் ..	..	..	..	..	1	22,306 எண்.	1	350,333 எண்.
29 சைக்கிள் டயர்கள்	..	..	1	1,534,360 எண்	1	3,946,066 எண்	1	5,080,811 எண்
30 தாவர எண்ணெய் (வனஸ்பதி).	4	8,453 டன்.	4	12,714 டன்.	4	13,320 டன்.	4	12,888 டன்.*

* 1967-ம் ஆண்டு உற்பத்தியின் அளவுகள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1968-ம் ஆண்டில் தொழிற்சாலை உரிமங்கள் ஒன்பதும் தொழில் நடத்தும் உரிமைக் கடிதங்கள் பதினுன்கும் இம் மாநிலத்தில் வழங்கப் பட்டுள்ளன. வழங்கப்பட்ட தொழிற்சாலை உரிமங்களில், பாதுகாப்பான வத்திகள், வெடி மருந்து, சர்க்கரை தயாரிப்புக்காகப் புதிய நிறுவனங்களை நிறுவுவதற்கு இரண்டு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிறு கருவிகள், ஈ.ஓ.டி. சுமை தூக்கிகள் **(E.O.T. Cranes)**, புடைல் சைக்கிள் சக்கரக் குழாய்கள் **(Butyl Cycle tubes)** மின்சார "அனலோக்" கணக்கெடுப்பு இயந்திரம், நிறுத்துப் பொறி மூடிகள் **(Brake Chamber Diaphram)** ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக ஐந்து உரிமங்கள் வழங்கப்பட்டுள் ளன. காலணிகள், ஹைபோடர்மிக், சுசூர் ஊசிகள் **(Hypodermic and suture needles)** தயாரிப்பதற்காக, இப்போதுள்ள தங்கள் திறனை விரிவாக்கிக் கொள்ளலாமென இரண்டு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட 14 தொழில் நடத்தும் உரிமைக் கடிதங்களில் புதிய தொழிற் பிரிவுகளை அமைக்க ஏழும், புதிய கருவிகள் தயாரிப்பிற்கு நான் கும், ஓரளவு விரிவாக்கம் செய்துகொள்ள மூன்றும் வழங்கப்பட்டுள்ளன. 1968-ம் ஆண்டில் உரிமம் வழங்கப்பட்டுத் தொழில் நடத்தும் உரிமைக் கடிதம் வழங்கப்பட்ட நிறுவனங்களின் பெயர் அடங்கிய விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. 1968-ல் இம்மாநிலத்தில் தொழில் நுட்ப வளர்ச்சித் தலைமை இயக்குநரிடம் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 11 ; இது வரையில் மொத்தம் பதிவு செய்யப்பட்டுள்ளவை 46. 1968-ல் பல விதமான பொருள்கள் உற் பத்திக்காக பல நாடுகளுடன் அந்நிய உடனுழைப்பு ஒப்பந்தம் செய்து கொண்டு தொழில் நடத்துவதற்காக ஏழு தொழிற்சாலைகளுக்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1968-ம் ஆண்டில் நான்கு பெருந் தொழிற்சாலைகள் உற்பத்தி தொடங்கிவிட்டன ; இவைகள், "ஸர்குளோரித்லின்", சிமிட்டி, இயந்திரத் திறுல் செய்யப்பட்ட கட்டிடக் செங்கற்கள், இழுவை டிராக்டர்களின் **(Crawler tractors)** பாகங்கள் ஆகியவற்றின் தயாரிப்பிற்காக இந்த நிறு வனங்கள் உற்பத்தி தொடங்கின. இந்த நான்கில், ஒன்று அரசாங்கத் துறையிலும் மூன்று தனியார் துறையிலும் அமைந்துள்ளன. பெரிய அளவிலுள்ள மூன்று தொழில் நிறுவனங்கள், கே. வி. இன்சுலேட்டர்கள், போன்ற புதிய கருவிகளை உற்பத்தி செய்யும் பணியை தொடங்கிவிட்டது ; ஒரு பிரிவு அதன் உற்பத்தித் திறனை அதிகரித்துள்ளது. வளையங்கள், உயர் உற்பத்திச் சிறு அளவு பல நோக்க ஆலை இயந்திரங்கள், கற்குழாய் பொருத்திகள் வலியூட்டிய சிமிட்டிக் கலவை குழாய்கள் முதலியவற்றைத் தயாரிப்பதற்காக 1968-ம் ஆண்டில் மேலும் மூன்று நடுத்தரத் தொழில் கள் ஏற்படுத்தப்பட்டன.

நடப்பு ஆண்டில் இம் மாநிலத்தில் தொழில் பணிகள் மேலும் வளரு மென எதிர்பார்க்கப்படுகிறது. மத்தியத் துறையிலுள்ள சென்னை, பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, மார்ச்-ஏப்ரல் திங்களில் செயல் படத் தொடங்கும். தற்போதுள்ள தொழிற்சாலைகள் அவற்றின் விரிவுத் திட்டங்கள் முடிவடையவிருக்கும் போது சேஷசாயி காகிதம், அட்டைகள் தயாரிப்பு நிறுவனம் விரைவில் அட்டைகளைத் தயாரித்து விற்பனைக்கு அனுப்புமென எதிர்பார்க்கப்படுகிறது. காகிதம், அட்டைகள் தயாரிப்பை நாள் ஒன்றுக்கு 60 டன்னிலிருந்து 110 டன் அளவிற்கு அதிகப் படுத்தும் திட்டம், முடிவுறும் இறுதி நிலையில் உள்ளது. இதற்கு ரூ. 275 கோடி செலவாகும். இந்த ஆண்டின் இறுதிக்குள் எல்லாப் பணியும் முடிவுறுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்திய சிமிட்டி நிறுவனம், அதன் நிறுவப்பட்ட திறனுடன் ஆண்டு தோறும் நான்கு லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யும். சங்கரநகர் தொழிற்சாலையில் இரண்டு செங்கற் சூளைகள் ஏற்படுத்தப்படும். சிறுமுகையில் தென் இந்திய விஸ்கோஸ் நிறுவனம், கரைக்கும் மரக் கூழ் தொழிற்சாலையை நிறுவும் திட்டத்தை நிறைவேற்றுவதில் முனைந்து செயல்படுகிறது. சென்னை அலுமினியம் கம்பெனி, ஏற்கெனவே அதன் உற்பத்தித் திறனை 10,000 டன்னிலிருந்து 12,500 டன் அளவுக்கு விரிவுபடுத்தியுள்ளது ;

மேற்சொன்ன வீதத் திறனில் அது தற்போது இயங்கி வருகிறது. இரண்டு நிலைகளில் உற்பத்தி அளவை 25,000 டன்னுக்கு இரட்டிப்பாக்க விரிவாக்கும் இரண்டாம் நிலையை இக் கம்பெனி மேற்கொள்ளுமென்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1971–72-க்குள் சுமார் 18,000 டன் உற்பத்தி எய்தப் பெறும். சர்க்கரை, சிமிட்டி, சைக்கிள், ரசாயனப் பொருள்கள், டயர், குழாய்கள், சைக்கிள் டயர், குழாய்கள் ஆகியவை சம்பந்தமாக எல்லா விரிவாக்கத் திட்டங்களும் உறுதியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனால், வரும் ஆண்டுகளில் உற்பத்தி பெருகும்.

பஞ்சாலைத் தொழிலிலுள்ள நெருக்கடி நிலை குறித்த குறிப்பு

1965-ம் ஆண்டின் இரண்டாவது பகுதியில் பஞ்சாலைத் தொழிலில் தொடங்கிய நெருக்கடி நிலை, அத் தொழில் பாதிக்கப்படும் வகையில் நீடித்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள 192 பஞ்சாலைகளில் சுமார் 28 ஆலைகள் இப்போது மூடப்பட்டுள்ளன. பழைய இயந்திரங்களே பயன்படுத்தப்பட்டு வந்தமை இதற்கான காரணமாகும்; இதன் விளைவாக குறைந்த கதிர்கள் உற்பத்தி, தவறுகத் திட்டமிடுதல், குறைந்த முதலீடு செய்தல் ஆகிய நிலைமைகள் ஏற்பட்டன. 1961 முதற்கொண்டு ஆயத் தீர்வையில் ஏற்பட்ட பெரும் உயர்வும், இந்திய ரிசர்வ் வங்கி விதித்த தடைகளும், பயன் துய்ப்போர் தடங்கல்களும், பருத்தி நூலின் குறைந்த உற்பத்தியும் இத்தகைய நெருக்கடி நிலைக்குக் காரணமாய் அமைந்தன.

2. 1966, மே திங்களில் தற்காலிகத் தொழில் நுட்பக் குழு ஒன்றை அரசாங்கம் அமைத்தது; கோயம்புத்தூரிலுள்ள கம்போடியா ஆலைக்கும் ஜனார்த்தன ஆலைக்கும் ரூ. 22 லட்சம் (முதல் ஆலைக்கு ரூ. 12 லட்சமும் இரண்டாவது ஆலைக்கு ரூ. 10 லட்சமும்) உத்தரவாத உதவி அளிக்கவும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கீதாஞ்சலி ஆலைக்கு ரூ. 3·85 லட்சமும் உத்திரவாத உதவி அளிக்கவும் இக்குழு பரிந்துரைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று, அதற்கேற்ப, அரசாங்கம் உத்திரவாத உதவி வழங்கியது. உத்தரவாத நிதியைப் பெற்றுக் கொண்டு ஜனார்த்தன ஆலையும், கீதாஞ்சலி ஆலையும் மீண்டும் திறக்கப்பட்டன.

3. நெருக்கடி நிலை மிகவும் அதிகமானபோது, மூடப்பட்ட ஆலைகளின் சிக்கலை ஆராயவும் அவற்றை மீண்டும் இயங்கவைக்கும் நடவடிக்கைகளை பரிந்துரைக்கவும் டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் தலைமையில் முக்கூட்டுக் குழு ஒன்றை 1967, மார்ச் திங்களில் அரசாங்கம் அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன்கள் பெற, மொத்தம் ரூ. 222·54 லட்சம் உத்தரவாதம் 20 ஆலைகளுக்கு அரசாங்கம் அளித்தது. தனிப்பட்ட ஆலைகளுக்கு அரசாங்கம் அளித்த உத்தரவாத உதவியின் விவரங்கள், விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

4. பருத்தி நூல், துணிகளின் மீதான ஆயத்தீர்வையைக் குறைக்குமாறு இந்த அரசாங்கம் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. துயர் தணிப்பு நடவடிக்கையாக, தகுந்த நேர்வுகளில் அவற்றிடமிருந்து சட்டப்படியான கடன் நிலுவையை வசூலிப்பது தள்ளிவைக்கப்படுவதற்கும், மின்சாரக் கட்டண நிலுவை, விற்பனை வரி நிலுவை, கூட்டுறவுப் பண்டகசாலைக் கடன்கள் முதலியவற்றைத் தள்ளிவைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. மேற்கொண்டும் அவற்றிற்குக் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்பட்டன :—

(1) 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் தேதி முதல் பதிவு செய்த ஏற்றுமதியாளர்களுக்கு ஆலைகள் விற்கும் நூலின்மீது விதிக்கப்படும் தமிழ்நாடு பொது விற்பனை வரியின் கீழும் மத்திய விற்பனை வரியின் கீழும் செலுத்தத்தக்க வரி சம்பந்தமாக அவற்றிற்கு விலக்கு அளிக்கப்பட்டது ;

(2) இந்நாட்டுக்கு வெளியில் ஏற்றுமதி செய்யப்படும் (கைத்தறி ஆலைகள் உற்பத்தி செய்த) நூல், துணி சம்பந்தமாக பணம் அளித்து ஊக்கமூட்டுவதாக அறிவிக்கப்பட்டது ;

(3) இந்த அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில், இந்திய அரசு கீழ்க்காணும் சலுகைகளை வழங்கியது :—

(1) பெருமளவு தேங்கியுள்ள கைத்தறித் துணியின் இருப்பை விற்பனை செய்ய உதவும் நோக்கத்தில் மின்சக்தி பயன்படுத்தப்படாமல் தயாரிக்கப்பட்ட கைத்தறித் துணியின் மீது விதிக்கப்படும் ஆயத் தீர்வையை நீக்கியது ;

(2) கூட்டுறவுச் சங்கங்கள் கைத்தறித் துணியை விற்பனை செய்வதற்கு மொத்தம் 90 நாட்களுக்கு 10 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி அளிக்க ஒப்பளிப்பு வழங்கியது ; எந்தக் கால அளவில் இத்தள்ளுபடி வழங்கப்படலாமென்பதை மாநில அரசாங்கம் முடிவு செய்யும். இத் திட்டம், 1968-ம் ஆண்டு மே மாதம் 25-ந்தேதி முதல் மூன்று வாரங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது ; தீபாவளி காலத்தில் நான்கு வாரங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.

(3) கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத் தென்பகுதியிலுள்ள பஞ்சாலைகளிடமிருந்து துணி வாங்கும் காரியத்திற்காகவே ரூ. 50 லட்சம் கடன் தொகை வழங்கியது ;

(4) இம்மாநிலத்திலுள்ள மூடப்பட்ட பஞ்சாலைகளில் வேலையிழந்த தொழிலாளர்களுக்குத் தொழில்திபர் பங்கு நிதியிலிருந்து தொகை வழங்குவதற்கு தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு நிதி விதிகளை இந்த அரசாங்கத்தின் வேண்டுகோள் பேரில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் மத்தியப் பொறுப்பாளர்கள் வாரியம் திருத்தியமைத்துள்ளது.

(5) தென் இந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கமும், தமிழ்நாடு ஆலை உரிமையாளர்கள் சங்கமும் இருப்பு அதிகமுள்ள ஆலைகளிடமிருந்து குறிப்பிட்ட வரம்பிற்கு மேல் தேங்கியுள்ள நூல் இருப்பை வாங்குவதற்கு அனுமதியளித்து 1968, ஆகஸ்டில் இருப்பு வைப்புத் திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. இத் திட்டத்தைச் செயல்படுத்த இந்திய அரசு வங்கிக்கு அளிக்கும் உத்திரவாத உதவியின் காரணமாக மத்திய அரசுக்கு ஏற்படும் மொத்த விரயத்தில் 50 சத வீதத்தை ஏற்றுக்கொள்ள இந்த அரசாங்கம் ஒப்புக்கொண்டது. இத்திட்டத்தில் கலந்து கொண்ட இரண்டு பஞ்சாலைச் சங்கங்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. இதற்கிடையில் இந்த ஆலைகளிடமிருந்த நூல் இருப்பு, இப்போது பெருமளவு குறைந்துவிட்டது.

(6) இந்த அரசாங்கத்தின் வேண்டுகோளின்பேரில், 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்தல்) சட்டத்தின் விதித் துறைகளின் கீழ், இம்மாநிலத்திலுள்ள 20 ஆலைகள் பற்றி ஆராய்ந்தறிய இந்திய அரசு மூன்று குழுக்களை அமைத்தது. 12 ஆலைகள் சம்பந்தமாக அறிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இந்த அறிக்கைகள் விரைந்து ஆராயப்பட்டு தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(7) லோகநாதன் குழுவின் பரிந்துரையின் பேரில், கோயம்புத்தூர் நூற்பு-நெசவு ஆலைக்கு ரூ. 24 லட்சம் உத்தரவாத உதவி அளிக்க அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இந்த ஆலை 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ந் தேதியில் மீண்டும் திறக்கப்பட்டது.

(8) இந்த அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஆலைகளை நிர்வகிக்க மாநில நெசவாலைக் கூட்டுக் கழகம் ஒன்றை நிறுவ இம் மாநில அரசாங்கம் தீர்மானித்தது. மேற்கொள்ளப்பட்ட ஆலைகளைப் புதுப்பித்து நவீனமாக்குவதற்கு நிதி வசதியளிப்பதும், அதன் செயல்களில் ஒன்றாகும். இது சம்பந்தமாக ஏற்படும் செலவை, 51 : 49 என்னும் விகிதாசாரத்தில் தேசியப் பஞ்சாலைக் கழகமும் மாநிலப் பஞ்சாலைக் கழகமும் பகிர்ந்து கொள்ளும்.

ஆயத் தீர்வையை 1965-ல் பெறப்பட்ட அளவிற்குக் குறைக்குமாறு தமிழ் நாடு அரசாங்கம் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. மத்திய நிதி அமைச்சர் 1969-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ந் தேதியில் அறிவித்த 1969–70-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டச் செயற் குறிப்புகளில்

ஆயத் தீர்வை விதிப்பில் சில மாறுதல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தரப்படுத்தப்படாத நூலின் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வையில் அதிகரிப்பு ஏற்பட்ட காரணத்தால் நமது மாநிலத்திலுள்ள பஞ்சாலைகளுக்குக் குறிப்பிடத்தக்க எந்த நலனும் இருக்காதென்று கருதப் படுகிறது. நேர்த்தியான துணி வகைகள் மீது விதிக்கப்படும் ஆயத் தீர்வை உயர்வினால் நமது மாநிலத்திலுள்ள ஒருங்கிணைந்த ஆலைகள் பாதிக்கப்படும்.

உத்தரவாத உதவியளிக்கப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட ஆலைகளின் பொறுப்புகளை நீக்க, 1958-ம் ஆண்டு பம்பாய் துயர் தணிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) சட்டத்தின் அடிப்படையில் சட்டம் இயற்றுவதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இச் சட்டத்தின் சிறப்பான பயன் யாதெனில், முந்தைய கடன் பொறுப்புகள் நீக்கப்படுகின்றன ; உதவிபெறும் நிறுவனமாக அந்த ஆலையை அறிவிக்கும் அறிவிப்பு ரத்து செய்யப்படுகிற வரையில் அதற்குள்ள கடன் பொறுப்புகள் தள்ளிப்போடப் படுகின்றன.

அட்டவணை

(i) உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள ஆலைகள்

(ரூ. லட்சத்தில்.)

தனிக் குழு—		
1	கம்போடியா ஆலை, ஆண்டிப்புத்தூர்	12·00
2	ஜனார்த்தன ஆலை, கோயம்புத்தூர்	10·00
3	கீதாஞ்சலி ஆலை, சங்கரன்கோயில்	3·85
லோகநாதன் குழு—		
4	ஓம் பராசக்தி, கோயம்புத்தூர்	3·71
5	பங்கஜா ஆலை, கோயம்புத்தூர்	18·00
6	பலராம வர்மா துணி ஆலை, செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.	7·50
7	பவானி ஆலை, கோயம்புத்தூர்	3·00
8	சபரி ஆலை, கே. சாத்தனூர் அஞ்சல், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	1·75
9	பழனி ஸ்ரீமுருகன் துணி ஆலை, மதுரை மாவட்டம் ..	3·77
10	திருப்பூர் பருத்தி நூற்பு-நெசவாலை, கோயம்புத்தூர்.	0·75
11	ஸ்ரீ அம்பாள் ஆலை, கோயம்புத்தூர்	8·00
12	ஸ்ரீரெங்க விலாஸ் நூற்பு-நெசவாலை, கோயம்புத்தூர்	17·70
13	காவேரி நூற்பு-நெசவாலை, திருச்சிராப்பள்ளி ..	18·70
14	ஸ்ரீ சாரதா ஆலை, போதனூர், கோயம்புத்தூர் மாவட்டம்.	15·00
15	நாகம்மாள் ஆலை, நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.	7·72
16	கோயம்புத்தூர் முருகன் ஆலை, கோயம்புத்தூர் மாவட்டம்.	9·40
17	தென்னக துணி ஆலை, கோயம்புத்தூர்	7·69
18	சோமசுந்தரம் ஆலை, கோயம்புத்தூர்	25·00
19	காளீஸ்வரர் ஆலை, கோயம்புத்தூர்	2,25·00
20	கோயம்புத்தூர் நூற்பு-நெசவு நிறுவனம், கோயம்புத்தூர்.	24·00

(i) உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள ஆலைகள்—தொடர்ச்சி.

(ரூ. லட்சத்தில்.)

தொழில்கள் (வளர்ப்பு-சீரமைப்பு) சட்டக் குழு—

21	ஸ்ரீரெங்க விலாஸ் விதையெடுப்பு-நூற்பு-நெசவாலை ..	15·00
22	கிருஷ்ணவேணி துணி ஆலை, கோயம்புத்தூர் ..	10·00
23	திருப்பூர் பருத்தி நூற்பு-நெசவாலை	9·00
	மொத்தம் ..	2,56·54

(ii) உத்திரவாதத்தைப் பயன்படுத்திக் கொண்ட ஆலைகள்

1	கீதாஞ்சலி ஆலை	3·85
2	ஜனார்த்தன ஆலை	10·00
3	காவேரி நூற்பு-நெசவு ஆலை	18·00
4	பங்கஜா ஆலை	18·70
5	பவானி ஆலை	3·00
6	கோயம்புத்தூர் முருகன் ஆலை	9·40
7	பழனி ஸ்ரீ முருகன் ஆலை	3·77
8	ஸ்ரீ அம்பாள் ஆலை (ஒரு பகுதி பயன்படுத்தப் பட்டுள்ளது).	3·50
9	ஸ்ரீ சாரதா ஆலை	15·00
	மொத்தம் ..	85·22

(iii) உத்தரவாதம் வேண்டாமென்று கூறிய ஆலைகள்

1	நாகம்மாள் ஆலை	7·72
2	திருப்பூர் பருத்தி நூற்பு-நெசவு ஆலை	0·75
3	ஓம் பராசக்தி ஆலை	3·71
4	சபரி ஆலை	1·75
	மொத்தம் ..	13·93

(iv) உத்திரவாதத்தை இன்னும் பயன்படுத்திக்கொள்ளாத ஆலைகள்

1	கம்போடியா ஆலை, கோயம்புத்தூர்	12·00
2	பலராமவர்மா துணி ஆலை, திருநெல்வேலி மாவட்டம்.	7·50
3	ஸ்ரீரெங்க விலாஸ் விதையெடுப்பு-நூற்பு-நெசவாலை, கோயம்புத்தூர்.	17·70
4	தென்னக துணி ஆலை, கோயம்புத்தூர்	7·69
5	சோமசுந்தரம் ஆலை, கோயம்புத்தூர்	25·00
6	ஸ்ரீ அம்பாள் ஆலை, கோயம்புத்தூர்	4·50
7	காளீஸ்வரர் ஆலை, கோயம்புத்தூர்	25·00
8	கிருஷ்ணவேணி துணி ஆலை, கோயம்புத்தூர்	10·00
9	திருப்பூர் பருத்தி நூற்பு-நெசவு ஆலை	9·00
	மொத்தம் ..	1,18·39

குறிப்பு:-ஆலைகள் வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கு வசதியாக உத்தரவாத உதவி வழங்க கொள்கையளவில் இசைந்து ஒரு கடிதம் மட்டுமே கொடுக்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிறுவனக் கடன்

இந்தியத் தொழில் நிதிக் கழகம், இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி, இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற நிதி உதவும் நிறுவனங்களினால் அளிக்கப்படும் கடன் வசதிகளை நமது மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள் தொடர்ந்து பெற்றுப் பயனடைந்தன.

1968-ம் ஆண்டில், இந்தியத் தொழில் உதவிக் கழகம் ரூ. 26·02 கோடி கடனுதவி வழங்கியது. அதில் ரூ. 3·69 கோடி தமிழ் நாட்டில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டது. இக் கழகம் தொடங்கப் பட்ட தேதியிலிருந்து 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரையில் அளித்துள்ள மொத்தக் கடன் ரூ. 311·67 கோடியாகும். இதில் ரூ. 44·25 கோடி இம் மாநிலத்தில் உள்ள 55 தொழிற் பிரிவு களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1968, டிசம்பர், 31-ம் நாள் வரையில் இக்கழகம் மாநில வாரியாக வழங்கிய கடனுதவியில் மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ் நாட்டில் உள்ள தொழிற் பிரிவு களுக்கே அதிக அளவுக்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

மாநிலம்.	பிரிவுகளின் எண்ணிக்கை.	கடனுதவி. (ரூ. லட்சத்தில்.)
ஆந்திரப் பிரதேசம்	29	2,266·45
குஜராத்	38	2,231·62
கேரளம்	14	1,118·83
தமிழ் நாடு	55	4,425·21
மகாராஷ்டிரம்	101	6,335·97
மைசூர்	33	1,762·82
மேற்கு வங்காளம்	61	3,519·30
இந்தியா	465	31,167·35

1968-ம் ஆண்டில், இந்தியத் தொழில் கடன முதலீட்டுக் கழகம் இந்தியா முழுவதிலும் உள்ள தொழில்களுக்காக (நிகரமாக) ரூ. 30·94 கோடி கடனுதவி வழங்கியது. இதில் தமிழ் நாட்டில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கு ரூ. 1·49 கோடி வழங்கப்பட்டது. இக் கழகம் தொடங்கப் பட்டதிலிருந்து 1968, டிசம்பர், 31-ம் நாள் வரையில் நிகரமாய் ரூ. 230·51-கோடி கடனுதவி வழங்கியது. இதில் 23·66 கோடி (அல்லது 10·3 சதவீதம்) இம் மாநிலத்தில் உள்ள தொழிற் பிரிவுகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி 1967–68-ல் இந்தியாவில் உள்ள தொழில்கள் அனைத்துக்கும் ரூ. 1905 லட்சம் கடன் வழங்கியது. இதில் தமிழ் நாட்டில் உள்ள நான்கு தொழிற் பிரிவுகளுக்கு மட்டும் நேரடியாக ரூ. 765 லட்சம் வழங்கப்பட்டது.

1967–68-ம் ஆண்டிலும், 1964 ஜூலை முதல், 1968, ஜூன் வரையில் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி மாநில வாரியாக நிதி உதவி அளிப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கியதையும், நிதி உதவி கொடுத்ததையும்

குறித்து மற்ற மாநிலங்களை தமிழ் நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அதன் நிலை கீழ்க் கண்டவாறாகும் :—

மாநிலம்.	1967–68. ஒப்பளிக்கப் பட்ட நிதி. உதவி.	1967–68. அளிக்கப்பட்ட நிதி உதவி.	ஜூலை 1964–ஜூன் 1968. ஒப்பளிக்கப் பட்ட நிதி உதவி.	ஜூலை 1964–ஜூன் 1968. அளிக்கப் பட்ட நிதி உதவி.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூ. லட்சத்தில்.)			
ஆந்திரப் பிரதேசம்	283·30	295·60	1,629·30	1,477·0
குஜராத்	178·8	318·3	3,405·5	2,847·3
கேரளம்	140·6	137·8	307·0	274·1
தமிழ்நாடு	999·2	367·1	3,404·7	2,132·2
மகாராஷ்டிரம்	1,002·1	1,973·9	7,315·5	7,010·7
மைசூர்	119·2	344·5	617·0	595·5
மேற்கு வங்காளம்	412·2	308·5	2,175·4	1,331·2
இந்தியா	4,186·9	4,710·0	23,790·0	18,237·0

1967–68-ம் ஆண்டில் (1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை) இந்திய ஸ்டேட் வங்கி 79 சிறு தொழில் பிரிவுகளுக்கு ரூ. 2·23 கோடி நிதி உதவி வழங்கியது. 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை தமிழ் நாட்டில் உள்ள 1911 பிரிவுகளுக்கு இந்திய அரசு வங்கி ரூ. 14·61 கோடி கடன் வழங்கியுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள, பட்டியலில் கண்ட வணிக வங்கிகள் தொழில் மூலதனத்திற்குக் கடன் வழங்குவது மூலமாகவும், குறிப்பிட்ட காலக் கடன்களுக்கு நிதி உதவுவதன் மூலமும், தொழிற்சாலைகளுக்கு உதவி வந்துள்ளன. 1967, செப்டம்பர் 29-ம் நாள் வரை தமிழ் நாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ள வங்கிக் கடன் மொத்தம் 127·90 கோடியாகும். 1968, செப்டம்பர், 27-ம் நாள் வரை அளிக்கப்பட்டுள்ள வங்கிக் கடன் ரூ. 150·63 கோடியாகும். இதைப் போன்றே 1968, மார்ச், 31-ம் நாள் வரையில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி கழகம் முதலீடு செய்த தொகை ரூ. 11·85 கோடியாகும்.

தொழில் வளம் விரைந்து பெருகி வருகின்ற இச் சூழலில், நிறுவனங்கள் வழங்கும் கடன் வசதிகளின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தத் தேவையில்லை. குறிப்பாக, நமது மாநிலத்தில் மூலதன முதலீடு குறித்த நிலைமை அவ்வளவு மன நிறைவு தருவதாக இராததால் நிறுவனங்கள் வழங்கும் கடன் வசதிகள் மிக இன்றியமையாதவையாக உள்ளன. தமிழ் நாட்டின் தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ் நாட்டு தொழிற் கூட்டுறவு வங்கி, தமிழ் நாடு கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் மூலமும், தொழில்களுக்கு அரசாங்கம் வழங்கும் கடனுதவிச் சட்டத்தின் கீழும், தொழில் நிறுவனங்களுக்குக் கடன் உதவி வழங்கும் திட்டம் பெருமளவுக்கு வெற்றியுடன் நிறைவேற மாநில அரசாங்கம் முயற்சி எடுத்துள்ளது.

(அ) தமிழ் நாட்டுத் தொழில் முதலீட்டுக் கழகம்.

1968-ம் காலண்டர் ஆண்டிலும், கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையிலும், தமிழ் நாட்டுத்

தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கிய கடன்களின் அளவு கீழ்க்கண்ட விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொடர் எண்.	கடன்களின் வகை.	ஒப்பளிக்கப்பட்டது. 1968 காலண்டர் ஆண்டு.	ஒப்பளிக்கப்பட்டது. தொடங்கிய தேதியிலிருந்து 31—12—1968 வரை.	கொடுக்கப்பட்டது. 1968 காலண்டர் ஆண்டு.	கொடுக்கப்பட்டது. தொடங்கிய தேதியிலிருந்து 31—12—1968 வரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1	ரொக்கக் கடன்கள்	1,48,50,000	24,96,56,311	72,41,800	19,75,50,028
2	கூட்டுக்கடன்கள்	..	1,62,65,000	..	10,98,770
3	உத்திரவாதம் அளித்த வகையில்	..	6,36,15,084	..	4,59,16,554
4	பின்னிட்டுப் பணம் கொடுப்பது பற்றிய உத்திரவாதம்.	38,11,103	15,61,67,836	27,32,936	7,41,16,688
5	(அ) பங்குகள்—நிறுவனங்களின் பங்குத் தொகைகளில் முதலீடு செய்தல்.	23,15,000	12,74,09,500	26,73,965	7,45,36,643
	(ஆ) கடன் பத்திரங்கள் ..	..	15,00,000	..	14,30,000

(ஆ) தமிழ் நாடு தொழில் கூட்டுறவு வங்கி.

இம் மாநிலத்தில் உள்ள கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்கும், சிறு அளவு தொழிற்சாலைப் பிரிவுகளுக்கும் நிதி உதவி அளிக்கும் முக்கிய நோக்கத்துடன் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டது. ஆய்வு செய்யப்படும் காலண்டர் ஆண்டில் மொத்தம் 18.77 லட்சத்திற்கு புதிய கடன்களும், ரொக்கக் கடன்களும் கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்கும், ஒரு சிறு அளவு தொழிற்சாலைப் பிரிவுக்கும் வழங்கப்பட்டது. செல்திறன் கால அளவு முடிந்து விட்டுள்ள முன் பணத் தொகைகளைப் புதுப்பிப்பது இதில் அடங்காது.

(இ) தமிழ் நாடு கூட்டுறவு வங்கி.

கூட்டுறவு நூற்பு ஆலைகள், சர்க்கரை ஆலைகள் போன்ற பெருந் தொழில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு இவ்வங்கி உதவுகின்றது. 1968-ம் ஆண்டு இது 93 லட்சம் வரை நிதி உதவி வழங்கியுள்ளது.

சுரங்கங்களும், கனி வளங்களும்.

மாநிலப் புவியியல் பிரிவு, முந்திய ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து செயல்படுத்தியவுடன் புதிய ஆய்வுப் பணிகளையும் தொடங்கியுள்ளது. 1968–69-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகளில் முக்கியமானவற்றின் பட்டியல் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

1968–69-ம் ஆண்டில் மாநிலப் புவியியல் பிரிவு இம் மாநிலத்தில் உள்ள கனிவள வாயில்களை விரிவாக மதிப்பிடுவதையும் அவற்றைத் தோண்டி எடுப்பதையும் மேற்கொண்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கயத்தாற்றைச் சுற்றியுள்ள சுண்ணாம்புக்கல் படிவங்களின் தரத்தையும் அளவையும் அறிவதற்காக துளையிடுவதன் மூலமும், பள்ளம் வெட்டுவதன் மூலமும் ஆராயப்பட்டு வருகின்றன. இதன் அருகில் கிடைக்கும் களிக்கல் படிவங்களும், மதிப்பிடப்பட்டு வருகின்றன. சிமிட்டி தயாரிப்பில் இது இன்றியமையாத மூலப் பொருளாகும். ஆலங்குளம் சிமிட்டித் தொழிற்சாலையின் தேவையை

இதுவே பூர்த்தி செய்யவேண்டும். கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள எட்டி மடைப் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல் படிவங்கள் துளை யிடுதல் முதலியவற்றின் மூலம் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டம் கீரனூருக்கு அருகில் கிடைக்கும் சிலிமனைட் படிவங்கள் விரிவாக ஆராயப்பட்டு வருகின்றன. பழவேற்காடு ஏரியின் கழிமுகப் பகுதியில் காணப்படும் கிளிஞ்சல் சுண்ணாம்புக் கற்கள் தோண்டிப் பார்க்கும் முறைகளின் மூலம் விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. இம் மாநிலத்தில் உள்ள ஏனைய ஏரிகளின் கழிமுகத்திலும் அத்தகைய ஆய்வு வேலைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம் ஜோசியர் ஆலங்குளத்திற்கு அருகில் காணப்படும் கிராபைட் படிவங்கள் விரிவாக மதிப்பிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேற்கூறியவற்றைத் தவிர, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், நீலகிரி மாவட்டங்களில் பல்வேறு கனிவள ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. தொழிற்சாலைத் திட்டங்கள், பட்டுப் பண்ணை இடங்கள் முதலிய பலவற்றிற்குமான நில, நீர் தேவைகளும் மதிப்பிடப்பட்டன.

மாநிலப் புவியியல் பிரிவின் பணிகள் இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு கனிப் பொருள் படிவங்களை மதிப்பிடுவதில் தொடர்ந்து அடங்கி யுள்ளது. இது மாநிலத்தில், ஏற்கெனவே மேற்பகுதி வேலைகள் முடிவடைந்துள்ள இடங்களில் சுண்ணாம்புக்கல் படிவங்கள் குறித்து 1969–70-ம் ஆண்டில் விரிவான ஆராய்ச்சியை மேற்கொள்ளும். மதுரை மாவட்டம் ஜோசியர் ஆலங்குளத்திற்கு அருகிலும், இராமநாதபுர மாவட்டம் பூவந்திக்கு அருகிலும் காணப்படும் காரியகப் (Graphite) படிவங்கள் மிக விரிவாக ஆய்வு செய்யப்படும். இம் மாநிலத்தின் கடலோரப் பகுதிகளின் நெடுக கழிமுகப் பகுதிகளில் காணப்படும் கிளிஞ்சல் சுண்ணாம்புக் கற்களை விரிவாக ஆய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்படும் களிக்கல் படிவங்கள் விரிவாக ஆராயப்படும். சூடு தாங்கும் பொருளுக்கு இன்றியமையாத வாயிலாகிய களிக் கல்லின் பொருளாதாரத் தேவை குறித்து திருச்சிராப்பள்ளி மாவட்டம், கீரனூரில் விரிவாக ஆராயப்படும். மேற்குத் தொடர்ச்சி மலைகள் இதுவரை ஆய்வு செய்யப்படாத பகுதிகளிலும், நமது மாநிலத் திற்கு உட்பட்ட பகுதிகளிலும் உள்ள கனிப் பொருள்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வெர்மிகுலைட் படிவங்கள் நல்ல தரம் வாய்ந்தவை. அவற்றை ஆதாயத்துடன் தோண்டியெடுக்கலாம். வெர்மிகுலைட்டைத் தோண்டி யெடுத்து, சுத்தப்படுத்துவதற்குகான பிரிவு ஒன்றை 1967-ம் ஆண்டு நவம்பரில் ஏற்படுத்தும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. படிவங்கள் குறித்து விரிவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் பணிகளுக்கு இடை நிகழ்வான வேலைகள் மேற்கொண்டும் செய்யப்படுகின்றன. வெர் மிகுலைட்டைத் தோண்டியெடுப்பதற்காக நிலக்கையகப்படுத்தும் வேலை நடந்தேறி வருகின்றது. வெர்மிகுலைட்டைப் பிரித்தெடுப்பதற்கான தொழிற்சாலை ஒன்றையும், கருவிகளையும் பொருத்துவதற்காக அம்பத்தூர் தொழிற்பேட்டையில், ஓர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் பகுதியில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களை பிரித் தெடுக்கவும், அவ்வாறு பிரித்தெடுக்கப்பட்ட பொருள்களை பயன்கொள்ளும் நிலையங்களுக்கு முதலில் அனுப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றை பிரிட்டன், மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இயலுமா என்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள தமிழ்நாடு கனி வள வளர்ச்சித் திட்டம் 1968-ம் ஆண்டு ஜனவரியில் நேரிட பணிகளைத் தொடங்கியது. இத்திட்டப் பகுதியில் தோராயமாக 14,000 சதுர கிலோமீட்டரில் கிடைக்கக்கூடியதும் பிரித்தெடுக்கக் கூடியதுமான இரும்புக் கலப்புள்ள, இரும்புக் கலப்பற்ற உலோகங்களையும், வெர்மிகுலைட், பாஸ் பேட் போன்றவற்றையும் மும்முரமாகப் பிரித்தெடுக்க இத்திட்டம் வகை

செய்கிறது. சேலம் மாவட்டப் பகுதி, தருமபுரி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்கள் அடங்கிய தமிழ்நாட்டின் வட பகுதியில் இத்திட்டப் பகுதி அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் உள்ள சேலத்தில் இரும்புக் கனிப் படிவங்களும், மாக்னசைட் படிவங்களும் மணதூரில் ஈயம்-துத்த நாகம்-தாமிரப் படிவங்களும் காணப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தில் பலநாட்டு வல்லுனர் குழு அளிக்கும் உதவியைக் கொண்டும், ஆய்வுக் கூடத்தில் உள்ள போல்களத்தில் பயன்படுத்தும் நவீன சாதனங்களையும், கருவிகளையும் கொண்டு திட்டப் பகுதியில் கனிப் பொருள்கள் நவீன முறையில் பிரித்தெடுக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 71·37 லட்சத்திற்கு சமமாகும். (டாலரின் வடிவத்தில் உள்ளது). இது ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் செய்யப்படும். ரூ. 34·60 லட்சத்தை தமிழ்நாடு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

விமானத்திலிருந்து நிழற்படம் எடுத்தல், காந்தக் கருவி, ஒளிக்கதிர் கருவி, ஆகியவற்றைக் கொண்டு விமானத்திலிருந்து ஆய்வு செய்தல் போன்ற வேலைகள் முடிவடைந்து விட்டன. முன்னேற்பாட்டு ஆய்வின் விளைவுகள் சில ஊக்கமளிக்கக் கூடியவையாக இருந்ததால், திட்டப் பகுதியின் வடமேற்குப் பகுதியில் கூடுதலாக 5,500 ச. கிலோ மீட்டர் பரப்பில் ஆய்வு வேலைகளை மேற்கொள்ள, ஐக்கிய நாடுகள் மன்ற வளர்ச்சித் திட்டம் ஒப்புக்கொண்டுள்ளது. விமானத்திலிருந்து பிடித்த நிழற் படங்கள், நிலவியல் ஆராய்ச்சி, நில உட் கூற்றியல் ஆராய்ச்சி ஆகியவைகளின் அடிப்படையில் இந்தப் பகுதியில் நிலவியல் அமைப்பு வரைப்படப் பணி நிறைவேறி வருகின்றது. மாமண்டூர் பகுதியில் கூடுதலாக ஈயம், துத்தநாகம், தாமிரப் படிவங்கள் இருப்பதைக் காட்டுவதற்காக, நிலவியல் ஆராய்ச்சியுடன், வைரக் கற்கள் பதிக்கப்பட்ட துளையிடும் கருவிகள் கொண்டு துளையிடும் வேலையும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கஞ்சமலையில் உள்ளது போன்று (அதாவது 35 முதல் 40 சத விதம்) 40 மில்லியன் டன்கள் மாக்னசைட் கனி கொண்ட இரும்புக் கனிப் படிவங்கள், திருவண்ணாமலையிலிருந்து வட மேற்கில் 5 கல் தொலைவில் உள்ள கவுத்த மலையில் கண்டறியப்பட்டுள்ளன. (வட ஆர்க்காடு மாவட்டம்) திருப்பத்தூருக்கு அருகில், செவத்தூர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நிலவியல், புவியியல் பணிகளின் மூலம் இப் பகுதியில் வெர்மிகுலைட் கலந்த, எளிதில் கிடைக்காத கனிப் பொருள்களும் எபடைட்டும் (epetite) (கால்ஷியம் பாஸ்பேட்) இருப்பது தெரிய வந்துள்ளது. திட்டப் பகுதியில் 1969–70-ம் ஆண்டில், நில அமைப்பு ஆராய்ச்சிப் பணி, நில ரசாயன பாகுபாட்டுப் பணி, நில உட் கூற்றியல் வரைபடம் வரைதல், துளையிட்டுப் பார்த்தல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்படும்.

ஐக்கிய நாடுகள் மன்ற வளர்ச்சித் திட்டத்தினால் தேவைக்கு எழுதப் பட்ட விஞ்ஞானக் கருவிகள் பல வந்துள்ளன. இத்திட்டத்திற்காகவும், தொழில் துறையின் புவியியல் பிரிவுக்காகவும் அவை களத்தில் பயன்படுத்தப்படுகின்றன. கிண்டி தொழிற்பேட்டையில் தகுந்த கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்திலிருந்து கிடைத்த விஞ்ஞானக் கருவிகளை சரியானபடி பொருத்த இயலும். இதன்மூலம் கனிகளையும், கனிப் பொருள்களையும் தெளிவாக கண்டறிவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இம்மாநிலத்தில் உள்ள கனிப் பொருள்களைக் கண்டறிந்து மும்முரப் படுத்தப்பட்டுள்ளது. மாமண்டூரில் ஈயம், துத்தநாகம், தாமிரக் கனிப் பொருள்களில், மதுரை, நீலகிரி மாவட்டங்களில் பாக்சைட் கனிப் பொருள்கள் ஏனைய மாவட்டங்களில் சுண்ணாம்புக் கல், களிக்கல், பெல்ஸ்டஸ்பார், குவார்ட்ஸ், காரீயகம் போன்ற ஏராளமான கனிவள வாயில்கள் அண்மை ஆண்டுகளில் கண்டறியப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள, கனிப் பொருள் வளர்ச்சி திட்டம், தெரிந்த கனிப் பொருள்களான, இரும்புக் கனி, மாக்னசைட் உலோகங்கள், வெர்மிகுலைட் முதலியவற்றையும், புதிய கனிப்

பொருள்கள் பலவற்றையும் மிகுந்த ஆர்வத்துடன் கண்டறியும் பல்வேறு கனிப் பொருள் படிவங்களை தொழிற்சாலை வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு, அவை தகுந்த, சிக்கனமான முறைகளினால் பிரித்தெடுக்கப் பட்டு, பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். இதனை மும்முர ஆய்வின் மூலமும், சோதனை மூலமுமே முடிவு செய்ய இயலும். எனவே, கனிப் பொருள் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலை ஒன்றினை ஏற்படுத்துவதற்கான திட்டம் ரூ. 26·00 லட்சம் செலவில் நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. கனிப் பொருளின் தன்மையை முடிவு செய்வதற்காக, பொடித்தல், தரப்படுத்துல், உருண்டையாக்குதல், போன்ற பல சோதனைகளை இந்த ஆய்வுக் கூடம் செய்வதுடன் தூய்மைப்படுத்தப்பட்ட பொருள்களில் அடங்கியவற்றை வரையறுக்கும், நன்மை காட்டப்பட்ட கனிப் பொருள்களைப் பயன் படுத்தும் தொழில்கள் பலவற்றை நிறுவுவது இயலும்படி இருப்பதற்காக இந்த ஆய்வுக் கூடம் முன்னோடி ஆய்வுகளை மேற்கொள்ளும் என்று நம்பப்படுகிறது. மாநில அரசும், மாநில மத்திய அரசு நிறுவனங்கள் மேற்கொள்ளுகிற நில உட் கூற்றியல் ஆய்வுப் பணிகளுக்கு இந்த ஆய்வுக் கூடத்தின் பணி உறுதுணையாயிருக்கும். கனிப் பொருள் அடிப் படையில் அமைந்த தொழில்களில் ஈடுபட விரும்புவோருக்கு இது நேரடியாக பயனளிக்கும்.

பொது.

சென்னை உரத் தொழிற்சாலை, நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் இவற்றின் துணைப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு, புதிய தொழில்களை நிறுவுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதற்காக புதிய தயாரிப்புத் தொழில்களை நிறுவும் வாய்ப்புகளைப் பற்றி ஆய்வு செய்து கருத்துத் தெரிவிப்பதற்காக இரு சர்வே குழுக்களை மாநில அரசு நியமித்துள்ளது. இந்த அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான பணி இந்திய அரசு நிறுவனமாகிய "எஞ்சினியர் இந்தியா, லிமிடெட்" என்ற நிறுவனத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், உப்பை அடிப்படையாகக் கொண்ட கடல் இரசாயனத் தொழில்கள் குறித்த வாய்ப்புகள் பற்றியும் அரசு நாட்டம் செலுத்தி வருகின்றது. இம் மாநிலத்தில் நீண்ட கடற் கரை உள்ளதால் அவற்றை நிறுவுவது பயனளிக்கும். பொறியியலை அடிப்படையாகக் கொண்ட தொழில்பிரிவுகளை நிறுவுவதற்குரிய இடங்களின் தகுதிகளை மதிப்பிட்டு, அப்பகுதிகளில் குறிப்பிட்ட சில மனைகளைத் தெரிந்தெடுக்கவும், இந்தியா முழுவதிலும் பல்வேறு பகுதிகளில் விரிவான ஆய்வு நடத்தும்படி, புதுடில்லி, தேசீயத் தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு இந்திய அரசின் தொழில் வளர்ச்சிக் கம்பெனி நடவடிக்கைகள் அமைச்சு கட்டளையிட்டுள்ளது. தேசீயத் தொழில் வளர்ச்சிக் கழகத்திலிருந்து பொறியாளர்கள் குழு ஒன்று தமிழ்நாட்டில் இடங்களைப் பார்வையிட்டு, கீழ்க்கண்ட மூன்று இடங்களைத் தெரிந் தெடுத்தது :—

(i) அம்பத்தூர் தொழில்பேட்டை.

(ii) அரக்கோணம்.

(iii) இராணிப்பேட்டை மேம்படுத்திய மனைப் பேட்டைகள்.

இந்த மனைகள் பற்றிய விவரங்கள் தேசீயத் தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டன. இத் திட்டத்தை எந்த இடத்தில் நிறை வேற்றுவது என்பது குறித்து முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய வாணிக அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட புதுடில்லி, வெளி நாட்டு வாணிக இந்திய நிலையம், தொழில் பொருள்கள், வேளாண்மைப் பொருள்கள் இரண்டு குறித்தும் தமிழ்நாட்டில் ஏற்றுமதி வாய்ப்பு குறித்த ஆய்வு நடத்தும் பொருட்டு மாநில அரசுக்கும் பேருதவியாக இருந்தது. அதன் மூலம், மத்திய உதவியுடன் மேற்கொள்ளக்கூடிய பொருத்தமான வேலைத் திட்டங்களை வகுப்பது மாநில அரசுக்கு இயலும். இம்மாநிலத்தில் ஏற்றுமதிக்கு வாய்ப்பு கொண்டுள்ள பொருள்கள்

1969 மார்ச் 11]

யாவை என்பதை ஆய்வு செய்வதும், அதே சமயத்தில் இன்னும் பல செயல்களை மேற்கொள்வதும் இந்த ஆய்வின் நோக்கங்களாகும். அச் செயல்களாவன :—உற்பத்தியின் பல்வேறு கூறுகள், மூலப் பொருள்கள் வழங்கல், தயாரிப்பு வசதிகள், முதலீட்டு முறை, செலவு-விலை தொடர்பு, ஏற்றுமதிப் பங்கீட்டின் செலவு, அதன் நிர்வாக அமைப்பு, குறிப்பிட்ட பொருள்கள், பண்டங்கள் சம்பந்தமாக வெளிநாட்டில் விற்பனை வசதிகளைக் காணும் நடைமுறைகள் முதலியன. ஆய்வு நடத்துவதற்கான மொத்தச் செலவு ரூ. 2 லட்சமாகும். அதை மாநில அரசும் மத்திய அரசும் 50 : 50 விகிதத்தில் பகிர்ந்துகொள்ளும். துறைத் தலைவர்களையும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகங்களையும் கலந்தாலோசித்து, தமிழ்நாட்டில் மும்முர ஆய்வுக்கென சுமார் 63 பொருள்களும், பண்டங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு வாணிக இந்திய நிலையம் சென்னையில் தனது அலுவலகத்தை நிறுவி, 1968 டிசம்பரில் தனது பணியைத் தொடங்கியது. ஆறு திங்களுக்குள் ஆய்வு முடிந்துவிடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஆய்வு முடிந்தவுடன், இந்த நிலையம் தமிழ் நாடு அரசின் ஒப்புதலுக்காக ஓர் அறிக்கையை அனுப்பும்.

முன்னர்க் கண்டுள்ள ஆய்வுரையிலிருந்து குறிப்பிட்ட ஒரு உண்மை வெளியாகின்றது. வேலை நிறைவு பெற்ற பற்பல பொருள்கள், இடை நிலைப் பொருள்கள், மூலப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் பல முறைகளை உறுதியான வகையில் மேற்கொண்டால், தொழில் வளர்ச்சிக்கு உறுதியான அடிப்படை அமையும் என்பதே அந்த உண்மை. தனியார் தொழில் முனைவர்களுக்கு பல தொழிற் முயற்சிகள் விடப் பட்டுள்ளன. ஆயினும், மாநில அரசு உற்பத்தி முறையிலுள்ள பல குறைகளை ஆராய்ந்து பார்த்து, தொழில் முனைவர்களுக்கு உதவி செய்து அவர்கள் தங்களுடைய உரிமங்களைப் பெறுவதில் உதவி செய்யும். உறுதியான தொழில் அடிப்படை ஏற்பட்டுள்ளதையும், தனியார் துறையின் வாய்ப்புகள் பெருகியுள்ளதையும், மாநில அரசு அளிக்கும் ஊக்கத்தையும் எண்ணும்போது, இம் மாநிலத்தில் தொழிற் வளர்ச்சி விரைவாக முன்னேறும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது. அத்துடன் வரும் ஆண்டுகளில் கணிசமான அளவுக்குத் தொழில்கள் வளர்ச்சி அடையும் என்பதில் ஐயமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—I.

1968-ம் ஆண்டில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் செயல்பட்ட விவரங்கள்.

தொடர் எண். (1)	கூட்டுறவு நூற்பு ஆலைகளின் பெயர்கள். (2)	திருவியுள்ள திறனளவு. (3)	ஒரு நாளில் முறைப்பணி ஒன்றில் இயங்கிய கதிர்களின் சராசரி எண்ணிக்கை. (4)	1968-ம் ஆண்டில் வேலை செய்த நாட்களின் எண்ணிக்கை. (5)	1968-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப் பட்ட நூலின் மொத்த அளவு (கிலோ கிராமில்) (6)	1968-ம் ஆண்டில் விற்கப்பட்ட நூலின் மதிப்பு (ரூபாயில்). (7)
1	தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பு ஆலை, பேட்டை—					
	"ஏ" பிரிவு	17,600	15,899	306	11,31,790	82,23,908
	"பி" பிரிவு	12,096	11,235	307	2,91,286	40,64,390
2	ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை, ஸ்ரீவில்லிபுத்தூர்.	12,544	10,813	306	6,38,171	56,22,778
3	திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை, நாசரத் ..	13,200	11,598	304	6,81,382	54,48,668
4	சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை, சேலம்	12,320	12,051	306	3,14,711	44,77,349
5	மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை, மேலூர் ..	12,000	10,540	304	12,46,810	85,83,481
6	கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, தாராபுரம்.	12,000	10,336	274	9,46,038	65,14,796
7	திருச்சி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, கரூர் ..	12,000	11,261	306	10,17,290	65,87,258
8	கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, ஆரல்வாய்மொழி.	12,000	10,415	326	12,06,045	76,52,241
9	காஞ்சிபுரம் காமட்சியம்மன் நூற்பு ஆலை, காஞ்சிபுரம்.	13,680	11,643	306	3,67,142	40,83,805
10	தென் ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, திண்டிவனம்.	12,096	11,153	274	2,45,614	28,81,517
11	வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, வேலூர்.	13,824	12,400	317	4,81,475	50,95,030
12	தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை, மணல்மேடு.	12,096	11,182	348	2,57,028	50,70,631
	மொத்தம் ..	1,67,456			88,24,782	7,43,05,850

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II.

1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ந் தேதி வரையிலுள்ள கால அளவில் ஆறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் செயலாற்றியதைக் குறித்த விவரங்கள்.

தொடர் எண்.	சர்க்கரை ஆலையின் இருப்பிடம்.	நிறுவியுள்ள திறனளவு (மெ. டன்.)	கரும்பு பிழியும் கால அளவு.	பிழிந்த கரும்பின் மொத்த அளவு. (மெ. டன்.)	உற்பத்தி செய்த சர்க்கரையின் மொத்த அளவு. (மெ. டன்.)	மதிப்பு (ரூபாயில்)	கிடைத்த சர்க்கரை சத வீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, கிருஷ்ணாபுரம்.	900	94 (சிறப்புப் (பருவம்.)	77,37	6,617	1,35,25,400	8·57
2	வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, வட புதுப்பட்டு.	1,250	136 (முக்கியப் பருவம்.)	1,14,529	11,804	2,41,27,880	10·31
3	மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, படாளம்.	800 1,000	79 (முக்கியப் பருவம்.)	65,042	6,210	1,26,93,240	9·55
4	சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மோகனூர் ..	1,000	47 (முக்கியப் பருவம்.)	23,630	2,247	45,93,120	9·51
			32 (சிறப்புப் பருவம்)	42,877	3,724	76,12,360	9·00
			68				
5	கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மூங்கில் துறைப்பட்டு.	1,000	57 (முக்கியப் பருவம்.)	54,490	5.505	1,12,52,220	10·10
6	தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, அலங்கா நல்லூர்.	1,000	28 (முக்கியப் பருவம்.)	16,717	1,475	30,14,900	8·83

குறிப்பு.—பத்தி 7-ல் குறிக்கப்பட்டுள்ள சர்க்கரையின் மதிப்பு, ஒரு குவிண்டால் ரூ. 154 வீதம் 60 சத வீதத்திற்கும், ஒரு குவிண்டால் ரூ. 280 வீதம் 40 சத வீதத்திற்கும் கணக்கிடப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III.

1951-ம் ஆண்டு தொழில் (வளர்ச்சி முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ் 1968-ல் வழங்கப்பட்ட உரிமங்களின் பட்டியல்.

வரிசை எண், நிறுவனத்தின் பெயர். (1)	உற்பத்தி செய்யும் பொருள்கள். (2)
1 நேஷனல் பட்டாசுத் தொழிற்சாலை, சிவகாசி.	பாதுகாப்பு வத்திகள் ஆண்டுக்கு 2·28 மில்காயில் வெடி மருந்து—ஆண்டுக்கு 300 டன்.
2 பி.எஸ்.ஜி. தொழிற்கல்வி நிறுவனம், பீளமேடு, கோயம்புத்தூர்-4.	மில்லிங்கட்டர்—ஆண்டுக்கு 2,000. ஹியர்ஹாப்ஸ், ஷேப்பர்ஸ்—ஆண்டுக்கு 1,500. கவுண்டர் சிங்க் டிரில்ஸ்—ஆண்டுக்கு 1,000. பாரம் கட்டர்கள்—தனிக்கட்டர்கள்—ஆண்டுக்கு 250. குழாய் அச்சுகள்—சேசர்ஸ்—ஆண்டுக்கு 2,000. கீ. சீட்டிங்ப்ரோச்சஸ்—ஆண்டுக்கு 250. (Key Seating broaches) கைத்துளைப் பொறிகள்—ஆண்டுக்கு 6,000. ஒற்றை முனைகார்பைடு கருவிகள்—ஆண்டுக்கு 12,000 (என்.எ.)
3 தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு சர்க்கரை ஆலை, திம்மணஹள்ளி.	சர்க்கரை—நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியும் திறன் (என்.யு.)
4 சதர்ன் ஸ்டக்சுரல் நிறுவனம, சென்னை ..	இ. ஒ. டி. பாரந்தூக்கி பொறிகள் (என்.எ.)
5 குரோம் தோல் நிறுவனம் (தனிப்பட்ட) குரோம்பேட்டை.	தோல், ரப்பர், பிளாஸ்டிக் அடிப் பாகங்களுடைய மேல் நாட்டு வகைக் காலணிகள்—ஆண்டுக்கு 6 லட்சம் ஜோடிகள். இந்திய வகைக் காலணிகள்—ஆண்டுக்கு 7·50 லட்சம் ஜோடிகள். பிளாஸ்டிக் காலணிகள்—ஆண்டுக்கு 9 லட்சம் ஜோடிகள் (எஸ்.இ.)
6 டன்லப் (இந்தியா) நிறுவனம், அம்பத்தூர்.	புட்டில் மிதிவண்டி டியூப்கள்—ஆண்டுக்கு 20 லட்சம் (என்.எ.)
7 கே.சி.பி. நிறுவனம், ராமகிருஷ்ண கட்டிடம், மலைச்சாலை, சென்னை.	மின்விசை அனலோக் (Analoque) கணக்கிடும் பொறிகள்—ஆண்டுக்கு 50 (என்.எ.)
8 திரு. இந்திய மருந்து, மருந்து தயாரிக்கும் நிறுவனம், புதுடில்லி, மருத்துவக் கருவிகள் தொழிற்சாலை, நந்தம்பாக்கம், சென்னை.	ஹை போடர்மிக் ஸ்டுசர் ஊசிகள்—ஆண்டுக்கு 200 லட்சம் (கூடுதலான உற்பத்தி).
9 சென்னை ரப்பர் தொழிற்சாலை, சென்னை.	பிரேக் சேம்பர் டயாபிரம்ஸ்—ஆண்டுக்கு (Brake Chamber Diaphram) 300,000 (என்.எ.)

1951-ம் ஆண்டு தொழில் (வளர்ச்சி) ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின்கீழ் 1968-ம் ஆண்டில் வழங்கப்பட்ட தொழில் பெருக்க அனுமதிக் கடிதங்களின் பட்டியல்.

வரிசை எண், நிறுவனத்தின் பெயர். (1)	உற்பத்தி செய்யும் பொருள்கள். (2)
1 வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, வட புதுப்பேட், வட ஆற்காடு மாவட்டம்.	சர்க்கரை உற்பத்தியை அன்றுடம் 1,250 டன்களிலிருந்து அன்றுடம் 2,200) டன்களாக உயர்த்துதல் (எஸ்.இ.

1969 மார்ச் 11]

வரிசை எண், நிறுவனத்தின் பெயர். (1)	உற்பத்தி செய்யும் பொருள்கள். (2)
2 திரு. டி.ஆர். பாய், 83-சியான (கிழக்கு) பம்பாய்-22 (தமிழ்நாடு மாநிலம்).	பர்புரல், ப்பூரான் பிசின்—முறையே 600 டன்கள் (என்.யூ.)
3 ஈசன் பொறியியல் நிறுவனம், சென்னை-1.	கருவிகள், அச்சுகள், கைக்கருவிகளைப் பிடிக்க உதவும் துணைக்கருவிகள், அளவைப் பொறிகள், இணைப்புப் பொறிகள்—ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1 கோடி மதிப்புள்ள பொருள்கள் (என்.யூ.)
4 அதுல் மருந்து நிறுவனம், பம்பாய் (சென்னை).	ஹைட்ரஜன் சயனைடு, மெளதல், மெதாக்ரைலேட், மோனோமர், மெதாக்ரைலேட் பிசின்கள், உலோகத் தண்டுகள், தகடுகள் (என்.யூ.)
5 கே.சி.பி. நிறுவனம், சென்னை	சிப் போர்டு இயந்திரங்கள்—ஆண்டொன்றுக்கு ரூ. 150 லட்சம் மதிப்புள்ள 5 இயந்திரங்கள் (என்.யூ.)
6 பி.வி.பி. நாயுடு, காப்பாடி	ஆண்டொன்றுக்கு ரூ. 20 லட்சம் மதிப்புள்ள வார்பட அச்சுகள் (என்.யூ.)
7 எல்.ஜி. பாலகிருஷ்ணன் சகோதரர்கள் நிறுவனம், கோயம்புத்தூர்.	அதிக பாரமுள்ள சங்கிலிகள் (என்.ஏ.)
8 எஸ்.ஜி. பொறியியல் தொழில் நிறுவனம், கல்கத்தா-1, சென்னை.	வாட் சாயங்கள்—ஆண்டுக்கு 250 டன் பல வகைச் சாயங்கள்—ஆண்டுக்கு 75 டன்.
9 டன்லப் இந்தியா நிறுவனம், அம்பத்தூர்.	மோட்டார் வண்டிகள் டயர்கள், டியூப்கள்—ஆண்டுக்கு 250,000 (எஸ்.இ.)
10 சென்னை ரப்பர் தொழிற்சாலை, சென்னை.	மோட்டார் வண்டிகள் டயர்கள், டியூப்கள்—ஆண்டுக்கு 250,000 (எஸ்.இ.)
11 இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம், பம்பாய்—25 (தமிழ்நாடு மாநிலம்).	மோட்டார் வண்டிகள், தொழில் தர உராய்வுத் தடுப்பு எண்ணெ—ஆண்டொன்றுக்கு 170,000 டன்.
12 யூனியன் கார்பைடு இந்தியா நிறுவனம், புது தில்லி, சென்னை.	துத்தநாகத் துண்டுகள், கலோடிஸ், தகடுகள்—ஆண்டொன்றுக்கு 6,000 டன்.
13 இந்தியன் ஆர்கனிக் கெமிக்கல்ஸ் நிறுவனம், பம்பாய்-1, சென்னை.	பாலிஸ்டர் நுண்ணிழைகள்—ஆண்டுக்கு 6,100 டன்.
14 இ.ஐ.டி. பாரி, டெயர் அவுஸ் சென்னை-1 ..	லின்டேன்—ஆண்டுக்கு 60 டன் (என்.யூ)

1968-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட கனிவள ஆய்வுகளின் பட்டியல்.

1968-ம் ஆண்டில் மாநிலக் கனிவள ஆராய்ச்சிப் பிரிவு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :—

மாநிலக் கனிவள ஆராய்ச்சிப் பிரிவை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் பல முக்கிய ஆய்வுகள் நடத்தப்பட்டன. முந்திய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சில ஆய்வுகள் இக் கால அளவில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன.

இந்த ஆண்டில் கீழ்க்கண்ட பகுதிகளில் டோலமைட், சுண்ணாம்புக்கல், களிக்கல், ஆகியவை உள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் ஆய்வுகள் நடத்தப்பட்டன :—

(அ) கோயில்பட்டி வட்டம், கடலையூர், வள்ளிநாயகபுரம் கிராமங்களுக்கு அருகில் " டோலமைட் " கனிகள் ;

(ஆ) கோயில்பட்டி வட்டம், தளவாய்புரம், சீனிவெள்ளாளபுரம் கிராமங்களுக்கு அருகில் சுண்ணாம்புக்கல் ;

(இ) சாத்தூர் வட்டத்தில் களிக்கல் ;

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், ஜோஷியர், ஆலங்குளம் அருகில் "கிராபைட்" கனியை வெட்டியெடுக்கும் வேலை மேற்கொள்ளப் பட்டது. இக் கனிகள் இருப்பதைக் கண்டுபிடிக்க துளைகள் போடத் திட்ட மிடப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், கீரனூர் அருகில் "சிலிமனைட்" கனிகளை வெட்டியெடுக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற் கொண்டும் வேலை நடந்தேறி வருகிறது.

கீழ்க்கண்ட இடங்களில் சுண்ணாம்புக் கனிகளைத் தோண்டியெடுக்க சோதனைக் குழிகள் போடப்பட்டன :—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம் எட்டிமடை அருகில் ;

(ஆ) கோயில்பட்டி வட்டம், புதுப்பட்டி, முத்துராமலிங்கபுரம் அருகில்;

தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம், ஆலடி—புலியூர் கிராமங்களுக்கு அருகிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் தோணி, காரை கிராமங்களுக்கு அருகிலும் களிமண்ணைத் தோண்டியெடுக்கும் வேலை நிறைவேற்றப்பட்டது. விருத்தாசலத்தில் மெருகேற்றிய குழாய், தொழிற் சாலைக்குத் தேவையான பகுதிகளை முடிவு செய்யும் பணியும் மேற் கொள்ளப்பட்டது.

செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி அருகில் பழவேற்காடு ஏரியில் சுண்ணாம்புக் கற்கள் இருக்கும் பகுதிகளைக் கண்டுபிடிக்க ஆய்வு வேலை மேற்கொள்ளப்பட்டது. கடற்கரையின் அண்மையில் ஆழமல்லாத நீர்ப் பகுதிகளில் இவ்வேலை மேற்கொள்ளப்படுகிறது.

மன்னார் வளை குடாவில் பவழச் சுண்ணாம்புக் கல்லையும் (Coral Limestone) குருசடை, புல்லித் தீவுகளைச் சுற்றிலும் உள்ள பவழப் பாறைகளையும் தோண்டியெடுக்க மாற்று இடங்களைக் கண்டு பிடிப்பதற் கான தொடக்க ஆய்வு நடத்தப்பட்டது. "பாக்" விரிகுடாவில் தங்கச்சி மடத்துக்கு வடக்கில் காணப்படும் பவழப் பாறைகளும் ஆய்வு செய்யப் பட்டன. மீனளத் துறை இயக்குநர் கேட்டுக்கொண்டதன் மேல் மீன் பிடி படகுகள் செல்வதற்கு வகை செய்யும்பொருட்டு அந்த ஆய்வு செய்யப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டம், சிங்கம்பட்டி, பாபநாசம், ஒதுக்கக் காட்டுப் பகுதிகளிலும் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பூவந்தி கிராமத்திலும் "கிராபைட்" கனிகள் கிடைப்பது குறித்து ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

மேற்குறிப்பிட்ட பெரிய கனிவள ஆய்வுகளைத் தவிர, கீழ்க்கண்ட சிறு ஆய்வுகளும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன :—

(அ) கிருஷ்ணகிரியில் கற்களுக்கு மெருகேற்றி உருவாக்கும் பிரிவுக் கென நிலங்களை ஒதுக்க, தகுந்த பகுதிகளைத் தெரிந்தெடுக்க ஆய்வு செய்தல் ;

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், அல்லுக்குழி பகுதியிலும், ஜே. கிருஷ்ணபுரத்திலும் "பைரெட்" கனியும் அபிரகமும் கிடைக்கின்றனவா என்பது குறித்து ஆய்வு ;

(இ) ஒசூர், முதுப்பூர் கிராமத்தின் அருகில் அபிரகம் கிடைக்கின்றதா என்பது குறித்து ஆய்வு ;

(ஈ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சாலை உலோகங்களுக்கான ஆய்வு

(உ) கோவை மாவட்டம், சிவமலைப் பகுதியில் “ நெப்பலைன் சைய னைடு ” கனிக்கான ஆய்வு ;

(ஊ) வயநாடு பகுதிகளில் அபிரகம் வெட்டியெடுக்கும் தொழிற மேம்பாட்டிற்கு வகை காண ஆய்வுக் குழு அப் பகுதிகளைப் பார்வை யிட்டது ;

(எ) பல்லடம் வட்டம், கருமாத்தம்பட்டி அருகில் “ சல்பைடு” கனிக் கான ஆய்வும், வத்திராயிருப்பில் கந்தகக் கனிக்கான ஆய்வும் ;

(ஏ) மாலூ ரெட்டிப்பட்டி பகுதியில் “ அப்டைட் ” கனிக்கான ஆய்வும், நீலகிரி மாவட்டத்தில் பீங்கான் களிமண்ணுக்கான ஆய்வும்.

மேற்குறிப்பிட்ட ஆய்வுகளுக்குக் கூடுதலாக, நில நீர் ஆய்வுகள் பலவும் நடத்தப்பட்டன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

கீழ்க்கண்ட தொழில்களுக்காக நில அடிமட்ட நீர்வள ஆய்வு—

(அ) மதுரை மாவட்டம், சோழவந்தான் அருகில் திருவேதகம் உள்ள பொடாஷியம் க்ளோரைட் தொழிற்சாலை.

(ஆ) தருமபுரம் மாவட்டம், கோலட்டியில் உள்ள பட்டுப் பண்ணை.

(இ) பேட்டையில் உள்ள தொழில் பேட்டையும், திருநெல்வேலி தொழிற்பயிற்சி நிலைய வளவுகளுக்கு அருகில் உள்ள மேம்படுத்தப்பட்ட மனைகளும்.

(ஈ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை அருகிலும் இராம நாதபுரம் மாவட்டம் சிவகங்கை அருகிலும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கான மனைகள்.

(உ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் தடித்த நார் தொழிற்பிரிவு.

(ஊ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், தொழில் பயிற்சி நிலைய வளவுகள்.

(எ) அம்பாசமுத்திரத்தில் உள்ள கிராமத் தொழில் பிரிவுகள்.

(ஏ) திருநெல்வேலி மாவட்டம், நான்குனேரி வட்டம், பயங்குடி, பட்டுப் பண்ணை.

(ஐ) வட ஆர்க்காடு மாவட்டம், வாலாஜாபேட்டை, சேரடியம் டைக்ரோமேட் தொழிற்சாலை.

(ஒ) மதுரை மாவட்டம், திண்டுக்கல் தொழில்பேட்டை.

(ஓ) தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் உள்ள மாவட்டக் கூட் டுறவு சர்க்கரை ஆலைகள்.

1968 செப்டம்பர் 24-ஆம் நாளன்றும் 27-ம் நாளன்றும் உதகையில் நடந்த 15-ம் அனைத்திந்திய கனிவள ஆலோசனை வாரியத்தின் கூட்டத் திலும் மாநில அமைச்சர்கள் மாநாட்டிலும் மாநிலக் கனிவள ஆராய்ச்சித் துறை முக்கிய பங்கு கொண்டது.

ஆ. சிறு தொழில்கள்.

தொழில்கள் ஆக்கம் பெறவும் தொழில் வளர்ச்சிக்கு ஓர் அடிததள மரகப் பயன்படும் வகையிலும் கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டக் கால அளவுகளில் இந்த அரசு துறைப் பணிக் களரிகள் (Departmental workshops) பலவற்றை அமைத்தது. அரசு நிறுவியுள்ள தொழிற் பேட்டைகளிலேயே இப் பணிக் களரிகள் பெரும்பாலும் அமைக்கப்பட் டுள்ளன. இப் பணிக் களரிகள் முழுமை பெற்ற பொருள்களைத் தயாரிப்பதில்லை. கருவி அறைகள், உலைக்கூடங்கள், பொது நோக்கப் பொறியியல் பட்டறைகள் போன்ற பல துறைகளில் இவை பயன் படுகின்றன.

இந்தத் தொழில் பிரிவுகளை மேற்கொள்வதற்காக, மாநில அரசு 1965 செப்டம்பர் 10-ம் நாளில், "தமிழ்நாடு சிறு தொழில்கள் கழகம்" என்னும் வணிக நிறுவனம் ஒன்றை நிறுவியது. இந்த நிறுவனம் 1965 டிசம்பர் 1-ம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது.

இந்தப் பிரிவுகள் மேற்கொள்கிற உற்பத்திப் பொருள்களின் வகையும் அளவும் ஆண்டுக்காண்டு நெடுகிலும் அதிகரித்து வந்துள்ளது. 1957–58-ம் ஆண்டில் ரூ. 5·5 லட்சம் மதிப்புள்ள பொருள்களே உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால், 1967–68-ம் ஆண்டிலோ ரூ. 498 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தொழிற்சாலைகள் அனைத்தையும் மொத்தமாக எடுத்துக் கொண்டு பார்த்தால், 1967–68-ம் ஆண்டில் ரூ. 30·34 லட்சம் விரயம் ஏற்பட்டுள்ளது. மந்தமான விற்பனை நிலை, வணிக நிறுவனத்தின் மிக அதிகமான நடை முதல் செலவு, ஆண்டுக்காண்டு உற்பத்தி உயராமை ஆகியவையே விரயம் ஏற்பட்டதற்குக் காரணங்களாகும்.

நிர்வாகச் செலவு உயர்ந்ததற்குக் காரணம் பணியாளர் எண்ணிக்கை அதிகரித்ததால் அல்ல என்பதையும் ஈண்டுக் குறிப்பிடவேண்டும். அரசுப் பணியாளர்களைப் போலவே இவர்களுக்கும் சம்பள வீதமும் அகவிலைப் படியும் கொடுத்ததாலும் ஊதிய வாரியங்களின் தீர்ப்புகளைச் செயல் படுத்தியதாலும் செலவு அதிகரித்தமையே இதற்குக் காரணம்.

இவ் வணிக நிறுவனத்தின் செயல் திறமையைத் தக்கவாறு மதிப் பிடுவதானால், பெரும்பாலான பிரிவுகள் பணிப் பாங்கானவையேயன்றி, முழுமை பெற்ற பொருள்களை உற்பத்தி செய்வதற்காக அமைக்கப் பட்டவையன்று என்பதைக் கருத்தில் கொள்வது அவசியமாகும். ஒதுக் குப்புறமான பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பணிவசதி நிறுவனங்கள், வாய்ப்பான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளவையும் திட்ட வட்டமான பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவையும் பொருளாதார நோக்கில் சிக்கனமாக அமைந்துள்ளவையுமான தொழிற் பிரிவுகளைப் போல வருவாய் ஈட்டுமென எதிர்பார்ப்பதற்கில்லை. இத்தகைய இன்றி யமையாத வசதிகளைப் பேணி வருவது சமுதாயத்திலே இருந்தாகவேண்டிய வசதிகளாகும்.

இவ் வணிக நிறுவனம் ஆதாயத்தில் இயங்கவேண்டுமென்பது பற்றி இடைவிடாமல் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தொழில் பிரிவுகள் செயல்படுவதை மேம்படுத்துவதற்குப் பற்பல நடவடிக்கைகள் திட்ட மிடப்பட்டு வருகின்றன. உற்பத்தியையும் விற்பனையையும் செவ்விய வகையில் நிர்வகிப்பதற்கான செயற் குறிப்புகள் ஆலோசனையில் உள்ளன. விற்பனை முயற்சிகள் முழுமுரமாக்கப்பட்டு வருகின்றன. இந்த வணிக நிறுவனம் தனிப்பட்ட நிறுவனம் ஒன்றின் உடனுழைப்புடன் மின்சாரம் அனுப்புவதற்கான கோபுர அமைப்பு ஒன்றை உருவாக்கி குவெய்த்துக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஆணை ஒன்றைப் பெற்றுள்ளது. இதன் மதிப்பு ரூ. 50 லட்சமாகும். இந்த வணிக நிறுவனம் உள் நாட்டிலே நிறைவேற்றி வருகிற பெரும் பணிகளுள் ரூ. 20 லட்சம் மதிப்பில் விசாகப்பட்டிணம் கப்பல் கட்டும் தளத்தில் கட்டுகின்ற பணி; ரூ. 12 லட்சம் மதிப்பில் பேசின் பிரிட்ஜில் மின் நிலையக் கட்டிடப் பணி, ரூ. 12 லட்சம் மதிப்பில் கேரள மாநில மின்சார வாரியத்திற்கு உயரழுத்த மின்சாரப் பங்கீட்டுக் கோபுர அமைப்புகள் கட்டுதல்; ரூ. 12 லட்சம் மதிப்பில் தென்னக ரெயில்வேக்கு நுண்மின்னலைக் கோபுர அமைப்புகள் கட்டுதல்; ரூ. 6 லட்சம் மதிப்பில் சென்னைத் துறைமுகத்திற்கு அலைத் தடுப்புப் பகுதிகள் கட்டுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அரசுத் துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகைகளிலேயே இந்த வணிக நிறுவனத்தில் கடந்த கால உற்பத்தி அமைப்பு இருந்தது. வேறு புதிய துறைகளில் உற்பத்தியைத் தொடங்குவதற்குச்

சில காலம் ஆகும். இந்த நடவடிக்கைகளின் பயனாகவும், பொருளாதார நிலையைச் சீர்திருத்துவதன் விளைவாகவும், இந்த வணிக நிறுவனம் ஆதாயத்துடன் சிறந்த வகையில் பணியாற்றுமென நம்பப்படுகிறது.

1967–68-ம் ஆண்டில் பற்பலத் தொழில் பிரிவுகள் செய்த உற்பத்தியின் மதிப்பு, 1968–69-ம் ஆண்டில் அவை எய்தக்கூடிய சாதனை, 1969–70-ம் ஆண்டில் அவை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கும் அளவு ஆகிய விவரங்கள் 8-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கழகத்தில் தொழில் நுட்பப் பணியாளர், தொழில் நுட்ப மல்லாத பணியாளர் ஆகியவர்களைத் தவிர, 5,168 தொழிலாளர்கள் இப்போது பணியாற்றுகின்றனர்.

1967–68-ம் ஆண்டில் ஐந்தாண்டுத் திட்டப் பணிகளை நிறைவேற்று வதற்காக அரசிடமிருந்து கடனாக ரூ. 45 லட்சம் பெறப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்குக் கடன் கொடுப்பதற்காக 1968–69 திட்ட மதிப் பீட்டில் ரூ. 27·11 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள திட்டப் பணிகளை நிலைப்படுத்துவதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தின் முதலாண்டுக்காக அதாவது 1969–70-ம் ஆண்டுக்காக ரூ. 27 லட்சம் கடன் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள தமிழ்நாடு சிறு தொழில் கழகத்திற்கு 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ந் தேதி அன்று மாற்றப்பட்ட கிண்டி பணிக் கழகமும், மதுரையிலும், கோவையிலும் உள்ள மூலப்பொருள் கிடங்கு களும் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் தேதி முதல் தொழில் வணிகத் துறை இயக்குநரின் பொறுப்புக்கு மீண்டும் மாற்றப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகள் இப்போது அரிதில் கிடைக்கும் மூலப் பொருள்களைத் துறைப் பிரிவுகளுக்கும் தனிப்பட்ட சிறு தொழிலதிபர்களுக்கும் வழங்கி வருகின்றன. இரும்பு-உருக்கு மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த காலத்தில் அவ்வாறு கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட இரும்பு-உருக்குப் பொருள்களை வழங்குவதற்காக இந்தப் பிரிவுகள் பதிவு பெற்ற கிடங்கு களாகவும் செயலாற்றி வந்தன. 1967-ம் ஆண்டு மே மாதம் 1-ந் தேதி முதல் இரும்பு-உருக்குப் பொருள்கள் மீதுள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட போதிலும், சிலவகை இரும்பு-உருக்குப் பொருள்கள் போதிய அளவு கிடைக்காத நிலைமை இன்றும் நீடிப்பதால் அவற்றைத் தனிப்பட்ட சிறு தொழிலதிபர்களுக்கும் அரசாங்கத் தொழில் பிரிவு களுக்கும் வாங்கி வழங்கும் பணியினை இப்பிரிவுகள் மேற்கொண்டுள்ளன. 1967–68-ம் ஆண்டில் இந்த மூன்று பிரிவுகளின் ஆண்டு விற்று முதல் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

	ரூ. லட்சத்தில்
பணிக்கழகம், கிண்டி	98·62
மூலப்பொருள் கிடங்கு, மதுரை	17·85
மூலப்பொருள் கிடங்கு, கோயம்புத்தூர் ..	10·71

தொழில் துறை தொடர்ந்து நிறைவேற்றிவரும் ஏனைய பயிற்சி-பணி வசதித் திட்டங்களுள், ஆய்வு-புள்ளிவிவரப் பிரிவுகளும், பொதுக் குத்தகைப் பட்டறைகளும், தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகளும் மற்றவை யும் அடங்கும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆய்வு-புள்ளிவிவரப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. இம் மாநிலத்தில் தொழில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் சிறு தொழில் குறித்த விரிவான புள்ளிவிவரங்களைத் தொகுத்துப் பேணி வரவும் இப்பிரிவு அமைக்கப்பட்டது.

இப்பிரிவு கீழ்க்கண்ட பணிகளைச் செய்து வருகிறது :—

(1) இம்மாநிலத்தில் சிறு தொழில் பிரிவுகள் அனைத்தையும் பதிவு செய்தலும், பதிவுச் சான்றுகள் அளித்தலும்.

TRUTH ALONE TRIUMPHS

(2) பதிவு செய்த பிரிவுகள் உற்பத்திப் புள்ளிவிவரங்களைத் திரட்டு வதும், தொழில் வாரியாக அவற்றைத் தொகுத்தலும்.

(3) சிறு தொழில்களைப் பதிவு செய்யும்போது சேகரித்த விவரங்களின் அடிப்படையில் இம்மாநிலத்தின் சிறு தொழில் பிரிவுகளைப் பற்றி விவர விளக்க நூல் ஒன்றை வெளியிடுதல்.

(4) தமிழ் நாட்டிலுள்ள சிறு தொழில் பணி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஆய்வு அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுதல்.

(5) மாநில அரசு உத்தரவிடும் தனிப்பட்ட அல்லது சிறப்பு ஆய்வு எதையும் நடத்துதல்.

(6) டாக்டர் லோகநாதன் குழு பரிவுரைத்தபடி சிறு தொழில்களின் திறனை மதிப்பிடுதல்.

(7) உள்நாட்டுத் தயாரிப்புப் பொருள் பற்றிய சிறு நூல் வெளி யிடுவதற்கு விவரங்களைத் திரட்டுதல்.

இம்மாநிலத்திலே சிறு தொழில் பிரிவுகள் பற்றிய புள்ளிவிவரங்களை எளிதில் பெறும்பொருட்டு, புள்ளிவிவரங்களைப் பேணி வரும் கார்டெக்ஸ் முறை அண்மையில் மேற்கொள்ளப்பட்டு, தேவையான புள்ளிவிவரம் திரட்டப்பட்டு வருகிறது.

இம்மாநிலத்தில் சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்யும் பணி 1960 நவம்பரிலிருந்து இப்பிரிவினால் செய்யப்பட்டு வருகிறது. உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளவையும், ரூ. 7·5 லட்சத்திற்கு மேற்படாமல் நிலையான மூலதன முதலீடு (இயந்திரங்கள், கருவிகள் மட்டும்) உள்ளவையுமான தொழில் நிறுவனங்கள் சிறு தொழில்கள் ஆகும். இவை சிறு தொழில்கள் எனப் பதிவு பெறுவதற்கு உரிமையுள்ளவை யாகும். சிறு தொழில் பிரிவுகள் மத்திய மாநில அரசுகளிடமிருந்து தொழில் நுட்ப, விற்பனை, நிதி மற்றும் ஏனைய உதவி பெற உரிமை உள்ளவையாகும். சிறு தொழில்கள் இந்த உதவியைப் பெறுவதற்காகத் தங்களைத் தொழில் துறையிடம் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்றும், அவசியச் சான்றிதழ், அரசு அளிக்கும் கடன், இறக்குமதி உரிமம், முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி வசதி, தவணைக் கொள்முதல் அடிப்படையில் இயந்திரங்களை வாங்குதல், கட்டுப்பாட்டுப் பொருள்கள் வழங்கப்பெறல், தொழில்பேட்டைகளில் தொழிற்சாலை இடவசதி முதலான வற்றிற்கு விண்ணப்பிக்கும்போது பதிவு எண்ணைக் குறிப்பிடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. கொடுக்கப்படுகிற பதிவுச் சான்றுகள் தொழிற்சாலைகளின் தன்மைக்கேற்ப நிலையானவையாகவோ தாற்காலிக மானவையாகவோ (இவை 6 திங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படத் தக்கவை ஆகும்) வகைப்படுத்தப்படுகின்றன. அதாவது, இப்போதுள்ள தொழிற்சாலைகளுக்கு நிலையான சான்றுகளும் தொடங்கத் திட்டமிட் டுள்ள அல்லது புதிய தொழில்களுக்குத் தாற்காலிகச் சான்றுகளும் வழங்கப்படுகின்றன. சிறு தொழில்களைப் பதிவு செய்யும் பணி மாவட்ட நிலையில் தொழில்-வணிகத் துறை உதவி இயக்குநர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந்த அதிகாரிகள் தத்தம் அதிகார வரம்புப் பகுதிகளி லுள்ள பிரிவுகளைப் பதிவு செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர். 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதியன்று உள்ளவாறு 13,571 தொழிற் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டு பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

உற்பத்தி, வேலை வாய்ப்பு முதலிய புள்ளிவிவரங்களைப் பேணி வரு வதற்காக, இந்தப் பிரிவு பதிவு பெற்ற தொழிற் பிரிவுகள் அனைத்திட மிருந்தும் காலாண்டு உற்பத்தி விவரம் கேட்டு வாங்கித் தொகுத்த புள்ளி விவரங்கள் இதற்காக வைத்து வரப்படும் உற்பத்திப் பதிவேடுகளில் எடுத்து எழுதப்பட்டு, மாவட்ட வாரியாகவும் தொழில் வாரியாகவும் தொகுக்கப்படுகின்றன. மூலதன அமைப்பு, வணிகத் தொகை பற்றிய புள்ளிவிவரங்களை ஆராய்வதற்காக ஒவ்வோராண்டும் நிதியாண்டு இறுதியில் ஆண்டு உற்பத்தி விவரக் கணக்கில் ஆண்டு உற்பத்தி விவரங்

களைப் பெறுவதுடன், பதிவு பெற்ற பிரிவுகளிடமிருந்து புள்ளி விவரங்கள் திரட்டப்படுகின்றன. இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சிறு தொழில் துறையில் இன்றியமையாப் பொருள்களை உற்பத்தி செய்கிற பிரிவுகள் பற்றிய தகவலைத் திரட்டுவதற்காகத் தங்கள் விவர அறிக்கை ஒன்று செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிப் போக்கினைக் கண்டறிவதற்காகவே இவ்வாறு செய்யப் படுகிறது.

சிறு தொழில்களைப் பதிவு செய்வதன் மூலம் சேகரித்த விவரங்களின அடிப்படையில் சிறு தொழில் பிரிவுகள் பற்றிய விவர விளக்க நூல் இரண்டினை இயக்குநர் அலுவலகம் வெளியிட்டுள்ளது. முதல் நூல் 1962-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 31—12—1961 தேதி வரை பதிவு பெற்றுள்ள தொழிற் பிரிவுகள் (3,000 பிரிவுகள்) பற்றிய விவரங்கள் இதில் உள்ளன. இரண்டாவது நூல் 1965-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 31—12—1963 தேதி வரை பதிவு பெற்ற தொழிற் பிரிவுகள் (6,135 பிரிவுகள்) பற்றிய விவரங்கள் இதில் உள்ளன. 31—12—1967 தேதிவரை பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகள் அனைத்தையும் கொண்ட பிர்ச்சேர்க்கை ஒன்று இரண்டாவது வெளியீட்டிற்குத் தயாரிக்கப் பட்டு அச்சிடப்பட்டு வருகிறது. புதிய தொழில் துறைகளில் இறங்க விரும்பும் தொழிலதிபர்களுக்கும் தொழில் முனைவர்களுக்கும் இந்தவிளக்க நூல் பயனுள்ள தகவல்களை அளிக்கின்றது.

விலை உயர்ந்த இயந்திரங்களை வாங்கப் பெருந்தொகை முதலீடு செய்ய இயலாத சிறு தொழிலதிபர்களுக்கு பணி வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்துடன், கிண்டி, பேட்டை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, அம்பத்தூர், ஆகிய இடங்களில் பொதுக் குத்தகைப் பட்டறைகள் (Common Lease Shops) ஏற்படுத்தப்பட்டன. கிண்டியிலுள்ள நிலையம், பிளாஸ்டிக் வார்ப்படம் செய்ய ஐ. நா. திட்ட அமைப்பிடம் (U. N. Project for Plastic Moulding) 31—8—1968 அன்று 12 யந்திரங்களுடன் ஒப்படைக்கப்பட்டது. எஞ்சியுள்ள இடங்களில் நான்காவது, ஐந்தாண்டுத் திட்டக்கால அளவிலும் இப்போதுள்ள பணி வசதிகளைத் தொடர்ந்தளிக்கக் கருதியுள்ளது.

கிண்டியிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி மூன்றுவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டது. பொறியியல் பட்டதாரிகளுக்கும் தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும் (Diploma holders) தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்களுக்கும், அச்சு வடிவமைப்பு, அச்சு வார்த்தல், கருவிகள் செய்தல், உலையில் காய்ச்சி அடித்துப் பக்குவப் படுத்தல் (Forge and heat treatment) இயந்திரங்களை இயக்குதல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி வசதிகளை இப்பயிற்சிப் பள்ளி அளித்து வருகிறது. இப்போது 65 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பட்டதாரிகளுக்குத் திங்கள் தோறும் 200 ரூபாய் பயிற்சி உதவித் தொகை அளிக்கப் படுகிறது. தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும் தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்களுக்கும் முறையே ரூ. 125 வீதமும், ரூ. 75 வீதமும் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இப்பிரிவு கிண்டியில் மூன்று வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளது. இந்த நிலையத்துக்குக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ 3·19 லட்சம் செலவு செய்ய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கட்டிடப் பணி விரைவில் மேற்கொள்ளப் படும். பயிற்சி பெற சேர்க்கப்படுவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கவும், மின் அணுக் கருவிகள் குளிர் வசதி இயந்திரம், ரப்பர் தொழில் நுட்ப வியல் போன்ற புதிய பாடமுறைகளில் பயிற்சி அளிக்கவும் இப்பிரிவை நான்காவது திட்டக் காலத்தில் விரிவு படுத்த எண்ணியுள்ளது.

மூன்றுவது திட்டக் காலத்தில் திண்டுக்கல்லில் அமைக்கப்பட்ட கருவிகள்—அச்சு மாதிரி அமைப்புப் பயிற்சி நிலையம் பற்பல பொறியியல் பிரிவுகளுக்கும், குறிப்பாக பூட்டு தயாரிப்பதற்கும், வேண்டிய கருவிகளையும் அச்சுகளையும் வடிவமைத்துத் தயாரிப்பதில் நூலறிவிலும் செயலறிவிலும் சிறப்புப் பயிற்சி அளித்து வருகிறது. இந்த நிலையத்தில், 3-வது, 4-வது

தொகுதிகளில் 32 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி வசதிகளை நான்காவது திட்டக் காலத்திலும் நீடிப்பதற்காக, நான்காவது திட்டத்தில் வேண்டிய நிதி வசதி செய்யப்பட்டுள்ளது.

மின் மருத்துவக் கருவிகளுக்கான மத்தியப் பணி—செப்பனிடு பிரிவு 1967-ம் ஆண்டில் கிண்டியில் ஏற்படுத்தப்பட்டது. இதன் துணைப் பிரிவு மதுரையில் நிறுவப்பட்டது ; இவ்விரு பிரிவுகளும் பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் உள்ள மருத்துவ மனைகளுக்குப் பணி வசதிகளைச் செய்து வருகின்றன. மிக நுண்ணிய கருவிகளைக் கொண்ட இப்பிரிவுகள் கால்நடை வளர்ப்பு, பொதுச் சுகாதாரத் துறைகளைச் சேர்ந்த சிகிச்சை நிலையங்களின் கருவிகளைச் செப்பனிடும் பணியை மேற்கொள்கின்றன. முதற்படியாக, 1968–69 இரண்டாவது காலாண்டில் கால்நடை வளர்ப்புத் துறைக் கருவிகள் சிலவற்றைச் செப்பனிடும் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பிரிவுகளில் இப்போதுள்ள வசதிகளை 4-வது திட்டக் காலத்தில் தொடர்ந்து பேணி வருவதற்கு வேண்டிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நான்காவது திட்டத்தில் தஞ்சாவூரிலும் இத்தகைய பிரிவு ஒன்றை நிறுவக் கருதியுள்ளது.

21—12—1967 முதல் அரக்கோணத்தில் செயல்பட்டு வரும் கருமார்-தச்சுப் பிரிவு அரக்கோணத்திலும் சுற்றுப் புறங்களிலும் குறிப்பாக வேளாண்மைக் கருவிகளுக்கு வேண்டிய பணி வசதிகளைச் செய்து தருவதுடன் அக் கருவிகளைத் தயாரிக்கவும் வசதி அளிக்கிறது. இப் பிரிவினைத் தொடர்ந்து வைத்துக்கொள்ள 4-வது திட்டத்தில் வேண்டிய நிதி வசதி செய்யப்பட்டுள்ளது.

கிண்டி, மதுரை, பேட்டை ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பேட்டைகளில் இடத்துக்கு ஒன்றாகத் தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் மூன்று நிறுவப்பட்டன. மதிப்புயர்ந்த பல தொழில் நுட்ப நூல்களும், பத்திரிக்கைகளும் திட்ட அறிக்கைகளும் மற்றவைகளும் கொண்ட ஒரு நூலகம் இப் பிரிவுகளுடன் இணைந்துள்ளது. இப் பிரிவுகள் பணிநிலையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. தொழிலதிபர்களுக்கும் தொழிற் பயிற்சிப்பள்ளி மாணவர்களுக்கும் தொழில் நுட்ப அறிவினை அவை வழங்குகின்றன. இந் நாட்டிலும் வெளி நாட்டிலும் தொழில் முன்னேற்றம் குறித்தும் பாதுகாப்பான உற்பத்தி முறைகள் குறித்தும் திரைப் படங்கள் காட்டப்படுகின்றன. "தொழில் வாணிபம்" என்னும் பெயர் கொண்ட காலாண்டுப் பத்திரிக்கை ஒன்றும் கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவால் வெளியிடப்படுகிறது. அதன் மூலம் துறையின் நடவடிக்கைகளும் சிறு தொழிலதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளனைய வசதிகளும் பொது மக்களின் நாட்டத்திற்குக் கொண்டு வரப் படுகின்றன.

கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் பிரிவை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தொழில் நுட்பத் தகவல் பிரிவின் வளர்ச்சிப் பணிகளுக்கு இடவசதி இருக்கவும், ஆவணப் பிரிவு, நுண்பட இயந்திரப் பிரிவு முதலியவைகளுக்காகவும் கிண்டி தொழிற்பேட்டையில் இடம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

மட்பாண்டப் பயிற்சிப் பள்ளி விருத்தாசலத்தில் செயல்பட்டு வருகிறது. மூன்றாண்டுப் பயிற்சிக்கு இப்பள்ளியில் ஒவ்வோர் ஆண்டும் 25 மாணவர்கள் சேர்க்கப்பட்டு முனைப்பான பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்பின் வாணிகப் பிரிவுகளில் செயல் முறைப் பயிற்சி ஓராண்டு அளிக்கப்படுகிறது. 1964-ல் சேர்க்கப்பட்ட முதல் தொகுதி பயிற்சி பெறுவோர் தம் பயிற்சியை முடித்துள்ளனர். இப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கென விடுதி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

மட்பாண்ட பயிற்சி பள்ளியுடன் இணைந்த, வேலைப்பாடுகள் அமைந்த மட்பாண்டத் தொழில பிரிவு, வேலைப்பாடுகள் அமைந்த—பயன் படுத்தத்தக்க மட்பாண்டங்களை உற்பத்தி செய்வதில் ஓராண்டுப். பயிற்சியை 15 கைவினைஞர்களுக்கு ஆண்டுதோறும் அளித்து வருகிறது.

1969 மார்ச் 11]

விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகளைத் தரமுள்ள வகையில் தயாரிப்பதற்காகக் கிண்டியில் 1949-ம் ஆண்டில் நிறுவப்பட்ட பயிற்சி நிலையம் தரமான விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பதில் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. தேர்ச்சி பெற்ற கண்ணாடி ஊதித் தயாரிப்பவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் இது தலையாய முன்னோடி நிலையமாகும். இந்த நிலையத்தில் இதுவரை 17 தொகுதியினர் பயிற்சி பெற்றுள்ளனர். இரண்டாண்டுப் பயிற்சியில் முதல் ஆண்டில் 17 பேரும், இரண்டாம் ஆண்டில் 15 பேரும் இப்போது இந்த நிலையத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். இதுவரை இறக்குமதி செய்யப்பட்டு வந்த சிறப்பு வகை, நுட்பம் மிகுந்த கண்ணாடி கருவிகளையும் தொழில் ஆராய்ச்சிக்கும் பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் வேண்டியுள்ள கருவிகளையும் இந்த நிலையம் இப்போது தயாரிக்கத் தொடங்கியுள்ளது.

விசையில் இயங்கும் அடிப்படை இயந்திரங்களை இயக்குவதில் வேளாண்மைக் குடும்பத்தினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் மூன்று ஆதாரக் கிராமப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் ஒவ்வொன்றிலும் மூன்றாவது தொகுதியான 12 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ரசாயனச் சோதனை—பகுப்பாய்வுக் கூடம் ஒன்று கிண்டியில் செயல்பட்டு வருகிறது. இது பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் பயன்பட்டு வருகிறது. இதனுடன் இணைந்துள்ள இயந்திர—உலோகத் தொழில் ஆய்வுக் கூடம் மூன்றாவது திட்டக் காலத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இரசாயனப் பகுப்பாய்வைத் தவிர, உலோகங்கள், கலப்பு உலோகங்கள் பிளாஸ்டிக்ஸ், ரப்பர் முதலியவற்றை எல்லா வகையிலும் பரிசோதிக்கும் பணியைச் செய்து வருகிது. 1968-ம் ஆண்டில் அரசாங்கத் துறைகளிலிருந்தும் தனிப்பட்ட அமைப்புகளிடமிருந்தும் வரப்பெற்ற 1,300 மாதிரிகளை யந்திர—உலோகத் தொழில் ஆய்வுக்கூடம் பரிசோதித்தது. இரசாயனச் சோதனை—பகுப்பாய்வுக்குக் கூடத்தை விரிவு படுத்துவதற்கான திட்டம் 1966–67-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இதன் கீழ், இரசாயனப் பொறியியல் பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு இரசாயனத் தொழில்கள், தொடர்புள்ள தொழில்கள் குறித்த சிக்கல்கள் சம்பந்தமாய் முன்னோடி இயந்திர சாலைகளை இயக்குவது பற்றிய ஆய்வுப் பணியை மேற்கொண்டு வருகிறது.

மக்னீஷியம் கார்பனேட் தயாரிப்பதற்காகவும், பாரிஸ் உறைமா தயாரிப்பதற்காகவும் முறையே 1965–66, 1966–67-ல் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொழிற் பிரிவுகள் தூத்துக்குடியில் 1969 ஜனவரி முடிவில் தொழில்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இரசாயனச் சோதனை—பகுப்பாய்வுக் கூடத்தில் உருவாக்கப்பட்ட புதிய வேலை முறைப்படி, கடல் தாவரங்களிலிருந்து பொட்டாசியம் குளோரைடு தயாரிப்பதற்கான தொழில் பிரிவுக்கு அரசு 1966–67-ல் ஒப்பளிப்பு வழங்கியது. இப்பிரிவுக்கு வேண்டிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. வேண்டிய யந்திரங்கள் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. இப்பிரிவு 1969 மார்ச் திங்களில் செயல்படத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது. இப்பிரிவு முடிவில் வணிக முறையில் இயங்கும் பிரிவாக்கப்படும்.

செயலூக்கக் கரியம் (Active carbon) தயாரிப்பதற்காக, தென்னார்க்காடு மாவட்டம் வடலூரில் 1968 மார்ச் திங்களில் உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்ட தொழில் பிரிவு, முதலில் நிறுவப்பட்ட உலைக்கூட யந்திரம் வெள்ளோட்டச் சோதனையில் பழுதுற்றதால், திட்டமிட்டபடி உற்பத்தியைத் தொடங்க முடியவில்லை. இந்த இயந்திரத்தை தயாரிப்பதற்கு வேண்டிய சிறப்புவகை 310 A. I. S. I. உருக்கு இந்தியாவில் கிடைக்கவில்லை. இதனை இந்துஸ்தான் உருக்கு நிறுவனம்

வழங்க முடியவில்லையெனில், வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யக் கருதப்பட்டுள்ளது. புதிய உலைக்கூட யந்திரம் உருவானதும், இத் தொழில் பிரிவு 1969–70-ல் மீண்டும் செயல்படத் தொடங்கும்.

கீழ்கண்ட தொழில் பிரிவுகளைச் செயல்படச் செய்தவற்கான முன்னோடி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் 1969–70-ல் தொழில்படத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

(1) கிண்டியில் நுரைமம் (yeast) தயாரிப்பதற்கான தொழிற் பிரிவு.

(2) வடார்க்காடு மாவட்டம் வாலாஜாபேட்டையில் சோடியம் டை-குரோமேட் தயாரிப்பதற்கான தொழிற் பிரிவு.

(3) செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூருக்கு அண்மையில் காகலூரில் மத்திய மின் கருவிகள் சோதனைக்கூடம்.

நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டாகிய 1969–70-ல் "சிறு தொழில்கள்" என்பதன் கீழ் அடியிற்கண்ட புதுத் திட்டங்களை மேற்கொள்ளக் கருதியுள்ளது.

(1) செயலூக்க மண் (Activated earth) தயாரிப்புக்கான பிரிவு ஒன்றை ஏற்படுத்தல்.

(2) கடற் கிளிஞ்சல்களிலிருந்து இரசாயனச் சுண்ணம் தயாரிப்பதற்குரிய பிரிவு ஒன்றை ஏற்படுத்தல்.

(3) சேலம் மாவட்டம் மேச்சேரியில் மென்தோல்—தொழில் தோல் தயாரிப்புக்கான உற்பத்தி நிலையம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டம்.

(4) விருத்தாசலம் மட்பாண்டப் பயிற்சிப் பள்ளியில் எனுமல் பயிற்சி அளிக்கும் திட்டம்.

(5) கிண்டியிலுள்ள அரசு விஞ்ஞானக் கண்ணாடிப் பயிற்சிப் பள்ளியை விரிவு படுத்துதல்.

(6) கோவையில் விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பதற்காக பயிற்சி உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவுதல்.

(7) விருத்தாசலம் மட்பாண்டப் பயிற்சிப் பள்ளியில் பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்.

(8) தஞ்சாவூரில் மின் மருத்துவக் கருவிகள் பணி—செப்பனிடும் பிரிவு ஒன்றை நிறுவுதல்.

(9) மின் கருவிகள், ரப்பர் தொழில் நுட்ப இயல், குளிர் வசதி இயந்திரங்கள் குறித்த படிப்பு கற்பிக்க, கிண்டியில் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளியை விரிவு படுத்துதல்.

பிளாஸ்டிக் பொறியியல்—கருவிகள் மத்திய நிறுவனம்.

அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனத்தின் உடனுழைப்புடன் பிளாஸ்டிக் பொறியியல்—கருவிகள் மத்திய நிறுவனம் ஒன்றை இந்திய அரசு அமைத்து வருகிறது. பிளாஸ்டிக் தொழிலுக்கு வேண்டிய சிறப்பு அச்சுகளையும் வார்ப்புகளையும் வடிவமைத்துத்தயாரிப்பதில் இந்த நிறுவனம் பயிற்சி அளிக்கும். இந்த நிறுவனம் கிண்டியில் அமைக்கப்பட்டு வருகிறது. கிண்டி தொழிற்பேட்டையில் இதற்கென 8 ஏக்கர் நிலத்தை இந்த அரசு இலவசமாக அளித்துள்ளது. கிண்டியிலுள்ள பொதுக் குத்தகைப்பட்டறைக் கட்டிடம் இந்த நிறுவனத்துக்கு வாடகைக்கு விடப் பட்டுள்ளது. ரூ. 2·11 லட்சம் மதிப்புள்ள யந்திரங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டம்.

தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின் கீழ் 1967–68-ல் 2,884 தொழிலதிபர்களுக்கு ரூ. 29·70 லட்சம் கடன் வழங்கப்பட்டது. 1968–69-ல்

இவ்வகையில் ரூ. 30 லட்சம் செலவிடப்படும். இந்த ஆண்டில் உதவி அளிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களில், மோட்டார் உறுப்பு நிறுவனம் முதலிடம் வகிக்கிறது. உருக்கு பாலிதீன் முதலியவற்றிலிருந்து பல் வேறு பொருள்களை உற்பத்தி செய்யும் ஏனைய தொழில்கள் கணிசமான அளவில் இவ்வசதியைப் பயன் படுத்திக்கொண்டன.

4-வது திட்டக் காலத்தில் ரூ. 250 லட்சம் கடன் வழங்கத் திட்டமிட் டுள்ளது. இதற்காக, 1969–70 திட்ட மதிப்பீட்டில் ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1956–57 முதல் 1968–69 வரை கொடுக்கப்பட்ட கடன்களைக் காட்டுகிற புள்ளி விவர அறிக்கையை இந்த ஆய்வுரையின் I-வது இணைப்பில் காண லாம்.

தொழில் பேட்டைகளும் மேம்பாடு செய்த மனைகளும்.

நீர், மின் சக்தி, போக்குவரத்து வசதி, சாலைகள் முதலிய வசதிகளு டன் சிறு தொழிலதிபர்களுக்கு நன்கு திட்டமிட்ட இடவசதியை அளிப் பதன் மூலம், இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து விரைவு படுத்துவதே தொழிற் பேட்டைகளை நிறுவுவதன் முக்கிய குறிக்கோளாகும்.

பல தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள்.

இரண்டாவது, மூன்றாவது திட்டங்களின் கீழ் பல்வேறு அளவுகளில் தொழிற் பிரிவுகளுக்கு வேண்டிய இடவசதியுடன் பல தொழில்களுக்கான 20 தொழிற் பேட்டைகளை அரசு நிறுவியது. இத் தொழிற் பேட்டைகளில் கட்டப்பட்ட, ஒதுக்கப்பட்ட தொழிற் பிரிவுகள் எண்ணிக்கை விவரம், வாடகை வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

இரண்டாம் திட்டத் தொழிற் பேட்டைகள்.

தொழிற் பேட்டையின் பெயர்.	கட்டப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை.	ஒதுக்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை.	சதுர அடிக்கு திங்கள் ஒன்றுக்கு 1969 சனவரி 1-ம் தேதி முதல் 1970 மார்ச் 31-ம் தேதி வரை செயலிலுள்ள திருத்த வாடகை வீதம் (காசுகளில்).
(1)	(2)	(3)	(4)
1 இண்டி	128	128	15
2 மதுரை	36	36	11
3 விருதுநகர்	15	8	10
4 பேட்டை	12	11	11
5 ஈரோடு	11	11	10
6 காட்பாடி	16	14	8
7 தஞ்சாவூர்	6	6	9
8 திருச்சி	29	27	11
9 மார்த்தாண்டம்	5	5	8
மொத்தம் ..	258	246	

மூன்றுவது திட்டத் தொழிற்பேட்டைகள்

தொழிற்பேட்டையின் பெயர்.	கட்டப்பட்ட தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை.	ஒதுக்கப்பட்ட தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை.	சதுர அடிக்குத் திங்கள் ஒன்றுக்கு 1969 சனவரி 1-ம் தேதி முதல் 1970 மார்ச் 31-ம் தேதி வரை செயலிலுள்ள திருத்த வாடகை வீதம் (காசுகளில்).
(1)	(2)	(3)	(4)
1 அம்பத்தூர்	117	117	10
2 தேனி	7	6	5
3 திண்டுக்கல்	18	14	7
4 காரைக்குடி	12	12	5
5 கோவில்பட்டி	11	7	5
6 கிருஷ்ணகிரி	12	10	7
7 புதுக்கோட்டை	12	9	5
8 அரக்கோணம்	6	6	7
9 சிவகங்கை	6	4	5
10 நாகர்கோவில்	6	6	7
11 கும்பகோணம்	4	4	7
மொத்தம் ..	211	195	

1966–69 ஆண்டுத் திட்டக் கால அளவுகளில் இம் மாநிலத்தில் வருவாய்க் கோட்டம் ஒவ்வொன்றிலும் தொழிற்பேட்டை ஒன்றை நிறுவுவது என்ற குறிக்கோள் அளவினை எய்தத் திட்டமிடப்பட்டது. இத் திட்டத்திற்கிணங்க, 1966--69 ஆண்டுத் திட்ட கால அளவுகளில் மொத்தம் ரூ. 176·32 லட்சம் செலவில் 6 பொதுத் தொழிற் பேட்டைகளையும் (Conventional Industrial Estates) 3 துணைத் தொழிற்பேட்டைகளையும் (Ancillary Industrial Estates) 5 அவ்வத் தொழிற்குறிய தொழிற்பேட்டைகளையும் (Functional Industrial Estates) நிறுவ இதுவரை அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் தொழிற்பேட்டைகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன. அம்பத்தூர், மதுரை, காட்பாடி அரக்கோணம், ஈரோடு ஆகிய இடங்களிலுள்ள பொதுத் தொழிற்பேட்டைகளையும் மாதவரத்திலுள்ள அவ்வத் தொழில்களுக்குரிய தொழிற்பேட்டைகளையும் மொத்தம் ரூ. 69·134 லட்சம் செலவில் விரிவுபடுத்தும் திட்டங்களுக்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுத் திட்டக் கால அளவுகளில் 6 பொதுத் தொழிற்பேட்டைகளில் ஒப்பளிப்பு வழங்கிய, கட்டப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

தொழிற்பேட்டையின் பெயர்.	செலவு (லட்சத்தில்).	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.	கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
1 மேட்டூர்	6·15	4	4
2 காஞ்சிபுரம்	6·15	4	4
3 கரூர்	6·5	4	4
4 நாகப்பட்டினம்	3·263	6	4

தொழிற்பேட்டையின் பெயர்.	செலவு.	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.	கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
	(ரூ. லட்சத்தில்)		
5 ஓசூர்	6·016	6	..
6 கடலூர்	6·01	6	ஏற்ற இடம் இன்னும் முடிவாகவில்லை.
மொத்தம் ..	33·739	30	16

சிறப்பு வசதிகள் வேண்டியுள்ள தோல் தொழில், மட்பாண்டத் தொழில மின் தொழில், உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில், கருவிகள் தொழில், மருந்துகள்-மருந்துக் கலவைத் தொழில், மின் அணுத் தொழில் போன்ற நுண்மை வாய்ந்த சிறப்பு வகைத் தொழில்களை வளர்ப்பதற்காக, இத் தொழில்களுக்கென்றே சிறப்பான தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்தகைய தொழிற்பேட்டைகள் நிறுவப் பட்டால், அத் தொழிலைத் திட்டமிட்ட வகையில் வளர்ப்பதும், தக்க தொழில் நுட்பப் பணியாளர், பணி வசதிகள், திறமை மிக்க தொழில் நுட்பவினைஞர் கிடைக்காத சிக்கல்களைத் தீர்ப்பதும் இயலக் கூடிய வகையில் அந்தந்தத் தொழில்களைத் தனித்தனியே ஒரே இடத்தில் தொகுதியாக அமைக்க முடியும். இத் தொழிற்பேட்டைகளால் உற்பத்தியும் விற்பனையும் பெருகுவதுடன் அனைத்து நாட்டுத் தரத்திற்கு ஏற்ப தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உணர்வினையும் ஊட்டும். இதனுல் வெளி நாடுகளுக்கு இப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பும் கிட்டும். இந்த நோக்கங்களை எய்தவே இத்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

மூன்ருவது திட்டக் காலத்தில், விருத்தாசலத்தில் மட்பாண்டத் தொழிலுக்காக ஒன்றும், மாதவரத்தில் தோல் தொழிலுக்காக ஒன்றும் ஆக அவ்வத் தொழில்களுக்கான இரண்டு தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, கட்டி முடிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

தொழிற்பேட்டையின் பெயர்.	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.	கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.	ஒதுக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.	சதுர அடிக்குத் திங்கள் ஒன்றுக்கு 1969 சனவரி 1-ம் தேதி முதல் 1970 மார்ச் 31-ம் தேதி வரை செயலிலுள்ள வாடகை வீதம் (காசுகளில்).
(1)	(2)	(3)	(4)	(5)
விருத்தாசலம் ..	29	8	8	7*
மாதவரம் ..	21	14	14	10

1966-67, 1967-68 ஆண்டுத் திட்டக் கால அளவுகளில், இத்தகைய 6 தொழிற்பேட்டைகள் ஒப்பளிப்பு வழங்கப்பெற்றன. இவை கட்டப்படுவது தொடக்க நிலையில் உள்ளது. ஒவ்வொரு திட்டத்தின் செலவு,

* 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை.

இப்பேட்டைகளில் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை, இதுவரை கட்டி முடிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொழிற்பேட்டையின் பெயர்.	செலவு.	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.	கட்டப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.
(1)	(2) (ரூபாய் லட்சத்தில்)	(3)	(4)
1 மின் தொழில், காகலூர்	23·172	16	10
2 உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில்கள்.	15·172	20	*
3 கருவிகள் தொழில், அடையாறு.	16·18	15	..
4 மருந்துகள்-மருந்து கலவைப் பொருள் தொழில்கள்.	15·18	25	..
5 சென்னைக்கருகே மின் அணு தொழில்.	40·26	30	..
	109 964	106	10

துணைத் தொழிற்பேட்டைகள்.

இம்மாநிலத்தில் முக்கியமான இடங்களில் பெருந் தொழில்கள் பல அமைந்த பின்னர், அவற்றிற்கு வேண்டிய தேவைகளை நிறைவு செய்ய அப் பகுதிகளில் துணைத் தொழிற்பேட்டைகளை நிறுவவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தகைய தொழிற்பேட்டைகளை நிறுவுவதன் வாய்ப்புகளை அரசு பரிசீலனை செய்த பின்னர், திருவெறும்பூர், வடலூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றாக அத்தகைய மூன்று தொழிற்பேட்டைகளை நிறுவ ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திருச்சி கனரக அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலைக்கான பல்வேறு பொருள்கள், உதிரிப்பகுதிகள் ஆகியவற்றைச் சிறு தொழில் துறையில் தயாரிப்பதற்காகத் திருவெறும்பூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி முடிவடைந்துவிட்டது. இரு பிரிவுகளுக்கு விளம்பரம் மூலம் புது விண்ணப்பங்கள் கேட்டிருப்பது நீங்கலாக, ஏற்புடைய தொழில் முனைவர்களுக்கு இப் பிரிவுகள் ஏற்கனவே ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. (மட்பாண்டங்களுக்காக) வடலூரில் துணைத் தொழிற்பேட்டை ஒன்று மட்பாண்ட, தாய்மைக் கருவிகள் தயாரிக்கும் திருவாளர்கள் சேஷசாயி தொழில்கள் தனியார் நிறுவனம் நெய்வேலி மட்பாண்ட அதிகச் சூடு தாங்கும் கற்கள் தயாரிப்பு நிறுவனம் (Ceramics and Refractories, Ltd.) ஆகிய இரண்டு பெருந் தொழில்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக நிறுவப்பட 1967–68-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்துஸ்தான் நிழற்பட பிலிம் நிறுவனத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உதகமண்டலத்தில் துணைத் தொழிற்பேட்டை நிறுவவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு

† வத்தலக்குண்டில் முதற்கண் 6 பிரிவுகளைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில்களுக்காக 12 பிரிவுகள் கட்டப்பட்டன. இவை உணவு, மின் பொறியியல் தொழில்களுக்கு இப்போது ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. நான்காவது திட்டக் காலத்தில் அம்பத்தூரில் உணவு-பழ அடிப்படையில் அமைந்த தொழில்களுக்காக சிறப்புத் தொழிற்பேட்டை ஏற்படுத்துவதற்கான செயற் குறிப்புகள் இப்போது வகுக்கப்பட்டு வருகின்றன.

1969 மார்ச் 11]

திட்டத்தின் செலவு, தொழிற்பேட்டைகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட, கட்டி முடிக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

தொழிற்பேட்டையின் பெயர்.	செலவு (ரூபாய் லட்சத்தில்).	ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை.	கட்டிமுடிந்த பிரிவுகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
வடலூர் துணைத் தொழிற்பேட்டை.	3·844	6	4
உதகமண்டலம் துணைத் தொழிற்பேட்டை.	8·73	6	..
திருவெறும்பூர் துணைத் தொழிற்பேட்டை.	20·05	10	10
மொத்தம் ..	32·624	22	14

தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்.

அடியிற்கண்ட தனியார், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு, 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை ரூ. 108·79 லட்சம் அளவுக்கு அரசு கடன் உதவி அளித்துள்ளது.

தொழிற்பேட்டையின் பெயர்.	அளித்த கடன் உதவி (ரூபாய் லட்சத்தில்.)
1 கே. ஆர். சுந்திரம் (தனியார்) தொழிற்பேட்டை, திருவொற்றியூர்.	13·46
2 கோயம்புத்தூர் (தனியார்) தொழிற்பேட்டை, கோயம்புத்தூர்.	32·00
3 தூத்துக்குடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, தூத்துக்குடி.	12·61
4 சக்தி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, பொள்ளாச்சி ..	16·00
5 சிவகாசி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, சிவகாசி	8·00
6 வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை, வியாசர்பாடி.	24·50
7 சேலம் தொழில் கூட்டுறவுத் தொழிற்பேட்டை	2·22
மொத்தம் ..	108·79

மேற்கண்ட தொழிற்பேட்டைகளில் இதுவரை 139 தொழிற்சாலைப் பிரிவுகள் கட்டப்பட்டுள்ளன. தனியார் தொழிற்பேட்டைகளிலும், கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளிலும் மேற்கொண்டு பணியாற்றுவதற்கு நிதி வழங்க, மாநில அரசு உத்தரவாதத்துடன் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடனுதவிபெற முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1967–68-ல் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் சேலம்

கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூ. 6·6 லட்சமும், வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு ரூ. 8·69 லட்சமும் கடன் அளிக்க ஏற்கனவே ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இப்போது தொழிற்பேட்டை இராத வருவாய்க் கோட்டங்களில் நான்காவது திட்டக் காலத்தில், பொதுத் தொழிற்பேட்டைகளை அமைக்கும் கொள்கையைத் தொடர்ந்து நிறைவேற்றக் கருதியுள்ளது. ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும் தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கும் கொள்கையை நிறைவேற்ற இது உறுதுணையாயிருக்கும்.

சீர்செய்த மனைகள்.

இம் மாநிலத்தின் தொழிற் பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களில் பெற்ற மனைகளை கையகப்படுத்தி, சாலைகள், மின்வசதி, நீர் வசதி, கழிவு நீர் அகற்று வசதி, பொருள்களை அனுப்பிவைக்க இருப்புப் பாதை வசதி முதலியவற்றுடன் அவற்றை மேம்படுத்தி, பெரிய நடுத்தர, சிறு தொழிலதிபர்களுக்கு வழங்க வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அவர்கள் எளிதில் அங்கு தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தி தொடங்கப் பெரிதும் உதவும் இத் திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறதென்பது கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

சீர்செய்த மனைகள் அமைந்துள்ள இடம்.	கையகப்படுத்த எண்ணியுள்ள நிலப்பரப்பு. (ஏக்கரில்.)	கையகப்படுத்தப் பட்ட நிலப் பரப்பு. (ஏக்கரில்.)	ஒதுக்கப் பட்டுள்ள மனைகள்.
(1)	(2)	(3)	(4)
1 அம்பத்தூர்	1,180	1,149	393
2 மேட்டூர்	209	209	..
3 மதுரை	540	492	..
4 திருச்சி	478	478	..
5 ராணிப்பேட்டை	726	659	..
6 திருவள்ளூர்	980	..	..
7 கிண்டி	483	329	..

மேற்சொன்ன திட்டங்களைத் தவிர, இம் மாநிலத்தில், சேலம், அரக்கோணம், தூத்துக்குடி, மணலி, கத்திவாக்கம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலும் தாம்பரம் செங்கற்பட்டு தெற்கு நீள் பெருஞ்சாலையின் இரு மருங்கிலும் சீர் செய்த மனைகள் கொண்ட பேட்டைகளை நான்காம் திட்டக் காலத்தில் அமைக்கக் கருதியுள்ளது.

கைப்பணிகள்.

இம் மாநிலத்தின் தொன்மை வாய்ந்த கைவினைகளைப் புத்துயிரூட்டி அவை தழைத்தோங்க வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களிலும் 1966 முதல் 1969 வரையுள்ள ஆண்டுத் திட்டக் காலங்களிலும் பல்வேறு கைவினைகளில் பயிற்சி உற்பத்தி நிலையங்கள் பலவற்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. கைப்பணி வளர்ச்சிக்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 60 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. 1968-69-ம் ஆண்டில் இத் திட்டப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 3·733 லட்சமாகும். கடந்த திட்டங்களில் தொடங்கப்பட்ட பயிற்சி உற்பத்தி நிலையங்கள் பெரும்பாலானவை, திட்டத்தின் கீழ்வராத வேலைத் திட்டங்களாகத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1969 மார்ச் 11]

கீழ்க்கண்ட கைவினைகளுக்காக அரசு, தற்போது பயிற்சி நிலையங்களை, நடத்தி வருகின்றது :—

மாமல்லபுரத்தில் சிற்பப் பயிற்சி நிலையம் நடத்தப்பட்டு வருகின்றது. சுவாமிமலை, தாம்பரம், சேலம், மதுரை, ஆகிய இடங்களில் வேலைப்பாடுகள் அமைந்த உலோகப் பொருள்கள் தயாரிப்பு வேலையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ரதம் தயாரிப்பு பயிற்சி நிலையம் நாகர்கோயிலில் செயல்பட்டு வருகின்றது. வெண்கலப் பாத்திரங்கள் தயாரிப்பு வேலை குறித்த பயிற்சி நிலையம் நாச்சியார்கோயிலிலும் வேலைப்பாடுகள் அமைந்த தட்டுகள் தயாரிப்பு வேலை பயிற்சி நிலையம் தாம்பரத்திலும், வெள்ளி சரிகை தயாரிப்புப் பயிற்சி நிலையம் சென்னை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலும், சணல் இரட்டுகள் தயாரிப்பு நிலையம் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கோபாலசமுத்திரம், ஆயக்குடி, ஆகிய இடங்களிலும் தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சின்ன சேலத்திலும், பனை ஓலைப் பொருள்கள் தயாரிப்பு நிலையம் புதுக்கோட்டை, இராமேஸ்வரம் ஆகிய இடங்களிலும், அலங்கரித்த பொம்மைகள் தயாரிப்பு பயிற்சி நிலையம் சென்னையிலும், கம்பளி இரட்டுகள், கோலக்குடியிலும், கற்றாழை, நார் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம் நெடுவாயிலிலும், அரக்குப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம் சேரன்மகாதேவியிலும் இப்போது அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. 1968–69-ல் இப்பயிற்சி நிலையங்கள் பலவற்றில் 244 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சிக் கால அளவு அந்தந்த கைவினைகளை பொறுத்து ஓராண்டு முதல் நான்கு ஆண்டுகள் வரை பரந்துள்ளது. 1967–68-ம் ஆண்டில் கைவினைப் பொருள்கள் உற்பத்தியின் மதிப்பும் விற்பனைத் தொகையும் முறையே ரூ. 4,07,488, ரூ. 3,59,189 ஆகும். 1968–69-ல் 1968-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி வரை உற்பத்தியின் மதிப்புப் விற்பனைத் தொகையும் முறையே ரூ. 1,91,948, ரூ. 1,76,955 ஆகவும் இருந்தன.

மேற்சொன்ன பயிற்சி நிலையங்களைத் தவிர, கலைகள்—கைப்பணிகள் கல்லூரி ஒன்றைச் சென்னையிலும், கலைகள்-கைப்பணிகள் பள்ளி ஒன்றைக் கும்பகோணத்திலும் அரசு நடத்தி வருகின்றது. வண்ணம் தீட்டுதல், சிற்ப வேலை, வணிக ஓவியம் ஆகியவை இப்பாட முறைகளில் அடங்கும்.

சென்னையிலுள்ள கலைகள் கைப்பணிகள் கல்லூரியில் 1968 ஜூலை முதல் தொழில் வடிவ அமைப்புக்கலையில் பட்ட மேற்படிப்புப் பட்ட முறை ஒன்று தொடங்கப்பட்டு உள்ளது.

நாச்சியார்கோயிலில் உலோகக் கைவினைப் பொருள்கள் உற்பத்திக்கான பொது வசதிகள் பெற்ற நிலையம் இப்போதுதான் செயற்படத் தொடங்கியது. இந்நிலையம் உள்ளூர் கைவினைஞர்களுக்கு நியாயமான கட்டண வீதங்களில் வசதிகளையளிக்கவேயுள்ளது.

கிருஷ்ணகிரியில் கருங்கற்களைக் பளபளப்பாக்குவதற்கான உற்பத்தி நிலையம் கூடிய விரைவில் செயல்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கருங்கற்களைப் பளபளப்பாக்கி ஏற்றுமதி செய்வதே இந்நிலையத்தின் நோக்கமாகும்.

இம்மாநிலத்தில் கைப்பணிப் பொருள்களின் தரம், உற்பத்தி, விற்பனை முதலியவற்றைக் குறித்து ஆலோசனை நல்குவதற்காக 1968 நவம்பரில் அரசு மாநிலக் கைப்பணிகள் வாரியத்தை அமைத்தது.

சென்னை, மாமல்லபுரம், நெய்வேலி, தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி, சேலம், கோவை ஆகிய இடங்களில் கைத்தறித் துறையும் கூட்டுறவுத் தொழில் பிரிவுகளும் தனியார் கைவினைஞர்களும், கைப்பணியாளர்களும் தயாரிக்கின்ற கைப்பணிப் பொருள்களை விற்பனை செய்வதற்கு வசதியாயிருக்கும் பொருட்டு, விற்பனை நிலையங்களை மொத்தம் ஒன்பது கைவினை விற்பனை நிலையங்களை அரசு நடத்தி வருகிறது. உலகத் தமிழ் மாநாடு, இந்திய உலக வணிகச் சந்தை உட்பட 1967–68-ல் இம்

மாநிலத்தில் நடத்தப்பட்ட பெரிய பொருட்காட்சிகள் அனைத்திலும் இத் தகைய விற்பனை நிலையங்கள் பங்கு கொண்டன. இத்தகைய விற்பனை நிலையங்களின் விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 1966-67-ல் ரூ. 32·20 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் விற்பனை செய்யப்பட்டிருக் கையில் 1967-68-ம் ஆண்டில் ரூ. 38·66 லட்சம் மதிப்புள்ள பொருள்கள் விற்பனையாகியுள்ளன. 1966-67-ல் ரூ. 51,556 ஆதாயம் பெற்றிருக்கை யில், 1967-68-ம் ஆண்டிற்கான ஆதாயம் ரூ. 1,34,693 ஆகும். நடப் பாண்டில் முதல் ஆறு திங்களில் மொத்த விற்பனைத் தொகை ரூ. 15,79,331 ஆக இருந்தது. கிடைத்துள்ள ஆதாயம் ரூ. 1,63,480 ஆகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன விற்பனை நிலையங்களைத் தவிர தமிழ் நாடு கைப்பணிகள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், வேலூர், ஈரோடு, உதகமண்டலம், கடலூர், கரூர், தூத்துக்குடி, சென்னை, புதுடில்லி, ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களை நடத்தி வருகின்றது. இத்தகைய விற்பனை நிலையங்களில் மொத்த விற்பனைத் தொகை 1966-67-ல் ரூ. 14,09,429 ஆக இருக்கையில், 1967-68-ம் ஆண்டில் விற்பனைத் தொகை ரூ. 12,40,744 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கைப்பணிப்பொருள்கள் பட்டியல் ஒன்று இந்த ஆய்வுரையில் IV-ம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

கயிறு.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒப்பளிப்பு பெற்று கன்னியா குமரி மாவட்டத்திலுள்ள எந்தமொழியில் அரசு கயிற்றுத் தொழில் பள்ளி 1961-ம் ஆண்டு நவம்பர் 15-ம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. இங்கு மாணவர்களுக்கு இரண்டாண்டுக் காலத்தில் சங்கிலிப் பின்னல், முறையில் கயிறு திரித்தல், கயிற்றுப்பாய் நெய்தல், ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சி வகுப்பில் 1968-69-ல் மூன்று மாணவர்கள் முதலாண்டிலும் இரண்டாவது ஆண்டில் 19 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். நவீன உற்பத்தி முறையில் கயிற்றுப் பொருள்களை உற்பத்தி செய்வதற் காக பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் கயிற்றுப் பள்ளியை விரிவுபடுத்தும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம் மாநிலத்தில் பாய் களையும், முரட்டு நார்களையும் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை விளக்குவதன் பொருட்டு திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில், முன் னோடி தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து, ஆஸ்தி ரேலியா ஆகியவற்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட யந்திரங்கள் யாவும் நிறுவப்பட்டுள்ளன. இத் தொழிற்சாலை 1968-ம் ஆண்டு ஜூன் 13-ம் தேதியிலிருந்து உற்பத்தியைத் தொடங்கின. முழு அளவில் வேலை துவங்க சிறிது காலம் ஆகும். வாணிப அடிப்படையில் இதை நடத்துவதற்காக கூடுதல் யந்திரங்களை வாங்கவும் மட்டை ஊறும் குட்டைகளை மேலும், அமைக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கிராமப்பணி நிலையங்கள்.

இத் திட்டத்தின்கீழ் 1968-69-ம் ஆண்டில் இயங்குகிற ஒரே தொழில சாலை மாமண்டூரிலுள்ள கையினால் செய்யப்படும் காகிதத் தொழிற் சாலை ஆகும். 1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதியில் தொடங் கப்பட்ட இந் நிலையம் எழுதுபொருள்-அச்சுத் துறையினருக்கு, தட்டையான கோப்பு அட்டைகளை வழங்கி வருகிறது. இத் தொழிற்சாலையை எடுத்துச் செயல்படுத்த தம்மால் இயலாது என்பதை சென்னை, எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளதால், உயர்தர வரைபடத்தாள் களையும் புகைபடத் தொகுப்பு எட்டுத் தாள்கள் (Album months) முதலிய வற்றைத் தயாரிக்க இத் தொழிற்சாலையின் பணிகளைப் பரவலாகச் செய்வ தன் வாயிலாக இத் துறையினரே இத் தொழிற்சாலையை ஏற்று நடத்துவ தென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென கனரக யந்திரத் தொட்டி வாங்குவதென்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

1969 மார்ச் 11]

பட்டுத்தொழில்.

மாநிலங்கள் சீரமைப்புக் காரணமாக பெரும்பாலான பட்டுத் தொழில் பகுதிகள் மைசூர் மாநிலத்துடன் சேர்க்கப்பட்டன. இம்மாநிலத்தில் இத்தொழிலை விரிவுபடுத்துவதன் பொருட்டு, துறைவாரியான தொழிற்பிரிவுகள் பல பட்டு வளர்ப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டன. இத் தொழில் பிரிவுகளில் முதன்மையானவை நோய் நீங்கிய முட்டைகள் வழங்குவதற்காகவும் பட்டு வளர்ப்பவர்கள் உற்பத்தி செய்த பட்டுப் புழுக்களைிலிருந்து நூல் எடுப்பதற்காகவும், அமைக்கப்பட்ட தொழிற் பிரிவுகளாகும். இத் தொழிலின் மேன்மையை விளக்குவதன் பொருட்டு 1967–68-ல் எருமேடு, பசனூர் ஆகிய இடங்களில் புதிய கட்புலன் விளக்கப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும் ஒரு பண்ணை உத்தனப்பள்ளியில் நிறுவப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது பண்ணை ஒன்று 1969–70-ல் நிறுவப்படும். முசுக்கட்டைச் செடி நடுவதற்காக பதியங்கள் வழங்குதல், பாதி விலையில் கருவிகள் நீங்கலாக, கடனுக நிதி உதவி செய்தல், கிணறுகள் தோண்டுவதற்காக உதவித் தொகை வழங்குதல், பட்டுப்புழு வளர்ப்புக் கூடாரங்கள் கட்டுதல் ஆகியவற்றின் மூலம் பட்டு வளர்ப்பவர்களுக்குச் செய்யப்பட்டு வருகிற உதவி தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. (1968-ம் ஆண்டு நவம்பர் வரை) 1968–69-ல் கடனுகவும் உதவித் தொகையகாவும் ரூ. 24,000 வழங்கப்பட்டது. ஓசூர் வட்டம் கோலட்டியிலும் (நீலகிரி மாவட்டம்), மசினிகுடியிலும் (தளவாடி பிர்க்கா), மேடஹள்ளியிலும் பட்டு வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த மூன்று பெரு அளவு பட்டுப் பண்ணைகளில் இங்கிருந்து பெரும் பதிகங்கள் மிகவும் பயன்படுத்தப்பட்டன.

1967–68 கோலட்டியிலும் மசினிகுடியிலும் ஏற்படுத்தப்பட்ட பெரிய அளவு பட்டுப்பண்ணைகள் முசுக்கட்டைச் செடி, முறையே 210, 40 எக்கர் பரப்பளவில் உற்பத்தியைத் தொடங்கின. தளவாடி பிர்க்காவில் பெரிய அளவு பட்டுப்பண்ணைக்காக 87·13 எக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. நிலம் பண்படுத்தப்பட்ட பிறகு 30 எக்கர் பரப்பளவில் முசுக்கட்டைச் செடி நடப்பட்டது. தனியார் துறையில் ஓசூர் வட்டத்திலுள்ள 13,974 எக்கர் அரசு தரிசு நிலம் அரசு ஏற்பு பெற்று முசுக்கட்டைப் பயிரிடுவதற்கு வெளாவியவர்களுக்கு, குத்தகைக்கு விட முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஓசூரில் பட்டு நூல் முறுக்கேற்றும் பிரிவு ஒன்றுக்கான கட்டிடம் கட்டும் வேலை முடிக்கப்பட்டு யந்திரமும் நிறுவப்பட்டுவிட்டது. இந்தத் தொழிற்சாலை விரைவில் செயல்படத் தொடங்கவிருக்கிறது. "கழிவுப் பட்டு" நெசவாளர்களுக்கு வழங்கப்படும்.

1968–69-ம் ஆண்டிலும் கடந்த ஆண்டிலும் ஒப்பளிப்புப் பெற்ற வேலைத் திட்டங்களும் 1969–70-ல் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்த மூன்று பெரிய அளவு பட்டுப்பண்ணையில் முசுக்கட்டை மரங்கள் வைத்து 400 எக்கர் அளவிற்கு விரிவுபடுத்தப்படும். இத் தொழிலில் நவீன வளர்ச்சிகளைப் பற்றி ஆய்வு நடத்த அதிகாரி ஒருவரையும் ஜப்பானுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் தொழிலில் இம்மாநிலத்தில் ஆராய்ச்சி நடவடிக்கை எதுவும் இல்லாததால் குன்னூரிலுள்ள பட்டு நூல் பிரிவு ஆராய்ச்சிப் பிரிவாக மாற்றப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பட்டுவளர்ப்புத் திட்டங்களைப் பற்றிய பட்டியல் இந்த ஆய்வுரையின் V–வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

1968–ம் ஆண்டு மார்ச் 31–ம் தேதியில் உள்ள நிலவரப்படி, 395 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றில் 224 சிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், 135 கைவினைத் தொழில்கள், 35 கயிற்றுத்

தொழில் கூட்டுறவு, ஒரு பட்டுத் தொழில் கூட்டுறவு ஆகியவையாகும். 1967-68-ல் நிறைவேற்றப்பட்ட (கூட்டுறவுத் தொழில்பேட்டைகள் நீங்கலாக) தொழில் கூட்டுறவுத் திட்டங்களுக்கு மொத்தச் செலவு ரூ. 5·202 லட்சம் ஆகும். 9 சங்கங்கள் நடப்பு ஆண்டில் சீரமைக்கப்பட்டன. கோவில்பட்டியில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் பணிக்கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டது. விடாமுயற்சியாலும், சங்கங்கள் சீரமைக்கப்பட்டதன் காரணமாகவும், தொழில் கூட்டுறவுகள் உற்பத்தியிலும் விற்பனையிலும் நல்ல பலன்களை அடைய முடிந்தன. 1966-67-ல் உற்பத்தியும் விற்பனையும் பற்றிய மதிப்பு முறையே ரூ. 297 லட்சமும், ரூ. 316 லட்சமும் ஆக இருக்க, 1967-68 மொத்த உற்பத்தியின் மதிப்பும், விற்பனை அளவும் முறையே ரூ. 350 லட்சமும், ரூ. 401 லட்சமுமாக இருந்தன. இது உற்பத்தியில் 18 சதவீத அதிகரிப்பையும் விற்பனையில் 27 சதவீத அதிகரிப்பையும் காட்டுகிறது. 1968-69-ல் இதன் செயல் முறை மிகச் சிறப்பாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்களில், தேயிலை வாரியத்தின் உதவியால் நீலகிரி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 8 தேயிலைத் தொழிற்சாலைகளைப் பற்றியும் கையால் தயாரிக்கும் 14 தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றியும் சிறப்பாகக் குறிப்பிடலாம். 1967-68-ல் தேயிலைத் தொழிற்சாலைகளின் மொத்த வாணிகத் தொகை சுமார் ரூ. 94 லட்சமாகும். இந்த 8 தொழிற்சாலைகளில் 4 மட்டுமே 1967-68-ல் உற்பத்தியில் இறங்கியதால், 1968-69-ம் ஆண்டுக்கான மொத்த வாணிகத் தொகை அதிகமாகவே இருக்கவேண்டும். நான்கு தொழிற்சாலைகளும், மத்தியச் சங்கமும், ஆதாயத்துடனே நடைபெற்றன. மொத்த ஆதாயத் தொகை ரூ. 96,000 ஆகும்.

சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் நலனுக்காக, மேலுமொரு பணிச் சங்கம், கோவில்பட்டியில் பதிவு செய்யப்பட்டு நடப்பாண்டில் தொடங்கியது. தீப்பெட்டித் தொழிலில் முக்கியமான கூட்டுப்பொருளாகிய “பொட்டாசியம் குளோரேட்” பற்றுக் குறைதான், இம் மாநிலத்தில் கையினால் செய்யப்படும் தீப்பெட்டித் தொழில் பாதிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாகும். ஆகவே, மதுரைக்கு அருகே கப்பலூர் தொழில் பேட்டையில் தொழில் கூட்டுறவு பொட்டாசியம் குளோரேட் தொழிற்சாலை சுமார் ரூ. 30 லட்சம் செலவில் தொடங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

1968-69-ல் ஒரு வேலைத் திட்டமாக ஒப்பளிப்பு பெற்ற தொழில் கூட்டுறவு அச்சகம் சிவகாசியில் பதிவு செய்யப்பட்டது. தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அச்சுத் துறை சார்ந்த துணைப் பொருள்களை இக் கூட்டுறவு அச்சகம் வழங்கக்கூடும். கல்லச்சு, தொய்வகப் பதிவு முறையையும் இந்த அச்சகம் எடுத்துக்கொள்கிறது. கையால் செய்யும் தீப்பெட்டித் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் பெயர்ச் சீட்டுகளையும் அச்சிட்டுத் தரும். இவ்வச்சகம், 1969-70-ம் ஆண்டில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில் பெண் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கமும், கோயம்புத்தூரில், பாலிதீன் பை தயாரிப்பாளர் தொழில் கூட்டுறவுச் சங்கமும் கரூரில் ஒரு மத்திய கோரை பயிரிடுவோர், பாய் முடைவோர் தொழில் கூட்டுறவுச் சங்கமும் இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாண்டில், கொழும்புத் திட்டத்தின்கீழ், வாலாஜாபாத் பிரம்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இலங்கையைச் சேர்ந்தவர் ஒருவருக்கு பிரம்புத் தயாரிப்பில் மூன்று மாதப் பயிற்சி கொடுக்கப்பட்டது.

அரசாலும், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியாலும் இத்தகைய சங்கங்களுக்கு கணிசமான நிதி உதவி அளிக்கப்பட்டது.

1969 மார்ச் 11]

நிதி உதவி அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	1961-62 முதல் 1967-68		1-4-68 முதல் 31-12-68 வரையில்.	
	சங்கங்களின் எண்ணிக்கை.	ரூபாய் லட்சத்தில்.	சங்கங்களின் எண்ணிக்கை.	ரூபாய் லட்சத்தில்.
(1)	(2)	(3)	(4)	(5)
1 தொழில்களுக்கு அரசாங்க உதவி அளிப்புச் சட்டம்.	309	18·64	..	..
2 தமிழ்நாட்டுத் தொழிலியல் கூட்டுறவு வங்கி—				
(a) தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.	206	114·50	22	12·54
(b) சிறு தொழிலதிபர்கள்.	49	14·53	2	0·17

1967-68 தமிழ்நாட்டில், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுள்ளதன் முடிவுகள் பின்வருமாறு :—

1 31—3—1968-ல் உள்ள நிலவரப்படி செயல்பட்டு வந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை.	395
2 மூன்றாண்டுக் காலத்திற்கு மேலாகச் செயல்பட்டு வரும் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை.	376
3 (a) இரண்டாம் இனத்தில் ஆதாயத்துடன் செயல்பட்டு வந்த சங்கங்களின் எண்ணிக்கை.	134
(b) இரண்டாம் இனத்தில் விரயத்தில் செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை—	
(1) கைப்பணிச் சங்கங்கள் (ஹரிஜனங்கள், பெண்டிர், கயிற்றுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் நலனுக்கான சங்கங்கள் உட்பட).	177
(2) மற்றவை	65
4 (a) 3 (a) இனத்திலுள்ள சங்கங்களுக்கு 31—3—1968-ல் முடிவடைந்த ஆண்டில் கிடைத்த ஆதாயம்.	ரூ. 12·16 லட்சம்.
(b) 3 (b) இனத்தில் உள்ள சங்கங்களுக்கு 1967-68 ஆண்டில் ஏற்பட்ட விரயம்.	ரூ. 8·55 லட்சம்.
(c) 31—3—1968-ல் உள்ள நிலவரப்படி மொத்த விரயம்.	ரூ. 25·66 லட்சம்.
5 மூன்றாண்டுகளுக்கு மேலாகச் செயல்படும் சங்கங்களுக்கு கிடைத்த ஆதாயம்.	ரூ. 3·61 லட்சம்

6 (*a*) 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்களில் 1967–68-ல் ஆதாயத்துடன் செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை. — 152

(*b*) 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்களில் 31—3—1968-ல் ஆதாயத்தில் செயல்பட்டு வரும் சங்கங்களின் எண்ணிக்கை. — 103

(*c*) 1-வது இனத்தில் 1967–68-ல் குறிப்பிட்டுள்ள சங்கங்களில் விரயத்தில் செயல்பட்டு வரும் சங்கங்களின் எண்ணிக்கை. — 243

(*d*) 31—3—1968-ம் தேதி நிலவரப்படி 1-வது இனத்தின் விரயத்தில் செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை. — 292

7 (*a*) 6 (a) இனத்திலுள்ள சங்கங்களுக்கு 31—3—1968-ல் முடிவடைந்த ஆண்டில் கிடைத்த ஆதாயம். — ரூ. 13·08 லட்சம்.

(*b*) 6 (b) இனத்திலுள்ள சங்கங்களுக்கு 1967–68-ம் ஆண்டில் ஏற்பட்ட விரயம். — ரூ. 9·10 லட்சம்.

(c) 1-வது இனத்தில் எல்லா சங்கங்களுக்கும் ஏற்பட்ட மொத்த விரயம். — ரூ. 27·72 லட்சம்.

8 இரண்டாம் இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. — 30,946

9 முதல் இனத்தில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. — 31,778

குறிப்பு.—1967–68-ம் ஆண்டில் ஆதாயமுமின்றி, விரயமுமின்றி எந்தச் சங்கமும் நடைபெறவில்லை.

இவ்வாண்டில், ஏற்கெனவே தொடங்கிய சங்கங்களை நிலைபெற்றுச் செயலபடுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பல்வேறு சங்கங்கள் நிதிநிலைமை சீராகவும், நிலைபெற்று இயங்குவதன் பொருட்டும், சங்கம் ஒவ்வொன்றும் செயல்படுவது பற்றிய சீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சிக்கனமாகச் செயல்படுவதற்கு ஏற்ற வளமில்லாத தொழில் கூட்டுறவுச் சங்கங்களை மூடிவிட இவ்வாண்டில் நடவடிக்கை தொடங்கப்பட்டது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கையில், சமூகப் பொருளாதார கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

1969–70-ம் ஆண்டில்,

(1) தெரிந்தெடுத்த மாநிலச் சிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதன அமைப்பில் பங்கு பெறுவது ;

(2) சிவகாசியில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் பணி தொழில் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தல் ;

(3) திருநெல்வேலி மாவட்டத்தில் மணப்பாட்டிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் பழவேற்காட்டிலும் பனை ஓலைக் கூட்டுறவுச் சங்கங்களில் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துவதென்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

இம் மாநிலத்தில் மாவட்ட வாரியாகவுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் கூட்டுறவுகள் குறித்த வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் ஆகியவை குறித்த பட்டியல் இந்த ஆய்வுரையின் VI, VII-வது இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1969 மார்ச் 11]

பொருட்காட்சிப் பிரிவு

சிறு தொழில் பொருள்கள், கைவினைப் பொருள்கள் ஆகியவற்றை மக்களிடையே பரப்பவும், உள்ளூர் கைவினைஞர்களின் திறமையை வெளிப் படுத்தும் நோக்கத்துடனும், தொழில் துறை இம்மாநிலத்தில் நடை பெறும் எல்லாப் பொருட்காட்சிகளிலும் மும்முரமாகப் பங்கு கொண்டது. பல்வேறு தொழில் பிரிவுகள், நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய வயிற்றிலிருந்து பெறப்படும் துறைப் பொருள்களுக்கு, இம் மாநிலத்தில் நடைபெறும் பொருட்காட்சி ஒவ்வொன்றிலும் விரிவான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பரிசுகள் வழங்கப்பெற்ற மூன்று பொருட்காட்சிகளி லும், இத்துறை முதல் பரிசுகளும், இரண்டாவது பரிசு ஒன்றும் பெற முடிந்தது.

1968 ஜனவரி–மார்ச்சில் நடைபெற்ற 1968-ம் ஆண்டு இந்திய உலக வணிகத் தொழில் சந்தையில் பங்கு கொண்டமை, பெருவாரியாக பாராட் டுதல் பெற்றமை—ஆகியவை இத் துறையின் வரலாற்றில் சிறந்த கூறுக ளாகும். இத் துறை கீழ்க்காணும் பொருட்காட்சிகளில் (1968 நவம்பர் வரை) பங்கு கொண்டது :—

(1) அனைத்திந்தியக் கலை, தொழில் பொருட்காட்சிகள், கோயம்புத்தூர் (மார்ச்–ஏப்ரல் 1968).

(2) அனைத்திந்தியக் கலை – தொழில் பொருட்காட்சிகள், காஞ்சிபுரம் (ஏப்ரல்–மே 1968).

(3) அனைத்திந்தியக் கலை – தொழில் பொருட்காட்சிகள், திருச்சிராப் பள்ளி (ஜூலை – ஆகஸ்டு 1968).

(4) அனைத்திந்தியக் கலை – தொழில் பொருட் காட்சிகள், வேலூர் (ஜூலை–ஆகஸ்டு 1968).

(5) சித்திரைப் பொருட்காட்சி, மதுரை (மே–ஜூன் 1968).

(6) தலைமையிடத் துவக்கப் பொருட்காட்சி, காஞ்சிபுரம் (ஜூலை 1968).

(7) வாழ்க்கை வழிகாட்டிப் பொருட்காட்சி, பூவிருந்தவல்லி (ஆகஸ்டு 1968).

(8) தொழில் பொருட்காட்சி, வேலூர்.

(9) வேளாண்மைக் கருத்தரங்கு பொருட்காட்சி, தஞ்சாவூர் (ஆகஸ்டு 1968).

(10) மலர்க்காட்சி, உதகமண்டலம் (மே 1968 முதல் செப்டம்பர் 1968 வரை).

(11) கைவினைப் பொருட்கள் வாரப் பொருட்காட்சி, சென்னை (அக்டோபர் 1968).

(12) பூங்கா சந்தை–பொருட்காட்சி (டிசம்பர் 1968 முதல் ஜனவரி 1969 வரை).

மாவட்டங்களில் நடைபெற்ற பல பொருட்காட்சிகளில், இத் துறையின் நடவடிக்கைகளைக் குறித்தும், வாங்குவதற்கு கிடைக்கக்கூடிய பல்வேறு கைவினைப் பொருள்கள், சிறு தொழில் பொருள்கள் பற்றியும் பொது மக்கள் அறிந்துகொள்ளச் செய்வதற்காக விற்பனைகள் நடைபெற்றது. மதுரையிலும், திருச்சியிலும் விற்பனை நன்றாகவே இருந்தது. இவ்விரு பொருட்காட்சிகளிலும் விற்பனைத் தொகை ரூ. 14,545·12 ஆக இருந்தது.

வேலையிழந்த பொற்கொல்லர்களுக்கு மறுவாழ்வளித்தல்

1963 ஜூன் முதல் 1968 டிசம்பர் வரையுள்ள காலத்தில் வேலை யிழந்த 25,193 பொற்கொல்லர்களுக்கு ரூ. 229·30 லட்சம் வரை கடன் தொகை, அவர்கள் மாற்று வாணிபம் அல்லது தொழிலில் மறு வாழ்வு பெற வழங்கப்பட்டது.

1968 செப்டம்பர் 1-ம் தேதியன்று செயலுக்கு வந்த 1968-ம் ஆண்டு தங்கக் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு பொன் வேலை செய்வதற்குக் கடன் வாங்கும் பொற்கொல்லர்களுக்கும் சான்றுகள் வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இச் சட்டம் செயல்படத் தொடங்கிய தேதியிலிருந்து அதாவது, 1968 செப்டம்பர் 1-ம் தேதியிலிருந்து ஆறு திங்களுக்குள் இத்தகைய சான்றுகளுக்கான விண்ணப்பங்கள் மத்திய ஆயத்துறை அதிகாரிகளுக்குச் செய்து கொள்ளப்பட வேண்டும், சான்று வழங்கப்பெற்ற தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள், இதற்காக கடன் வழங்கும் அதிகாரி குறிப்பிடக் கூடிய தவணைகளில் கடன் திருப்பிச் செலுத்தப்படாவிட்டால் அவ்வாறு வழங்கப்பெற்ற சான்றுகள் ரத்து செய்யப்படும்.

கிராமத் தொழில் திட்டங்களின்கீழ் வேலைத்திட்டங்கள்

கிராமப்புறப் பகுதிகளிலும், சிறு நகரங்களிலும் கிராம, சிறு தொழில்கள் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இந்தியா முழுவதும் தெரிந்தெடுக்கப்பட்ட 40 கிராமப்புறப் பகுதிகளில் சிறு தொழில் மும்முர வளர்ச்சிக்கு முன்னோடித் திட்டங்களை 1962-ம் ஆண்டில் இந்திய அரசு கொண்டு வந்தது. இதில் 3 திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டன.

முன்னோடித் திட்டங்களுக்காக இடங்களைத் தெரிந்தெடுப்பது குறித்து திட்ட ஆணைக் குழு குறிப்பிடும் கூறுகளின் அடிப்படையில், தொழில் மிகவும் பின்தங்கியவையும், நிலம் பெருமளவுக்குப் பயன்படுத்தப்படுபவையும், வேலையின்மையும் வேலைவாய்ப்புக் குறைந்த நிலையும் மலிந்திருப்பதாக எளிதில் உணரக் கூடியவையுமான கீழ்க்காணும் பகுதிகளை மாநில அரசு தெரிந்தெடுத்தது :—

1. செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்பூதூர், திருவள்ளூர் வட்டங்கள், பென்னலூர்பேட்டை துணை வட்டம்.

2. சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டம் (இதைத் தொடர்ந்து ஓமலூர் வட்டம், ஓமலூர், மேட்டூர் வட்டங்களினின்று இரு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது).

3. திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி வட்டம்.

வேளாண்மை, பாசனம், போக்குவரத்து முதலியவற்றை எல்லா வகைகளிலும் மேம்படுத்துவதன் வாயிலாக, கூட்டுறவு வேளாண்மைத் தொழில் பொருளாதாரம் கொண்டு வருவதே முதன்மையான நோக்கமாக இருப்பதால், வாழ்க்கை நிலையையும் உற்பத்தி நிலையையும் உயர்த்துவதற்காகவும், கிராமச் சமூகத்தினரில் நிலமற்றோருக்கும் பொருளில்லாருக்கும் வேலை வாய்ப்புகளைப் பெருவாரியாக நல்குவதற்காகவும் தொழில்கள் வளர்ச்சியை முழு அளவில் தூண்டியும் வளம்பெறும் வாய்ப்புகளை திரட்டவும் வேண்டும். எனவே, தொழில்களின் வளர்ச்சியை முக்கியமாகச் செறிவு படுத்துவதே இத் திட்டங்களின் நோக்கமாகும். கிராமப் பகுதிகளில் இத் தொழில்களையும் அவற்றிற்குத் துணையான நடவடிக்கைகளையும் வளர்க்க வேண்டும். இதற்கென இத் திட்டப் பகுதிகளில் நியமிக்கப்பட்ட திட்ட அதிகாரிகளால் திட்டப் பகுதிகள் ஆய்வு வேலை நடத்தப்பட்டது.

இது வரை அனுமதிக்கப்பட்ட இவ் வேலைத் திட்டங்களில் பயிற்சித் திட்டமாக பொது வசதிப் பணி நிலையங்கள், மூன்று பொது நோக்குப் பொறியியல் பட்டறைகள், பளபளப்பு ஓடுகள் தொழில் பிரிவு, காலணி தொழில் பிரிவு, மரவேலைப் பிரிவு, காகித உரைகள், காகிதப் பைகள் தயாரிப்புப் பிரிவு, சாக்குக் கட்டிகள் உற்பத்திப் பிரிவு, துறைப்பிரிவுகள், மற்ற வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

கிராமத் தொழில் திட்டப் பணி மத்திய ஆதரவு பெற்ற திட்டமாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. 1968–69-ம் ஆண்டுக்காக இத் திட்டத்திற்கு ரூ. 18 லட்சம் இந்திய அரசு ஒதுக்கியுள்ளது. இதன் அடிப்படையில்

தொடர் செலவிலும் தொடராச் செலவின் கீழும் ரூ. 17,28,400 ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில்களுக்கு அரசுதவிச் சட்டத்தின் கீழ் திட்டப் பகுதியில் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்க 1968–69 திட்ட மதிப் பீட்டில் ரூ. 72,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

செயல்பட்டு வருகின்ற திட்டங்களின் அடிப்படையிலும், செயல்பட விருக்கிற திட்டங்களின் அடிப்படையிலும் 1969–70 ஆண்டுக்காக இப்போதுள்ள கிராமத் தொழில் திட்டங்கள் மூன்றினுக்குரிய தேவைகள் கணக்கிடப்பட்டுள்ளன. அவ்வண்ணமே, "35 தொழில்கள் முதலியன" என்னும் பணித்தலைப்பின்கீழ் ரூ. 19·5 லட்சமும், "XLVII. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் முதலிய" என்னும் கடன் தலைப்பின்கீழ் ரூ. 5·5 லட்சமும் 1969–70 திட்டமதிப்பீட்டில் தொகை ஒதுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. கிராமத் தொழில் திட்டப்பணி சம் பந்தமாக 1969–70-ம் ஆண்டுக்கு இம் மாநிலத்திற்கு கிடைக்கக்கூடிய நிதி அளவு எவ்வளவு என்பதைப் பற்றி இந்திய அரசு இன்னும் தெரிவிக்கவில்லை. ஆகவே, இந்திய அரசு நிதி ஒதுக்கீட்டிற் கிணங்க 1969–70 ஆண்டு திட்ட மதிப்பீட்டில் செய்யக் கூடியுள்ள நிதி ஒதுக்கீடுகள் வரையறுக்கப்படவேண்டும்.

குறிப்பிட்ட பயிற்சிக் காலம் முடிவடைந்த பிறகு, கீழ்க் காண்பன வற்றைத் தவிர திட்டப் பகுதிகளில் தொடங்கிய பயிற்சித் திட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டன:—

ஸ்ரீபெரும்பூதூர் திட்டம்

(1) மரப் பொம்மை தயாரிப்புப் பயிற்சி நிலையம், திருப்பாச்சூர்.

(2) மரவேலைப் பயிற்சி நிலையம், குன்றத்தூர்.

(3) திருப்பாச்சூர், செம்பரம்பாக்கம் பொது நோக்குப் பொறியியல் பட்டறைகளில் பயிற்சி.

(4) ஆவடியில் கம்பளி உறைகளையும், அடியற்ற காலுறைகளையும் பின்னுவதற்குப் பயிற்சி (இத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது).

ஓமலூர் திட்டம்

சேலம் கூட்டுறவு அச்சகத்தில் அச்சுத் தொழில், துணைத் தொழில் பயிற்சி.

நாங்குனேரி திட்டம்

(1) வெண்கல வேலைப் பயிற்சி, வள்ளியூர்.

(2) தோல் கையுறை தயாரிப்பு நிலையம், வள்ளியூர்.

(3) வள்ளியூரில் பொதுநோக்குப் பொறியியல் பட்டறையில் பயிற்சி யளித்தல்.

(4) அச்சுத் தொழில் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் பயிற்சி திருநெல்வேலி.

பொது.—மூன்று திட்டப் பகுதிகளிலிருந்தும் வந்த 27 பேர், சென்னை-5 சேப்பாக்கத்தில் உள்ள வானொலித் தலைமை அதிகாரி அலுவலகத்தில் வானொலி செய்தொழிலில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஸ்ரீபெரும்பூதூர் திட்டத்தில் நான்கு பொது வசதி நிலையங்கள் உள் ளன. முதன் முதலில் தொடங்கிய இரு நிலையங்கள் செயல்படுவதை கவனித்துப் பார்த்த பிறகு, மற்றும் இரு நிலையங்கள் துவங்குவது அவசிய மில்லை எனக் கருதப்பட்டது. நாங்குனேரி திட்டத்தில் பத்துப் பொது வசதி நிலையங்களும், ஓமலூர் திட்டத்தில் நான்கு பொது வசதி நிலையங் களும் யாவும் செயல்பட்டு வருகின்றன.

ஸ்ரீபெரும்பூதூரில் இரண்டு பொது நோக்குப் பொறியியல் பட்டறை கள் செயல்பட்டு வருகின்றன. காலணித் தொழில் பிரிவு, மாப்பேடு காகித உறைத் தயாரிப்புப் பிரிவு, ஊத்துக்கோட்டை பாய் உற்பத்தி

நிலையம், அரண்வாயல், ஆகியவை ஸ்ரீபெரும்பூதூர், திட்டப் பகுதியில செயல்பட்டு வருகின்றன. பனை ஓலைப் பிரிவு, பழவேற்காடு கூடை தயாரிப்பு நிலையம் திருநின்றவூர் ஆகியவை விரைவில் தொடங்கப்படும். பளபளப்பான ஓடுகள் தயாரிப்புப் பிரிவு, ஓமலூர், மரவேலைப் பிரிவு, ஓமலூர், தோல் பொருள்கள் தயாரிப்புப் பிரிவில் தாராமங்கலம் ஆகியவை ஓமலூர் திட்டப்பகுதியில் செயல்படுகின்றன. தாராமங்கலம், தோல் பொருள் தயாரிப்புப் பிரிவில் தயாரிக்கப்பட்ட தோல் பொருட்கள் இத்தொழிலில் போட்டியிருப்பது காரணமாக விற்பனை செய்யப்பட முடியவில்லை. எனவே, இத் தொழில்பிரிவை மூடிவிடுவதென்று முடிவு செய்யப்பட்டது. ஓமலூர் பாலிதீன் தட்டைக் குழாய்கள் தயாரிப்பதற்கான தொழில் பிரிவு நிறைவேற்றப்படவிருக்கின்றது. இந்தத் தொழில் பிரிவு 1969-ம் ஆண்டு தொடக்கத்தில் செயல்படத் தொடங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. வள்ளியூர், பொது நோக்குப் பொறியியல் பட்டறையும் நாங்குனேரி திட்டத்தில் வடக்கு விஜயநாராயணம், சாக்குக் கட்டித் தயாரிப்புப் பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

பட்டுத் தொழில் வளர்ப்புக்காக நாங்குனேரி திட்டப்பகுதியில் பனக்குடி என்னுமிடத்தில் கட்டுலன் விளக்கப்பட்டுப்பண்ணை ஒன்று செயல்படுகின்றது. கிராமத் தொழில் திட்டப் பண்ணையின்கீழ் வாத்து வளர்ப்பும் ஊக்குவிக்கப்படுகிறது. வாத்து வளர்ப்பவர்கள் இருபது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஓமலூர், ஸ்ரீபெரும்பூதூர் திட்டப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 வரை கடன் கொடுக்கப்பட்டது. ஸ்ரீபெரும்பூதூர் திட்டப் பகுதியில் கோரைப் பயிரிடும் திட்டமும் நிறைவேற்றுவதற்கு உள்ளது.

கிராமத் தொழில் திட்ட நிதிகளிலிருந்து, தொழில்களுக்கு அரசுதவிச் சட்டத்தின் கீழ் (ஆண்டுக்கு 3 சத வீதம்) மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தனியார் தொழிலதிபர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இதுவரை வழங்கப்பட்ட கடன் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.		வழங்கப்பட்ட கடன் தொகை.
		ரூ.
1964–65		4,04,100
1965–66		6,02,850
1966–67		5,38,700
1967–68		2,29,000

இணைப்பு I.

தொழில்களுக்கு அரசு உதவி சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள்

ஆண்டு.	உதவியளிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட மொத்த தொகை.	
(1)	(2)	(3)	
		ரூ.	பை
இரண்டாவது திட்டக்கால அளவு—			
1956–57	201	11,27,865	00
1957–58	3,401	24,88,962	00
1958–59	4,057	24,56,687	00
1959–60	3,952	22,26,558	00
1960–61	4,148	26,31,976	10
மொத்தம் ..	15,759	1,09,32,048	10

1969 மார்ச் 11]

ஆண்டு.	உதவியளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட மொத்த தொகை.	
(1)	(2)	(3)	
		ரூ.	பை.
மூன்றாவது திட்டக்கால அளவு—			
1961–62	4,061	33,92,474	65
1962–63	4,811	28,82,813	19
1963–64	2,889	25,02,617	06
1964–65	2,082	30,00,289	00
1965–66	1,797	29,90,760	00
மொத்தம் ..	15,640	1,47,68,953	90
நான்காவது திட்டக்கால அளவு—			
1966–67	2,543	34,97,249	25
1967–68	2,884	29,70,564	00
1968–69	341	5,94,208	00
(31-10-68 வரை) மொத்தம்	5,768	70,62,021	25

தமிழ் நாடு 1956-ம் ஆண்டு சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும், கடன்களும், உதவித் தொகைகளும், வழங்குவது குறித்த விதிகளைச் சேர்ந்த 19-வது விதியின்கீழ், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் சேம நிதிக்கு வழங்கப்பட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் :—

ஆண்டு.	தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை.	அளிக்கப்பட்ட உதவித் தொகை.	
(1)	(2)	(3)	
		ரூ.	பை.
1957–58	43	65,000	00
1958–59	178	1,91,770	00
1959–60	198	1,79,925	00
1960–61	80	1,18,059	80
1961–62	71	1,25,000	00
1962–63	111	1,49,980	00
1963–64	83	1,21,047	00
1964–65	79	1,22,526	00
1965–66	92	1,22,941	00
1966–67	70	1,20,980	00
1967–68	3	10,000	00

1967–68-ம் கடன் தொகை வழங்கப்பட்ட தொழில்கள் பற்றிய விவரங்கள்.—

தொடரிலக்கமும் உதவி பெற்ற தொழிலின் பெயரும்.	உதவிபெற்ற பிரிவுகளின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட கடன தொகை.
(1)	(2)	(3)
		ரூ.
1 உணவுப்பொருள்கள்	16	7,48,700
2 பல வகைத் துணிகள்	7	27,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொடரிலக்கமும், உதவிபெற்ற தொழிலின் பெயரும்.	உதவிப் பெற்ற பிரிவுகளின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட கடன் தொகை.
(1)	(2)	(3)
3 மரக்கட்டை, மரப் பொருள்கள்	174	2,75,050
4 தோல், தோல் பொருள்கள்	41	43,150
5 ரப்பர், பெட்ரோலியம், நிலக்கரிப் பொருள்கள்.	6	26,000
6 இரசாயனம், இராசயனப் பொருள்கள் .	55	72,350
7 உலோகமற்ற கனிப் பொருள்கள் (பெட்ரோலியம் நீங்கலாக).	2	4,000
8 மூல உலோகங்களும், ஏனைய பொருள்களும்.	36	2,04,950
9 போக்குவரத்துச் சாதனம் நீங்கலாக மற்றெல்லா இயந்திரங்கள்.	38	1,07,854
10 போக்குவரத்துச் சாதனங்கள்	14	2,27,542
11 பலவகைத் தயாரிப்புத் தொழில் பயன் துய்போர் பொருள் உற்பத்தி.	562	12,33,968
மொத்தம் ..	951	29,70,564

இணைப்பு II.

ஐந்தாண்டு திட்ட வேலைகளுக்கு செய்த செலவைக் காட்டும் புள்ளி விவர அறிக்கை.

வளர்ச்சித் திட்டத்தின் தலைப்பு.	நான்காவது திட்டத்தின் கீழ் முதலீடு.	1967–68-ம் ஆண்டுச் செலவு.	1968–69 செலவு (எதிர் பார்ப்பது).
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் லட்சத்தில்.)		
தொழில்களுக்கு நிதி வழங்கல்.	525·00	34·93	30·24
இராமத் தெழில்களும், சிறு தொழில்களும்.—		..	..
சிறு தொழில்கள்	415·00	65·43	62·07
தொழிற்பேட்டைகள் ..	235·00	39·25	42·22
சீர் செய்த மனைகள் ..	500·00	19·96	37·26
கைப்பணிகள்	60·00	3·37	2·77
பட்டு வளர்ப்பு	75·00	5·37	12·94
கயிற்றுத் தொழில் ..	5·00	0·18	0·24
கிராமப்பணி நிலையங்கள் ..	10·00	0·15	..

குறிப்பு.—தொழில் கூட்டுறவுச் திட்டங்கள் பற்றிய புள்ளி விபரங்கள் VII-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இணைப்பு III.

தொழில் துறையின் சிறு தொழில் பிரிவுகளின் விவரங்கள் மாவட்ட வாரியாக

சிறு தொழில்கள். (1)	திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.)
கன்னியாகுமரி மாவட்டம்	
1 தொழில் பண்ணை, மார்த்தாண்டம்	2·92
2 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, நாகர்கோயில்* ..	5·49
3 தொழில் காலனி, நாகர்கோயில்	7·31
4 ரம்ப ஆலை, நாகர்கோயில்*	2·33
திருநெல்வேலி மாவட்டம்	
1 தச்சப்பட்டறை, பத்தமடை*	0·77
2 தச்சுப் பட்டறை, கருமான் பட்டறை, பேட்டை*	8·10
3 தொழில் பண்ணை, பேட்டை	6·16
4 கருவி அறை மாதிரி பட்டறை, பேட்டை*	8·20
5 பொதுக் குத்தகைப் பட்டறை, பேட்டை	5·62
6 தொழிற்பேட்டை, கோவில்பட்டி	6·69
7 தொழில் நுட்பத் தகவல் பிரிவு, பேட்டை	0·49
8 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை மிதி வண்டி இணைப்புப் பிரிவு, தூத்துக்குடி.	8·85
9 அடிப்படைக் கிராமப் பணி நிலையங்கள்	3·08
10 மக்னீசியம் கார்பனேட் உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி ..	2·76
11 கடல் தாவரங்களிலிருந்து பொட்டாசியம் குளோரைடு உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி.	7·60
12 பாரிஸ் உறை மாவு உற்பத்திப் பிரிவு, தூத்துக்குடி ..	1·97
ராமநாதபுரம் மாவட்டம்	
1 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, ராஜபாளையம்* ..	4·50
2 தொழிற்பேட்டை, விருதுநகர்	28·49
3 கருவி அறை பட்டறை, விருதுநகர்*	5·78
4 தொழிற் பேட்டை, காரைக்குடி	9·69
5 தொழிற் பேட்டை, சிவகங்கை	8·08
மதுரை மாவட்டம்	
1 மூலப் பொருள்கள் கிடங்கு, மதுரை	2·16
2 துணி ஆலைப் பகுதிகளுக்குரிய பிரிவு, மதுரை*	4·56
3 அழுத்த உலோகப் பொருள்கள், பழனி*	3·55
4 பூட்டுத் தயாரிப்புப் பிரிவு, திண்டுக்கல்*	14 59
5 தொழில்பண்ணை, மதுரை	24·45

* தமிழ் நாடு சிறு தொழில்கள் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

தொழில் துறையின் சிறு தொழில் பிரிவுகளின் விவரங்கள் மாவட்ட வாரியாக—தொடர்ச்சி.

சிறு தொழில்கள். (1)	திட்டச் செலவு. (2) (ரூபாய் (லட்சத்தில்.)
மதுரை மாவட்டம்—தொடர்ச்சி.	
6 தொழிற்பேட்டை, தேனி	5·38
7 பொதுக் குத்தகைப் பட்டறை, மதுரை	7·52
8 தொழிற்பேட்டை, திண்டுக்கல்	15·91
9 தொழில் நுட்பத் தகவல் பிரிவு, மதுரை	0·49
10 கருவி அறைப் பட்டறை, மதுரை†	11·54
11 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, கோடைக்கானல்*.	4·40
12 பொதுக் குத்தகைப் பட்டறை, திண்டுக்கல்	5·71
13 சீர் செய்த மனைகள், மதுரை	76·00
14 மின் மருத்துவக் கருவிகள் பணி—செப்பனிடுவதற்கான துணை நிலையம், மதுரை.‡	
15 உணவு-பழ அடிப்படையில் அமைந்த தனித் தொழில் பேட்டை.	15·53
திருச்சிராப்பள்ளி மாவட்டம்	
1 வேளாண்மைப் பண்ணைக் கருவிகள் பிரிவு, திருச்சிராப் பள்ளி.†	4·07
2 தொழில்பேட்டை, திருச்சிராப்பள்ளி	11·86
3 கருவி அறைப் பட்டறை, திருச்சிராப்பள்ளி*	5·78
4 செயற்கைக் கற்களை தயாரிப்போருக்கு குளத்தூர் வட்டத்தில் நான்கு பட்டறைகள்.	0·45
5 தொழிற்பேட்டை, புதுக்கோட்டை	9·69
6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, கரூர்*	5·49
7 பொதுக் குத்தகைப் பட்டறை, திருச்சிராப்பள்ளி ..	5·62
8 சீர் செய்த மனைகள், திருச்சிராப்பள்ளி	16·68
துணைத் தொழிற் பேட்டை, திருச்சிராப்பள்ளி	39·65
தொழிற்பேட்டை, கரூர்	6·15
தஞ்சாவூர் மாவட்டம்	
1 மிதிவண்டி இணைப்புப் பிரிவு, தஞ்சாவூர்*	7·50
2 தொழிற்பேட்டை, தஞ்சாவூர்	6·61
3 பித்தளைச் சாமான்கள், வெட்டுக் கருவிகள் தயாரிப்புப் பணி நிலையம், கும்பகோணம்.*	7·83
4 தச்சு-கருமார் பட்டறை, மன்னார்குடி*	4·80

*தமிழ் நாடு சிறு தொழில்கள் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகள்.

†தமிழ் நாடு சிறு தொழில்கள் லிமிடெட் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகள்.

‡சென்னை மாவட்டத்திற்குரிய பட்டியலில் 21-வது இனத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.

1969 மார்ச் 11[

தொழில துறையின் சிறு தொழில் பிரிவுகளின் விவரங்கள் மாவட்ட வாரியாக—தொடர்ச்சி.

சிறுதொழில்கள். (1)	திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.)
தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.	
5 மாதிரி வார்ப்படசாலை கருவி அறைப் பட்டறை, தஞ்சாவூர்*.	8·93
6 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, மாயூரம்* ..	5·12
7 தொழிற்பேட்டை, கும்பகோணம்	8·59
8 தொழிற்பேட்டை, நாகப்பட்டிணம்	3·26
தென் ஆர்க்காடு மாவட்டம்	
1 தச்சு-கருமார் வேலைப் பட்டறை, கடலூர்*	4·80
2 மட்பாண்டத் தயாரிப்பு நிலையம், விருத்தாசலம் ..	34·83
3 மெருகிட்ட குழாய்த் தயாரிப்புச் சாலை, விருத்தாசலம் ..	8·09
4 மட்பாண்டத் தொழில் பயிற்சிப்பள்ளி, விருத்தாசலம் ..	5·21
5 தொழிற்பேட்டை, விருத்தாசலம்	32·78
6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, விழுப்புரம்* ..	5·49
7 நின்று எரியும் கரி தயாரிப்புப் பிரிவு, கடலூர்	3·86
8 துணைத் தொழிற்பேட்டை, வடலூர்	3:84
9 தொழிற்பேட்டை, கடலூர்	6·01
செங்கற்பட்டு மாவட்டம்	
1 காலணிப்பிரிவு, பல்லாவரம்*	1·59
2 தொழிற்பேட்டை, அம்பத்தூர் சீர் செய்த மனைகள், அம்பத்தூர்.	418·00
3 பொதுநோக்கு பொறியியல் பட்டறை, காஞ்சிபுரம் ..	5·35
4 கட்டுமானப் பொருள்கள் பட்டறை, அம்பத்தூர்	29·25
5 பொதுக் குத்தகைப் பட்டறை, அம்பத்தூர்	5·71
6 கருவி அறைப்பட்டறை, அம்பத்தூர்*	11·30
7 தோல் பொருள் தயாரிப்புத் தொழிற்பேட்டை, மாதவரம் (விரிவுத் திட்டம் உட்பட).	22·14
8 தோல் தொழில் பொது வசதி நிலையம், மாதவரம் ..	3·40
9 சீர்செய்த மனைகள், திருவள்ளூர்	201·50
10 தொழிற்பேட்டை, காஞ்சீபுரம்	6·15
11 மின்சாரக் கருவிகள் தனித் தொழிற்பேட்டை, திருவள்ளூர்.	23·17
12 மருந்து, மருந்து கலவைத் தொழிற்பேட்டை	15·18

*தமிழ் நாடு சிறு தொழில்கள் லிமிடெட் கழகத்தின்கீழ் உள்ள பிரிவுகள்.

தொழில் துறையின் சிறு தொழில் பிரிவுகளின் விவரங்கள் மாவட்ட வாரியாக—தொடர்ச்சி.

சிறு தொழில்கள். (1)	திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.)
வட ஆர்க்காடு மாவட்டம்	
1 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, வேலூர்* ..	7·30
2 தோல் பதனிடும் வேலை நிறைவு செய்யும் பிரிவு, விண்ணமங்கலம்.	14·83
3 மாதிரி வார்ப்படசாலை, காட்பாடி*	9·04
4 தொழிற்பேட்டை, காட்பாடி	16·28
5 தொழிற்பேட்டை, அரக்கோணம்	13·69
6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, திருவண்ணாமலை*.	5·00
7 தச்சு-கருமான் வேலைப் பிரிவு, அரக்கோணம்	3·48
8 சீர்செய்த மனைகள், இராணிப்பேட்டை	35·43
9 சோடியம் டை-குரோமேட் உற்பத்திப் பிரிவு, வாலாஜா பேட்டை.	7·55
சேலம் மாவட்டம்	
1 மின் முலாம் பூசும், மேட்டூர் அணை*	9·73
2 கைத்தறி பாகங்கள் பிரிவு, சேலம்*	12·53
3 படிகக்கல் பொடி செய்யும் சாலை, சேலம்*	3·85
4 தொழிற்பேட்டை, சேலம்	8·59
5 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, நாமக்கல்* ..	5·49
6 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, ஓமலூர் ..	5·35
7 தொழிற்பேட்டை, மேட்டூர்	6·15
8 சீர்செய்த மனைகள், மேட்டூர்	31·00
தர்மபுரி மாவட்டம்.	
1 தச்சுப்பட்டறை, கிருஷ்ணகிரி*	0·77
2 மிதிவண்டி இணைக்கும் பிரிவு, கிருஷ்ணகிரி *	3·73
3 தொழிற்பேட்டை, ஒசூர்	6·01
4 தொழிற்பேட்டை, கிருஷ்ணகிரி	9·69
கோயம்புத்தூர் மாவட்டம்	
1 மரப் வேலைப் பிரிவு, பொள்ளாச்சி*	5·73
2 கருவி அறைப் பட்டறை, ஈரோடு*	5·36
3 மரை ஆணிகள், திருகு மரைகள் தயாரிக்கும் பிரிவு, ஈரோடு.*	1·72
4 தொழிற்பேட்டை, ஈரோடு	11·25
5 கருவி அறைப் பட்டறை, கோயம்புத்தூர்*	10·09

*தமிழ் நாடு சிறு தொழில்கள் லிமிடெட் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தொழில் துறையின் சிறு தொழில் பிரிவுகளின் விவரங்கள் மாவட்ட வாரியாக—தொடர்ச்சி.

சிறு தொழில்கள். (1)	திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.)
கோயம்புத்தூர் மாவட்டம்—தொடர்ச்சி.	
6 உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உருவாக்கும் தொழிற்பட்டறை, கோயம்புத்தூர்.*	6·98
7 மூலப் பொருள்கள் கிடங்கு, கோயம்புத்தூர்	2·16
8 பொதுக் குத்தகைப் பட்டறை, கோயம்புத்தூர்	7·52
9 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, திருப்பூர்.* ..	5·49
10 துணை தொழிற்பேட்டை, உதகமண்டலம்	8·73
சென்னை மாவட்டம்.	
1 காலணிப்பிரிவு, பெரம்பூர்*	6·69
2 திருவல்லிக்கேணி காலணிப்பிரிவு, பெரம்பூர்*	1·17
3 அழுத்தப்பட்ட உலோகப் பொருள்கள் தயாரிப்புக்கான பிரிவு, சென்னை.*	12·94
4 மின்சாரப் பொருள்கள் பிரிவு, கிண்டி*	17·71
5 மரவேலைப் பிரிவு, கிண்டி*	7·42
6 கருவி அறைப் பட்டறை, கிண்டி*	25·64
7 பொது வேலை நிறைவுப் பட்டறை, கிண்டி*	2·68
8 உலையில் வைத்து சூடுறுத்தி அடித்து உருவாக்கும் தொழிற்பட்டறை, கிண்டி.*	11·61
9 பணிக் கழகம், கிண்டி	4·48
10 கண்ணாடி தொழிற்சாலை, கிண்டி*	10·66
11 அழுக்க வகையில் சூடுறுத்தி அச்சு வார்ப்படப்பிரிவு கிண்டி.*	9·69
12 மாதிரி வார்ப்புடச் சாலை, கிண்டி*	16·92
13 தொழில் நுட்பத் தகவல் பிரிவு, கிண்டி	3·51
14 தொழிற்பேட்டை, கிண்டி	133·66
15 அச்சுக்கருவி வடிவ அமைப்புப் பிரிவு, கிண்டி* ..	7·39
16 தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி	20·50
17 சீர்படுத்திய மனைகள், கிண்டி	53·48
18 குறைந்த குதிரைத் திறனுள்ள மோட்டார்கள் தயாரிப்பு பிரிவு, கிண்டி.*	7·89
19 யந்திர-உலோக ஆய்வுக்கூடம்	20·73
20 மின்மருத்துவக் கருவிகள் பணிமனை—செப்பனிடும் மத்தியப் பிரிவு.	7·56
21 சென்னை நகர் அருகில் மின் அணுத் தொழில்களுக்கான தொழிற்பேட்டை.	40·26
22 கருவிகள் தயாரிப்புக்கான தொழிற்பேட்டை, அடையாறு.	16·18
23 நுரைமம் உற்பத்திப் பிரிவு, கிண்டி, சென்னை-2 ..	4·46

*தமிழ் நாடு சிறு தொழில் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகள்.

[1969 மார்ச் 11

இணைப்பு—IV.

கைப்பணி நிலையங்களின் பட்டியல்.

திட்டத்தின் பிரிவின் பெயர். (1)	திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.)
சென்னை மாவட்டம்.	
1 கலை-கைப்பணிக் கல்லூரி, சென்னை	4·73
2 வடிவமைப்பு செய்முறை விளக்க நிலையம், சென்னை ..	4·00
3 பளபளப்பான களிமண் பொம்மைகள் தயாரிப்பு நிலையம், பெரம்பூர்.	1·76
4 விற்பனை பெருநிலையம், சென்னை	0·25
5 கண்ணாடி விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், சென்னை.	0·25
செங்கற்பட்டு மாவட்டம்.	
1 சிற்பப் பயிற்சி நிலையம், மாமல்லபுரம்	0·63
2 சித்திர வேலைபாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள், தயாரிப்பு பயிற்சி நிலையம், தாம்பரம்.	0·49
3 சித்திர வேலைபாடுகள் கொண்ட தட்டுகள் தயாரிப்பு பயிறசி நிலையம், தாம்பரம்.	0·52
4 பித்தளை, வெண்பகலப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், காஞ்சிபுரம்.	0·69
5 விற்பனைப் பெரு நிலையம், மாமல்லபுரம்	1·56
தென் ஆற்காடு மாவட்டம்.	
1 சணல் நாரைக் கொண்டு விரிப்புகள், இரட்டுகள் தயாரிப்பதற்கான பயிற்சி நிலையம், சின்ன சேலம்.	0·62
2 விற்பனைப் பெரு நிலையம், நெய்வேலி	0·98
தஞ்சாவூர் மாவட்டம்.	
1 சித்திர வேலைபாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், சுவாமிமலை.	0·37
2 சித்திர வேலைபாடுகள் கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நாச்சியார்கோவில்.	0·49
3 வெண்கல விக்கிரங்கள் தயாரிப்பு நிலையம், சுவாமிமலை ..	0·30
4 விற்பனை கொள்முதல் கிடங்கு, தஞ்சாவூர்	1·84
5 உலோகத் தொழிலுக்குப் பொதுவசதி நிலையம், நாச்சியார்கோவில்.	2·40
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	
1 கம்பளங்கள், விரிப்புகள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், கோலக்குடி.	0·41
2 விற்பனை கொள்முதல் கிடங்கு, திருச்சி	1·01
3 பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி நிலையம், புதுக்கோட்டை.	0·56

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

கைப்பணி நிலையங்களின் பட்டியல்—தொடர்ச்சி.

திட்டத்தின் பிரிவின் பெயர். (1)	திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.)
மதுரை மாவட்டம்.	
1 வேலைப்பாடமைந்த பித்தளைப் பொருள் தயாரிப்புப் பிரிவு நிலையம், மதுரை.	0·87
2 விற்பனைப் பெரு நிலையம், திண்டுக்கல்.	0·08
3 கண்ணாடிப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், மதுரை.	2·07
திருநெல்வேலி மாவட்டம்.	
1 வெண்கலப் பொருட்கள் தயாரிப்பு நிலையம், வாகைக் குளம்.	1·85
2 சணல் நாரைக்கொண்டு விரிப்புகள், இரட்டுகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம், கோபாலசமுத்திரம்.	1·40
3 கற்றாழைநார் பொருள் தயாரிப்புப் பயிற்சி நிலையம், நெடுவயல்.	1·26
4 அரக்குப் பூசிய பொம்மை தயாரிப்புப் பயிற்சி நிலையம், சேரன்மாதேவி.	0·28
5 விற்பனை கொள்முதல் கிடங்கு, திருநெல்வேலி ..	1·84
6 சணல் நாரைக்கொண்டு விரிப்புகள், இரட்டுகள் நெய்வதற்கான பயிற்சி நிலையம், ஆயக்குடி.	0·84
கன்னியாகுமரி மாவட்டம்.	
கோயில் தேர்கள் (ரதங்கள்) செய்வதற்கான பயிற்சி நிலையம், நாகர்கோயில்.	0·48
வட ஆற்காடு மாவட்டம்.	
கம்பளி உற்பத்தி நிலையம், விண்ணமங்கலம்	13·1
சேலம் மாவட்டம்.	
1 சித்திர வேலைப்பாடுகள்கொண்ட உலோகப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சு நிலையம், சேலம்	0·56
2 விற்பனை கொள்முதல் கிடங்கு, சேலம்	1·01
தருமபுரி மாவட்டம்.	
கருங்கல் மெருகிடு நிலையம், கிருஷ்ணகிரி	0·65
கோயம்புத்தூர் மாவட்டம்.	
விற்பனை கொள்முதல் கிடங்கு, கோயம்புத்தூர்	1·01
இராமநாதபுரம் மாவட்டம்.	
பனை ஓலை உற்பத்திப் பொருள் பயிற்சி நிலையம், இராமேஸ்வரம்.	0·53

[1969 மார்ச் 11

இணைப்பு V.

பட்டுப் புழு வளர்ப்புத் திட்டங்களின் பட்டியல்.

திட்டத்தின் பெயர்.	திட்டச் செலவு.
(1)	(2)
	(ரூபாய் இலட்சத்தில்.)
திருநெல்வேலி மாவட்டம்.	
1 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, தென்காசி.	1·47
2 அரசாங்க பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, செங்கோட்டை (பெயர் மாற்றப்பட்டது.)	2·15
வட ஆற்காடு மாவட்டம்.	
1 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, குடியாத்தம்.	0·80
தர்மபுரி மாவட்டம்.	
1 சௌக்கி பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, ஓசூர் ..	0·83
2 முசுக்கட்டை ஒட்டுச் செடி வளர்ப்புப் பண்ணை, ஓசூர் ..	1·75
3 பட்டுப்புழு வளர்ப்புப் பிரிவுகள், வேப்பனப்பள்ளி, ராயக்கோட்டை பிர்க்காக்கள்.	0·23
4 பட்டு நூல் எடுக்கும் அரசு நிலையம், ஓசூர்	3·06
5 பட்டுப்புழு கலப்பின் அரசுக் களஞ்சியம், பேரிகை ..	2·15
6 பட்டுப்புழு வளர்ப்போருக்கு ஓசூர், பாப்பாரபட்டி, அஞ்சட்டி ஆகிய இடங்களில் பட்டுப்புழு விற்பனை வசதி.	1·40
7 தேங்கனிக்கோட்டையில் அடிப்படை பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணையும் களஞ்சியமும்.	0·58
8 அரசு பட்டு வளர்ப்புப் பண்ணை, ஓசூர்	4·74
9 செய்முறை விளக்க பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, கிருஷ்ணகிரி..	0·80
10 பட்டுப் பரிசோதனை நிலையம், ஓசூர்	0·15
11 பட்டு வளர்ப்புப் பண்ணை ஒன்றை பெரிய அளவில் நிறுவுதல், கோலட்டி.	2·47
12 பட்டுநூல் முறுக்கும் பிரிவு, ஓசூர்	1·50
சேலம் மாவட்டம்,	
1 அரசு பட்டு வளர்ப்புப் பண்ணை, ஏர்க்காடு	0·80
2 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, கொல்லிமலை.	1·41

பட்டுப்புழு வளர்ப்புத் திட்டங்களின் பட்டியல்—தொடர்ச்சி.

திட்டத்தின் பெயர். (1)	திட்டச் செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்.)
கோயம்புத்தூர் மாவட்டம்.	
1 சௌக்கி பட்டுப்புழு வளர்ப்புப் பிரிவு, தாளவாடி ..	0·27
2 முசுக்கட்டை ஒட்டு வளர்ப்புப் பெரும் பண்ணை, தாளவாடி.	0·55
3 பட்டு வளர்ப்புப் பெரும் பண்ணை, தாளவாடி	..
4 செய்முறை விளக்கப் பட்டு வளர்ப்புப் பண்ணை, ஹாசனூர்.	0·20
5 பொது பட்டுப்புழு வளர்ப்பு நிலையம், ஹாசனூர் ..	0·20
6 சௌக்கி பட்டுப்புழு வளர்ப்புப் பிரிவு, ஜெர்மலம் ..	0·47
நீலகிரி மாவட்டம்.	
1 பிரச்சார நடவடிக்கைகள், மசினகுடி	0·46
2 கெட்டி நரம்பு தயாரிக்கும் பிரிவு, குன்னூர்	4·00
3 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, மசினகுடி.	2·33
4 பெரிய அளவுப் பட்டு வளர்ப்புப் பெரும் பண்ணை, மசினகுடி.	0·40
5 செய்முறை விளக்கப் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை, எருமடு.	0·20

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—VI.

மாநிலத்திலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட வாரியாக காட்டும் புள்ளி விவர அறிக்கை.

தொடர் எண்.	சங்கங்களின் வகைகள்.	சென்னை.	செங்கற்பட்டு.	வட ஆர்க்காடு.	தென் ஆர்க்காடு.	தஞ்சாவூர்.	திருச்சிராப்பள்ளி	சேலம்.	தர்மபுரி.	கோயம்புத்தூர்.	மதுரை.	இராமநாதபுரம்.	திருநெல்வேலி.	கன்னியாகுமரி.	நீலகிரி.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)
A.	சிறு அளவுத் தொழில்கள்—															
1	மாநில சங்கங்கள்	1	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	1
2	தொழிற் பேட்டைகள்	1	..	..	..	..	..	1	..	1	..	1	1	..	..	5
3	முன்னாள் படையினர் சங்கங்கள்	..	1	1	..	1	..	..	..	..	..	..	1	..	..	4
4	தீப்பெட்டித் தொழில்	..	1	1	..	2	..	..	..	..	1	7	3	..	..	15
5	செங்கல், ஓடு	..	3	..	1	1	2	..	..	..	2	1	2	..	..	12
6	தோல் தொழில்	1	..	1	..	1	1	1	..	1	1	..	1	..	1	9
7	உலோகத் தொழிலாளர் சங்கங்கள்	..	1	1	2	2	2	3	..	1	3	5	3	..	..	23
8	பஞ்சலோகம்	1	..	..	..	..	1	..	..	1	..	..	..	..	..	3
9	தச்சுத் தொழிலாளர்	..	3	1	3	3	4	2	..	5	4	9	4	1	..	39
10	கைவினைக் கலைஞர்கள்	..	..	2	1	..	6	5	..	3	3	4	1	..	..	25
11	மகளிர்	17	5	2	4	3	3	2	..	3	1	2	2	3	4	51
12	தேயிலைத் தொழிற்சாலைகள்	..	...	..	..	..	..	..	..	..	..	..	..	..	9	9
13	சிறப்புவகை சங்கங்கள்	5	4	..	..	1	4	..	..	3	3	2	1	..	2	25
14	பீடி	1	..	..	..	..	..	..	..	1	..	..	..	..	..	2
15	தொழில் கூட்டுறவு வங்கி	1	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	1

B. கைப் பணிகள்—

16 பாய் முடைவோர் சங்கங்கள்	..	5	3	3	9	4	7	2	5	..	5	1	11	3	58
17 வெண்கலம்	..	..	1	..	1	..	..	..	..	..	..	..	1	1	4
18 சரிகை, பூ வேலைப்பாடு	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	..	3	3
19 பிரம்பு, மூங்கில் கூடை	..	..	2	1	3	3	2	..	6	1	1	1	6	2	28
20 விலை மதிப்புள்ள கற்கள்	..	..	..	..	..	..	..	..	1	..	..	..	..	..	1
21 இசைக் கருவிகள்	..	..	..	..	1	..	..	..	..	..	..	..	..	..	1
22 சிற்பம் செதுக்குதல்	..	..	1	..	..	1	1	..	..	..	..	..	..	1	4
23 கம்பள நெசவு	..	..	..	..	..	1	..	..	..	..	..	..	..	..	1
24 நார்	..	..	..	..	..	..	..	..	..	..	..	2	.	..	2
25 மட்பாண்டத் தொழில்	..	..	1	..	..	..	..	..	..	..	..	..	.	..	1
26 விளையாட்டுப் பொம்மைகள்	2	..	..	1	1	..	..	..	..	..	..	..	1	1	6
27 நாடா, நூல்	..	..	..	..	1	..	..	..	..	..	1	..	..	..	2
28 பனை ஓலை	..	1	1	..	1	..	..	1	..	..	..	10	1	..	15
29 தமிழ் நாடு சங்கம்	1	..	..	..	..	..	..	..	..	..	..	..	.	..	1
30 பல்வகை	..	..	1	..	4	..	..	1	1	..	..	1	..	..	8
31 கயிற்றுத் தொழில்	..	1	1	1	4	..	12	1	3	..	..	2	..	10	35
32 பட்டுப்புழு வளர்ப்பு	..	..	..	..	..	..	..	..	-	..	..	..	..	..	1
மொத்தம் ..	31	25	20	17	39	32	36	5	35	20	38	34	26	37	395

இணைப்பு VII.

ஐந்தாண்டு வேலைத் திட்டங்களின் கீழ் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் முன்னேற்றம்.

தொடரிலக்கமும் திட்டத்தின் பெயரும்.	நான்காவது திட்ட நிதி ஒதுக்கம்.	1967–68 கணக்குகள்.	1968–69 கணக்குகள். (எதிர்பார்க்கப் படுவது).	நான்காவது திட்டத்தில் எய்திய சாதனை. 1967–68.	1968–69 (எதிர்பார்க்கப் படுவது).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் லட்சத்தில்.)		
1 கூட்டுறவு-தனியார் தொழிற் பேட்டைகள்	85·00	16·83	4·26	..	..
2 சிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்	50·00	4·319	2·648	9	5
3 கைப்பணி தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்	15·00	0·594	2·081	1	4
4 கயிற்றுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்	5·00	0·248	4·701	..	3
5 பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் .	5·00	0·041	0·095	..	..
மொத்தம் ..	160·00	22·032	13·785	10	12

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VIII.

தமிழ் நாட்டு சிறு தொழில் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகளின் உற்பத்தி அளவின் மதிப்பை காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்.	பிரிவின் பெயர்.	1967–68-ல் உற்பத்தி.	30–9–1968 வரையில் உற்பத்தி.	ஏற்படக் கூடிய உற்பத்தி.	1968–69-ல் எதிர்பார்க்கப்படும் மொத்தம் உற்பத்தி.	1969–70 குறிக்கோள் அளவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
				(ரூபாய் லட்சத்தில்.)		
1	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, ராஜபாளையம்.	5·54	2·50	3·50	6·00	7·00
2	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, வேலூர்	14·91	6·04	5·95	12·00	12·00
3	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, கரூர்	2·48	0·94	1·36	2·30	4·00
4	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, திருப்பூர்	3·23	1·52	1·48	3·00	4·00
5	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, நாமக்கல்	5·96	2·75	2·75	5·50	4·00
6	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, தூத்துக்குடி.	2·44	1·27	1·28	2·55	4·00
7	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, மாயூரம்	1·95	1·14	1·16	2·30	4·00
8	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, விழுப்புரம்	3·22	2·26	2·24	4·50	4·00
9	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, திருவண்ணாமலை.	5·17	1·63	1·62	3·25	5·00
10	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, நாகர்கோயில்.	1·49	1·18	1·17	2·35	4·00
11	பொது நோக்குப் பொறியியல் பட்டறை, கோடைக் கானல்.	0·40	0·32	0·33	0·65	1·50
12	அழுத்த உலோகப் பொருள்கள் உற்பத்திப் பிரிவு, சென்னை.	7·62	2·27	3·73	6·00	7·00
13	அழுத்த உலோகப் பொருள்கள் உற்பத்திப் பிரிவு, பழனி.	8·88	4·73	4·72	9·45	10·00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாட்டு சிறு தொழில் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகளின் உற்பத்தி அளவின் மதிப்பை காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

தொடர் எண்.	பிரிவின் பெயர்.	1967–68-ல உற்பத்தி.	30—9—1968 வரையில் உற்பத்தி.	எதிர்பார்க்கப்படும் உற்பத்தி.	1968–69-ல எதிர்பார்க்கப்படும் மொத்தம் உற்பத்தி.	1969–70 குறிக்கோள் அளவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
				(ரூபாய் லட்சத்தில்.)		
14	உலோக அழுத்தப் பட்டறை, கிண்டி	6·06	2·24	2·26	4·50	8·00
15	கருவி அறைப் பட்டறை, கிண்டி	6·13	2·17	2·18	4·35	5·00
16	கருவி அறைப் பட்டறை, ஈரோடு	6·57	3·50	3·50	7·00	8·00
17	கருவி அறைப் பட்டறை, திருச்சிராப்பள்ளி	1·97	1·38	1·37	2·75	4·00
18	கருவி அறைப் பட்டறை, விருதுநகர்	1·76	0·77	0·78	1·55	2·50
19	கருவி அறைப் பட்டறை, மதுரை	1·79	0·75	0·75	1·50	2·00
20	கருவி அறைப் பட்டறை, கோயம்புத்தூர்	1·98	1·31	1·29	2·60	4·50
21	கருவி அறைப் பட்டறை, அம்பத்தூர்	2·45	1·32	1·33	2·65	3·50
22	பொது வேலை நிறைவுப் பட்டறை, கிண்டி	4·44	4·85	4·85	9·70	9·00
23	அச்சு வார்ப்புப் பிரிவு, கிண்டி	5·39	2·11	2·09	4·20	6·00
24	அச்சு வார்ப்பு-வெப்பப் பதனிடு பட்டறை, கோவை ..	1·80	1·25	1·26	2·50	4·50
25	அழுத்த வார்ப்பு அச்சுப் பிரிவு, கிண்டி	17·06	4·46	5·04	9·50	10·00
26	மிதிவண்டிப் பகுதிகளை இணைக்கும் பிரிவு, தஞ்சாவூர்.	4·18	1·52	1·48	3·00	5·00
27	மிதிவண்டிப் பகுதிகளை இணைக்கும் பிரிவு, தூத்துக்குடி.	0·55	..	..	..	..
28	மிதிவண்டிப் பகுதிகளை இணைக்கும் பிரிவு, கிருஷ்ணகிரி.	2·80	0·95	0·95	1·90	3·50
29	மர வேலைப் பிரிவு, கிண்டி	9·41	4·53	5·47	10·00	10·00

30 தச்சு-கொல்லுப் பட்டறை, கடலூர்	9·48	2·64	3·16	5·80	7·00
31 தச்சு-கொல்லுப் பட்டறை, மன்னார்குடி	7·25	2·90	2·90	5·80	6·00
32 தச்சு-கொல்லுப் பட்டறை, பேட்டை	7·60	3·29	3·31	6·60	7·00
33 தச்சு வேலைப் பட்டறை, பத்தமடை	3·35	1·08	1·12	2·20	3·00
34 தச்சு வேலைப் பட்டறை, கிருஷ்ணகிரி	3·57	0·81	0·79	1·60	2·00
35 மர வேலைப் பிரிவு, பொள்ளாச்சி	9·90	4·55	4·55	9·10	20·00
36 மரம் அறுக்கும் பிரிவு, நாகர்கோயில்	11·00	2·55	3·55	6·10	12·00
37 காலணி தயாரிப்புப் பிரிவு, பெரம்பூர்	11·57	6·93	6·92	13·85	12·00
38 காலணி தயாரிப்புப் பிரிவு, திருவல்லிக்கேணி ..	2·12	1·73	1·72	3·45	3·00
39 காலணி தயாரிப்புப் பிரிவு, பல்லாவரம்	2·80	1·36	1·34	2·70	4·00
40 தோல் பொருள்கள் பொதுவசதி நிலையம், மாதவரம்.	2·28	1·28	1·32	2·60	5·00
41 தோல் பதனிடுதல்-தோல் வேலை நிறைவுப் பிரிவு, விண்ணமங்கலம்.	56·53	37·05	37·95	75·00	75·00
42 கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, கிண்டி.	10·25	2·71	2·69	5·40	12·00
43 படிக்கல் பொடி செய்யும் சாலை, சேலம்	0·80	0·48	1·02	1·50	3·00
44 மட்பாண்டத் தொழிற்சாலை, விருத்தாசலம் ..	4·03	2·51	2·49	5·00	10·00
45 மெருகிட்ட குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை, விருத்தாசலம்.	6·30	2·62	3·68	6·30	9·00
46 மின்மூலாம் பூசும் பிரிவு, மேட்டூர் அணைக்கட்டு ..	68·78	35·98	39·02	75·00	70·00
47 கட்டுமான பட்டறை, அம்பத்தூர்	55·63	24·60	40·40	65·00	65·00
48 துணி ஆலை பகுதிகளுக்குரிய தொழிற் பிரிவு, மதுரை.	3·28	1·32	1·33	2·65	5·50

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தமிழ் நாட்டு சிறு தொழில் கழகத்தின் கீழ் உள்ள பிரிவுகளின் உற்பத்தி அளவின் மதிப்பை காட்டும் விவர அறிக்கை—தொடர்ச்சி.

தொடர் எண்.	பிரிவின் பெயர்.	1967–68-ல் உற்பத்தி.	30—9—1968 வரையில் உற்பத்தி.	ஏற்படக்கூடிய உற்பத்தி.	1968–69-ல எதிர்பார்க்கப்படும் மொத்தம் உற்பத்தி.	1969–70 குறிக்கோள் அளவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
				(ரூபாய் லட்சத்தில்.)		
49	கைத்தறிக்குத் தேவையான பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை, சேலம்.	9·90	4·04	3·96	8·00	10·00
50	பண்ணைக் கருவிகள் தயாரிப்புப் பிரிவு, திருச்சிராப் பள்ளி.	9·87	4·42	4·43	8·85	10·00
51	பித்தளைச் சாமான்கள் தயாரிக்கும் பிரிவு, கும்பகோணம்.	8·70	3·28	3·72	7·00	10·00
52	பூட்டு தயாரிக்கும் பிரிவு, திண்டுக்கல்	4·67	2·31	2·29	4·60	3·50
53	மின்சாரப் பொருட்கள் தயாரிக்கும் நிலையம், கிண்டி.	7·31	6·34	8·66	15·00	12·00
54	மரை ஆணிகள், திருகு மரைகள் தயாரிக்கும் பிரிவு, ஈரோடு.	3·83	1·39	1·41	2·80	4·50
55	குறைந்த குதிரைத்திறனுள்ள மோட்டார்கள் தயாரிப்புப் பிரிவு, கிண்டி.	2·20	0·95	0·95	1·90	6·00
56	உலோக அழுத்தப் பிரிவு, கிண்டி	1·69	..	..	..	1·80
57	பணிக்கழகம், மூலப்பொருள் கிடங்கு	13·05	தொழில், வாணிகத் துறையின் பொறுப்புக்கு மாற்றப்பட்டது.			
58	மாதிரி வார்ப்படச்சாலை, கிண்டி	9·67	3·70	4·30	8·80	10·00
59	மாதிரி வார்ப்படச்சாலை, காட்பாடி	4·77	2·21	2·29	4·50	5·50
60	மாதிரி வார்ப்படச்சாலை, தஞ்சாவூர்	4·13	2·70	2·80	5·50	3·00
61	மாதிரி வார்ப்படச்சாலை, பேட்டை	4·91	2·07	2·08	4·15	8·00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

62 பொதுநோக்குப் பொறியியல் பட்டறை, காஞ்சிபுரம்	*	0·45	0·55	1·00	3·60
63 பொது நோக்குப் பொறியியல் பட்டறை, ஓமலூர்	*	0·49	1·01	1·50	1·00
மொத்தம் ..	498·56	232·40	263·60	496·00	579·40

* 1968 ஏப்ரல் 1 முதல் மட்டுமே கழகப் பொறுப்பின் கீழுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

LIBRARY
30 MAR 1970
STATE LEGISLATURE MADRAS